

சிவதத்துவ மலர்
2008

அருள் மிகு ஸ்ரீ அகிலாண்டேஸ்வரி சமேத
ஸ்ரீ அகிலாண்டேசுரர் திருக்கோவில்

கோவில்க்குளம் - வவுனியா
25.08.2008

சிவதத்துவ மலர்

மகா கும்பாபிஷேக பெருவிழா
சிறப்பு வெளியீடு
25-08-2008

வெளியீடு:
அகிலாண்டேஸ்வரி சமேத அகிலாண்டேசுரர் திருக்கோவில்
கோவில்குளம் - வவுனியா
www.sivankovil.blogspot.com

உ
சிவமயம்

வவுனை அருள் மிகு
அகிலாண்டேஸ்வரி உடன் உறைகின்ற
அகிலாண்டேஸ்சுரருக்கு
இன்புடன் படைத்திடும்
அன்புப் படையல்

சோதியாய் சுடராய் வேண்டிடும் வடிவமாகி
சோதித்து நின்றபெருங் கடலுமாகி
ஆதியாய் அந்தமாய் அற்புதக் கடவுளாகி
ஆனந்த வாழ்வுமாகி
பாதியாய் பாகமாய் பார்பதியிட பரமனாகி
பல்லுயிர்காக்கும் காவலாகி
தாயாய் தந்தையாய் தனிபெருந் தலைவனாய்
தாங்கொணாத் துயர்களைந்து
நேயனாய் நின்ற நிகரில்லா நேசனே!
நினைத்துருக நின்றருளும்
அகிலாண்ட நாதனே! அண்டமீரேழும்
அசைந்தாடும் ஈசனே!
எழில் கொஞ்சும் திருவவுனை கோயில்குளம்
எழுந்தருள்புரி பரமனே! நின்னருளால்
பொழிந்திடு மருள்மழை பூத்திடும் மலரிதை
படைத்திட ஏற்றருள்கவே!

சுபம்

பந்த மகற்றும் அனந்த குணப்
பரப்பும் எவன் பால் உதிக்குமோ
எந்த உலகும் எவனிடத்தில்
ஈண்டி யிருந்து கரக்குமோ
சந்த மறைஆ கமங்க கலைகள்
அனைத்தும் எவன்பால் தகவருமோ
அந்த இறையாம் கணபதியை
அன்பு கூரத் தொழுகின்றோம்.

கச்சியப்பர்



உ
சிவமயம்

மலர் வாயில்

சிவதத்துவ மலர் இரண்டின் இதழ்கள் பத்தாக மலர்ந்து விரிகின்றது

இதழ் 1 ஆசியுரை, வாழ்த்துரை
இதழ் ௨ எண்ணத்தில்
இதழ் 3 அணிந்துரை
இதழ் 4 பதிப்புரை
இதழ் 5 ஆலய ஒழுங்கமைப்பு
இதழ் 6 வழிபாடு
இதழ் 7 சமய தத்துவங்கள்
இதழ் 8 சமூகத்தில் சமயம்
இதழ் 9 என்றும் நன்றிக்குரியவர்கள்
இதழ் 10 நிழற்படங்கள்

மலரின் உள்ளே......

இதழ் : - 1

ஆசியுரை, வாழ்த்துரை

- *அருள் வாழ்த்துரை*
  சீர்வளர்சீர் **சிவப்பிரகாச தேசிக பரமாசாரிய சுவாமிகள்** திருவாவடுதுறை ஆதீனம்
- *ஆசிச்செய்தி*
  சிவாகம ஞான பாஸ்கரன் **சிவஸ்ரீ.தா.மகா தேவக்குருக்கள்**
- *ஆசியுரை*
  சதா.யோகீஸ்வரக்குருக்கள்
- *ஆசியுரை*
  கிரியா பூஷணம் சிவாகம திலகம் **சிவஸ்ரீ.ஸ்ரீநிவாச. நாகேந்திரக்குருக்கள்**
- *ஆசியுரை*
  வேதாகம சக்கரவர்த்தி வேதாகம உதயசூரியன்
  சிவஸ்ரீ.ஆ.சௌந்தர்ராஜகுருக்கள்
- *ஆசிச்செய்தி*
  வவுனியா அரச அதிபர் **திரு.சி.சண்முகம்**
- *ஆசிச்செய்தி*
  யாழ் மாவட்டச் செயலாளர் **திரு.க.கணேஷ்**
- *ஆசிச்செய்தி*
  திரு.ஜெ.விஸ்வநாதன்
  வடமாகாண மேல்நீதிமன்ற நீதிபதி
- *வாழ்த்துச் செய்தி*
  திரு.கா.ஆ. உமாதேவன்
  ஆலய அறங்காவலர் சபை பொருளாளர்
- *வாழ்த்துச்செய்தி*
  பிரதேச செயலாளர் **செல்வி.த.துரைசாமி**
- *வாழ்த்துச்செய்தி*
  வவுனியா வடக்கு பிரதேச செயலாளர் **திரு.க.பரந்தாமன்**
- *வாழ்த்துச்செய்தி*
  இந்துசமய கலாசார அலுவல்கள் திணைக்களப் பணிப்பாளர்
  சாந்தி நாவுக்கரசன்
- *வாழ்த்துச்செய்தி*
  வவுனியா இந்துமாமன்றம் சிவநெறிப்புரவலர்
  சி.இராமஸ்வாமி

இதழ் : -2

எண்ணத்தில்......

- *முன்னுரை*

  அவன் அருள் என்றும் எமக்கே!
  திரு.மு.சபாநாதன்
  ஆலய அறங்காவலர் சபைத்தலைவர்

- *செயலாளரின் எண்ணத்தில்*
  திரு.கா.ஆ.நவரத்தினராசா
  ஆலய அறங்காவலர் சபைச் செயலாளர்

இதழ் : -3

அணிந்துரை

- **திரு.கா.ஆ.தியாகராசா**
  அறங்காவலர் சபை தலைவர்
  நயினை ஸ்ரீ நாகபூசணி அம்மன் கோவில்

இதழ் : -4

பதிப்புரை

- நயினை **க.ச.அரவிந்தன்**

இதழ் : -5

ஆலய ஒழுங்கமைப்பு

- *அறப்பணியில் ஆதீன கர்த்தாக்கள்*
- *அறப்பணியில் அறங்காவலர்கள்*
- *ஆலய நிர்மாணப் பணிக்குழு*
- *கும்பாபிஷேகக்குழு*
- *சிவாச்சாரியர்கள்*
- *மங்களவாத்திய இசைக்குழு*
- *மலர்க்குழு*

இதழ் : -6 வழிபாடு

- *திருப்பள்ளியெழுச்சி*
  ஆழ்கடல் **கவிஞர் முருக.வே.பரமநாதன்**
- *பொன்னூஞ்சல்*
  பிள்ளைக்கவி கவிதார்க்கிகசிங்கம் **வ.சிவராஜசிங்கம்**
- *திருவூஞ்சற் பாமாலை*
  நயினைக்கவிஞர் **நா.க.சண்முகநாதப்பிள்ளை**
- *திருப்பா*
  நயினை.**க.ச.அரவிந்தன்**

இதழ் : -7 சமய தத்துவங்கள்

- *கிரியைகளில் ஞானபாத சிந்தனைகள்*
  சிவஸ்ரீ.ஸ்ரீநிவாச இரகுநாதக்குருக்கள்
- *சைவ திருக்கோவிற் கிரியை மரபு*
  சிவஸ்ரீ.இரகுநாத.கமலநாதக்குருக்கள் B.A.Hons
- *நித்திய பூசையும் அதன் தத்துவமும்*
  வித்யாகல்பநிதி.ப.முத்துக்குமாரசாமிக்குருக்கள்
- *இன்னல்களையும் எம்பெருமான் நீயே*
  கவிஞர் தமிழ்மணி அகளங்கள்
- *சைவத் தமிழ் இலக்கியங்களின் சில அடிப்படைகள்*
  வாகீச கலாநிதி க.நாகேஸ்வரன் M.A
- *நம்பி ஆரூரர்*
  கவிஞர் தமிழ்மணி அகளங்கன்
- *திருவாசகத்தில் புராணங்களின் செல்வாக்கு*
  தமிழ்மாமணி, தமிழருவி, **த.சிவகுமாரன்** B.A.(Hons)
- *சிவதாண்டவம்*
  திருமதி.சூரியயாழினி வீரசிங்கம்
- *இந்து கோயிற் பண்பாட்டு மரபுகள் ஓர் அறிவியல் பார்வை..........*
  செல்வி.கார்த்திகாயினி நவரட்ணராசா

- *சிவமூர்த்தங்கள்*
  திருமதி.லோகாம்பிகை சுரேஸ் இந்திரன் B.A

- *சிவனும் சித்தாந்தமும் ஓர் நோக்கு*
  செல்வி.நளினி வாசுதேவன்

- *சைவ சமயமும் சிவவழிபாடும்*
  திரு.ச.சுரேஸ்குமார்

இதழ் : –8 சமூகத்தில் சமயம்

- *திருக்கோயில் தோற்றமும், வளர்ச்சியும்*
  திருமதி.லோகேஸ்வரி காந்தரூபன்

- *சமயம் மனிதம் பூத்த ஆரோக்கியமான சமுதாயத்தை கட்டியெழுப்ப வேண்டும்*
  கவிஞர்.முருக.வே.பரமநாதன்

- *இந்து ஆலயங்களும் சமூகப்பணியும்*
  திரு.கா.ஆ.தியாகராசா
  அறங்காவலர் சபைத் தலைவர்
  நயினை ஸ்ரீ நாகபூசணி அம்மன் கோவில்

- *வவுனியாவில் சைவத்திருமுறைகள்*
  இறைபணிச் செம்மல் **வை.செ.தேவராசா**

- *சைவசித்தாந்தமும் மனித மேம்பாடும்*
  பேராசிரியர் **கலாநிதி நா. சுப்பிரமணியம்**

- *வாகீசர் வாக்கும் வாழ்வும் நம்வாழ்வுக்குணர்த்தும் பாடம்*
  திரு.கோ.தர்மபாலன் B.A

- *என் கடன் பணி செய்து கிடப்பதே*
  திரு.ஏ.செல்வகுமார் B.Ed

- *தெய்வசங்கற்பம்*
  திரு.இரா.லோகநாதன்

- *பக்தி*
  திருமதி.தை.செல்வரெட்ணம்

இதழ் : –9 என்றும் நன்றிக்குரியவர்கள்

- **திரு.கா.ஆ.நவரத்தினராசா**
  ஆலய அறங்காவலர் சபை செயலாளர்

இதழ் : –10 நிழற்படங்கள்

- **திரு.சோ.கோகுலதாசன்**



இதழ் - 1

ஆசியுரை, வாழ்த்துரை

திருக்கயிலாய பரம்பரைத் திருவாவடுதுறை ஆதீனம்
23-ஆவது குரு மகாசன்னிதானம்
சீர்வளர்சீர் சிவப்பிரகாச தேசிக
பரமாசாரிய சுவாமிகள் அவர்கள்
திருவாவடுதுறை - 609803, நாகை மாவட்டம்.
தொலைபேசி எண்: 04364 - [illegible]

அருள் வாழ்த்துரை

நமச்சிவாய வாழ்க நாதன்தாள் வாழ்க
இமைப்பொழுதும் என்நெஞ்சின் நீங்காதான் தாள்வாழ்க
கோகழி ஆண்ட குருமணிதன் தாள்வாழ்க

இலங்கைத் தீவின் வடபால்- சைவமும், தமிழும் தழைத்து விளங்கும் வவுனியா கோவில்க்குளத்தில் கோயில் கொண்டு விளங்கும் அருள்மிகு அகிலாண்டேஸ்வரி சமேத அகிலாண்டேசுரர் திருக்கோயில் கும்பாபிஷேகம் **09-07-2008** அன்று நடைபெறுவது அறிந்து மகிழ்ந்தோம்.

ஒரு நாமம் ஓர் உருவம் ஒன்றுமில்லாது எங்கும் சச்சித் ஆனந்தப் பொருளாய் நிறைந்திருக்கும் அளவற்ற கருணைப் பெருங்கடலான இறைவன் எண்ணற்ற கோடி உயிர்கள் ஆணவப் பேரருளால் அறிவு மறைக்கப்பட்டுக் கல்போல் செயலற்று கிடக்கும் நிலைக்கு இரங்கி தம் திருவடிப் பேரின்பத்தில் நிலைப்படுத்தும் நோக்கோடு சக்தியாக, சிவமாக, பல்வேறு மூர்த்தங்களாக திருக்கோயில் கொண்டு எழுந்தருளி அருள்பாலித்து வருகின்றான்.

கும்பாபிஷேகப் பெருவிழா சிறப்பாக நடைபெறவும், விழாவில் பங்கேற்கும் மெய்யன்பர்கள், திருப்பணிக்குழுவினர் அனைவரும் குருவருளும் திருவருளும் பெற்று வாழ்வாங்கு வாழ நமது வழிபடு கடவுளாகிய அருள்மிகு ஞானப்பெருங்கூத்தன் திருவடி மலர்களைச் சிந்தித்து வாழ்த்துகின்றோம்.

பெறுநர் :அருள்மிகு.அகிலாண்டேஸ்வரி சமேத
அகிலாண்டேசுரர், திருக்கோயில்,
கோவில்க்குளம், வவுனியா,
இலங்கை.

சிவாகம ஞான பாஸ்கரன் சிவஸ்ரீ தா.மகாதேவக்குருக்கள்

தர்மசாஸ்தா குருகுலம், காயத்ரீபீடம் இணுவில்

அவர்களின்

ஆசிச் செய்தி

வவுனியா கோவில்க்குளத்திலே வீற்றிருந்து அருளாட்சி செய்து கொண்டிருக்கும் திருவருள் மிகு அகிலாண்டேஸ்வரி சமேத அகிலாண்டேசுரர் மஹா கும்பாபிஷேக கிரியைகள் உத்தமோத்தம யாகத்தில் 33 குண்டங்களோடு சிறப்பாக நடந்தேறியது யாகத்திலே பதுமுக்தியடைந்த அனந்தாதிகள் சிவனை சேவிக்க யாகசம் ரட்சகர்களாக பாசுபதாஸ்த்ர தேவதைகள் லோகபாலகர்கள் ஐந்து கலைகள் வஜ்ராதிதேவதைகள் க்ஷேத்ர பாலகர் முதலியவர்கள் ஏழு நாட்கள் கும்பங்களிலே வீற்றிருந்து பூஜைகளை ஏற்றருளினார்கள். சந்திரனும் சூரியனும் விசேசமாக பூஜிக்கப்பட்டார்கள். சதுருத்தரர்கள் யாகசாலையில் அமைக்கப்பட்ட 100 ஸ்தம்பங்களில் பிரசன்னமாகி அருள் புரிந்தார்கள். தாய்நாட்டிலிருந்து வருகை தந்திருந்து சதுர்வேத பண்டிதர்கள் இருக்கு யசூர் சாமம் அதர்வண வேதங்களை ஓதி பிரதான கும்பத்தில் வீற்றிருந்த எம்பெருமானுக்கு இறைசக்தியை சான்னிதயப்படுத்தினார்கள்.

எல்லாவற்றிக்கும் மேலாக அருளாளர்கள் பரப்பிய பன்னிரண்டு திருமுறைகளையும் காலத்திற்கு காலம் ஓதுவா மூர்த்திகள் ஓதி திருமுறை சான்னியத்தையும் ஏற்படுத்தினார்கள். சிவாச்சாரியர்கள் தினசரி புஷ்கரணி தீர்த்தத்திலே தீர்த்த வழிபாடு செய்து ஆத்மா பூஜை செய்து 33 குண்டங்களிலும் எரியோம்பி வழிபாடு செய்தார்கள். தினசரி இரண்டு காலங்களிலும் சிவாசார்யார்களுடைய பிரதிட்சண நமஸ்காரம் பூஜா சமர்பணம். கிரமமாக நடைபெற்றது.

5ஆவது ஆவரண பிரதட்சிணம் வேத பாராயணத்தோடும் 4வது ஆவரண பிரதட்சிணம் ஸ்தோத்ரபாராயணத்தோடும் 3வது ஆவரண பிரதிட்சிணம் 12 திருமுறை பாராயணத்தோடும் 2வது ஆவரண பிரதட்சிணம் கீர்த்தனைகளோடும் முதலாவது ஆவரண பிரதட்சிணம் நாதஸ்வர இசையோடும் நடைபெற்று 33 சிவாசார்யர்களும் இறைவனின் சமீபம் சென்று முதலாவது ஆவரணத்தில் எம்பெருமானை துதிசெய்து பூஜா சமர்ப்பணம் செய்த காட்சி எல்லோரையும் மெய்சிலிர்க்க வைத்த பக்தி பூர்வமான காட்சியாகும்.

பக்தர்கள் புடைசூழ பிரதான கும்பங்கள் பிரதட்சிணமாக கருவறையில் எழுந்தருளச் செய்து சிவாச்சார்யர்கள் சாதாக்ய பஞ்சகங்களை பஞ்சசக்திகளின் இணையோடு லிங்கத்தில் சான்னித்யப்படுத்தி மஹாகும்பாபிஷேகம் நடைபெற்ற காட்சியை தரிசித்த பக்தர்கள் எல்லோருமே பாக்யசாலிகள். இக்கும்பாபிஷேகத்தின் பயனாக நாட்டில் சாந்தி சமாதானம் ஏற்படவும் மக்கள் சுபீட்சமாக வாழவும் இறைவன் துணை நிற்க பிரார்த்திக்கின்றேன்.

ஓம் சாந்தி சாந்தி சாந்தி

சதா.யோகீஸ்வரக்குருக்கள்
நீலாயதாக்ஷி சமேத காயாரோஹணர் தேவஸ்தானம்,
திருநெல்வேலி. யாழ்ப்பாணம்.
அவர்களின்

ஆசியுரை

அன்பும் சிவமும் இரண்டென்பார் அறிவிலார்
அன்பே சிவமாவதாரும் அறிந்திலர் அன்பே சிவமாவதாரும் அறிந்த பின்
அன்பே சிவமாய் அமர்ந்திருப்பாரே. (திருமந்திரம்).

ஆதிகாலம் முதல் ஸ்ரீ பரமேஸ்வரனைத் தேவர்களும் முனிவர்களும் பிரம்ம ஞானியர்களும் லிங்கவடிவமாகவே பூஜித்து வந்தனர். சிவலிங்கத்தின் பீடம் ஆவுடையார் எனப்படுவது. அதாவது அம்பாளின் சைதன்யம் பீடத்தில் அமைந்துள்ளது. அதுவே கிரியா சக்தி வடிவம் - லிங்கம் ஞானசக்தி வடிவம் - பீடத்தின் அடிப்பாகம் பிரமரூபம் நான்முகனின் சொரூபம் மத்யபாகத்தில் மாதவன் சொரூபம் மேலே ஈசானின் சாந்நித்யம், தேவர்கள் சிவலிங்க வழிபாடு செய்வதற்காகவே விசுவகர்மாவிடம் பற்பல சாந்நித்யங்களோடு கூடிய சிவலிங்கவளைப் பெற்றனர் என்று புராணங்கள் கூறுகின்றன.

உதாரணமாக இந்திரன் - பதுமராகலிங்கம், எமதர்மன் - கோமேதகலிங்கம் - விஷ்ணு - இந்திரலிங்கம் ஒவ்வொரு விதமான லிங்கங்களை வழிபடுவதால் நமக்கு எண்ணற்ற சௌபாக்கியங்கள் பெருகுகின்றன. கல்லினால் செய்யப்பட்ட சிவலிங்கத்தை ஆராதிப்பவர் நினைத்துப் பார்க்க முடியாத அளவுக்கு அரும்பெரும் சக்திகளைப் பெறுவர். சிவலிங்கப் பூஜையால் கண்ணப்பர் முக்தி அடைந்தார். சிவலிங்கப் பூஜையால் மார்க்கண்டேயர் நீண்ட ஆயுளைப் பெற்றுமாமுனிவராய் போற்றப்பட்டார். ஆகவே இதையெல்லாம் கற்று உணர்ந்த ஆலய தர்மகர்த்தாக்கள் சமயப்பற்றும் மேன்மை கொள் சைவநீதியும் உலகெலாம் விளங்கவேண்டும். தான் பெற்ற இன்பம் இவ்வையகமும் பெறவேண்டி திருவருள் துணையுடன் அகில உலகெலாம் காத்தருள வேண்டி அகிலாண்டேஸ்வர நாமங்கொடுத்து கோவில் கொண்டருளச் செய்தனர்.

தொண்ணூற்றாறாம் ஆண்டு மே மாதம் நடைபெற்ற கும்பாபிஷேகம் பிரதிஷ்டா திலகம் நயினைக்குருமணி பரமேஸ்வர சிவாச்சாரியார் தலைமையில் மிகவும் சிறப்பாக நடைபெற்று அன்று முதல் எம்பெருமானுக்கு மூன்று கால பூஜை பிரதோஷ வழிபாடு மகோற்சவம் முதலியன சிறப்பாக நடைபெற்று பன்னிரண்டு ஆண்டு பூர்த்தியாகி சர்வதாரி ஆண்டு ஆனிமாதம் அத்த நட்சத்திரத்தில் அதிஉத்தமோத்தம த்ரயத்திரிம்சத்முப்பத்து மூன்று குண்ட பக்ஷ மஹாகும்பாபிஷேகம் ஸ்ரீநிவாசகுமணி சிவாச்சாரியர் அமைத்த யாக வேள்வி இந்தியாவில் இருந்து வரவழைக்கப் பெற்ற சதுர்வேதவிற்பன்னர்கள்

இலங்கை தர்மசாஸ்தா காயத்திரி பீடாதிபதி மஹாதேவவாத்தியார் பெருந்தகை ஈழத்தில் தலைசிறந்த சிவாச்சாரியர்கள், சாதகாச்சாரியர்கள் இவர்கள் உடன் பன்னிரு திருமுறை பாராயணம் செய்பவருடன் நானும் சிறிது காலம் அகிலாண்டேஸ்வரர் நித்திய நைமித்திய தொண்டுகளை செய்த காரணமோ அறிவில் சிறியேன் ஆன எனக்கும் இந்த கும்பாபிஷேகத்தில் சிறுபணி ஆற்ற திருவருள் கூடியது. எல்லாம் அவன் திருவிளையாட்டு என்பதை மனதில் நினைந்து கொண்டு என்நிவ்ஷா குரு சித்தாந்தபானு அவர்கள் ஆசியும் என்னை ஆளாக்கிய வளர்ப்புதந்தை சிநாசன்முகரத்தினக்குருக்கள் பாதம் பணிந்து, இந்த கும்பாபிஷேக வெளியீட்டு சிவதத்துவ மலர் மிகவும் சிறப்புறவாடாமலராக எல்லார் கைகளிலும் மலரவேண்டும் என எல்லாம்வல்ல பரம்பொருளாம் அகிலாண்டேசுரர் பாதகமலங்களை வணங்கி ஆசிர்வதிக்கின்றேன்.

ஓம் சாந்தி சாந்தி சாந்தி

ஸ்ரீநிவாச நாகேந்திரக்குருக்கள்
பிரதிஷ்டாபிரதமகுரு மீனாட்சியம்பாள் சமேத சோமசுந்தரப்
பெருமான் கோயில். புங்குடுதீவு
அவர்களின்

ஆசிச் செய்தி

இறைவனை வழிபட்டு அதன் மூலமாக ஆன்ம ஈடேற்றத்தை பெறுவதற்காகவே மானிட சரீரம் இறைவனால் நமக்கு தரப்பட்டுள்ளது என்பதைத் தெரிந்து கொள்ள வேண்டும். இறைதொண்டு இறைபக்தி இவைகள் நமது வாழ்வின் முக்கிய குறிக்கோளாக அமைத்துக் கொள்ள வேண்டும்.

தவமும் தவமுடையார்க்காகும் அஃகிதார்
அவமதனை மேற்கொள்வது

என்பது வள்ளுவர் வாக்கு அதற்கமைவாக இறைபணியை மேற்கொள்ள வேண்டும். சிவவழிபாடு சாலச் சிறந்தது. சிவத்தொண்டு புரிவது, சிவனை வழிபடுவது சிவாலயத்தில் விழாக்கள் செய்வது என்பது எல்லோருக்கும் பொருந்தாது. முற்பிறவியிலேயே செய்த தவத்தின் பயனாகவே சிவசிந்தனையே ஏற்படுகின்றது. சிவசிந்தனையும், சிவவழிபாடும் மனிதனுக்கு இன்றியமையாதது. இதற்கு உதாரணமாக விளங்குவது தான் வவுனியா கோயில்குளத்தில் அமைந்துள்ள அகிலாண்டேஸ்வரி சமேத அகிலாண்டேசுரர் திருத்தலம் மூர்த்தி, தலம், தீர்த்தம் ஆகிய மூன்றும் சிறப்பாக அமைந்துள்ளது.

1996ம் ஆண்டில் புதிதாக ஆலயம் அமைத்தும், இந்தியாவில் இருந்து மூர்த்திகள் வருவித்தும் கும்பாபிஷேகம் நடந்தேறியது. இந்த கும்பாபிஷேகத்தை தொடர்ந்து 48 நாட்கள் பகல் அபிஷேக ஆராதனையும், இரவு வசந்தமண்டபப் பூஜையும் சுவாமி உள்வீதியும், வெளிவீதி வலம் வரும் அலங்காரக் காட்சியும் நாளாந்த நிகழ்வாக நடைபெற்றது. அதனைத் தொடர்ந்து மூன்று காலப்பூசைகள் சிறப்பாக அமைந்தது. இந்த கும்பாபிஷேகம் நிறைவெய்தியதும் மகா கும்பாபிஷேகத்திற்கு முன்னர் கனமழை பெய்து கோவில் முழுவதும் கோவில்க்குளமாக காட்சியளித்தது. உள்வீதி மூடுசாந்து போடுவதற்கு கம்பிகள் இல்லை என்று நவரெத்தினராஜா சொல்லி கவலைப்பட்டுக் கொண்டு காலைப்பூசையின் போது என்னிடம் சொன்னார். அதற்கு நான் அவரிடம் கவலைப்பட வேண்டாம். இறைவன் திருவருள் எப்படியோ அப்படி நடக்கும் என்று கூறினேன். அவர் சென்று வவுனியா நகரத்திற்கு போய் 10 நிமிடத்தில் திரும்பி வந்து என்னிடம் சொன்னார் ஒரு லோட் கம்பி வருகிறது என்றார் இது அகிலாண்டேஸ்வரரின் திருவருள் என்றே சொல்லலாம் இப்படி இன்னும் எத்தனையோ புதுமைகள் அவரிடத்தில் பொருந்தியுள்ளது என்றால் மிகையாகாது. அதன் பின்னர் கல்யாண மண்டபம் 2, அருளகம் 2, பூந்தோட்டம், வாழைத்தோட்டம், தென்னஞ்சோலை என்பன வளர்ந்து ஓங்கியது. 2008ம் ஆண்டில் பழைய ஆலயத்தோடு அமிர்தவர்ஷினி தீர்த்தத்தடாகம் ஆலயத்தின் தென்புறத்தில் அம்பாளின் பார்வை அருள் கடாஷமாக வீழ்ந்து கோவிலை அலங்கரிக்கின்றது.

இன்னும் துவார சுப்பிரமணியர் ஆலயம், பஞ்சலிங்க ஆலயம், பஞ்சமுகலிங்க ஆலயம், நால்வர் ஆலயம், சூரியன் ஆலயம், சந்திரன் ஆலயம், சோமஸ்கந்தர் ஆலயம், அகிலாண்டேஸ்வரி ஆலயம், பள்ளியறை, தேவசபை என்னும் பாரிய திருப்பணிகள் நிறைவு செய்தும், அகிலாண்டேஸ்வரருக்கு (33) முப்பத்து மூன்று குண்டங்களோடு கூடிய உத்தமோத்தபஷ யாகமும், அகிலாண்டேஸ்வரி

அம்பாளுக்கு (9) நவகுண்டபஷ யாகமும், மூத்த விநாயகருக்கு (9) நவகுண்டபஷ யாகமும், துவார சுப்பிரமணியருக்கு (9) நவகுண்டபஷ யாகமும் ஏனைய மூர்த்திகளுக்கு ஏககுண்டயாகமும் போடப்பட்டு ஆடிமாதம் 9ம் திகதி சிறப்பான முறையில் இரண்டாவது மகா கும்பாபிஷேகம் நிறைவேறியது

இதைத் தொடர்ந்து மண்டலாபிஷேகம் காலை 10 மணிக்கு அபிஷேக ஆராதனைகளும் 12 மணிக்கு தீபாராதனைகளும் மாலை 5:30 மணிக்கு பூஜையும் சிவன், அம்பாளுக்கு, பஞ்சமுகார்ச்சனையும், வசந்த மண்டப தீபாராதனையும், சுவாமி உள்வீதி, வெளிவீதி வலம் வருதலும் நாளாந்த நிகழ்வாக நடைபெற்று வருகின்றது. இதைவிட இந்த கும்பாபிஷேகத்தை தொடர்ந்து ஆறுவேளை பூஜைகள் ஓழுங்கு செய்யப்பட்டு காலை 5:30 மணிக்கு திருவனந்தல் பூஜை, காலை 7:00 மணிக்கு காலை சந்தி பூஜை, மதியம் 12:00 மணிக்கு உச்சிகாலப்பூஜை, பிற்பகல் 4:30 மணிக்கு சாயரஷை பூஜை மாலை 530 மணிக்கு இரண்டாங்காலபூஜை, மாலை 7:00 மணிக்கு அர்த்தஜாமப்பூஜை (பள்ளியறைக்கு சுவாமி எழுந்தருளல்) ஆகியவை சிறப்பாக நடாத்தப்படுகின்றது.

இன்றும் நிறைவேற வேண்டிய பாரிய திருப்பணி கோபுரத்திருப்பணி என்பதை தெரிந்து கொள்ள வேண்டும். இந்த திருப்பணியும் ஓரு வருடத்தில் பூர்த்தியாகும் என்கிற நம்பிக்கையுண்டு. இந்த திருப்பணிக்கு எல்லா அடியார்களும் மனமுவந்து நிதியுதவி செய்ய வேண்டும். அகிலாண்டேஸ்வரப்பெருமான் அருள் புரிவார். அருள் புரிய வேண்டும் என்று எல்லோரும் பிரார்த்திப்போம்.

இந்தக் கும்பாபிஷேகத்தை சிறப்புற நடாத்திய அறங்காவலர்கள், ஒத்தாசை புரிந்து சிறப்பித்த கும்பாபிஷேக குழுவினர்கள், பல தொண்டுகள் புரிந்த தொண்டர் சபையினர், கும்பாபிஷேகத்தைச் செவ்வனே நடாத்த உதவிய குருமார்கள், சாதகாச்சார்யார்கள், சர்வசாதகாச்சாரியர்கள், சர்வபோதகாசார்யார்கள், வேதபாராயணம் நடாத்திய இந்திய சிவாச்சார்யார்கள் யாக சம்ரஷகர்கள், திருமுறை ஓதிய ஓதுவார்கள், கீதாஞ்சலி, நிர்த்தியாஞ்சலி, நாதாஞ்சலி நிகழ்த்தியவர்கள், மங்கல வாத்தியம் வழங்கிய இசைக்கலைஞர்கள், யாகம் அமைத்தவர்கள், குண்டங்களைப் போட்டும், ஆலயத்தை அமைத்தும் உதவிய சிற்ப கலைஞர்கள், வர்ணம் தீட்டிய ஓவியர்கள், வாகனஉதவி, சரீர உதவிபுரிந்த அன்பர்கள், நிதியை உதவிய பெருந்தகைகள், ஒலி, ஒளி அமைத்த அன்பு உள்ளங்கள், புகைப்படம், வீடியோ, எடுத்த அன்பு உள்ளங்கள் இன்னும் அன்னதானம் வழங்கியும் அதற்கு ஒத்தாசை புரிந்த அன்பு உள்ளங்கள் இன்னும் பல உதவிகள் புரிந்தவர்கள் எல்லோருக்கும் அகிலாண்டேஸ்வரியோடு உடனுறைகின்ற அகிலாண்டேசுரப் பெருமான் திருவருள் கிடைக்க எனது மனமாரப் பிரார்த்திப்பதோடு எனது மனமார்ந்த நல்லாசிகளையும் தெரிவிப்பதில் மனமகிழ்வடைகின்றேன்.

–சுபம–

வேதாகம சக்கரவர்த்தி வேதாகம உதயசூரியன்
சிவஸ்ரீ.ஆ.சௌந்தர்ராஜகுருக்கள்
தர்மசாஸ்தா குருகுலம். இணுவில
அவர்களின்

ஆசிச் செய்தி

ஆகமங்கள் கிரியைகளை நான்கு பிரிவுகளாக வகுத்துள்ளனர். இதன் அடிப்படையில் கர்ஷணம், பிரதிஷ்டை, உற்சவம், பிராயச்சித்தம் என்பனவாகும். அவற்றுள் பிரதிஷ்டை என்பது நான்கு வகைப்படும். ''அநாவர்த்தனம், ஆவர்த்தனம், புனர்ஆவர்த்தனம், அந்தரிதம்'' இந்த வகையிலே ''**கொண்டல**'' மரத்திலிருந்து பெறப்பட்டு அநாவர்த்தன முறையில் கும்பாபிஷேகம் நடைபெறப் பெற்றவர் தான் அகிலாண்டேசுரர்.

ஆகமங்கள் 28 உள்ளன. மேலும் (207 உபஆகமங்களும் உள்ளன) இவ்வாகமங்கள் மந்திரங்கள், தந்திரங்கள், சித்தாந்தம் எனவும் பெயர் பெறுகின்றன.

''மந்திரலோப, தந்திரலோப, கிரியாலோப''. (ஆகமவாக்கியம்)

இந்த ஆகமத்தில் 28 சிவாகமங்கள் ஒவ்வொன்றும் கோடி கிரந்தமாக 28 கோடி கிரந்தங்கள் உள்ளன. இவற்றைக் கொண்டு தான் நாம் ஆலயத்தில் நடைபெறும் கிரியைகளைச் செய்கின்றோம். இவற்றுள் '**யாகவழிபாடு**'' இன்றியமையாத ஒன்றாகும். இவற்றுள் பரமசிவனை துதித்துப் போற்றுகின்ற ''**ஏகாதசருத்திரமே**'' அதி சிறந்த உத்தம யாகம் என்பார்கள்.

''அயம்மே கஸ்தோ பகவான் அயம்மே பகவத்ரகா
அயம்மே விஸ்வவே சிசோயம் சிவாபிமர்சனகா'' ....(ஸ்ரீ ருத்திரம்)

அடுத்தபடியாக இவ்வாலய கும்பாபிஷேகம் உத்தமோ உத்தம யாகமாகக் கருதப்படுகின்ற (33) குண்டங்களுடன் கூடிய யாகம் இதிலே மேலும் சிறப்பான நவகுண்ட ஸ்பர்சாகுதி லிங்கத்தை 9 பாகமாகப் பிரித்து அக்கினியையும் லிங்கத்தையும் சமப்படுத்துவது நவகுண்டஸ்பர்சாகுதி ஆகும். இதனை முறையே **தத்வம், தத்வேஸ்வரன், தத்வேஸ்வரி, மூர்த்தி, மூர்த்தீஸ்வரன், மூர்த்தீஸ்வரி**யாகக் கருதப்பட்டு உத்தமோ உத்தமமான யாகமாக 44 குத்திரம், 43 அடியாக யாகம் அமைக்கப்படுகிறது, இவ்வாலய மஹா கும்பாபிஷேகம்.

அடுத்ததாக தலவரலாற்றைக் கூறும் முகமாக 60 வருடம் பழமை வாய்ந்தது போன்று காட்சியளிக்கின்ற இவ்வாலயம் சிறுவர் இல்லம், முதியோர் இல்லம் அன்னதான மடம் இவையெல்லாம் நிறுபூரணம் அடைகிறது.

அதற்கேற்றாய் போன்று இவ்வாலயத்தின் திருநாமம் அகிலங்களையெல்லாம் காக்கின்ற அகிலாண்டேசுரர் திருநாமம் அமைத்துக் காணப்படுகின்றது. மூர்த்தி, தலம், தீர்த்தம் இவை மூன்றும் ஒன்றிணைந்திருப்பது இவ்வாலயத்தின் சிறப்பாகும். வேதங்கள், திருமுறைப் பாராயணங்கள் எல்லாம் நெஞ்சை உருக்கும் வகையில் ஓதுகின்ற பாங்கு இங்கு சிறப்பம்சமாகும்.

இப்படிப்பட்ட இந்த ஆலயம் மகா கும்பாபிஷேக மண்டல பூர்த்தி தினமான அன்று இலங்கை வரலாற்றில் 2வது முறையாக 10,008 சங்காபிஷேகம் நடைபெறுவது ஓர் சிறப்பம்சமாகும். இவற்றின் பலனாக எல்லோருக்கும் எல்லா நன்மைகளும் கிடைக்கப்பெற்று நாட்டில் சாந்தி, சமாதானம், மலரவேண்டுமென்று அகிலாண்டேஸ்வரிர் சமேத அகிலாண்டேசுரர் பாதங்களைப் பணிந்து அடியேனுடைய ஆசியை நல்கி அமைகிறேன்.

''மேன்மை கொள் சைவநீதி விளங்குக உலகமெல்லாம்''

வவுனியா அரச அதிபர் திரு.சி.சண்முகம்
அவர்களின்

ஆசிச் செய்தி

வவுனியா கோவில்குளம் திருப்பதியில் கோயில் கொண்டு எழுந்தருளி அகிலமெல்லாம் பரந்திருக்கும் அருள்மிகு அகிலாண்டேஸ்வரி சமேத அகிலாண்டேசுரப் பெருமானின் மஹா கும்பாபிஷேக பெருஞ்சாந்தி விழாவை முன்னிட்டு சிவமணத்துடன் மலரவிருக்கும் ''சிவதத்துவ மலரிற்கு'' வாழ்த்துச் செய்தி வழங்குவதில் பேருவகை அடைகின்றேன்.

''எப்பொருள் யார் யார் வாய்க்கேட்பினும்
அப்பொருள் மெய்ப்பொருள் காண்பதறிவு''

பன்னிரண்டு வருடத்திற்கொருமுறை மஹா கும்பாபிஷேகம் நடாத்தப்படுவது சைவ மக்களின் வாழ்வுக்கு உயர்ச்சியையும் அகிலத்திற்கு அமைதியையும் அளிக்கின்றது. நீக்கமற நிறைந்திருக்கும் பரம்பொருளை ஓரு வடிவுக்குள் கொணர்ந்து உருவநாமம் கொடுத்து வழிபட்டு பக்தி செலுத்துவது சைவ சமய மரபாகும். சிவனை வணங்குவதால் மெஞ்ஞானம் மிகுந்து அஞ்ஞானம் விலகி மோட்சம் கிடைக்கும் என்று சாஸ்திரங்கள் சொல்கின்றன. பல்வகைப்பட்ட பிறப்புக்களை அடையும் நாம் முன்செய்த நல்வினைப் பயனாக மானிடப் பிறப்பினைப் பெற்றுள்ளோம். இறைவனை வழிபட்டு அவன் திருவருளினைப் பெறவேண்டுமென்பதே எமது பிரார்த்தனை. இதனையே சிவபுராணத்தில் மணிவாசகப் பெருமான் ''அவன் அருளாலே அவன் தாள் வணங்கி'' எனக் குறிப்பிடுகின்றார். பக்தியின் மூலமாகத்தான் மனிதன் ஆன்மீகத்தில் உயர்நிலையை அடையமுடியும். அதன் மூலமாகத் தான் முக்தி அதாவது வீடுபேறு கிடைக்கும். பக்தியினால் தான் மனிதனால் ஜனனம் மரணம் என்கின்ற பிறவிக்கடலிலிருந்து கரையேற முடிகிறது. பக்தியினால் தான் பரமாத்மாவின் தத்துவத்தைப் புரிந்து கொள்ள மனிதனால் முயற்சிக்க முடிகிறது. பக்தியினால் மட்டுமே மனிதனுக்கு வேண்டிய சித்திகள் கிடைக்கும்.

திரிமூர்த்திகளின் இணைப்பு ஏற்படும் போது சர்வமங்களம் ஏற்படுகின்றது. இவ்வாறு அற்புத சக்திகள் பலவற்றை தன்னுள் கொண்ட அருள்மிகு அகிலாண்டேஸ்வரி சமேத அகிலாண்டேசுரப்பெருமான் அர்த்தனாரீஸ்வரராக இருந்து அருள்பாலிக்கின்றார். நடைபெற்று முடிந்த ''த்ரியத்திரிம்சத்'' 33 குண்ட புனராவர்த்தன மஹா கும்பாபிஷேக வைபவத்தின் பூர்த்தியாக நிகழவுள்ள பெருஞ்சாந்திப் பெருவிழா சிறப்புற நடைபெறவும் எல்லா மக்களும் சகல சௌபாக்கியங்களையும் பெற்று மனஅமைதியுடன் வாழ பெருமானின் அருளை வேண்டியும் மஹா கும்பாபிஷேகத்தை நடாத்தும் சிவாச்சாரியப் பெருமக்களை வணங்கி ஆலய பரிபாலன சபையினரின் சேவையைப் பாராட்டி எல்லோர்க்கும் பரந்த அறிவு, கீர்த்தி, பெருமை, துணிவு, நீண்ட ஆயுள், அரியவெற்றிகள் முதலிய சகலதும் கிடைக்க வேண்டும் எனவும் தற்போதுள்ள துயரங்கள், பயம், பட்டினி நீங்கி இந்த மண்ணில் அமைதி பிறந்து இனசௌஜன்யமும் ஒற்றுமையும் மேலோங்க வேண்டுமென்று அந்த அகிலாண்டேஸ்வரரைப் பிரார்த்திக்கின்றேன்.

யாழ் மாவட்ட அரசாங்க அதிபர்
திரு.க.கணேஷ்
அவர்களின்

ஆசிச் செய்தி

දිසාපති / දිස්ත්‍රික් ලේකම්
அரசாங்க அதிபர்/மாவட்டச் செயலாளர்
Government Agent / District Secretary

දුරකථනය
தொலைபேசி } 021-222 2235
Telephone

ෆැක්ස්
பக்ஸ் } 021-222 2355
Fax

E-mail: gajaffna@sltnet.lk

දුරකථනය පොදු
பொது தொலைபேசி } 021-222 223 / 021-222 223
General Telephone

දිස්ත්‍රික් ලේකම් කාර්යාලය, යාපනය.
மாவட்ட செயலகம், யாழ்ப்பாணம்.
District Secretariat, Jaffna.

මගේ අංකය
எனது எண் } GA/JF/02
My No.

ඔබේ අංකය
உமது எண் }
Your No.

දිනය
திகதி } 30.07.2008
Date

ஆன்மீக ஆரோக்கியம் என்பது இன்று அகில உலகமும் முதன்மை அளிக்கும் ஒரு விடயமாக உள்ளது. இவ்வகையில் உயரிய சிந்தனைகளைத் தன்னகத்தே கொண்ட இந்து மதம் இலங்கையில மட்டுமின்றி உலகெங்கிலும் வாழும் மக்களை ஒன்றிணைக்கும் உன்னத சக்தியாக இருக்கின்றது என்பது மிகையில்லை.

எம்முள் அந்தர்யாமியனாய் நின்றியக்கும் இறைசக்தியை அன்னையாய், தந்தையாய், அன்பின் திருவுருவாய் வழிபடுவது இந்துக்களின் சிறப்பு வவுனியா கோயிற்குளத்தில் குடிகொண்டிருக்கும் அகிலாண்டேஸ்வரி சமேத அகிலாண்டேஸ்வரப் பெருமானின் அருளாட்சி ஒவ்வொரு இந்துக் குடிமகனதும் உள்ளத்தைச் செப்பனிட்டுச் சீரிய சிந்தனை தோன்ற வழிசமைக்கிறது எனலாம்.

பார்வதி, பரமசிவனாய் பாவனை பண்ணி பந்தத்தில் இணையும் குடும்பத் தலைவர்கள் ஒவ்வொருவரும் வையத்துள் வாழ்வாங்கு வாழ வழிகாட்டி அருளாட்சி புரிகின்றனர். அம்மையும் அப்பனும்.

தனையனிடம் தலைகுனிந்து பிரணவ மந்திரத்தின் உட்பொருளைச் செவிமடுத்த எம்பிரானின் செய்கை இன்றைய பெற்றோரால் பின்பற்றத்தக்கது. பழனி ஆண்டவனின் கோபத்தைத் தணித்து அன்னை வழங்கிய வேல் அகிலத்தில் அநீதியை ஒழித்ததன்றோ.

இன்று இறைபக்தி என்பது மட்டும் போதியதல்ல. ஒவ்வொருவரும் இறைவனின் பிம்பங்களாய் நடமாடும் தெய்வங்களாக நம்மை நாம் உயர்த்திக் கொள்ள வேண்டிய தருணம் இது. இவ்வுலகில் இருந்தவாறே இறைவனின் குடும்பத்தில் ஒருவராகி இறைவனோடு ஐக்கியப்பட வேண்டியவர்களாகின்றோம். வவுனியா கோவிற்குளம் அகிலாண்டேஸ்வரி சமேத அகிலாண்டேஸ்வரப் பெருமானின் அருள் அகிலமெங்கும் பரவவேண்டும் எனப் பணிந்து வேண்டி ''சிவதத்துவமலர்'' சிறப்புற என் இனிய அருளாசிகளை நல்குகிறேன்.

வாழ்க வளர்க

க.கணேஷ்,
அரசாங்க அதிபர்/மாவட்டச் செயலர்,
யாழ் மாவட்டம்.

க. கணேஷ்
அரசாங்க அதிபர்
யாழ்ப்பாண மாவட்டம்

வடமாகாண மேல்நீதிமன்ற நீதிபதி
கௌரவ ஜெ.விஸ்வநாதன்
அவர்களின்

ஆசிச் செய்தி

அருள்மிகு அகிலாண்டேஸ்வரி சமேத அகிலாண்டேசுரப் பெருமானின் புனராவர்த்தன மகா கும்பாபிஷேக பெருஞ்சாந்தி விழாவையொட்டி வெளியிடப்படும் சிறப்பு மலரான ''சிவதத்துவமலர்'' க்கு ஆசிச்செய்தி வழங்க சந்தர்ப்பம் கிடைத்தமையை முன்னிட்டு பேருவகையடைகிறேன்.

இறை நம்பிக்கையும் அதன் அடிப்படையில் செய்யப்படும் இறைவழிபாடும் காலங்காலமாக மனிதகுலத்தை நல்வழிப்படுத்தி வந்திருப்பதை சரித்திரம் பகர்கின்றது. மனிதன் ஆறறிவு படைத்திருப்பினும், அதன் அடிப்படையில் வாழ்க்கை வசதிகளைப் பலவாறாகப் பெருக்கியிருப்பினும், வாழ்க்கையில் இக்கட்டான சோதனைமிக்க நிலையை சந்திக்கும் போது தனது இயலாமையை உணர்ந்து இறைவனது துணையை நாடவேண்டிய நிலையில் அவன் உள்ளத்தைக் காண்கின்றோம். இந்த இக்கட்டான நிலையில் அங்கிங்கெனாதபடி எங்கும் நீக்கமற நிறைந்திருக்கும் இறைவனோடு எளிதில் தொடர்பு கொள்வதற்கு உதவும் இடமே ஆலயமாகும்.

வழிபாட்டின் அடிப்படையாக விளங்குவது புறத்தூய்மையும் அகத்தூய்மையுமே. இத்தூய்மையின் அடிப்படையில் மாத்திரமே இறையருளைப் பெற இயலும். சிவபுராணத்தில் ஆரா இன்பப் பனுவலாகிய தில்லையம்பலத்தில் எல்லையிலா இன்ப நடம்புரியும் நடராசப் பெருமானைப் போற்றி பாடிய சில வரிகளை இத்தருணத்தில் நினைவில் கொண்டு வருவது பொருத்தமென எண்ணுகிறேன். மெய்யே உன் பொன் அடிகள் கண்டு இன்று வீடு உற்றேன் உண்மையாகவே உன் அழகிய திருவடிகளைக் கண்டு இப்பொழுது பிறவித் துன்பங்களினின்றும் விடுபட்டேன். உய்ய என் உள்ளத்துள் ஓங்காரமாய் நின்ற மெய்யா அடியேன் உய்யும் பொருட்டு என் மனத்துள் ''ஓம்'' என்னும் பிரணவ உருவாய் நின்ற மெய்யனே, விமலா – மாசற்றவனே, விடைப்பாகா – தருமவடிவாகிய ஏறு ஊர்ந்தவனே, வேதங்கள் ஐயா என ஓங்கி ஆழ்ந்து அகன்ற நுண்ணியனே – வேதங்கள் ஐயனே என்று அழைக்கவும் அவற்றிற்கெல்லாம் எட்டாது மேல் உயர்ந்தும் கீழ் சூழ்ந்தும் புடைபரந்தும் அமைந்த நுட்பமான பொருளாய் உள்ளவனே.

உலகத்து இன்ப துன்பங்கள் மாறி மாறி வந்து அழியுந்தன்மையுடையன. இறைவன் நித்திய நிரதிசய ஆனந்தமுடையவனாதலின் ''இன்பமும் துன்பமும் இல்லானே'' என கூறப்படுகிறது. சிவனடியார்களுக்கு உலகத்தாலும், உலகத்துப் பொருளாலும், உயிர்களாலும் வரும் இன்ப துன்பங்கள் அவ்வடியாரைத் தாக்காமல் முதல்வனே ஏற்றுக் கொள்வானாதலின் ''இன்பமும் துன்பமும் இல்பானே உள்ளானே'' என கூறப்பட்டுள்ளது.

அகிலாண்டேஸ்வரி சமேத அகிலாண்டேசுரப் பெருமானின் பரிபூரண அருளும், பக்தர்களின் அன்பும் குறைவுபடாது வளர்க வேண்டுமென ''போக்கும் வரவும் புணர்வுமிலாப் புண்ணியனை'' வேண்டி சிவதத்துவமலர் வாடாத மலராக அடியார்தம் இல்லங்களில் அனுபூதியாக மலரவேண்டி வாழ்த்துகிறேன்.

திரு.கா.ஆ.உமாதேவன்
அறங்காவலர் சபை. பொருளாளர்
அவர்களின்

ஆசிச் செய்தி

தமிழ் பேசும் மக்களின் பெரும்பாலனவர்களின் தாய் சமயம் சைவம். அந்தவகையில் அகில அண்டங்களுக்கெல்லாம் ஈஸ்வரனாக விளங்கும் அகிலாண்டேஸ்வரியுடன் உடன்உறை அகிலாண்டேசுர பெருமானுக்கு **9072008**ல் சிறப்புற நடைபெற்ற இரண்டாவது மகா கும்பாபிஷேகம். **33** குண்டங்களுடன் கூடிய உத்தமோ, உத்தம கும்பாபிஷேகமாகும்.

அதன் பூ ரணபலன்களும் சகல மக்களுக்கும் சகல ஜீவராசிகளுக்கும் கிடைக்க வேண்டும். அல்லனுறும் நம் மக்களின் வாழ்வில் சாந்தியும், சுபீட்சமும் கிடைக்க வேண்டும். அவன் அருளாலே அவன் தாள்களை பணிந்து வேண்டிக் கொள்வதுடன் நன்றும் தீதும் பிறர் தரவாரா என்பதற்கமைய நாம் கருவிகள், வேண்டத்தக்கறிவோய் நீ வேண்டாமுழுதும் தருவோய் நீ என்ற மணிவாசகர் மணிவாக்குக்கு அமைய சிவனுக்கும் சீவனுக்கும் தொண்டு செய்து வாழ்வோமாக.

வவுனியா பிரதேச செயலாளர்
செல்வி.த.துரைசாமி
அவர்களின்

வாழ்த்துச் செய்தி

வவுனியா கோவில்க்குளம் எனும் இடத்தில் அருள் பாலித்துக் கொண்டிருக்கின்ற அருள்மிகு அகிலாண்டேஸ்வரி சமேத அகிலாண்டேசுரரின் மகா கும்பாபிஷேகத்தினை முன்னிட்டு வெளியிடப்படும் சிவதத்துவ மலருக்கு வாழ்த்துரை வழங்குவதில் மிக்க மகிழ்ச்சியடைகின்றேன்.

மூர்த்தி, தலம், தீர்த்தம், விருட்சம் என கோவிலுக்கான சிறப்பினைப் பெற்று விளங்குகின்ற இத்திருத்தலம் அருள் ஒளி நிறைந்ததும் இந்த நூற்றாண்டின் வரலாற்றுப் பெருமை படைக்கும் சிவத்தலமாக விளங்குகின்றது. சிவனடியார்களின் இடையறாத வழிபாடும் இறை அருளும் இங்கு நிறைந்துள்ளது. வவுனியாவிலே சிறப்பாக சைவத்துக்கும் தமிழுக்கும் அரும்பணியாற்றிவரும் ஆலயங்களிலே குறிப்பிடத்தக்க முக்கியத்துவமிக்க ஆலய வரிசையிலேயே முதலிடத்தில் நிற்பது கோவில்க்குளம் சிவன் கோவில் என அனைவராலும் அழைக்கப்படும் அருள்மிகு அகிலாண்டேஸ்வரி சமேத அகிலாண்டேசுரர் திருக்கோயில் எனில் மிகையாகாது.

''ஆதியும் அந்தமும் இல்லா அரும்பெரும் ஜோதி'' யை மனதுருகி வழிபடும் அடியவர்களின் மனதெல்லாம் நிறைந்து கேட்ட வரம் எல்லாம் அள்ளி வழங்கும் ஈசனின் பேரருட் பெருங்கருணை சொற்களில் அடங்காததொன்றாகும். பெரும் பொருட் செலவில் புனரமைக்கப்பட்ட இவ்வாலயமும் அமைதியான தோற்றப் பின்னணியில் அமைந்துள்ள தீர்த்தக்கேணியும் இவ்வாலயத்திற்கு சிறப்பெனலாம். ஆலய நிர்வாகத்தின் அயராத முயற்சியினால் உருவாக்கப்பட்டுள்ள இத்தீர்த்தக்கேணி வவுனியாவிலே சிறப்பாக அமைக்கப்பட்டுள்ள தீர்த்தக்கேணி எனலாம். வவுனியாவைப் பொறுத்தவரையில் குளங்களும், வயல்களும், காடுகளும் நிறைந்த பிரதேசம். அந்த வகையில் அநேகமான ஆலயங்கள் குளங்களுக்கு அருகிலே அமைந்திருப்பதனை அவதானிக்க முடியும். கோவில்க்குளம் சிவனாலயத்தைப் பொறுத்த வரை இத்தகைய வசதி இவ்விடத்தில் இல்லாமல் இருந்தது. இன்று அக்குறையினை போக்கும் வகையில் இத்தீர்த்தக்கேணி அழகாக அமைக்கப்பட்டுள்ளமை வவுனியாவிற்கு பெருமை தரும் விடயமாகும்.

சிவமணம் கமழும் இக்கும்பாபிஷேக சிறப்பு மலரான சிவதத்துவமலரும், இக்கும்பாபிஷேகமும் சிறப்புற எனது மனப்பூர்வமான வாழ்த்துக்களை தெரிவித்துக்கொள்கின்றேன்.

பிரதேச செயலாளர் (வவுனியா வடக்கு)
திரு.க.பரந்தாமன்
அவர்களின்

வாழ்த்துச் செய்தி

வேதங்களின் நாயகனாகத் திகழும் சிவன், அகிலாண்டேஸ்வரி சமேத அகிலாண்டேசுரராக வந்தோரை வாழ வைக்கும் வவுனியா நகரில் வீற்றிருந்து அருள்பாலித்து வருகின்றார். இவ்வாறு அருள் பாலித்து வரும் இறைவனுக்கு 1996ம் ஆண்டில் செய்யப்பட்ட திருகுடமுழுக்கு விழாவின் போது வானம் கறுத்து மழை பொழிந்த காட்சி இறைவனின் இறையருள் இப்பிரதேச மக்களுக்கு வாரிவழங்கப்பட்டதாகவே கொள்ளப்படமுடியும். இன்று பன்னிரண்டு ஆண்டுகளின் பின்னர் வேதாகம முறைப்படி இறையருளால் மீண்டும் இவ்வருடம் இத்திருக்குட முழுக்கு விழா நடைபெற்றது இந்த நாட்டில் சாந்தியும் சமாதானமும் கிடைக்க வழியேற்படுத்தும் தெய்வத்தின் அருட்கடாட்சமே அன்றி வேறொன்றுமில்லை.

இன்று உலகம் முழுவதும் தர்மம் அழிந்து அதர்மம் தலைவிரித்தாடுகின்றது. முன்னைய காலங்களில் அதர்ம வழியில் சென்ற அரக்கர்களை இறைவன் சங்காரம் செய்தது போன்று, உலகம் மீண்டும் தர்மத்தின் பால் வருவதற்கும் ஆண்டவனை அறியாமல் ஆணவம், கன்மம், மாயை என்ற மும்மலங்களால் சிக்குண்டு வழி தெரியாமல் இருளிலே சிக்குண்டு அல்லலுறும் மானிடப் பிறவியை மீண்டெழச் செய்வதற்கும் இதுபோன்ற கைங்கரியங்கள் அவசியமானவை.

"என்னை நன்றாக இறைவன் படைத்ததன் தன்னை நன்றாகத் தமிழ் செய்யுமாறே'' என்ற திருமூலர் திருமந்திரத்திற்கமைய இன்று இறைவனின் பல்வேறு அடியவர்களின் கருத்துக்களை தாங்கி சிவமணம் கமழும் சிவதத்துவ மலர் வெளியிடப்படுவது சாலப் பொருத்தமான ஒன்றாகும். இந்த ஈசனின் அருளுக்குப் பாத்திரமான அனைவரும் சகல செல்வங்களும் பெற்று வாழவும் கும்பாபிஷேக மலர் சிறப்புறவும் ஆண்டவனின் பாதங்களில் பணிந்து வாழ்த்துகின்றேன்.

சாந்தி திருநாவுக்கரசன (பணிப்பாளர்)
இந்துசமய கலாசார அலுவல்கள் திணைக்களம்
அவர்களின்

வாழ்த்துச் செய்தி

හින්දු ආගමික හා සංස්කෘතික කටයුතු දෙපාර්තමේන්තුව
இந்துசமய, கலாசார அலுவல்கள் திணைக்களம்
Department of Hindu Religious and Cultural Affairs

අධ්‍යක්ෂ பணிப்பாளர் Director	2552643	ෆැක්ස් தொலைநகல் Fax:	2552825	ඊමේල් மின் அஞ்சல் E-Mail	hindudir@yahoo.com
පොදු பொது General	2552641			වෙබ් අඩවිය இணையதளம் Website	www.hindudept.gov.lk
මගේ අංකය எனது இல. My No.	HA/0[illegible]/126	ඔබේ අංකය உமது இல. Your No.		දිනය திகதி Date	2008.08.05

> சிவனோடொக்கும் தெய்வம் தேடினும் இல்லை
> அவனோ டொப்பாங்கு யாவரும் இல்லை - திருமந்திரம்

வவுனியா கோவில்க்குளம் அகிலாண்டேஸ்வரி சமேத அகிலாண்டேசுர திருக்கோவில் அறங்காவலர்கள், கோவில் திருப்பணியுடன் நின்றுவிடாது சமூகப்பணியினையும் செய்து வருகின்றமை அறிந்து மிக்க மகிழ்ச்சியடைகின்றோம்.

பண்டைக் காலத்திலிருந்தே ஆலயங்களில் மன்னர்களும் மக்களும் அறப்பணிகளை செய்து வந்தனர். ஆலயங்கள் தோறும் மக்கள் செய்கின்ற நற்பணிகள் எல்லாமே உலகம் முழுமையும் போய்ச்சேரும் அருட்பணியாகும்.

இவ்வாலயத்தினர் ஆதரவற்ற சிறார்களுக்கு விடுதி அமைத்துப் பராமரித்து வருவது ஒப்பற்ற நற்சேவையாகும். மேலும் இந்துசமய கலாசார அலுவல்கள் திணைக்களத்தின் அனுசரணையுடன் அறநெறிப் பாடசாலைகளையும் செவ்வனே நடாத்தியும் வருகின்றனர். மேற்படி பணிகளுக்கு எமது திணைக்களம் நிதியுதவிகளையும் நல்கியுள்ளமை குறிப்பிடத்தக்கது.

கோவில்கள் வருடாந்த மகோற்சவங்களை நடாத்தி வருவதுடன், மகாசிவராத்திரி விழா, நவராத்திரி விழா போன்ற சிறப்பான நிகழ்ச்சிகளையும் நடாத்துவதுடன் பராட்டுக்குரியது. மிகவும் நலிவடைந்த கோவில்களுக்கு மட்டுமின்றிச் சிறப்பான முறையில் இயங்கிவரும் அனைத்து ஆலய செயற்பாடுகளையும் ஊக்குவித்தல் எமது கடனாகும்.

இப்பணியைச் சிறப்பாகச் செய்துவரும் வவுனியா அருள்மிகு அகிலாண்டேஸ்வரி சமேத அகிலாண்டேசுரர் திருக்கோவில் தர்மகர்த்தாக்கள் தம் அருள் முயற்சியினால் மகா கும்பாபிஷேகத்தினை நடாத்துவதும், மண்டலாபிஷேக பூர்த்தி தினத்தன்று ''சிவதத்துவமலர்'' எனும் அரிய நூலினை வெளிக் கொணர்வதும் பாராட்டப்பட வேண்டியதொன்றாகும். இவ்வருட்பணி தொடர எல்லாம் வல்ல அகிலாண்டேசுரர் துணை நிற்பாராக!

சிவநெறிப்புரவலர் சி.இராமஸ்வாமி
இந்துமாமன்ற செயலாளர் வவுனியா.
அவர்களின்

வாழ்த்துச் செய்தி

வடஇலங்கையின் நுழைவாயிலாக விளங்கும் வவுனியா கோவில்க்குளத்தில் அமைந்துள்ள ஆச்சரியப்படத்தக்க வகையில் அருளாட்சி புரிந்துவரும் அகிலாண்டேஸ்வரி சமேத அகிலாண்டேசுரர் திருக்கோவில் கும்பாபிஷேகத்தை ஓட்டி மண்டாலாபிஷேகம் பூர்த்தியான பின் கும்பாபிஷேக சிறப்பு மலராக மிளிரும் சிவதத்துவமலருக்கு எனது மனமார்ந்த வாழ்த்துக்களைத் தெரிவிப்பதுடன் ஞானியரால் வெளிப்படுத்தப்பட்ட சிவதத்துவம் சிலவற்றை அறிந்ததை அறிந்தவாறு கீழே தருகின்றேன்.

அரியானை அந்தணர் தம் சிந்தையானை அருமறையின் அகத்தானை அணுவை ஆர்க்கிம் தெரியாத தத்துவனை என்று நாவுக்கரசரும் "அகர முதலென உரை செய் ஐம்பத்தொரு அட்சரமும் அகில விதகலைகளும் வெகுவிதம் கொண்ட தத்துவமும் அபரிமிதசுருதியும் அடங்கும் தனிப்பொருளை இவ்வாறு அருணகிரியாரும் விதந்து பாடிய சிவதத்துவத்தை கும்பாபிஷேக மலராக மணம் பரப்பி மக்கள் மனதில் இடம் பிடிக்க இறையருள் வேண்டி மீண்டும் என் வாழ்த்துக்களை தெரிவித்துக் கொள்கிறேன்.



இதழ் - 2

எண்ணத்தில்....

முன்னுரை
அவன் அருள் என்றும் எமக்கே!

திரு. மு. சபாநாதன்
தலைவர்,
ஆலய அறங்காவலர் சபை.

வளம் உடையது வன்னி நாடு வந்தாரை வாழவைக்கும் சகல சிறப்பு உடைய வன்னி நாட்டில், வவுனியா நகரில் கோவில்குள பதியில், குறைவில்லா நிறைவாக அகிலாண்டேஸ்வரி சமேத அகிலாண்டேசுரர் திருக்கோயில் அமைவு பெற்றுள்ளது. இத்திருவாலயத்தின் திருநாமம் திருவானைக் காவில் கோவில் கொண்டிருக்கும் தேவியாரின் பெயராகும்.

இத்திருகோவிலானது 01.05.1996ம் வருடம் அவன் அருளால் நடந்தேறிய மகா கும்பாபிஷேகத்தின் பின் குறிப்பாக வவுனியாவில் சிவ ஆலயம் இல்லை என்ற பொருளுக்கு இடமேயில்லாது போனது இச்சிவாலயம் வன்னிப் பிரதேசத்தில் உள்ள ஆலயங்களில் ஓர் முக்கிய ஆலயமாக திகழ்கின்றது. இவ்வாலயத்தின் நிர்வாகத்தினர் எடுத்துக் கொண்ட பெருமுயற்சிகட்கு அவன் அருள் கிடைக்கப்பெற்று அனைத்தும் சீரும் சிறப்புமாக நிறைவேறியதை வரலாற்று ரீதியாக அறிந்து கொள்ளலாம். இங்கு நிலைப் பெற்றிருக்கும் அருளகம், கல்யாண மண்டபம் மற்றும் தீர்த்தகேணி இதற்கு எடுத்துக் காட்டாகும். ஆலயத்தை அமைத்ததோடல்லாமல் சமூகப் பணியையும் இவ்வாலய நிர்வாகம் மேற்கொண்டு வருவது குறிப்பிடத்தக்கதாகும்.

அருளகம் ஆனது புதியதொரு சைவ சீலம் நிரம்பிய சமுதாயத்தை வளர்த்து வருவதென்றே கூறவேண்டும். இங்கு வாழ்ந்து வரும் குழந்தைகள் எதிர்காலத்தில் சிறப்புற்றவர்களாக வாழ வேண்டும் என்பதே எமது அவா. எல்லாம் வல்ல எம்பெருமான் இதற்கு என்றென்றும் உறுதுணையாக இருப்பான் என்பதே எமது நம்பிக்கை. "அவனின்றேல் ஓர் அணுவும் அசையாது" என்பதற்கு அமைய நாம் எம் முயற்சிகளில் முன் செல்வோமாக அவன் அருள் எமக்குண்டு.

முதலாம் திகதி ஐந்தாம் மாதம் 1996ம் வருடம் நடந்தேறிய கும்பாபிஷேகத்தின் பின் இவ்வருடம் 09.07.2008 தினத்தில் சிறப்புற இடம் பெற்ற திருப்பணிகள் அனைத்தும் அளப்பரியதாகும். 25.08.2008 ஆகிய இன்று நிறைவு பெறும் மண்டலாபிசேகம் மற்றும் அனைத்து முயற்சிகளுக்கும் இறைவன் பெயரால் எம்முடன் ஒத்துழைத்த சகல அன்புள்ளங்களுக்கும் அவன் அருள் என்றென்றும் உருத்துடையதாகட்டும்.

"மக்கள் சேவை மகேஸ்வரன் சேவை" இதுவே எமது தாரக மந்திரம் ஆன்ம வழியில் அறிவு படைத்த உன்னத சமுதாயத்தை உருவாக்குவோம். இதுவே எமது நோக்கு இதற்கு அவன் அருள் என்றும் எமக்கே!

"மேன்மை கொள் சைவநீதி விளங்குக உலகமெல்லாம்"

நன்றி

சிவாயநமவென்று சிந்தித்திருப்போர்க்
கபாயம் ஒருநாளுமில்லை – உபாயம்
இதுவே மதியாகும் அல்லாத வெல்லாம்
விதியே மதியாய் விடும் - நல்வழி.

செயலாளர் எண்ணத்தில்...

ஆ.நவரத்தினராசா, செயலாளர்,
ஆலய அறங்காவலர் சபை.

எல்லாம் வல்ல மூத்த விநாயகரின் பாதக்கமலம் சிரமேற்கொண்டு என்னை தன் தாளினை என்றும் மறக்க முடியாதவனாக ஆளாய் கொண்ட அகிலாண்டேஸ்வரி சமேத அகிலாண்டேசுரர் திருவருளினாலே இந்த இரண்டாவது "சிவதத்துவமலர்" மலர்ந்து தங்கள் திருக்கரங்களில் தவழ்கிறது. இந்த நல்லவேளையில் இதனை உருவாக்க துணைநின்ற அனைவரையும் நன்றியுடன் போற்றி வணங்கி மகிழ்கின்றேன். சிவதத்துவ முதல் இதழை கண்ணுற்று நேரில் அழைத்து அன்புடன் அருளாசி வழங்கியவர்களின் திருவருளைப்போற்றி வணங்குகின்றேன்.

கடந்து சென்ற 12 வருடங்களும் ஆலய வளர்ச்சியில் ஒரு பொற்காலங்களாக அமைந்திருந்தன என்பதில் ஐயமில்லை. கனவுகள் நனவாகி உருப்பெற்றன என்றுதான் கூறமுடியும். 12 ஆண்டுகளும் என்னை ஒரு தொண்டனாக வழிநடத்தி, வழி காட்டி சென்ற பரம்பொருளை என்றும் நான் மறக்கேன். என்னுடன் உறுதுணையாக நின்ற நிர்வாக உறுப்பினர்கள், ஊழியர்கள், தொண்டர்கள், அனைவரையும் மனதார போற்றுகின்றேன்.

ஆலயத்திருப்பணிகள் யாவும் எதுவித தடங்கலும் இன்றி நடைபெற பெரும் பங்காற்றிய சிவன் அடியார்களை நினைத்து மனம்பூரித்து அவர்களுக்கு நல்லருள்வேண்டி பிரார்த்திக்கின்றேன். நடந்து முடிந்த திருப்பணிகளை திரும்பிப்பார்க்கும்போது அவர்கள் திருமுகங்களைகாண்கின்றேன். ஆடல் அரசன் திருவருளை நினைவுகூர்ந்து மனம்பூரிக்கின்றேன். உறவுகலந்த உணர்வுடன் பங்காற்றிவந்த சபை உறுப்பினர்கள் இழப்பு அதிர்ச்சியை தந்தபோதும், அவன்பணியில் எதுவித தொய்வும் கண்டதில்லை.

1996 கும்பாபிஷேக நிறைவின்பின் அளப்பரிய பணிகளை மேற்கொண்டுள்ளோம். சமயப்பணியுடன் சமூகப்பணியினை இணைக்கவேண்டும் அப்போதுதான் நாம் சமயத்தின் தொன்மையை, மேன்மையை உலகறியச்செய்யலாம் எனகருத்தில் கொண்டோம். இதுவிடயத்தில் எமக்கு முன்நின்று உறுதுணைபுரிந்த பேராளர் திரு.கணேசய்யாவை (அரசாங்க அதிபர் 1995 - 2006) என்றும் எண்ணிபோற்றி வணங்கி நிற்கின்றோம்.

முதல் பணியாக ஆதரவு அற்ற குழந்தைகளுக்கான ஆண்கள் இல்லத்தை அமைத்து 02.09.2001ல் அவர்கள் தலைமையில் விழாவெடுத்தோம். தொடர்ந்து பெண் குழந்தைகளின் தொகை அதிகரிக்க அவர்களுக்கான ஒரு இல்லத்தை அமைத்து அவர்களையும் ஆதரித்து வருவது ஆலயத்தின் அருள்த்திறன் என்றே கருதுகின்றேன்.

ஒரு ஆலயத்தின் பூரண அமைப்பிற்கு மூர்த்தி, தலம், தீர்த்தம், எனப்புராணங்கள் கூறுவதற்கு அமைய தீர்த்ததடாகத்தை பல லட்சம் ரூபா மதிப்பில் பூரணப்படுத்தியுள்ளோம். பன்னிரண்டு ஆண்டு காலமாக ஆலய உட்பிரகாரம் சாணம் போட்டு மெழுகப்பட்டுவந்ததை தற்போது தளம் அமைத்து சீர் செய்யப்பட்டுள்ளது.

மாணவர்களுக்கான அறநெறி கல்வி ஞாயிறு தோறும் சிறந்த ஆசிரியர்களைக்கொண்டு போதிக்கப்பட்டு வருகின்றது. ஆண்டு தோறும் சிவராத்திரிதினம், சிறப்பு மிக்க நாட்களில் சமய தீட்சை வழங்கப்பட்டு வருகின்றது. ஆலயத்திருப்பணியில் கைக்கொள்ள வேண்டிய பாரிய திருப்பணியாக இராஜகோபுர திருப்பணிமேற்கொள்ள திருவருள்கூடியுள்ளது. எல்லாம் வல்ல எம்பெருமான் தன்பணி முற்றுற முடிப்பான் என்பது எனது எண்ணம்.

அடுத்த பணியாக ஆதரவு அற்ற முதியோர்களுக்கான காப்பகம் அமைய ஆரம்பப்பணிகள் தொடங்கப்பட்டுள்ளது. அதுவும் கூடிய விரைவில் முற்றுப்பெறும் என்பதில் ஐயமில்லை.

இவை எல்லாவற்றுக்கும் என்னுடன் இணைந்து செயல்படும் அறங்காவலர் சபையை போற்றி வணங்குகின்றேன்.

09.07.2008ல் நடைபெற்றுமுடிந்த கும்பாபிஷேகம் தொடர்ந்து நடைபெற்று வந்த மண்டலாபிஷேக பூர்த்திநாள் 10008 சங்குகளைக்கொண்ட சங்காபிஷேகம் இவற்றையெல்லாம் சிறப்புற செய்துமுடித்த சிவாச்சாரிய பெருமக்கள், தொண்டர்கள், சிவனடியார்கள், மங்களவாத்தியக்குழுவினர், மலர்குழுவினர், அன்னதானக்குழுவினர்,இணைய வலைப்பதிவு, சலனப்பட, ஒலி, ஒளி நிழற்படதொடர்பாளர்கள், அனைவர்க்கும் எம்பெருமான் திருவருள்வேண்டி பிரார்த்தித்து நிற்கின்றேன்.

சுபம்



இதழ் - 3

அணிந்துரை

அணிந்துரை

திரு. கா. ஆ. தியாகராசா
தலைவர், அறங்காவலர் சபை
நயினை ஸ்ரீ நாகபூசணி அம்மன் கோவில

இறைவன் தாளுக சங்கல்பம் செய்து, பின் அந்தக் காரியத்தை தன்பொருட்டு செய்வதற்கு யார் யாரை தோற்றிவிக்க வேண்டும் என்று முடிவெடுதது விடுவான்

''இதனை இதனால் இவன் முடிக்கும் என்றாய்ந்து
அதனை அவன்கண் விடல்'' – திருக்குறள்

என்ற குறளுக்கு அமைய கோயில்க்குளத்தில் காத்திருந்தான். ஏன் காத்திருக்கிறான். கோயில்குளம் என்ற தோம்பு எழுதப்பட்டு ஆண்டு பல, ஆனால் கோ + யில் அங்கு இல்லை. குளம் மட்டும் எஞ்சி இருந்தது. தான் மீண்டும் அங்கு எழுந்தருள இறைவன் ஆசை கொண்டான். தன் பூதகணங்களில் நால்வரைப் பூமியில் பிறக்க வைத்து. காலச்சூழ் நிலையால் அனைவரையும் கோவில்குளத்தில் குடியமரவைத்து சிந்திக்கவைத்தான்.

இந்த நால்வரின் சிந்தனையும் ஒன்றிய கருத்தாக அமைய தன்கருமத்தில் கண்ணாகிவிட்டான் சிவன்.18.08.1989ல் எதிர்பாராத ஒரு நன்னாளில் சிவனார் திருக்கோயில் கட்டுவதற்கு நால்வரும் முடிவெடுத்தபடி அதிகாலை நான்கு மணிக்கு சங்குஸ்தானம் நடைபெற்றது. முதலில் சங்கை அடியேனும் அமரர்களான இராமநாதனும், சண்முகம் அவர்களும் வைத்தோம். அப்பொழுது “எப்பவோ முடிந்த விடயம்'' என்ற யோகர் சுவாமிகளின் மணிவார்த்தையை உரைத்தபடி அத்திபாரத்தில் இருந்து நான் மற்றய என் சகோதரர்களின் உதவியுடன் வெளிவந்தேன். மற்றவர்களும் வெளிவந்தார்கள். சூழ நின்றவர்களும் அத்திபாரத்தில் நவரெத்தினங்களையும் நவதானியங்களையும், பாலையும் சொரிந்தார்கள். ஒருசில நிமிடங்களில் இவை முடிந்தன. திடீர் என வானில் இடிமுழக்கம், மின்னல், கூடவே சோவென மழை கொட்டியது. அத்திபார நிலையம் தானாக முடிக்கொண்டது. அப்போது தான் உணர்ந்தோம் சிவன் ஆசி கிடைத்துவிட்டது என்று.

18.08.1989ல் ஆரம்பமான திருப்பணி 01.05.1996ல் நடைபெற்ற பெரும் சாந்தி பெருவிழாவுடன் நிறைவேற அகிலாண்டேஸ்வரி சமேத அகிலாண்டேசுரர் எழுந்தருளி, உலகம் வியக்கும் வண்ணம் அருள் ஒளி வீசி உலகம் எங்கும் வாழும் சைவ மக்களின் அருட் கடலாக அருள் புரிந்து வருகின்றார். எம்பெருமானின் அருள் அமுதை மாந்திய அரன் அடியார்கள் ஐயன் திருப்பணிக்கு வாரி வழங்கி வருகின்றார்கள்.

12 வருடம் 5 மாதம் 8 நாட்கள் முடிந்த நிலையில் மீண்டும் சைவ உலகமே வியப்புறும் வகையில் நான்கு வேத ஒலியும் நாளும் முழங்க 33யாக குண்டங்கள் அமைந்த யாகசாலையில் கும்பவடிவில் எழுந்தருளி பூசைகளை ஏற்ற எம்பெருமான் 9.7.2008ல் இடம்பெற்ற கும்ப அபிஷேகத்துடன் மீண்டும் தன் கருவறையில் எழுந்தருளி அன்னையுடன் அருள் சுரந்து காட்சி தருகின்றார்.

எங்களின் ஆகம விதிப்படி 12 வருடங்கட்கு ஒருமுறை கட்டாயம். ஆலயங்களைப் புதுப்பித்து சேர்க்க வேண்டியவற்றை சேர்த்துநீக்க வேண்டியவற்றை தவிர்த்து புதுமெருகூட்டி செப்பனிட்டு புனிதத்

தன்மையுடன் வழிபாட்டிற்கு வைத்திருக்க வேண்டியது அறங்காவலர்களின் கடமையாகும். இது நியதியுமாகும். இந்த வகையில் அகிலாண்டேஸ்வரர் ஆலயம் மதிப்பிட முடியாத பலலெட்ச ரூபா செலவில், செய்திருக்கும் திருப்பணியும், புதிதாக அமைக்கப்பெற்ற திருக்குளமும் புதிய வழிபாட்டு பரிபாலமூர்த்தி தலங்களும், சிறப்பாக பஞ்சலிங்கம், பஞ்சமுகலிங்கம், பாலசுப்பிரமணியர், சூரிய சந்திரர் சபை, பள்ளியறை, நால்வர் கோவில்கள் அமைக்கப்பட்டு உள்ளமை ஆலயத்திற்கு ஒரு சிறப்பாக உள்ளது. இவற்றிற்கு எல்லாம் மேலாக பலலெட்ச ரூபா செலவில் உள்வீதி தள அமைப்பும் அலங்காரமும் தனிச்சிறப்பாக அமைந்து வழிபடுவோர் உள்ளத்தில் தம்மை அறியாமல் ஒரு பூரிப்பும், ஒரு நிறைவும் ஆர்வமும் ஏற்பட வியந்து வியந்து நிற்பதையும் சிவன் அருள் இதுவென வாயார புகழ்ந்து நிற்பதை அவதானிக்க முடிந்தது. ஆம் 27.3.2008ல் புனரமைப்புக்கான கிரிகைகளைத் தொடர்ந்து பாலாலய வழிபாட்டில் பூசைகள் விழாக்கள் நடைபெற்று வந்தன. சரியாக 3 மாதமும் 12 நாட்களில் பாரிய திருப்பணிகளைச் செய்து 9.7.2008ல் மகாகும்பாபிஷேகமும் முடிந்தது என்றால் இது சிவன் செயல்.

உண்மையில் சிவன் இந்த அறங்காவலர்களைக் கருவியாகக் கொண்டு தன்னருளால் அனைத்தையும் நெறிப்படுத்தி வருகின்றான் என்றே எண்ணத் தோன்றும் சமயத்தொண்டுடன் சமூகத்தொண்டிலும் மற்றவர்களுக்கு ஒரு எடுத்துக் காட்டாக செயல்படும். இத்திருத்தல அறங்காவலர்களும் தொண்டர்களும் சிவனருளால் கிடைக்கப்பெற்ற மனித தெய்வங்கள் என்று மக்கள் வாயாரப் பேசுவதை கேட்கும் போது எம் உள்ளம் பூரிப்படைகின்றது.

எதிர்காலத்தில் மேலும் பல திருப்பணிகளையும் சமூகத்தொண்டையும் செய்ய திட்டம் பலதீட்டி செயல்பட இருக்கின்றார்கள் என்ற செய்தி கேட்டு, இவர்களின் வழியில் இங்கு உள்ள மற்றைய ஆலயங்களும் செயல்பட்டால் எமது சமுதாயமும் சமயப் பற்றுடன் செயல்திட்டங்களில் ஈடுபட முன்வருவார்கள்.

இலங்கையில் இது காலமும் நடைபெற்றிராத மண்டலப் பூர்த்தி விழாவில் (10008) பத்தாயிரத்தி எட்டு சங்குகளால் அபிடேகமும் செய்து பூர்த்தி விழாக்கண்டு பூரிப்பில் சிறந்த ஒரு மலரையும் வெளியிட்டு வைப்பதில் மனநிறைவு கண்டு நிற்கின்றார்கள் அறங்காவலர்கள். அடுத்த பெருவிழாவிற்கும் முன்பாக பிரதான வாசல் கோபுரத்தை கட்டி முடித்து பெரும் சாந்தி விழாக்காணவும் தொடர்ந்து அம்பாள் வாசல் கோபுரத்தையும், உத்தரவாசல், குடவாசல் கோபுரமும் அமைந்தால் பூரணமான சிவாலயக் கட்டுமானம் அமைந்த சிவாலயமாக அகிலாண்டேசுரர் ஆலயம் திகழும். சிவன் செயல்படுத்துவான். கருவியாக இந்த அறங்காவலர்கள் பல்நலமும் பெற்று இருக்க அகிலாண்டேஸ்வரியையும் எம் தாயாகிய அன்னை ஸ்ரீ நாகபூசணியையும் வேண்டி பிரார்த்திக்கின்றேன்.

"எம் கடன் பணி செய்து கிடப்பதே"

குறிப்பு : பாலஸ்தானம் நடைபெறும் முன் செய்ய வேண்டிய பல நிர்மாணப் பணிகளை செய்தல் உள்பிரகாரங்களில் பரிபாலகமூர்த்திகட்கான கோவில்களை அமைத்தல். வெளிப்பிரகாரத்தில் செய்ய வேண்டிய கட்டுமானங்கள், திருத்தங்கள், வர்ண வேலைகள் என்பவற்றையும், தள வேலைகளையும் செய்து கொள்ள முடியும்.

பாலாலயத்தில் வழிபாடு ஆரம்பமான திகதியில் பெரும் சாந்தி விழாவிற்கான திகதியும் வைத்து அதன்படி விழாக்கண்ட பெருமையில் நயினை ஸ்ரீ நாகபூசணி அம்பாள் ஆலயத்துடன் அகிலாண்டேஸ்வரர் திருக்கோயிலும் இணைந்து கொண்டது. அகிலாண்டேஸ்வரர் ஆலயமும் ஒன்று என்ற சிறப்பும் இந்த அறங்காவலர் கட்டு சிவன் தந்த பெருமை.



இதழ் - 4

பதிப்புரை

பதிப்புரை

நயினை.க.ச.அரவிந்தன் B.A

''நாயே னையும் இங்கு ஒரு பொருளாக்
நயந்து வந்து நீயே நினைவின்றி ஆண்டு கொண்டாய்
நின்னை உள்ள வண்ணம் பேயேன் அறியும் அறிவுமேஷ் தந்தாய்
என்ன பேறு பெற்றேன்''

என அபிராமி அன்னையை வேண்டிப் பணிந்த அபிராமிபட்டரை நினைவிற் கொண்டு "எல்லாம் அவன் அருளாலே அன்றி வேறில்லை" என்கின்ற வாதவூரரின் கருத்தோடு இந்த மாபெரும பணியினை கன்னி முயற்சியாக ஏற்று, அப்பன் அகிலாண்டேசுரரின் திருக்குடமுழுக்கு பெருஞ்சாந்தி பெருவிழாவின் மண்டலாபிஷேக பூர்த்தியினை முன்னிட்டு திருக்கோயிலின் ஆன்மீக வள்ளல்களாகவும், சிவப்பணி செம்மல்களாகவும் தர்மசீலர்களாகவும் விளங்க வாய்க்கப்பெற்ற தர்மகர்த்தா சபையினதும் கும்பாபிஷேக குழுவினரதும் பணிவன்புடனான ஆலோசனைகளையும் வேண்டுதல்களையும் சிரமேற் கொண்டு அவையடங்கி இந்த "சிவதத்துவ மலர் - 2008" மொட்டாகி பல்லிதழ்களாகி மேனியெங்கும் சிவமணம் வீசி சிவபூமியெங்கும் மலரப் போவதையிட்டு பேருவகை கொள்கின்றேன்.

திருக்கைலாய பரம்பரை திருவாவடுதுறை ஆதினம் 23 வது குருமகா சன்னிதானம் சீர்வளர்சீர் சிவப்பிரகாச தேசிகர் பரமாசாரிய சுவாமிகள், பிரதிஸ்டா குருமார்கள், சிவனேசச்செல்வர்கள் பேரறிஞர்கள் ஆகியோரின் ஆசியுரைகளும், பாராட்டுரைகளும், வாழ்த்துரைகளும் முதன்மை இதழாய் விரியும் வண்ணம் அரும்புகின்றது. மலரப்போகும் இந்த "சிவதத்துவமலர் - 2008"இன் உடைய மொட்டு.

பசுந்தளிராய் வயல்வெளிசூழ் சோலையாகி, பார்த்தார் கண் குளிர்ந்து மெய்சிலிர்க்கச் செய்யும் பசு நிரைகள் பெருகிவளம் கொழிக்கும் வன்னி மாநகரிலே கோவில்க்குளம் என்னும் புண்ணிய பூமியில் கண்ணே வேண்டுவார்களுக்கு வேண்டும் வரம் தந்தருள வல்லானாக அருளாட்சி புரிந்த வண்ணம் வீற்றிருக்கும் அருள்மிகு அகிலாண்டேஸ்வரி உடனுறையும் அகிலாண்டேசுரப் பெருமானின் திருக்குடமுழுக்கு "சிவத்தத்துவமலர் - 2008" ற்காக அறிஞர் பெருமக்களிடம் இருந்து சிவமணம் கமழும் ஆக்கங்களை கேட்டு எழுதியிருந்தோம்.

அவர்களின் சிறப்புமிக்க அற்புதமான ஆழ்ந்த கருத்தாக்கத்துடன் கூடிய ஆக்கங்கள் யாவும் ஆன்மீகமும், அறமும் சேர்ந்து தேன் சுவை சொட்டும் இதழ்களாக மானிட வாழ்வின் படிப்பினையையும் அவற்றிற்கான பின்பற்றுதலையும் வெளிப்படுத்தி நிற்கின்றது.

"சிவதத்துவமலர் 1996ல் முதல் மலராக மலர்ந்த போது அதன் மூச்சும், வீச்சும் அதனூடே அதைப் பற்றி அடியவர் மத்தியில் எழுந்த பேச்சும் தான் கடந்த பன்னிரண்டு அகவைகளின் பின்னர் அரும்பாகி மொட்டாகி வீரியத்துடன் விரிய வழிசமைத்தது எனலாம்.

இம்மலரிற்காக மனநிறைவோடு ஆசியுரைகள் வழங்கி நிறைவூட்டி சிறப்பித்த மகான்களுக்கும், வாழ்த்துரை பாராட்டுரைகள் வழங்கிப் பொலிவூட்டிய பேறறிஞர்களுக்கும், நாம் கேட்ட போது மனமுவந்து கனதியான ஆக்கங்களைத் தந்து இம்மலருக்கு பெறுமதியூட்டி காலத்தின் தேவை கருதி அறிவூட்டிய அறிஞர்களுக்கும் அழகாகவும் நேர்த்தியாகவும் கவர்ச்சியான முறையில் கண்கவர் வண்ணங்களால் மெருகூட்டிய கணினிதுறை விற்பன்னர்களான வாணி கணினிப் பதிப்பகத்தாருக்கும், தனது ஒளிப்படக் கருவிக்குள் கனகச்சிதமாக கும்பாபிஷேக காட்சிகளையெல்லாம் உள்வாங்கி உயிரோட்டத்துடன் இம்மலரின்

வழிசமைத்த ஒளிப்படத்துறை கலைஞருக்கும் மற்றும் அம்மலரின் அரும்புதலுக்கு மறைமுகமாகவும் நேரடியாகவும் அரும்பாடுபட்ட அடியவர்கள் பெரியவர்களுக்கும் நான் என்றும் நன்றிக்குரியவன்.

தன்கடன் அடியேனையும் தாங்குதல்
என்கடன் பணி செய்து கிடப்பதே

என்ற திருநாவுக்கரசர் பெருமானின் தேவார திருப்பதிகத்தின் கருத்தாழத்திற்கு இயைபாக என் கடனாக இதனை ஏற்று நெறிப்படுத்த வேண்டிய சகல ஒத்துழைப்புகளையும் உடனுக்குடன் ஆலயத்தின் தர்மகர்த்தா சபையினர் வழங்கினார்கள் என்பதையம் பெருமையுடன் நினைவு கூறுகின்றேன்.

இந்த சிவதத்துவமலரானது சிவனடியவர்களுக்கு மட்டுமின்றி சைவ உலகிற்குமே பயன்தருகின்ற நறுமணம் கமழும் மலராக வெளிவருகின்றது. எச்சமயத்தை சார்ந்தவர்களும் வாங்கி நுகர்வதற்கு உகந்தவகையில் பல்வேறுபட்ட சமூக சிந்தனைகளை, அறநெறிக்கருத்துக்களை தன்னகத்தே கருத்தரித்து வாழ்வின் பாடமாகவும் எதிர்கால சந்ததியினரின் படிகற்களாகவும் இது வாய்க்கப் பெற்றுள்ளது.

இவற்றின் உள்ளடக்கங்கள் எல்லாம் பெறுமதி வாய்ந்த தத்துவக் கருத்துக்களை கொண்டமைந்ததற்கு சிவனின் திருவிளையாடல் என்றே சொல்லத் தூண்டுகிறது.

எனவே "மண்ணில் நல்ல வண்ணம் வாழ வழிகாட்டிடும் இம்மலரினை ஒவ்வொரு அடியார்களும் தத்தமது கரங்களில் ஏந்தி நுகர்ந்து கொள்வீர்கள் என நம்புகின்றேன்.

என்னை நன்றாக இறைவன் படைத்தனன்
தன்னை நன்றாக தமிழ் செய்யுமாறே

என்றமையும் திருமூலநாயனாரின் திருமந்திரத்தை பின்பற்றி இம்மலரினை நல்ல முறையிலே ஒழுங்குபடுத்தி எம்பெருமானின் பாதாரவிந்தங்களிலே காணிக்கையாக்கி கொள்கின்றோம்.

அத்துடன் எல்லோரும் எல்லா நலன்களும் பெற்று மண்ணில் நல்ல வண்ணம் வாழ அகிலாண்டேஸ்வரி சமேத அகிலாண்டேசுரப் பெருமானின் பாதக்கமலங்களை தொட்டு வணங்கி எனக்கென்றோர் தனிவரம் நான் கேட்கவில்லை உனக்கெல்லா உயிர்களுமே சொந்தமென்ற தத்துவத்தை நினைவு கூர்ந்து எல்லோரும் வாழ பிரார்த்தித்து அமர்கின்றேன்.

நன்றி வணக்கம்

ஞானிகளுக்கும் இறைவனுக்கும் நம் நன்றியைத் தெரிவிக்கும் பொருட்டு ஏதாவது காணிக்கை அளிக்க வேண்டுமெனத் தோன்றினால் அவர்களிடம் எது இல்லை நாம் கொடுக்க எல்லாப் பொருட்களின் மூலமும் அவர்களே யோசித்துப்பாருங்கள். அவர்களிடம் இல்லாமல் நம்மிடம் இருக்கும் பொருளின் நினைவு பளீரென்று தெரியும். அதுதான் அறியாமை. ஞானிகளுக்கும் இறைவனுக்கும் நம்மிடமுள்ள அறியாமையைக் காணிக்கையாகச் செலுத்தி நல்லறிவைப் பெறுவோம்! (பிரும்மேந்திரர்)



இதழ் – 5

ஆலய ஒழுங்கமைப்பு

தலம் பற்றிய முக்கிய குறிப்புக்கள்

1. மூர்த்தி திருநாமம் : அகிலாண்டேசுரர்
2. அம்பாள் திருநாமம் : அகிலாண்டேஸ்வரி
3. தலப்பெயர் : திருக்கோவில் வவுனியா
4. தலவிநாயகர் : மூத்த விநாயகர்
5. தீர்த்தம் : அமர்தவர்ஷினி
6. விருட்சம் : திருக்கொன்றை
7. செல்லும் வழி : வவுனியா புகையிரத நிலையத்திலிருந்து இறம்பைக்குளம் திருகோணமலை வீதியில் ஒரு கிலோமீற்றர் தூரத்தில் வரும் இறம்பைக்குள சந்தியில் இருந்து தெற்கு நோக்கி செல்லும் உமாமகேஸ்வரன் வீதி அல்லது திருக்கோவில் வீதியில் 100 யார் தூரத்தில் அமைந்துள்ளது.
8. பேருந்துவழி : வவுனியா பேருந்து நிலையத்தில் இருந்து சிதம்பரபுரம் செல்லும் பேருந்தில் ஏறி கோவில்குள சிவாலயத்தரிப்பில் கீழை வாசலில் இறங்கவேண்டும்.


புகையிரத நிலையவீதி
மன்னார் வீதி
யாழ் வீதி
பஸ் நிலையம்
மாவட்டச் செயலகம்
கண்டி வீதி
பஜார் வீதி
1.5 கி.மீ
வ
கி
கோவில்
உமாமகேஸ்வரன் வீதி
வவுனியா குளம்

அறங்காவலர்கள்

ஸ்ரீ அகிலாண்டேஸ்வரி சமேத அகிலாண்டேசுரர் திருக்கோவிலின் அறப்பணியில் ஆதீனகர்த்தாக்கள்

1. திரு.ஆறுமுகம் நவரத்தினராசா
2. திரு.ஆறுமுகம் உமாதேவன்
3. திரு.சண்முகம் சுரேஸ்குமார்
4. திருமதி.தெ.இராமநாதன்

அறப்பணியில் அறங்காவலர் சபை

1. திரு.மு.சபாநாதன்	தலைவர்
2. திரு.சி.இராமமூர்த்தி	உபதலைவர்
3. திரு.ஆ.நவரத்தினராசா	செயலாளர்
4. திரு.ஆ.உமாதேவன்	பொருளாளர்
5. திரு.வை.செ.தேவராசா	உபசெயலாளர்
6. திரு.செ.அன்னலிங்கம்	நிர்வாகசபை உறுப்பினர்
7. திரு.ப.முருகராஜ்	நிர்வாகசபை உறுப்பினர்
8. திரு.ந.தனபாலசிங்கம்	நிர்வாகசபை உறுப்பினர்
9. திரு.ச.சுரேஸ்குமார்	நிர்வாகசபை உறுப்பினர்
10. திரு.சு.ஸ்ரீபதிநாதன்	நிர்வாகசபை உறுப்பினர்
11. திரு.கா.கணேசன்	நிர்வாகசபை உறுப்பினர்
12. திரு.சி.சண்முகரத்தினம்	நிர்வாகசபை உறுப்பினர்
கௌரவநிர்வாக உத்தியோகத்தர்	திரு.இரா.லோகநாதன்

உ

சிவமயம்

அருள்மிகு அகிலாண்டேஸ்வரி சமேத அகிலாண்டேசுரர் திருக்கோவில்

பாலாலயப்பிரதிஷ்டை

27-03-2008

காலை 7.16 தொடக்கம் 7.58 வரை

ஆலய நிர்மாணப் பணிகள்

ஆலய புனர் கட்டிட நிர்மாணம்
ஸ்தபதி திரு.க.வினோஸ்ரீ குழுவினர்

கட்டிட நிர்மாணம்
திரு.ஆ.செல்வானந்தம் குழுவினர்

தளவேலை அலங்காரம்
திரு.எஸ்.பரமேஸ்வரன் குழுவினர்

சுதை விக்கிரக வேலைகள்
தமிழ்நாடு திரு.ஆர்.சந்திரசேகரம்

வர்ணவேலைகள்
ஓவியக்கலையரசு திரு.கனகராசா ராஜ்பதி குழுவினர்

அலங்கார மரவேலைகள்
திரு.த.ஜெகதீஸ்வரன் குழுவினர்

சிலாவிக்கிரகங்கள்
திரு.எஸ்.சண்முகவடிவேல் ஸ்தபதி (அபிராமிசிற்பநிலையம்)

கலச புனர் நிர்மாணம்
திரு.து.மணிசேகரம்

மின் இணைப்பு
திரு.அ.சந்திரசேகர்

கருங்கல் ஆலய அமைப்பு
திரு.க.நாதன்
நாதன் சிற்பநிலையம் எல்லப்பர் மருதங்குளம்

கும்பாபிஷேக குழு

1.	திரு.சி.சண்முகம் (அரசாங்க அதிபர், வவுனியா)	தலைவர்
2.	செல்வி தவஈஸ்வரி துரைச்சாமி (பிரதேச செயலாளர் வவுனியா)	உபதலைவர்கள்
3.	திரு.கே.எஸ்.வசந்தகுமார், உதவி மாவட்ட செயலாளர், வவுனியா.	
4.	திரு.க.செல்வராசா.	
5.	திரு.ஆ.நவரத்தினராசா,	செயலாளர்கள்
6.	திரு.செ.அன்னலிங்கம்,	
7.	திரு.சி.ஏ.இராமசாமி	பொருளாளர்கள்
8.	திரு.மு.சபாநாதன்	

நிதிக்குழு:-

திரு.சு.ஸ்ரீபதிநாதன்
திரு.சி.சிவகுமார்
திரு.வை.செ.தேவராசா
திரு.சி.இளந்தளையசிங்கம்
திரு.சி.ஜெயாபரன்
திரு.கு.சிவபாதசுந்தரம்
திரு.சு.சிவராசா
திரு.ஸ்ரீ சாயிசுதன்

அன்னதானக்குழு :-

திரு.ந.தனபாலசிங்கம்
திரு.அ.சூரியமூர்த்தி
திரு.த.பிரபாகரன்
திரு.ந.அம்பலவாணர்
திரு.சூ.சூரியகுமார்
திரு.சு.இராமசாமி

விளம்பரம்:-

திரு.ஏ.செல்வகுமார்
திரு.ரி,கே.இராசலிங்கம்
திரு.ச.அரவிந்தன்

இணைய பதிவு **www.sivankovil.blogspot.com**	திரு.ச.இலங்கேஸ்வரன்
நிழற் படம்	திரு.சோ.கோகுலதாசன்
சலனப்படம்	திரு.எஸ்.சங்கர்
ஒலி அமைப்பு	நியு கிருஷ்ணா சவுண்ட் சேவிஸ்
போக்குவரத்து :-	திரு.ந.சுரேஸ்இந்திரன் திரு.கே.கனகரத்தினம்
வரவேற்பாளர்கள்:-	திரு.ப.முருகராஜ் திரு.வே..இராமச்சந்திரன திரு.ப.விநாயகமூர்த்தி திரு.பி.தில்லைநாதன் திரு.இ.நித்தியானந்தன் செல்வி.கி.கலையமுதா திருமதி விஜிதா செல்வகுமார் திருமதி.பு.மனோன்மணி
ஆலய தொண்டர் சபை:-	உறுப்பினர்கள்

உ
சிவமயம்

அருள்மிகு அகிலாண்டேஸ்வரி சமேத அகிலாண்டேசுரர் திருக்கோவில் மஹா கும்பாபிஷேகம்

மங்களவாத்திய இசைக்கலைஞர்கள்

நாதஸ்வரம்

ஆ.ஜெயானந்தன் - தேவஸ்தானம்
யு.சுகந்திரன் - அளவெட்டி
டீ.பாஸ்கரன்(ரங்கன்) - வவுனியா
தமிழ்நாடு பந்தநல்லூர் - பி.ஜி.டி.மணிவண்ணன்

தவில்

கே.வீராச்சாமி - காரையம்பதி
கே.வி.நந்தகோபாலன்(கண்ணன்) – தேவஸ்தானம்
கே.வி.அரிகரன்(கரன்) தேவஸ்தானம்

சிவாச்சாரியார்கள்

மகாகும்பாபிஷேக பிரதிஷ்டா சிவாச்சாரியர்கள்

பிரதிஷ்டா பிரதமகுரு சிவாகம சிரோண்மணி சிவாகம கிரியா திலகம்

சிவஸ்ரீ ஸ்ரீநிவாச நாகேந்திரக்குருக்கள்

சிவாகம சிரோன்மணி சிவஸ்ரீ சதா யோகீஸ்வரக்குருக்கள்

சர்வபோதகம்

சர்வசாதகம் இணுவில் வேதாகம ஞானபாஸ்கரன் சிவஸ்ரீ தானு மகாதேவக்குருக்கள் (அதிபர் தர்மசாஸ்தா குருகுலம்)

உபசாதகம்

வேதகம சக்கரவர்த்தி வேதாகம உதயசூரியன் சிவஸ்ரீ சௌந்தரராஜகுருக்கள்

மூகூர்த்த நிர்ணயம

ஆலய நித்திய நிரந்தர ஸ்தானிக போதகர்

சிவஸ்ரீ ஸ்ரீநிவாச இரகுநாத குருக்கள்

ஆலய குருமார்கள்

சிவஸ்ரீ நா.ஈஸ்வரநிவாசக்குருக்கள்
பிரம்மஸ்ரீ அ.சுந்தரராஜ்சர்மா

ஸ்யம்பாகி

வே.வேதாரணியசர்மா

வேதபாராயணம்

மயிலாப்பூர் ஸ்ரீநிவாச சாஸ்திரிகளின் மாணாக்கர்கள்

திருமுறை பாராயணம்

திருக்கோவில் ஓதுவார் மூர்த்திகள்

இவர்களுடன் இணைந்து 51 சிவாச்சாரிய பெருமக்கள் பங்கு கொண்டனர்.

மலர்க்குழு

ஆலய ஆதீன கர்த்தா
சிவமணி திரு.கா.ஆ.நவரட்ணராஜா
ஆலய அறங்காவலர் சபை செயலாளர்

திரு.ஏ.செல்வகுமாரன்
ஆசிரியர்
வவுனியா/பெரியகோமரசன்குளம் மகாவித்தியாலயம்

திரு.ச.சுரேஸ்குமார்
அபிவிருத்தி உத்தியோகத்தர்
பிரதேச செயலகம் வவுனியா வடக்கு

திரு.சோ.கோகுலதாசன
ஆசிரியர்
வவுனியா இறம்பைக்குளம் மகளிர் மகாவித்தியாலயம்

திரு.க.ச.அரவிந்தன்
உதவிப்பணிப்பாளர் விவசாயக்காப்புறுதி சபை
மாவட்டசெயலகம், திருகோணமலை

இம்மலரில் வெளியிடப்பட்டுள்ள கட்டுரைக்கருத்துக்களுக்கு அவ்வக் கட்டுரையாளர்களே பொறுப்பு

- மலர்க்குழு-



இதழ் - 6

வழிபாடு

வவுனையம்பதி கோயில்க்குளத்தீஸ்வரன்
திருப்பள்ளியெழுச்சி

ஆழ்கடலான்
கவிஞர் முருக.வே.பரமநாதன்
கண்டி

பொன்னொளி பரப்பியே போந்தனன் கதிரோன்
பூம்பொழி லெங்கும் பொலிந்தன மலர்கள்
தன்னொளி குறைந்தே தாரகை தளர்ந்த
தாவியே விண்மிசை பறவைகள் மிதந்தன
மின்னொளி இழந்த மதியமும் தளர்ந்து
மேற்றிசைக் கடலினில் விழுந்திடும் வேளை
இன்றமிழ் வாணரும் இயம்பினர் கீதம்
ஈஸ்வரனே பள்ளி எழுந்தருளாயே. (1)

பாதிரி மல்லிகை பவளம், மென்பன்னீர்
பரிதியின் பார்வையிற் பரிமளித் தலர்ந்த
மாதவி கொன்றைநன் மாணெழிற் காந்தி
மருவிய முல்லைமந்தாரை சண்பகங்கள்
தாதவிழ்ந் தொளிர்ந்த தண்புனற் பரப்பின
தாமரை குவளை தளையவிழ் செழுந்தேன்
போதெல்லாம் விரிந்து புன்சிரிப் புதிர்ந்தன
புத்தழுதே பள்ளி எழுந்தரு ளாயே. (2)
(1. பவளம் - பவள மல்லிகை, 2. காந்தி -சூரியகாந்தி)

கோழிகள் கூவின குருவிகள் ஒலித்த
கோயிலின் சங்கொலி மணியொலி தழைத்த
ஆழியின் செல்வனும் அலைக்கரம் கொண்டே
ஆர்த்தனன் ஆநிரை எங்கணும் பரந்த
ஊழியின் தலைவன் உளமகிழ்ந்தெழுந்தே
ஊதினன் வேய்ங்குழல் ஊரெலா மகிழ்ந்தே
வாழியென் றேத்தியே வண்டமிழ் பாடினர்
மணிகண்டனே பள்ளி எழுந்தருளாயே (3)

தேனினு மினியய தீந்தமிழ் பாடியே
தேவர் சித்தர்கணம் சினகரம் சேர்ந்தார்
கோனிவ னென்றே குலவிய மஞ்ஞை
கோகழி யாண்டருள் வாசகன் வாசகம்
தேனினுமினிய இசையொடு செழித்த
தேவர்தந் தேவனே கேட்டினி தெழுந்தே
பானிலா மதியம் பரித்த செஞ்சடையாய்
பரமசிவனே பள்ளி எழுந்தருளாயே. (4)

கிள்ளைகள் கிளர்ந்தே உள்ளகம் கனிந்துன்
கீர்த்தியைப் பாடி மகிழ்ந்தன இதயம்
பிள்ளைளெங்கும் பேதலித் தெழுந்தார்
பெண்ணினம் விழித்தே பெருந்துறை சேர்ந்தார்
வெள்ளிய சங்கம் விண்ணள வொலித்தன
வேதனும் தாதையும் வேண்டின ருன்பதம்
வெள்ளிய சிந்தையர் வேதியர் புகுந்தார்
விண்ணரசே பள்ளி எழுந்தரு ளாயே. (5)

பாட்டொலி பண்ணொலி பரப்பினார் ஓர்பால்
பரமனின் பாதங்கள் பணிந்தனர் ஓர்பால்
பாட்டளி கொன்றை நன்மாலையர் ஓர்பால்
பனிமலர் கனிவகை தாங்கினர் ஓர்பால்
நீட்பொளி விளக்குகள் ஏற்றினர் ஓர்பால்
நிருமலன் கோயில் நெருங்கினர் அடியார்
கோட்டொலி குழலொலி கொட்டினர் ஓர்பால்
கோமகனே பள்ளி எழுந்தருளாயே. (6)

விண்ணவர் இழிந்தே விரைமலர் தாவி
மீட்டினர் வீணைகள் கந்தருவர்கள்
பண்ணவர் கனிந்தே பரப்பினர் கீதம்
பக்தர்கள் கேட்டே பரவினர் நின்னை
மண்ணவர் எல்லாம் மகழிந்தனர் எழுந்தே
மாதினி யாரோடும் வணங்கினர் மகிழ்ந்தே
எண்ணவர் போற்றும் எழிலுறு கோயிலின்
ஈஸ்வரனே பள்ளி எழுந்தருளாயே. (7)

தாயினு மினிய தண்ணருள் சுரந்தே
தந்தையிற் சிறந்த தலையளி புரிந்தே
சேயினு நல்ல செவ்விகள் மலர்ந்தே
செந்திரு மகளின் செல்வமும் அருளி
நோயினும் துயரினும் மெலிந் துழலாதே
நொய்வினை நீக்கி நுண்ணருள் பொழிவாய்
கோயில் குளத்துறை ஈஸ்வரனே எங்கள்
கொற்றவனே பள்ளி எழுந்தருளாயே. (8)

கனிவளம் சுரக்கும் காவண மெங்கும்
கருங்குயிற் கூவிக் களித்திடு மிசையில்
தனிவளம் தேக்கும் தாமரைப் பொய்கையில்
தள்ளிய வராலும் கெண்டையும் மயங்கும்
பனிவளம் சுரக்கும் பாசமடைத் தவளை
பவ்விய மாயதைப் பார்த்துரசிக்கும்
நனிவளம் கொண்ட கோவில் குளத்துறை
நாயகனே பள்ளி எழுந்தருளாயே. (9)

திண்ணிய உலகிற் தீமைகள் நிறைந்தன
தினந்தினம் மன்பதை கவலையில் குறைய
கண்ணிய வாழ்வினிற் திளைத்தின்பம் மலர
கவலையற் றின்பொடு காசினி யலர
புண்ணிய முதல்வனே புகலிடம் தருவாய்
புங்கவ சங்கர பொங்கர வணிந்தே
நண்ணிய பொருளே கோவிற் குளத்துறை
நம்பரனே பள்ளி எழுந்தருளாயே. (10)

சுந்தரர் கண்ட சிவனெனுந்தேன்

1. தேனே இன்னமுதே திருமேற்றளியுறையும்கோனே
2. அடியார்கள் தம் உள்ளத் தேன்
3. தேவதேவனைத் தித்திக்கும் தேனே

ஸ்ரீ அகிலாண்டேஸ்வரி சமேத அகிலாண்டேசுரர் ஆலயம்
அருள்மிகு ஸ்ரீ அகிலாண்டேஸ்வரி
திருப்பொன்னூஞ்சல்

பிள்ளைக்கவி கவிதார்க்கிகசிங்கம்
வ. சிவராஜசிங்கம்

காப்பு

வற்றாத வளஞ்சுரக்கும் மருதவேலி
வயங்குவவு னைப்பதியில் வதியும் கொன்றைப்
பொற்றாது மலர்சூடும் அகிலாண்டேசப்
புண்ணியர்மேல் உளவிருப்பால் ஊஞ்சல் பாட
கற்றார்தம் இதயத்துநின்று ஞானக்
களிநடஞ் செய் சித்திவிநா யகரின் பாதம்
பற்றாக உளத்திருத்தி மதுவார் வெள்ளைப்
பதுமலர்ப் பாவைபதம் பணிந்து நிற்பாம்

நூல்

மதுகரஞ்சூழ் நறுமர்ப்பூஞ் சோலைநாப்பண்
வயங்குமொளிப் பவளக்கால் நிரையநாட்டி
சதுரமுற வைரமணிச் சலாகைபூட்டி
தரளவெளில் விடவடங்கள் முறையேமாட்டி
அதிலநலரத் தினகசித பீடமீதே
அகிலாண்டேஸ் வரியோடும் இனிதுமேவி
கதியருளும் வவுனைநகர்க் கோயில் வாழும்
கருணையகி லாண்டேசர் ஆடீரூஞ்சல் (1)

எழில்வான மேயிலகு பந்தலாக
எண்திசைமா மலைகளும் பொற் றூண்களாக
பொழிதான மதயானை நால்வாய் தாம்பா
பூதலமே பொற்பீட மாகமேவி
நிழலாரும் பொழில்சூழும் வவுனைவைப்பில்
நிதமருளைத் தொழுமடியார் தமக்குநல்கும்
அழகாரும் அகிலவுல கம்மையோடு
அகிலாண்டேஸ்வரநாதர் ஆடீரூஞ்சல் (2)

கானமிகு நானமலர்ப் பனிநீராட்டி
கவினுறுபொற் றுகிலால்மெய் ஈரம்வாட்டி
தேனமருங் கொன்றையத்தி மாலைசூட்டி
திகழுமணி கலன்வகைகள் மலியப்பூட்டி
வானகமங் கையர்கூடிச் சோபனங்கள்
வாய்மலர அகிலவுல கன்னையாகும்
ஆனனசோதிச் சிவையோ டினிதுமேவி
அகிலாண்டேஸ்வரர் நாதர் ஆடிரூஞ்சல் (3)

வண்டுளப மணிமார்பு நெடுமாலோடு
மாமலர்மே விலக்குமியோர்வடந்தொட்டாட்ட
கண்டுமொழி யெழில்வாணிப் பாவையோடு
கமலமே லவனுமொரு வடந்தொட்டாட்ட
விண்டலநா யகன்சகியோர் வடந்தொட்டாட்ட
வேளினொடு ரதிமின்னோர் வடந்தொட்டாட்ட
அண்டபுவ னம்புரக்கும் அம்மையோடு
அருள்வவுணைப் பதியரசே ஆடீரூஞ்சல். (4)

கரையறியா அடியர்மனத் தடத்திலூறிக்
கதிக்கு மன்பு மஞ்சனத்தில் கவினஆட்டி
புரையிலதா யிலகருந்தத் துவப்பூச்சூட்டி
புந்தியிடை யொளிர்ஞானச் சுடரதாகும்
விரைநறுந்தூ பங்காட்டி விளங்குமான்மா
வெனுமமுது நிவேதித்து வழிபாடாற்ற
அருவினைகள் கெடுத்தாள வவுனைமேவும்
அகிலாண்டேஸ் வரநாதர் ஆடீரூஞ்சல். (5)

அகங்குழைந்து பக்தர்கணம் அன்பிற்கூட
அணியோசைப் புகழ்மாலை கவிஞர்பாட
சகமகிழும் இசைப்பாடல் வழியே தோகைச்
சாயலிள மடமாதர் நடனமாட
மிகுபிறவி தருவினைகள் கலங்கியோட
மெய்யடியார் தொழுகரம் சிரசிற்சூட
அகிலவுல கம்மையுடன் வவுனைமேவும்
அகிலாண்டேஸ் வரநாதர் ஆடீரூஞ்சல். (6)

காமருபூ மாலினியும் இந்த்ரநீலக்
கன்னியும்வெண் சாமரைகள் தாங்கிவீச
மாமதிதண் கவிகைபரிவோடு தாங்க
வயங்குசுட ராதவன்தீ பம்பரிக்க
தேமருவுகற்பகப்பூ மடவார் தூவ
திகழ்வருணன் ஒளிமிகுகண்ணாடி காட்ட
ஏமருவு வவுனைநகர் கௌரிபாகம்
இலங்குமகி லாண்டேசர் ஆடீரூஞ்சல். (7)

ஈழமணித் திருநாட்டினுத்தரத்தே
இலகுநகு லேஸ்வரமே குணபால் கோணை
மாழைமுடிக் பெருங் கோயில் குடக்கேமன்னார்
வனப்புறுகே தீஸ்வரமும் வளமிக் கோங்கிச்
சூழுமெழிற் தெற்கினில்பா ணேஸ்வரமும்
துலங்குறநாப் பண்வவுனேஸ் வரத்தில் வாழும்
ஆழிப்பரித் தோன்பிரமன் தேடிக்காணா
அகிலாண்டேஸ்வரநாதர் ஆடீரூஞ்சல். (8)

பாலாழி யமளிமிசைத் துயில் கொள்நீலப்
பரந்தாமன் மணிமார்பாம் ஊஞ்சல் மீது
கோலவெழில் அம்மையைப்ப பிள்ளைமேனி
கொண்டசைந்து பின்னர் முசுகுந்தன் வேண்ட
ஞாலமதில் ஏழ்விடங்கத் தலங்கள் மேவி
நடமாடல் காணாவெம் ஆவல்தீர
ஆலமுதவிழியுமைசேர் வவுனைவாழும்
அகிலாண்டேஸ்வரநாதர் ஆடீரூஞ்சல். (9)

பழுதகன்ற மெய்யடியா ரன்றித் தீய
பாவியரும் நின்பதியை யணைவாராகி
இழுதெனநெஞ் சுருகிவழிபாடு செய்வார்க்(கு)
ஆனமெலாம் போக்கவென வவுனைதன்னில்
விழுமியநற் கலிஐயா யிரத்தொன்பானெண்
வியன்தாது மேடமொளிர் பதினான்காம் நாள்
அழகுமலி யகிலாண்டேஸ் வரியினோடும்
அமர்ந்தவகி லாண்டேசர் ஆடீரூஞ்சல். (10)

வேதாவந் தகன்காமன் தருமன் தக்கன்
வெய்யகயன் சலந்தரன்முப் புரத்தோர்தம்மை
கோதில்கண்டி யூர்கோவ லூர்குறுக்கை
குலவுகட வூர்பறிய லூரேகீர்த்திப்
போதமிகு பழவூர்விற் குடிவதிகை
பொருந்துதலங்களில் வெற்றி கொண்ட காட்சிச்
சோதிமிகு வவுனையகி லம்மையோடு
துலங்குமகி லாண்டேசர் ஆடீரூஞ்சல். (11)

சதுர்முனிவர்க் கறமுரைத்தீர் ஆடீரூஞ்சல்.
நயாபரைக்கில்லற மளித்தீர் ஆடீரூஞ்சல்.
சதுர்முகரின் செருக்கழித்தீர் ஆடீரூஞ்சல்.
சக்கரமா லுக்களித்தீர் ஆடீரூஞ்சல்.
மதிக்கொழுந்து படர்சடையீர் ஆடீரூஞ்சல்.
வருத்தமன்பர்க்கடர் தடையீர் ஆடீரூஞ்சல்.
கதித்தபுகழ் வவுனை தனிலம்மையோடு
கலந்துறையும் அகிலேசர் ஆடீரூஞ்சல். (12)

வாழ்த்து

பூதலமா மகள்வாழ்க அமுதமான
பொன்மாரி வழுவாது பொழிக என்றும்
சீதவள வயல் செழிக்க உயிர்வருக்கம்
சிறந்துமல்க மானிடர்ச்செந் நெறியே நிற்க
மாதுரியமான தமிழ்நாளு மோங்க
வளர்கசிவாகம அறிவு வவுனை வாழும்
ஆதியந்த திலாக் கருணா கடாட்சியம்மை
அகிலாண்டேஸ்வரர் கிருபாநோக்கம் வாழ்க.

ஓம் நமச்சிவாய

ஓரு மொழியே பல மொழிக்கும் இடம்கொடுக்கும்
ஓரு மொழியே பல மொழிக்கும் ஓழிக்கும் என்ற
ஓருமொழியைக் கருத்தினிலே நிறுத்தும் வண்ணம்
ஓரு மொழி **ஓம் நமச்சிவாய** வென்பர்
ஹரி ஹரி யென்றிடினும் அஃதே ராமராம
சிவசிவ வென்றிட்டாலும் அஃதேயாகும்
தெளிவுறவே **ஓம் சக்தி** யென்று மேலோர்
ஜெபம்புரிவ தப்பொருளின் பெயரேயாகும்

-மகாகவி பாரதியார்

இலங்கை வவுனேஸ்வரம் (வவுனியா - கோவில்க்குளம்
ஸ்ரீ அகிலாண்டேஸ்வரி சமேத அகிலாண்டேசுரர் ஆலய
அருள்மிகு ஸ்ரீ அகிலாண்டேஸ்வரி
திருவூஞ்சற் பாமாலை

நயினைக்கவிஞர்
நா.க.சண்முகநாதபிள்ளை

காப்பு

திருவவுனைக் கமநலஞ்சூழ மருதவேலி (ச்)
சிறப்புமிகு கோயிற்குளம் கோயில் கொண்டு
அருமைபெறும் அகிலாண்ட ஈஸ்வரிக்கு
அருந்தமிழால் அகமகிழ்ந்து ஊஞ்சல் பாட (ச்)
கருமமெலாம் கைகொடுத்து (க்) கல்விஞானம்
கடைத்தேறக் கருணைசெய்து காத்து நிற்கும்
பெருமைபெறு சித்திவிநா யகர்தம்தாள்
பெரிதுவந்து பணிந்தேத்தித் தரலமேல்வைப்பாம்

வன்னிவளர் வளவிருட்சம் கால்களாக
வரித்தமணி வையிரங்கள் விட்ட மாக
பின்னிவரு முத்தணியே கயிறதாக (ப்)
பிளிற்றுகா (த்) தந்தங்கள் பலகை யாக (த்)
தன்னிகரில் ஊஞ்சல்மிசை வீற்றுத்தக்க,
சான்றோரும் புலவோரும் வடந்தொட் டாட்ட,
அன்னையென வவுனைதனில் அமர்ந்ததாயே
அகிலாண்ட ஈஸ்வரியே ஆடீர் ஊஞ்சல்

உள்ளன்பால் தர்மகர்த்தர் உவந்துபோற்ற
உன்னடியார் கோயில்தனை உணர்ந்து காக்க (க்)
கள்ளமிலாத் தவமறையோர் அர்ச்சித்தேத்த (க்)
கற்புடைய மாதர்குழாம் மாலை சாத்த,
வள்ளல்களும் படையல்களை வகையேவைக்க,
வாழ்த்து திரு மறைகள்தவ வல்லோர் ஓத,
அள்ளியருள் தந்துயர் போக்கும்வவுனை
அகிலாண்ட ஈஸ்வரியே ஆடீர் ஊஞ்சல்

அருள்வேண்டி அடியவர்கள் நோன்புகாக்க
அங்கமெலாம் வெண்ணீறு சந்தம் சாத்த,
இருள் போக்கி ஒளியேற்றி இன்பம் சேர்க்க,
இன்னிசையும் மங்களமாம் கருவி ஆர்ப்ப,
பெருவிருப்பால் ஆனந்தக் கூத்துமாட (ப்)
பெற்புறவே பெரிதுவந்து தொண்டர் பேண,
உருஇருத்தி உள்ருலம் ஒளிரும் வவுனை
உலகாண்ட ஈஸ்வரியே ஆடீர் ஊஞ்சல்

கவிகையணி கன்னியர்கள் காவித்தாங்க (க்)
களாசிகளைக் குலமாதர் கணித்து ஏந்த (ப்)
பவித்திரமாய் (ப்) பாங்கிகளும் கவரி வீச (ப்)
பணிமடவார் கமண்டலங்கள் பணிந்துதாக்க (க்)
குவிகரமாய் உபசரிப்போர் வெளிலைசேர்க்க (க்)
குதுகலமாய் கூத்திடுவோர் கும்பிட் டாட
அவிபெறுசீர் ஆண்டவனே வவுனைவாழும்
அகிலாண்ட ஈஸ்வரியே ஆடீர் ஊஞ்சல்

வாசமுடன் பன்னீரும் வளமாய்த்தூவ,
வகையாகத் திருப்பாதம் வருடி ஆற்ற
நேசமுடன் துணைமாதர் ஆலஞ்சுற்ற
நிறைமொழியர் மாண்புடையர் வாழ்த்துக் கூற
தேசமுயர் கலைமகளிர் ஆடிக்காட்ட(ச்)
சிறுமுறுவல் தவழ்வதனம் வடிவு ஊட்ட,
ஆசனமாய் வவுனைதனை அன்பாய்(க்) காக்கும்
அகிலாண்ட ஈஸ்வரியே ஆடீர் ஊஞ்சல்.

தோடுடைய திருச்செவிகள் துலங்கிஆட(ச்)
சுட்டியணி பண்டிமணி சூழ ஆட(ப்)
போடு அணித் தொடரோடு மதாணி ஆட(ப்)
புகழ்தொடியும் அங்கதமும் வளையல் ஆட
ஊடுதகழ் பாடகமும் சிலம்பும் ஆட
உயர்பாத சரத்தோடு தண்டை அட
ஆடுகலை பயில்சிவனார் அணங்கே வவுனை
அகிலாண்ட ஈஸ்வரியே ஆடீர் ஊஞ்சல்

வீதியெல்லாம் சூழடியார் விதிர்த்துஆட
விளை சோதி கற்பூரச் சட்டி ஆட
ஆதிவரு காவடிகள் கரகம் ஆட
அணியணியாத் தொண்டர்குழாம் கூத்து ஆட
ஓதிவரு பண்ணிசைப்பார் உவந்து ஆட
ஓலிகாலும் திருமணிகள் ஓயா தாட
ஏதில்திரு நகராகும் வவுனைவாழும்
அகிலாண்ட ஈஸ்வரியே ஆடீர் ஊஞ்சல்

சங்கரியே சடாட்சரியே ஆடீர் ஊஞ்சல்
சவுந்தரியே சாக்தகியே ஆடிர் ஊஞ்சல்
புங்கவியே புராந்தகியே ஆடீர் ஊஞ்சல்
பூந்தவளே காப்பவளே ஆடீர் ஊஞ்சல்
மங்களமே மாதங்கியே ஆடீர் ஊஞ்சல்
மரகதமே மனோன்மணியே ஆடீர் ஊஞ்சல்
அங்கணியே வணிகர்வள வவுனைமேவும்
அகிலாண்ட ஈஸ்வரியே ஆடீர் ஊஞ்சல்

சுந்தரியே சவுந்தரியே சோதி போற்றி
சூக்குமமே சூடிகையே சக்தி போற்றி
அந்தரியே ஆரணியே உமையே போற்றி
ஆரமுதே காரணியே அமுதே போற்றி
சிந்துரையே சிவகதியே சிவையே போற்றி
திரிபுரையே சாம்பவியே கௌரி போற்றி
அந்தரியே அம்மாளே வவுனைத்தாயே,
அகிலாண்ட ஈஸ்வரியே ஆடீர் ஊஞ்சல்

செந்தமிழும் தமிழ்வழங்கும் நாடும் வாழி
சீர்வாழி ஏராளர் செழிப்பும் வாழி
சிந்தனையில் சிவசமயச் சிறப்பு வாழி
தேவி உமை திருக்கோயில் அமைத்தோர் வாழி
முந்துபெரும் தொண்டருடன் அறவோர் வாழி
மூத்தபெரும் காஞ்சிப் பெரும் முனிவர் வாழி
அந்தமிலா வவுனைவளர் மக்கள் வாழி
அகிலாண்ட ஈஸ்வரியே வாழி வாழி

வவுனையம்பதி
கோவில்க்குளம் ஸ்ரீ அகிலாண்டேசுரர்
திருப்பா

நயினை
க.ச.அரவிந்தன்.

காப்பு
திருச்சிற்றம்பலம்

காட்டுறை சுடலைசாம்பற் பொடிதனை சாத்தித்திருவானை
வீட்டுறை யெழுந்துமிங்கு திருக்கொன்றை சூழ்கோயில் குளத்துறை
அகிலாவுந்தன் கழலடி சூட்டும் பாட்டுறை பதிகம் பத்தும் நெஞ்சில்
பூத்தருள் மூத்தவிநாயகா முன்னே நிற்க!

1. பித்தனெனைப் பாடென்று பேரின்பமுற்று
பெருவகை கொண்டடியார் கண்ணீர்மல்க
சித்தமெலாம் சிவனென்றே சிறந்தாழ் வேண்டி
சிறந்தநற் பேறென்றே நெஞ்சம் நெகிழ
நித்தமொரு விளையாட்டால் ஆட்கொண்டிங்கு
நிறைவானம் பொழிந்தாறு களனியெல்லாம்
முத்தெனவே வளங்கொழிக்கும் வவுனை கோயில்
குளத்துறையான் அகிலாண்ட ஈசன்தானே!

2. பசுந்தளிராய் வயல்வெளிசூழ் சோலையாகி
பார்த்தார்கண் குளிர்ந்து மெய்சிலிர்க்க செய்யும்
பசுநிரைகள் பெருகிவளம் கொழிக்கும் வன்னி
பாரெங்கும் வியங்கமனம் கொள்ள செய்யும்
பசுபாச பொருளிரண்டில் உலகேவுழல
பரம்பொருளே நிலையென்ற உண்மை காட்டி
பசுவேறி பார்பதியோடு லகையாடும் கோயில்
குளத்துறையான் அகிலாண்ட ஈசன்தானே!

3. நரிபரியாக ஆட்கொண்டருளி மரநிழலில்
நிதமொருகால் நினைந்துருகி நிலைபெற்றின்ப
அரிதறியா ரடியார்கண்ணை ருளமுதளித்த வண்ணல்
அருமறைக ளோடெழுந்தருளியிங்கு
சரிபிழை யென்றறியா காலம் நின்று
சாந்த முடன்னீற்றறையில் நீங்கக்கண்டு
கரியதுவும் வலம் வந்து வணங்கவுற்ற கோயில்
குளத்துறையான் அகிலாண்ட ஈசன்தானே.

4. பிட்டுண்டு பிறந்துழலுமுயிர் துயரமுண்டு
பேரணையை கட்டிடவே கூலிகொண்டு
கட்டுண்டு உயிர்வாழ்வு காலத்தால் சென்றழியாக்
காவல்செய்து கருணையொழி தந்துமிங்கு
மட்டற்ற மகிழ்வுடனே மண்ணில் லென்றும்
மாண்புற்று வாழ்தல் கண்டு வவுனையிலே
தொட்டிட்ட இடமெல்லாம் பொன்னென்றாக கோயில்
குளத்துறையான் அகிலாண்ட ஈசன்தானே!

5. அம்மையே யென்றழைத்து அன்புருகி காரைக்கால்
அம்மையினை அம்பிகைக்கறி வித்து
தம்மையே தனயனென திருவாயால் மலர்ந்தளித்த
தாயானதத்துவனை கயிலாயத்து ஈஸ்வரனை
செம்மையே உருவான சிவலோக நாயகனை
சோதி வடிவானவனை நின்றிறஞ்ச
செம்மையாய் வளங்காணும் வவுனை கோயில்
குளத்துறையான் அகிலாண்ட ஈசன்தானே!

6. பண்ணோடும் பதமேழும் பாட்டுவித்தின் பழுறும்
பண்ணிசைக் கிசைவான பரமாவுன்
மண்ணுயிர்கள் மனதார மொழிந்தருள வேண்டுங்கால்
மறுப்பாயோ மனமிறஞ்சி நாயென்றான்
கண்ணுறங்கா காலமெலாம் நின்கழலடியில்
கவிபாடி மகிழ்வுறுவேன் தடுப்பாயோ
மண்கொழித்து மணங்கமழும் வவுனை கோயில்
குளத்துறையான் அகிலாண்ட ஈசன்தானே!

7. தாரணியில் பிறந்திட்டு நின்றழலும் நின்னுயிர்கள்
தமக்கென்று நல்லுறவு பர்லமுடன்
நேரணியில் நின்று நேர்கின்ற நேர்த்தி தானும்
நேயமுற வேண்டிற்று அலறும்காலே
காரணியே இக்களமிறங்கி கண்திறந்து
காத்தருள வந்தனையோ வன்னி
வீரம் விளைகின்ற வளபூமி வவுனை கோயில்
குளத்துறையான் அகிலாண்ட ஈசன்தானே!

8. மூத்தவன் விநாயகனை முன்னே கண்டாய்
மும்மாரி பொழிந்துகுளம் நிறையக் கண்டாய்
முத்தான நாமமதை ஊர் பெற்றோங்க
முதன்மைபெறு கோயில் குளமென்றாக்கி வைத்தாய்
சித்தமெல்லாம் சிவனென்றே சீர்பெற்றோங்க
சிவமடமும் அருளகமும் அருகே கண்டாய்
வித்தகனே யருளாண்டாய் வவுனை கோயில்
குளத்துறையான் அகிலாண்ட ஈசன்தானே!

9. வானமுதல் மண்ணுலகும் வள்ளலுமை பாகனுனை
வந்துதினம் வாயார மொழிந்திடுங்கால்
ஞானமொழி வாய்மலர்ந்த ஞானசம்பந்தன்
போலவெனை ஏற்றருள என்னதடை
பாலனலிங்கமுறை கின்றவனே பாரிலிங்கு
பட்டதுயர் விட்டிடுமே யருட்பார்வை கண்டு
தேனமுதம் பொழிந்திடும் வவுனை கோயில்
குளத்துறையான் அகிலாண்ட ஈசன்தானே!

10. அப்பனேநின் கடன் செய்யவன்றோ இவ்வுலகில்
இப்பிறப்பளித் தென்னையாண்டு கொண்டாய்
எப்பிறப்புமினி வேண்டேன் நாயேன்றான்
எப்பொழுதும் நின்நாமமென்றே உயிர் துறப்பேன்
தப்பென்றறிந் தார்தாம் செய்தவற்றை நின்னறிவாற்
தடுத்தாள வேண்டுமென்றே வேண்டிநின்று
இப்பதிகம் பத்துமுன் பாதம் தந்தேன் கோயில்
குளத்துறையான் அகிலாண்ட ஈசன்தானே!

திருச்சிற்றம்பலம்





இதழ் - 7

சமய தத்துவங்கள்

கிரியைகளில் ஞானபாத சிந்தனைகள்

சிவஸ்ரீ ஸ்ரீநிவாச.இரகுநாதக்குருக்கள்
ஸ்ரீ அரியநாயகன்புலம் வீரகத்தி ஆலய பிரதமகுரு
கோவில்க்குள சிவன்கோவில் ஆலோசகர்

இந்தியாவில் சமயமென்பது ஒரு வாழ்க்கை முறையே ஆகும். அதன் முடிவு மனிதனை அறிவின்மையினின்று விடுவிப்பதே. குறிக்கோளை அடைய பயனுள்ள வழியை அமைத்துக் கொடுப்பது சமயத்தின் கடமை. அவ்வகையிலே சைவசமய மரபிலே பரம்பொருளை அடைவதற்குரிய வழிகள் நான்கு. அவை சரியை, கிரியை, யோகம், ஞானம் என்பன. இவற்றுள் சரியை புறத்தொழில் மட்டும். கை, கால் முதலிய உறுப்புக்களால் நிகழ்த்தி இறைவன் திருமேனியைக் குறித்து நிகழ்த்தும் வழிபாடு. இங்கு அறிவு பெரிதும் தொழிற்படும் ஏது இல்லை. கிரியை நெறி அகத்தேயும், புறத்தேயும் நிகழ்வது. இதில் இறையன்பு சரியை நெறியைக் காட்டிலிலும் முதிர்ந்து மிகுந்து காணப்படுவது கிரியை இறைவனின் உருவத் திருமேனியிலேயே பெரும்பாலும் நிகழ்த்தப்படுவது.

இது நித்தியம், நைமித்தியம், காமிகம் எனும் மூவகைத்து, ஆன்மார்த்தமாகவும், பரமார்த்தமாகவும் நிகழ்வது. இங்கு வழிபடுவோன் மைந்தன் நிலையினை வகிக்கின்றான். தந்தை மைந்தன் தொடர்பே இங்கே இறைவனுக்கும் வழிபடுபவனுக்கும் இடையேயுள்ள தொடர்பு. எனவே இக்கிரியை நெறி புத்திர மார்க்கம் எனக் கூறப்படுகிறது. தந்தை மைந்தன் உறவு அன்பை அடிப்படையாகக் கொண்டது. அன்பெனப்படும் பக்தி - கிரியை நெறிக்கு அத்தியாவசியமானது. கிரியை நெறி சித்தசுத்தியை உண்டாக்கும். இதைத் தொடர்ந்து வழிபடுவோன் தன்னை அறிகின்றான்.

யோகநெறி அகத்தே மட்டிலும் நிகழ்வது. இது இறைவனின் அருவத் திருமேனியை கருத்திற் பதித்து நிகழ்த்தும் வழிபாடு. "புஜ" என்பது இணைத்தல், இயமம், நியமம், ஆசனம் முதலியவற்றை அடிப்படையாகக் கொண்ட பகிரங்க யோகப்பயிற்சியாலும், பிராணாயமம், பிரத்தியாஹாரம், தாரணை, தியானம், சமாதி முதலிய அந்தரங்க யோகசாதனைகளால் இறைவனுடன் ஒன்றும் நிலை யோகபாதமாகும்.

ஞானநெறி அறிவு தொழிற்படும் நிலையிற் கைகூடுவது. இங்கு வழிபடும் இறைவன் உருவம், அருவம், அருவுருவம் ஆகிய நிலைகளைக் கடந்தவன். அவன் பேரருளுக்குப் பாத்திரமாகி அவன் அறிவிற்காக அவனே உள்ளவாறு அறிவதற்கு உரியது ஞானவழி, ஓரளவிற்கு ஞான நூல்களின் துணையாலும் ஞானசிரியரின் அறிவு மொழியாலும் இறைவன் திருவருளாலும் ஞானவழியைக் கடைப்பிடிக்கும் போது ஆன்மாக்களுக்குக் கிட்டும் அகண்டாகரமானதும் நித்தியமானதும் எங்கும் வியாபகம் பெற்றதுமான நிலை எய்தலே இவ்வழியைக் கடைப்பிடிப்பதன் பெறுபேறு. இந்நான்கு நெறிகளும் அரும்பு, மலர், காய், கனி எனப்படிப்படியாக முதிர்ச்சியும் மாற்றமும் பெற்று ஒன்றே பல நிலைகளில் நிற்கும் வரிசைகாட்டி விளக்கப்படுவன.

ஒன்றன்பின் ஒன்றாக இந்நான்கு வழிகளையும் மேற்கொள்பவர்கள், இறைவனை அகத்தும் புறத்தும் இருத்தி வழிபடல் அவசியமாகின்றது. ஆகவே ஆலய வழிபாடு முக்கியத்துவம் பெறுகின்றது. ஆலயங்களில் இறைவன் மூர்த்தி பேதங்களாகவமையும் உருவத்திருமேனியையும், அருவுருவத்திருமேனியையும், அருவத்திருமேனியையும் லிங்கவடிவினையும் கொண்டு எழுந்தருளுவான். இவற்றைப் புறக்கண் கொண்டு பார்த்து அனுபவம் மிக்கோருக்கு அவனது திருமேனி அவர் அகக்கண் கொண்டு உள்முக நோக்காகத் தோன்றும் நிலையினை எய்துவிக்கும் மெய்யடியார் அகத்தம், புறத்தே தேவாலயங்களிலும் நிகழ்த்தும் வழிபாட்டினை அண்ணல் அன்புடன் ஏற்றருள்வான்.

இறைவழிபாடு இருவழியாக நிகழ்கின்றதைக் காண்கின்றோம். இவ்விரண்டினுள் வழிபாட்டிற்குரிய திருக்கோவிலில் தீர்த்தம், தூபம், தீபம், அர்ச்சனைப் பொருட்கள், பூமாலை, நைவேத்தியம் முதலிய பொருட்களையெல்லாம் துணை கொண்டு புறத்தே நிகழ்த்தும் பூஜை நாமனைவரும் புறக்கண்ணாலே காணத்தக்கது அனைவரும் அறிந்தது.

இவ்வாறு புறத்தோற்றம் பெறாத இப்பொருட்களனைத்தையும் அகக்கண்ணால் கண்டு நுண்ணியதாக நெஞ்சினுள் கற்பித்து வழிபடுவது. அகத்தில் நிகழும் வழிபாடு ஆதலால் அது அந்தாயஜனம் எனப்பெயர் பெற்றது. புறத்தே புலனாகும் புறக்கிரியை வழிபட நிற்பவர்களை ஞானவழியை நோக்கி இட்டுச் செல்ல இது முக்கியமாதல் பற்றியே ஆகமம் இதனைக் கிரியைகள் எல்லாவற்றிற்குமே இன்றியமையாததாகக் குறிப்பிடுகின்றன. அந்தர்யாகம் இன்றெல் வெளியே நிகழ்த்தப்படும் வெளிப்பூஜை பயன்தராது. அந்தர் யாகத்தை முதலில் நிறைவேற்றியே சிவாச்சாரியார்கள் யாகத்தைத் தொடங்குதல் வேண்டும் என அஜீதாகமம் கூறுகின்றது.

அந்தர்யாகம் கட்டாயமாக நிகழ்த்தப்படவேண்டுவது என்பதை சித்தாந்த நூல்கள் எடுத்துக் காட்டுக்கள் மூலம் நம்மைத் தெளிவாக உணரவைக்கின்றன. அந்தர்யாக பூஜையின் இயல்பினையும் பயனையும் சிவஞானசித்தியார்,

அந்தர் கந்தனை முத்தி சாதனமா
அறைத்திடுவரது தானு மான்மசுத்தியாகுங்
கந்தமலர் புகை யொளிமஞ் சனமமுது முதலாகக்
அண்டளவே லாமளத்தாற் கருத் கொண்டு
சிந்தை தனி லர்ச்சிக்கச் சிவனை ஞானத்தாற்
சிந்திக்கச் சிந்திக்கத் தர்ப்பணத்தை விளக்க
வந்திடுமேல் வொளிபோல மருவியர லுள்ளதே
வறவரந் திடுவன்பின் மலமான தறுமே

ஆன்மாவிற் சிவனை அர்ச்சித்தலும் அருள்வழிநின்று சிவனை தியானித்தலுமாகிய அகப் பூசனையாற் சிவம் விளக்கமலம் நீங்கி ஆன்மசுத்தியடைதலால் அவ்வகைப் பூசனையும் முத்தி சாதனமாம். உள்ளே சிவத்தை ஆவாஹித்துப் பூஜை செய்யாது வெளியே பூஜை செய்தல், உள்ளங்கையிலிருக்கும் பாலை விடுத்துப் புறங்கையை நக்கும் செயலை ஒக்கும். தேவாலயம் முதலிய புறவழிபாடு அகத்தே நிகழும் அந்தர் யாகம் முதலிய உள்வழிபாட்டினை சிறிதாக இடம்பெறச் செய்யும் இவ்வழிபாட்டால் அனுபவம் பெருகி வளரும் பொழுது சிவஞானப்பேறு கிட்டும். இது ஈற்றில் வீடுபேற்றை அடைவிக்கும். மறைநூல்களை தன்னையடையும் வழிகளாக கொண்டவன் இறைவன். அவனையடைய அந்நூல்களின் வழிநின்று தசநாடிகளையும் சுத்தம் செய்து ஐம்புலன்களை தன்பின்னால் வரச்செய்யின் சிவனது திருவடி கிட்டும் என்பதனை திருமூலர் பின்வருமாறு கூறுகிறார்.

‘ ‘கோயில்கொண் டாவடி கொல்லைப் பெருமறை
வாயில்கொண் டானடி நாடிகள் பற்றுள
பூ சைகொண்டின்புல னைந்தும் விறகிட்டு
வாயில்கொண் டானெங்கள் மாநந்திதானே’ ’

அண்டத்தில் உள்ளதெல்லாம் பிண்டத்தில் உண்டெனும் அடிப்படையில் “புறத்தே பூசைக்கு வேண்டும் ஆழ்நிலை இறைவனை அகத்தே பூசை செய்வதற்கேற்றதாக எம் உள்ளத்திலும், அதை நடுவே கொண்டமையும் எம் சரீரத்திலும் அமைந்துள்ளது” என்பதனை நமது சாத்திரங்கள் தனித்தனியே சுட்டியுள்ளன. பஞ்சபூதங்களும், முத்தானங்களும், மும்மலர்களும், பதினான்கு உலகங்களும், மலைகளும், தீவுகளும், சமுத்திரங்களும், புறவுலகிற் காண்பது போல சரீரத்திலும் காணப்படுமாற்றை தனித்தனி காட்டிவிளக்குவன. புறவுலகில் உயிர்கள் தோன்றி ஒடுங்கும் நிகழ்ச்சியினை நிகழ்த்தி இவை சரீரத்திலும் நிகழ்தலையும் நூல்கள் உணர்த்துகின்றன.

உடம்பில் தலை ஸ்ரீபர்வதமாகவும், நெற்றி திருக்கேதாரமாகவும், புருவமத்தி காசி யாகவும், குஹயம் குருச்சேத்திரமாகவும் இதயம் பிரயாகையாகவும், இருதயத்தின் நடு சிதம்பரமாகவும், திருத்தலங்கள் உடம்பில்

விளங்குமாற்றைச் சூதசங்கிதை எடுத்தோதுகின்றது. நம்முடையிற் காணப்படும் மூலாதாரம், சுவாதிஷ்டானம், மணிபூரமம், அநாகதம், விசுத்தி, ஆஞ்ஞை முதலிய ஆறாதாரங்களாக முறையே திருவாரூர், திருவானைக்கா, திருவண்ணாமலை, சிதம்பரம், திருக்காளத்தி, காசி என்னும் தலங்கள் அமைவதையும் மதுரையம்பதி பிரமாந்திரமாய் விளங்குவதையும் திருவிளையாடற்புராணம் கூறும்.

இவ்வாறான கிரியை நெறியில் நெடுங்காலமாக ஈடுபட முதிர்ச்சி ஏற்படும் அதன் விளைவாக கிரியை பற்றிய அறிவும் அனுபவமும் இவ்விரண்டினால் பரிபக்குவமும் ஈற்றில் சித்தசுத்தியும் உரிய வேளைகளில் ஏற்படும் பொழுது மறைபொருளாய் உணர்த்தப்படும் தத்துவங்கள் ஒவ்வொன்றாகத் தானே விளக்கம் பெறும்.

பிரதிஷ்டை உள்ளிட்ட பெருங்கிரியைகளில் ஆங்காங்கு இன்றியமையாது இடம்பெற்றுக் காணப்படும் பூதசுத்தி, அந்தர், யஜனம் முதலிய இக்கிரியைகள் கிரியை வழியிலிருந்து ஞானவழிக்கு அழைத்துச் செல்லுமாறு உபாசனை ஈர்க்கும் இயல்பினவாக இருக்கக் காண்கின்றோம் இக்கிரியைகளில் ஈடுபட்டு பக்குவம் முதிர்ந்து வரும்வேளை குருவருளும் கைகூட தனியான வழியினிலே செல்லும்பேறு விரைவில் கிட்டும் இவ்வழியிலே தான் ஸ்பர்சாகுதி கிரியைக்கு முன்னோடியான அனைத்துக் கிரியைகளிலும் சிவாச்சாரியார்கள் பூதசுத்தி, அந்தர்யாகம், சகளகரணம் என்பன செய்யப்படுகின்றன.

பூதசுத்தி

பூதங்களைச் சுத்தி செய்தல் பிருதுவி முதல் ஐந்து பூதங்களையும் இவை சம்பந்தமான ஆத்மாவையும் சுத்தப்படுத்துவதாகும். பிரதிஷ்டா ஆரம்பகாலக் கிரியையாக அமைவது ஆசார்யபரணம் ஆகும். அப்போது பிரதான குருவுக்கு சகல உபசாரங்களும் கொடுத்து குருவே நீங்கள் பிரம்மாவாகவும், விஸ்ணுவாகவும், உருத்திரனாகவும், பரப்பிரம்மாவாகவும் இருக்கின்ற படியால் இச்சிவகைங்கரியத்தை செய்து பக்தர்களை சிவானுக்கிரகத்திற்கு பாத்திரர்களாக்குதல் வேண்டுமென வழிபடப்படுகின்றார். எனவே தான் சிவாச்சாரியன் ஆன்மாவானது தனது அறிவுமயங்கி மாயையின் வயத்தால் மாயை செய்விக்கின்ற வேலைகளை நானே செய்கின்றேன். எனது சொத்து என்று அகங்காரம் மமகார மேலீட்டால், செய்கின்ற நினைக்கின்ற குற்றங்களை நீக்கி ஆத்மாவை சுத்தப்படுத்துவதாகும். இவ்வாறு சுத்தப்படுத்திய பின் இறைவனை பரார்த்த பூஜையில் ஈடுபடுத்துவர்.

இந்தப் பூதசுத்தியானது ஆத்மாக்களை அடைகின்ற பதப்பிரார்த்தியினாலும் தீட்சை பேதங்களாலும் ஐந்து வகைப்படும். இதில் குருமூர்த்தியால் (சிவாச்சாரியார்) சிவப்பிராத்தியங்களாகையாலும், சிவாஸ்ரமீகளாகவும், ஆதிசைவர்களாகவும் இருப்பதால் சிருஷ்டி கிரமம், நிதிக்கிரமம், திதிக்கிரமம், சம்ஹாரக்கிரமம், திரோபவக்கிரமம், அனுக்கிரகக்கிரமம் என்பவற்றுள் ஐந்தாவதாகிய அனுக்கிரகம் பூதசுத்தியை செய்தல் எனப்படும்.

பஞ்சவித சுத்தியினைப் பண்ணிடுக பாங்காகப்
பஞ்சவித பாசமறுப்பார்' '

தனது தேகமானது பிருதுவி முதலிய பஞ்ச பூதங்கள் விதையாகவும், பிரம்ம விஷ்ணுக்களால் முளையுண்டானதாகவும் ராகம், துவேசம், தர்மம், அதர்மம், யோகங்கள் வேராகவும் வித்தை அவித்து அதிபர்களால் ரட்சீக்கின்றதாகவும், கலை முதலிய தத்துவங்கள் சாரமாகவும் தன் மாத்திரைகளான இந்திரியங்கள் கிளைகளாகவும், விஷயம் தளிராகவும், பிரபஞ்சம் புஷ்பமாகவும், புத்தி விவசாயிகள் சங்கற்ப பழமாகவும் பழரசத்தை புருஷனாகிற பட்சி புசிக்கிறதாகவும் பாவித்து வேர் மேலாகவும் தளிர் கீழாகவும் ஆலமரத்தைப் போல் தியானித்து, தலைமுதல் பாதம் வரை ஆகாசம், வாய்வு, அக்கினி, ஜலம், பிருதுவி, இவைகள் ஒன்றில் ஒன்று சேர்ந்த விதையாகவும் பாவித்து ஜாதி,குலம்,குணம்,முதலியவற்றிக்கு காரணமான தூல தேகத்தை தியானித்து யோனி ஷேத்ரத்தில் பிரம்மன் சிருஷ்டிப்பவராகவும், விஷ்ணு காக்கின்றவராகவும் தியானித்து நமது கர்மம் மூலமாகிய கிழங்காகவும் ஆணவம் மூளையாகவும் தர்மா தர்மத்தைப் பாவித்து அத்துடன் ராகத்வே மோகம் உபமூலமாகவும் அவித்தை மாயா கர்மத்தில் இருந்ததாகப் பாவித்து வித்தை பரமெனவும் இந்தப் பரம்பரிபாலிப்பதாகவும் பாவித்து நடந்து நடக்கின்றது நடக்கப்போகின்றது ஆகிய காலத்து விருட்சம் அசையாதிருக்கும் பொருட்டு காசாரமாகப் பாவித்தல் வேண்டும். இனி தன் பாத்திர இந்திரியம் ஞானத்திரியம் என்றும் கன்மேத்திரியம் என்றும் இரண்டாகப் பிரியும். அதைக் கொப்பில்

கிளையாகவும் தியானித்து சப்தம் முதலிய ஐந்தையும் ஐந்து துளிராகவும் புத்தி சங்கல்ப பழக்கத்தை பனி ரூபமான ஆன்மா புசிக்கின்றதாகவும் தியானிக்க வேண்டும்.

ஓம் எனும் மந்திரத்தை ஐந்து முறை உச்சரித்து ஆலமரத்தை அசைவற்றதாகப் பாவித்து பின்னர் ஹம் எனும் மந்திரத்தை மூன்று முறை உச்சரித்து வலதுகால் கட்டைவிரல் முதல் உண்டாகும் காலாக்னியால் உலர்ந்த பத்திரத்தை தசிக்கப்பட்டதால் தியானித்து ஐஹம் எனும் மந்திரத்தை இரண்டு முறை உச்சரித்து தசிக்க சாம்பலைப் பரந்ததாகத் தியானித்துப் பின்னர் ஹிம் எனும் மந்திரத்தை ஒருமுறை உச்சரித்துப் பரந்த சாம்பல்களை சேர்த்து அந்தச் சாம்பலை சுத்தஸ்படிகமாகவும் நிர்மலமாகவும், தியானித்து முன்கூறிய ஆகாயத்துள் அடங்கியிருக்கும் சிவாபின்னமான ஆத்மாவை சிவனிடத்தில் சேர்த்து எல்லா உபாதைகளில் நின்று ஓம் ஹாம் சிவாய வௌட் என சிகையில் நின்றும் அதே முகமாக (உள்முகமாக) இருக்கும் பத்மத்தில் பெருகி வருவதாய் தியானித்து உள்முகம் நனைத்துப் பின் இருதய கமலத்தில் ஓம் அகார, உகார, மகாரமும், அதிக ஒளியும் சர்வவல்லமை முதலிய ஆறு குணங்களோடும் எல்லா வித்தைகளையும் உண்டாக்குகின்றதாகப் பாவித்து இருதய கமல கர்ணிகையின் நடுவில் இந்த ஆத்மா புரியப்பட்ட தேகமுடையதாய் தியானித்து இந்த ஆத்மாவிற்கு உள்ளிருக்கும் பரமாத்ம ஸ்வரூபமானது எல்லா ஐவரியங்களையும் கொடுப்பதாகவும் சாந்தரூபமாகவும் ஆறு குணங்களாய் நிறைந்துள்ளதாயும் உள்ள ஆத்மாவை சிவங்வரூபம் செய்து கலைகளைத்தாண்டி பஞ்சபிரம்மத்தை ஆவாஹித்து பிரசாதமந்திரத்தை தேஹத்தில் ஆவாஹித்து அஸ்திரமத்திரத்தால் திக்குப்பந்தமும் கவச மந்திரத்தால் மும்முறை சுற்றி கலாமயத்தைத் தாண்டி சிவஸ்ரூபத்தை உண்டாக்க வேண்டும். பின் தனது இடைநாடியால் பரகமும., கழுமுனை நாடியால் கும்பகமும் செய்து ஜீவாத்மாவைக் கொணர்ந்து உண்டான அமிர்தத்தால் தனது தேகத்தை நனைத்து சிவனோடு ஐக்கியம் செய்தலே அனுக்கிரகபூதசுத்தியாகும் என ஆகம நூல்களிலும் பத்ததிகளிலும் விளக்கப்பட்டுள்ளன.

அந்தர் யாகம்.

அந்தர் யாகம் என்பது அந்தர் முகமாக சிவபெருமானை மானசீகமாக வழிபடல் ஆகும்.

அர்ச்சித்தா னந்தர் யாகம் புரியாதே பலத்தை
வர்ச்சித்தர் னென்றே மதி

அந்தர் யாகத்தில் கூறப்படும் கிரியையாவது மானசீகமாக நிகழ்வன. சுத்தமாயை வடிவான அர்க்கிய பாத்திரத்தை இதய கமலத்தில் கதளி பத்திர மூலத்தடியில் (வாழைமரஅடி) வைத்து பிந்துஸ்தானத்திலிருந்தே வெளியே பெருகும் அமிர்தமாகிய நீரினால் அதை நிரப்பி உரியவாறு அர்ச்சித்து அந்நீரினால் மானசீகமாக பூஜையல் ஈடுபட்டுள்ள சிவாச்சாரியார் தன் தலையில் தெளித்தல் வேண்டும். இருதய கமல நடுவில் உள்ள கர்ணிகையில் ஆர்ய - சந்திர அக்னி மண்டலங்களைப் பாவித்து முறையே சதாசிவம், மகேசம், சிவம் இவர்கள் இருப்பதாகவும் இந்த இருதயத்தில் தானே தோன்றிய கிழக்கிலிருந்து வெளிப்போந்ததும் உடலின் நடுவில் விளங்குவதும் ஒன்பது அங்குலபிரமாணம் வாய்ந்ததும் நான்கு அங்குல நீளமும் அதேயளவு உயரம் வாய்ந்ததும், முட்டை வடிவினதும், தோல் முதலியவற்றுடன் விளங்குவதுமான இதயகமலத்தை கர்ணிகையோடு கூடியதாக தியானித்தல் வேண்டும். அங்கு இறைவனை ஆசன, மூர்த்தி மூலமாக தியானித்து ஆவாஹித்தல் வேண்டும். அவ்வேளையில் இறைவன் மூன்று நிலைகளில் தோன்றி அருளுவார். இம்மூவகைத் தோற்றங்களும் அநாஹத சிவனிடம் பூஜையும், அமநஸ்க சிவனிடம் ஹோமமும், பரமசிவனிடத்து சமாதியும் நிகழ்த்தல் வேண்டும். இதயகமலத்தில் இறைவனை பஞ்சபிரம்ம மந்திரங்களாலும், ஷடங்க மந்திரங்களாலும், மானசீகமாக அர்ச்சிப்பதற்கு உரிய எட்டுவகைப் பூக்கள் அகிம்சை இந்திரிய நிக்கிரகம், ஷாந்தி, தயை, ஞானம், தபம், சத்யம், பாவம் என்பன “மை அர்க்கியம் பாத்திரமாயமாயுள்ள அமிர்தஸ்வரூபமான சீர இங்கு அபிஷேகத்திற்குரியது. அடுத்து அமிர்த பிரவாகத்தால் அபிஷேகம் நிகழும்.

புத்தி, குங்குமமும், கர்ப்பூரமும், கஸ்தூரியும், புனுகும், சந்தனமும் கலந்த வாசனைத் திரவியங்களால் பூசும் உபசாரப் பொருட்களாகும். ஐம்பூதங்களால் ஐவகை உபசாரமும் நிகழும். பஞ்சபூதங்களான பிருதிவி முதலான நைவேத்யம், நீர், கண்ணாடி, விசிறி, ஸ்தோத்திரம் ஆகிய ஐவகை உபசாரப் பொருட்களால் அர்ச்சித்து இவையனைத்தையும் சூக்கும சரீர யோகத்தால் சேமித்து மானசீக சிவபூஜை செய்தல் வேண்டும். இதயகமலத்தில் வித்யா பீடத்தில் சிவனை ஆசனமூர்த்தி மூலம் மானசீகமாக அர்ச்சித்து தியானித்து முன்கூறிய பொருட்களை மனதால் நிவேதித்து மானசீகமாக பஞ்சமுகி முத்திரை காட்டி நூபி குண்டத்தில் தானாகவே உற்பத்திபெற்ற அக்னியில் ஹோமம் செய்தல் வேண்டும்.

இவ்வக்னி காரியத்தில் சுத்தமாயை குண்டமாகும். இச்சை, ஞானம், கிரியை ஆகிய மூன்று சக்திகள் மூன்று மேகலைகள். சுழிமுனை இருக்கு, இடை சுருவம், மூலாதாரம் நெய்க்கிண்ணம். எல்லாத்திரவியங்களுடன் கூடிய பிரபஞ்சமே ஹோமத்திற்குரிய பொருட்கள். பிந்துவிலிருந்து வெளிப்போகும் அமிர்தம் நெய். நூபி குண்டத்தில் தானாகவே தோன்றிய அக்னியில் ஞானாக்கினியை துவாத சாந்தத்திலிருந்து சுழிமுனை வழியே நாபி குண்டத்தில் சேர்ப்பித்து பூரகஞ் செய்வதனால் பெருகச் செய்யட்டும். நெய்யினால் நூற்றெட்டு ஆகுதிகள் முதலான ஆகுதிவகைகளைக் கொடுத்து ஹோமஞ் செய்தல் வேண்டும். ஹோமத்தின் முடிவில் சுழிமுனையினை சிருக்காகக் கொண்டு பூர்ணாகுதி நிகழ்த்துதல் வேண்டும். இது ஹோமம் ஆகும். பின்னர் சமாதிநிலை நிற்றல் கூறப்படுகின்றது. ரேசகும்பகம் செய்து அனாகத சிவன் அமனங்க சிவனிலும், அமனங்கசிவன் பரமசிவத்திலும் ஒடுங்கியதாகத் தியானித்து சச்சிதானந்த ரூபியான பரமசிவனிடத்தில் லயித்தலான சமாதி நிலை கூடல் வேண்டும். உள்ளே நிகழ்த்திய பூஜையை இறைவனிடம் சமர்ப்பித்து அந்தாயாகத்தை முடித்தல் வேண்டும் இதே கிரியை மார்க்க நிலையை சித்தியாரும்,

நாட்டுமிக யந்தானு நாபியினி னடியாய்
ஞானமுதற் றத்துவத்தா லெண் விரணாளத்தாய்
நீட்டுமோ இனிசுத்த வித்தையால் ரெட்டாய்
முழுவித எழுட் டக்கரங்கள் முறைமையின் னுடைய்தாய்க்
காட்டுகம லாசனமே ஸீர்சதா சிவங்கள்
கலா மூர்த்த மாமிவற்றின் கண்ணாகுஞ் சக்தி
வீட்டையருள் சிவன் மூர்த்தி மானசித் சக்தி
மேலாகி நிற்பணிந்த விளைவறிந்து போற்றே

சகளீகரணம்

கரசுத்தி கைகள் ஒன்றால் ஒன்றை உள்ளும் புறமும் துடைத்து அவற்றிலுள்ள அசுசிகளைத் தகித்த (எரித்து) பாவனையாகும்.

கரநியாசம் - இருகைகளையும் சிவனுக்குரிய கமலாசனமாகப் பாவித்து அதிலே சிவனை அர்ச்சித்து அக்கைகளைச் சிவ வடிவவினவாக்கல். இருகரங்களும் சக்தி வடிவினவாக அவற்றை குவித்த விடத்து அங்குட்டங்களொழித்த மற்றையெட்டு விரல்களும், இருதய கமலத்தின் எட்டு இதழ் வடிவினவாயும் மத்தியில் வைத்து அங்குட்டவிரல் அக்கமலத்தின் கர்ணிகை வடிவினதாயும் பாவிக்கப்படும் குவிந்த இருகைகளில் நடுவில் அங்குட்ட விரல்களினால் சிவாசனை மந்திரத்தால் ஆசனம் கற்பித்து அதில் சிவமூர்த்தி மந்திரத்தால் உருவமாகிய மூர்த்தியை ஆவாஹணம் செய்து சிருஷ்டி, திதி, சங்கார, கிரமத்தில் அதிகாரத்தக்கிரியை ஐந்து விரல்களிலும் ஈசானாதி பஞ்சப்பிரமம் மந்திரங்களினால் நியாசித்து (தொடுதல்) சிவனுடைய சிரசு முதலிய அங்கங்களை அமைத்து பூஜித்து (இருதயம், சிகை, சிரசு, கவசம் (தோள்), நேத்ரம் (கண்), அஸ்திரம் எல்லா அங்கங்களும்) மேல் கைகளின் நடுவில் அங்குட்ட விரலால் வித்தியரேஹ மந்திரத்தால் அருவரூபமாகிய சிவலிங்க மூர்த்தியில் வித்தியாதேகம் அமைத்துப் பூஜித்து இருகைகளின் நடுவிரல் மூன்றாலும் நேத்திர மந்திரத்தால் நேத்திரமமைத்து பூஜித்து அங்குட்ட விரல்களினால் சிவமூலமந்திரத்தால் நியசித்து அச்சிவலிங்கமூர்த்தியில் நிஷகளமாகிய சிவனை ஆவாஹித்துப் பூஜித்து முதல் மூன்று விரல்களிலும் இருதயம், சிரசு, சிகை மந்திரங்களால் முறையே அவ்வவ்வங்கங்கள் அமைத்துப் பூஜித்து மேல் கவச மந்திரங்களால் அவகுண்டஞ் செய்து அவ்வாறு பிரசன்னமாக்கிய சிவனைச் சூழ மதில் உண்டாக்கி அஸ்திரமந்திரத்தால் ஒவ்வொருள்ளங்கையையும் மற்றைய தன் அணிவிரலால் நியசித்தலுமாகிய பாவனையாம். மேல் சிவமூல மந்திரத்தால் இருகரங்குவித்து பரிமீகரணம் செய்தல் முன்வைத்த மந்திரமனைத்தையும் ஏகீபாவஞ் செய்தலாம். (பரமீகரணம், ஏகீபாவம் ஒருங்கு சேர்த்துப் பாவித்தல்) இக்கிரியை மேலங்கத்தை சிவசொரூபமாக்கும் நிமித்தம் வேண்டப்படுவதாகிய கையை மன்னர் சிவவினதாக்கிக் கொள்ளும் பாவனையாகும். மாணிக்கவாசகரும் திருவெம்பாவையில்

என்கை உனக்கலா தெப்பணியுஞ் செய்யற்க

எனப் பாடுகின்றார். இக்கரநியாசம் வலக்கைப் பெருவிரலாதியாக இடக்கைப் பெருவிரலீறாக நியசிக்கும் சிருஷ்டிக்கிரமமும் இருகரத்தும் ஒரே பெருவிரல் முதல் சிறுவிரலீறாக நியசிக்கும் திதிக்கிரமும், சிறுவிரல் முதல் பெருவிரலீறாக நியசிக்கும் முறை சங்காரசிரமம் என மூன்று வகைப்படும். இவற்றுள் சிருட்டிக்கிரமம் பிரம்மச்சாரிக்கும், கன்னியர்க்கும், திதிக்கிரமம் கிருஹஸ்தனுக்கும், சுமங்கலிக்கும், சங்காரகிரமம் வனப்பிரஸ்தன் சந்நியாசி, விதவை ஆகியோருக்குமுரியது.

அங்கநியாசம் - அங்கத்துச் சிவவடிவினை வைத்துப் பூஜித்து அதைச் சிவசொரூபமாகப் பாவித்தல். சிவாசனமந்திரத்தால் பெருவிரல் அணிவிரலைச் சேர்த்து இதயத்தில் நியசித்து ஆசனம் அமைத்து அதிலே சிவமூர்த்தி மந்திரங்களால் உருவாய மூர்த்தியை ஆவாஹித்துப் பூஜித்துக் கையை முண்டியாகப் பிடித்து பெருவிரல் கொண்டு ஈசான மந்திரத்தால் சிரசிலும் பெருவிரலோடு மற்றைய நாலு விரல்களையும் முறையே சேர்த்துத் தத்புருடம், வாமம், அகோரம், சத்யோஜாத மந்திரங்களை முறையே முகம், மார்பு, சூஷ்யம், பாதம் ஆகிய இடங்களிலும் நியசித்து உருவத் திருமேனிக்குரிய சிரம் முதலாய அவயங்கள் உண்டானதாகப் பாவித்து பூஜித்து பெருவிரல் அணிவிரல் சேர்த்து வித்யாதேக மந்திரத்தால் இருதயத்து நியசித்து அங்கே அருவாரூபமாயுள்ள சிவலிங்கம் தோன்ற அதில் வித்யாதேகம் பொருந்தியதாகப் பாவித்து பூஜித்து பெருவிரல், அணிவிரல் சேர்த்து வித்தியாதேக மந்திரத்தால் இருதயத்து நியசித்து அங்கே அருவாரூபமாயுள்ள உள்ள சிவலிங்கம் தோன்ற அதில் வித்தியாதேகம் பொருந்தியதாக பாவித்து பூஜித்து வலக்கை நடுவிரல் மூன்றாலும் நேத்திரமந்திரத்தால் கண்களில் நியசித்து சிவனுக்கு நேத்திரங்கள் அமைத்ததாகப் பாவித்து சிவமூலமந்திரத்தால் இருதயத்தில் நியசித்து அங்குள்ள சிவலிங்க மூர்த்தியிலேயே அருவமாகிய சிவனை ஆவாஹித்து பூஜித்து மேல் பெருவிரலோடு கூடிய சிறுவிரல் அணிவிரல் நடுவிரல்களினால் இருதயம், சிரம், சிகை என்னும் மந்திரங்களால் அவ்விடங்களை நியசித்து சிவனுக்கு அவ்வங்கங்கள் உண்டாயதாக பாவித்துப் பூஜித்து இருகரங்களிலும் நீட்டிய சுட்டுவிரல்களினாலே கவசமந்திரத்தால் கழுத்தை முலை நடுவளவாகச் சுற்றி இருதயத்துற்ற சிவனுக்குக் கவசமிட்டு பூஜித்து ஒருகையின்றி விரலால் மற்ற உள்ளங்கைகளிலே அஸ்திர மந்திரத்தால் நியசித்து சிவமந்திரத்தைப் பூஜித்தலுமாகிய பாவனையுஞ் செய்து மேல் தாளத்தியம், திக்கு பந்தனம், அவகுண்டனம் ஜலசுத்திக்குப் போலச் செய்து சிவசொரூபத்தை பாதுகாத்து சிவமூல மந்திரத்தால் சிரமுதற்பாதமளவாக மகா முத்திரை காட்டி எல்லா மந்திரங்களையும் ஏகீபாவஞ் செய்தலாம். இதனையே மந்திர சகிதமாய்க் கிரியையோடு கூட்டிச் செய்த பாவனையின் வழியாய் தன்னிடத்து சிவசொரூபம் உண்டாகும். (சகளீகரணம் அனைத்துக் கிரியைகளுக்கும் உள்ள விடயமாகும்)

இவ்வாறு அசுத்தமான தேகத்தை சுத்தமடையச் செய்து சிவோஹம் பாவனையாக ஆக்குதல் மூலம் கிரியை செய்தற்குரிய பரிபக்குவ நிலை ஏற்படுகின்றது. இங்கேயும் வேதங்களும் ஆகமங்களும் ஒன்றாகும் நிலையை காணலாம். ஷோகம் அது நான் என்ற பாவனை செய்தல் அது நான் அவன் நாள் என்பது வேதாந்த வாக்கியம், சிவோகம் என்பதும் இதுவே சிவம் நான் இது ஆகம சித்தாந்த வாக்கியமாகும்.

கருடதியானத்தால் விஷம் நீங்குவது போல சோகம் பாவனை செய்தலால் மலங்கள் நீங்கும். ஆதிபௌதிக கருடன், ஆதிதைவிகருடன், ஆத்தியான்மிக கருடன் எனக் கருடன் மூவகைப்படும். அவற்றுள் உலகத்திற் காணப்படும் கருடன் ஆதிபௌதிக கருடன் என்றும், கருடமந்திரம் ஆதிதைவிக கருடன் என்றும், கருடமந்திரமிடமாக நின்று பலன் கொடுக்கும் சிவசுத்தி ஆத்தியான் மிக கருடன் என்றும் சொல்லப்படும். ஆதிதைவிக மந்திரத்தை நாடோறும் பயின்று வந்த பயிற்சி விஷேடத்தால் அம்மந்திரமே தானாக அநந்திய பாவனை செய்து தன்னறிவு அதன் வசமாகும்படி உறைத்து நின்று அம்மந்திரக்கண் கொண்டு பார்க்கும் போது விஷம் நீங்குவது போல சிவோஹம் பாவனையில் சிவதத்துவ விளக்கம் வாயிலாக பாசமாகிய விஷம் நீங்குமென்பர்.

இவ்வாறு கிரியையில் ஈடுபடும் சிவாச்சாரியார் தேகசுத்தி செய்த பின்பு கிரியைகளை ஆற்றுவார். ஆகமக் கிரியைகள் புலன்களைச் சிவநெறியிற் செலுத்துவன. கிரியைகட்குயிராகிய மந்திரமும் பாவனையும் புலன்களும் சிவமாக்கும். கிரியைகளில் ஈடுபடும் சிவாச்சாரியார் தம்மை சிவமாக பாவிப்பதன் மூலமே பிரதஷ்டாதி உற்சவ காலங்களில் அவர் போற்றுதற்கும் வழிபாட்டிற்குரியவராகின்றார். அதனால் தான் குருவே பிரம்மா, விஸ்ணு, சிவன் எனவும் திருமூலரும் 1ம் தந்திரத்தில் தெளிவு புரிவின் திருவார்த்தை கேட்டல், தெளிவு குருவுச் சிந்தித்தல் தானே என வகுப்பதும் நோக்கத்தக்கது. தெளிவு என்பது இங்கு ஞானத்தைப் பெறும் விடயத்தில் குரு வழிகாட்டுவது இன்றியமையாததாகும். அறிவு ஒரே விதமாக இருந்தாலும் பக்குவத்திற்கேற்றப்படி ஒவ்வொன்றிலும் பிரகாசிக்கின்றது. இந்த அறிவாகிய ஆத்மா ஒளியை முழுமையாக பிரகாசித்துச் செய்யவும், துக்கமின்றி இருப்பதற்குரிய வழிவகைகள் கூறவும் நமக்கு குருபரம்பரை அவசியமாகின்றது.

இந்த அதிகாரம் பரம்பரையாக இடம்பெறும் வகையில் தான் ஒரு குருபரம்பரை இடம்பெறுகிறது. ஆன்மாவுக்கு ஞானத்தையும் செயலையும் வேதாகமங்கள் வழங்குகின்றன. அவ்வேதாகமங்கள் பிரமாதிகள் ஓதுவிக்க இருடிகளால் ஓதப்பட்டு அவர்கள் வழியாகத் தொன்று தொட்டு வருவதால் தவறின்றி உயர் அறிவுடையவராகவே சொல்ல வேண்டும் என்ற உயர்வு ஆழமாக மக்களிடையே இருந்து வருகின்றது. சித்தியாரும்,

மந்திரத்தான் மருந்துகளான் வாய்ந்தவியோ கத்தான்
மணியிரது குளிகையினான் மற்று மற்றுஞ்
தந்திரத்தே சொன்னபடி செய்யவேத
சகல கலை ஞானங்க டிர்கால ஞானம்
அந்தமிலா வண்மதி ஞானங்க ளெல்லாம்
மடைத்திடுமா சானருளா வடிகென் ஞானம்
வந்திடுமற் றொன்றாலு வாரா தாடு
மற்றவையு மவனருளான் மருவுமன்றே' '

' 'பரம்பிரம மிவனென்றும் பரசிவன்றா னென்றும்
பரஞான மிபனென்றும் பராபரன்றனென்றும்
அரன்றருஞ்சீர் நிலையெல்லா மிவனே யென்றும்
அருட்குரவை வழிபடவே யவனிவன்றா னாயே
இரல்சிவாரசமாயை மீனண்ணடஞ் சினையை
இயல்பினோடு பரிசித்து நினைந்தும் பார்த்தும்
பரிந்திவைதா மாக்குமோ போற்சிவமே யாக்கும்
பரிசித்துஞ் சிந்தித்தும் பார்த்துந்தேனே

இவ்வாறாக தொன்மையான காலம் முதல் சமய கிரியைகளுக்கு குருவே வழிகாட்டி வருகின்றனர். அவரே கிரியைக்குரிய வழிகாட்டி. தெய்வீக பொலிவுடன் விளங்கும் குரு கர்த்தா செய்யும் விரும்பும் கிரியைகளின் விபரங்களை விளக்கி அவற்றை முன்னின்று நடாத்துகின்றார். இவர் மூலமே கிரியை தொடர்பான பாரம்பரியம் இன்றளவும் பேணப்பட்டு வருகின்றது. அத்தகைய குரு வழிபாட்டிற்கு உரியவராகின்றார்.

நீண்ட காலச் சமய பாரம்பரியத்தினை தலைமுறை தலைமுறையாகப் பேணிப்பாதுகாத்து பக்தர்களின் ஆன்ம ஈடேற்றத்திற்கு குரு என்ற நிலையில் நின்று சமயக் கிரியைகளை வழிநடத்தும் இவர்கள் என்றென்றும் அனைவரது அன்பிற்கும் மரியாதைக்கும் உரியவர்கள் என்பதை எம்மில் ஒவ்வொருவரும் நன்கு உணரவேண்டும். குருவை சித்தத்தில் சேவித்து வழிபடுதல் ஆகியவை உயர்ந்த செயலாகும். குருவே தெய்வமென்று குருவே தர்மம் என்றும் சிறப்பாக கூறப்பட்டுள்ளது. அஞ்ஞான இருளை நீக்குபவர்களாக குருவாக விளங்கும் காரணத்தால் அவரைப் போசித்தல் தர்மம் என இந்து சமயம் கூறுகின்றது. திருமூலரும்,

குருவே சிவமெனக் கூறினென் நந்தி
குருவே சிவனெனக் பலகுறித் தோரர்
குருவே சிவனுமாயக் கோனுமாய் நிற்கும்
குருவே யுரையுணர் வற்றதோர் கோவே
அவ்வாறே,
சூரிய காந்தமுஞ் சூழ்பஞ்சும் போலவே
சூரிய காந்தமுஞ் சூழ்பஞ்சைச் சுட்டிடா
சூரியன் சந்நிதி யிற்சுடு மாறுபோல்
சூரியன் தோற்றமுன் அற்றமலங்களே எனக் குறிப்பிடுகின்றார். சித்தியாரும்,
சூரியகாந் தக்கல்வி னிடத்தே செய்ய
சுடர் தொன்றிடச் சோதீ தோன்று மாபோல்
சூரியனா மானன்வந் தருளாற் றோன்ற
வடிஞான மான்மாவிற் தோன்றுந் தோன்றத்
சூரியனாஞ் சிவன் றோன்றுந் தானுந் தோன்றும்
தொல்லுலகை மேல்லாந்தன் னுள்ளே தோன்றும்
நேரியனாய்ப் பரியனுமா புயிர்குயிரா யென்கு
நின்றநிலை யெல்லா முன்னகழ்ந்து தோன்றும்

சூரியகாந்தக்கல்லில் சூரியனின் ஒளி பிரகாசிக்க அங்கே அக்கினி வடிவில் விளங்குவது போல ஞானசாரியார் அருளே திருமேனியாகக் கொண்டு எழுந்தருளி வந்து பக்குவ ஆன்மாவின் முன்தோன்றி உபதேசிக்க சிவஞானம் அவ்வான்மாவிற் தோன்றி அதன் அனுபவமாக அறிவிற் தோற்றும் என சித்தியார் சிவோகம் பாவனையாக நிற்கும் நிலையினையும் சிவாச்சாரியாரின் பெருமையையும் கூறி நிற்கின்றது. இவ்வாறாக சிவாச்சாரியாரின் சகளீகரணம், பதசுத்தி, அந்தர்யாகம் என்பவற்றால் பரிபக்குவ நிலை அடைந்து கிரியையில் ஈடுபடுவர். இதுவே கிரியை நிலையில் ஞானபாத சிந்தனையாக வளர்கிறது.

சைவ திருக்கோவில் கிரியை மரபு

சிவஸ்ரீ. இரகுநாத. கமலநாதக்குருக்கள், B.A.Hons,
பிரதமகுரு, என்பீல்ட் நாகபூசணி அம்மன் கோயில் லண்டன்.

இந்துப்பண்பாட்டின் நிலைக்களனாய் விளங்குபவை ஆலயங்கள் ஆகும். எங்கும் பரந்து வியாபித்துள்ள இறைவன் சாந்நித்தியமாக உறையுமிடம் ஆலயங்களே என்ற நம்பிக்கை இந்துக்களிடையே தொன்று தொட்டு நிலவி வருகின்றது. இவ்வாலயங்களில் நிகழும் கிரியை ஒழுங்கு, வழிபாட்டு மரபு, நிர்மானிக்கும் நெறிமுறைகள், குற்றங்குறை ஏற்படுமிடத்து மீண்டும் நிறைவுறச் செய்யும் வழி முறைகள் ஆகிய இன்னோரன்ன விடயங்களை கூறுவதற்கு சில ஒழுங்கு முறைகள் பேணப்பட்டு வந்துள்ளன. தொன்மைக்காலம் முதல் பேணப்படும் வழக்க முறைகளை மரபு என்று அழைப்பர்.

இந்துக்கள் தமது வாழ்வைச் சமயம் மற்றும் கலைத்துறை சார்ந்த நிலையில் அமைத்துள்ளமை குறிப்பிடத்தக்கது. சிறப்பாக ஆலய வழிபாட்டைப் பொறுத்தமட்டில் சிற்சில மரபுகளுக்குட்பட்டு தமது பண்பாட்டை வளர்த்து வந்ததால் அவர்களது வழிபாட்டு மரபில் தொன்மைக் காலம் முதல் பல சிறந்த விழுமியங்கள் பேணப்பட்டுள்ளமையும் கவனிக்கத்தக்கது. இறை வழிபாட்டிற்குரிய வழிமுறைகளைக் கூறும் நூல்கள் ஆகமங்கள் எனப் போற்றப்படுகின்றன. ஆகமங்கள் தொன்மைக்காலம் முதல் இற்றை வரைக்கும் ஆலய வழிபாட்டு நெறிகளை வகுத்தும் தொகுத்தும் கூறும் இலக்கியங்களாகும்.

ஆலயங்களின் மேன்மை.

ஆலயப் பண்பாட்டின் மூலநூல்களாக விளங்கும் ஆகமங்களை முதன்மையாகக் கொண்டு எழுந்த வாஸ்து சாஸ்திரங்களும், சிற்ப சாஸ்திரங்களும் ஆலய வளர்ச்சிக்கு உதவின. இந்து நாகரிக வளர்ச்சிக்கு ஆலயங்களே பெரும் பங்காற்றின. ஓர் நாகரிகத்தின் மேன்மைக்கு அடிப்படையாக விளங்குவன பண்பாடாகும். பண்பாடு மனித வாழ்வின் ஆணிவேர். நிலத்தை நல்ல முறையில் மற்றவர்களுக்குப் பயன்கொடுக்கும் வகையில் பண் படுத்துவது போன்று மனதை மற்றவர்களுக்கு உதவும் வகையில் பயன்படுத்துவது பண்பாட்டின் பாற்படும். "ஓர் இனத்தின் பண்பாடு இலக்கியம், வரலாறு, சமயம், சமுதாயம், கலை, அறிவியல் முதலியவற்றின் மூலம் விளக்கமுறுகிறது".

சமய இலக்கியம் என்ற வகையில் சமயம், கலை ஆகிய அம்சங்களின் கருவூலம் என்ற வகையிலும் சிறப்புப் பெற்ற ஆகமங்களை மூலமாகக் கொண்டு சமய நிறுவனமாக எழுச்சி பெற்ற ஆலயம் மக்களது உளப்பண்பாட்டிற்கு வழிவகுத்தது. கோவில் வழிபாட்டிற்கும் மற்றைய சடங்கிற்கும் வேண்டிய மந்திரங்களைப் பற்றிக் கூறுபவையே சிவாகமங்கள் என்று பெரும்பாலானவர்கள் கருதுவர். சிவாகமங்கள் மந்திரங்கள் பற்றிக் கூறுபவை என்பது உண்மை எனினும் அவை அவ்விடயம் பற்றி மட்டும் கூறுகின்றன என்று கருதுதல் பொருந்தாது. தனிமனித மேம்பாட்டிற்கும், சமுதாயம், கிராமம், நாடு, இவைகளின் உன்னத நிலைக்கும் எவையெவை அவசியமோ அவையனைததையும் சிவாகமங்கள் மிக விரிவாக எடுத்துக் கூறுகின்றன. தனிமனிதனது நல்வாழ்விற்கும் நாட்டினது மேன்மைக்கும் ஆலயங்களே உறுதுணையாக விளங்கி வந்துள்ளன என்பதனை அப்பர் சுவாமிகளும்

திருக்கோவில் இல்லாத திருவியல் ஊரும்
    திருவெண்ணீறு அணியாத திருவியலூரும்
பருக்கோடிப் பக்திமையிற் பாடா ஊரும்
    பாங்கினொடு பல தளிகள் இல்லாவூரும்
விரும்போடு வெண்சங்கமூதாவூரும்
    விதானமும் வெண்கொடியுமில்லாவூரும்
அவையெல்லாம் ஊரல்ல அடவிகாடே

என்ற பாடல் மூலம் கிராமங்கள் அல்லது நகரங்களில் சிறப்பிற்கு ஆலயங்களே காரணமென விளக்குகின்றார். மேலும் பேராசிரியர் கா.கைலாசநாதக்குருக்கள் அவர்கள் "பசுவினுடைய உடம்பெங்கணும் பரந்தோடும் குருதி பக்குவமடைந்து பாலாக பரிணமிக்கும் பொழுது அதை வெளியேற்ற முலைகள் அமைந்து விளங்குவது போல் உலகெங்கணும் பரந்து விளங்கும் பரமன், ஆன்மாவின் ஈடேற்றம் கருதிக் கருணை மேலீட்டால் உருவந்தாங்கி எழுந்தருளி இருக்கும் இடம் கோவில்" என விளக்குகின்றார்.

இறைவன் சாந்நித்யம் கொண்டு அருள் சுரக்குமிடம் ஆலயம் என்று பெயர் பெறுகிறது. மற்ற இடங்களில் வழிபடுவதைக் காட்டிலும் ஆலயத்திலேயே சென்று வழிபடுதல் சிறப்புடையது என்பதனை ஔவையாரும் ஆலயம் தொழுவது சாலவும் நன்று என்று கூறுகிறார். ஆலயமென்பதை ஆலயம் என வகுக்கலாம். உயிர்கள் இலயித்தற்குரிய இடமே ஆலயம் என சிறப்புப் பெயர் வழங்கப்படுகின்றது. மனிதன் பண்புள்ளவனாக விளங்க உள்ளத்தின் வளர்ச்சியும், பக்குவமும் இன்றியமையாதவை. மனம் ஒரு நிலப்பட்டு மெய்மறந்து தியானத்தில் மூழ்கவும் ஆலய வழிபாடு உதவுகின்றது அதேபோல கோவிலென்ற பதமும் ஆலயத்திற்கு வழங்கப்படுகிறது. கோ என்பது அரசன் எனவும் இல் என்பது வீடு எனவும் பொருள் கொள்ளப்படுகின்றது. அப்பரும்.

பெருக்காறு கடைக்கணிந்த பெருமான் சேரும்
        பெருங்கோயில் எழுபதினோடெட்டும் மற்றும்
கரக்கோயில் கடிபொழில் சூழ் ஞாழற்கோயில்
        கருப்பதில் பொருப்பனைய கொகுடிக்கோயில்
இருக்கோதி மறையவர்கள் வழிபட்டேத்தும்
        இளங்கோயில் மணிக்கோயில் ஆலயக்கோயில்
திருக்கோவில் சிவனுறையும் கோவில் சூழ்ந்து
        தாழ்ந்திறைஞ்சும் தீவினைகள் தீருமன்றே

இவ்வாறாக கோயில் வகைகளைக் கூறி நிற்கின்றார். அது போல் சாஸ்திர நூல்களில் "விமானம்", "பிராசாதம்" எனவும் கூறப்படுகின்றது. விமானம் எனின் விசேடமாக அளந்து அமைக்கப்பட்டது எனும் கருத்தைச் சுட்டி நிற்கின்றது. இறைவன் பெருமையினை அளத்தற்கு சிறந்த கருவி என்பதால் இதற்கு விமானம் என அழைக்கப்பட்டது. தம் அழகினால் தேவர்களினதும், மனிதர்களினதும் உள்ளத்தைக் கவர்ந்து மகிழ்விக்கின்ற காரணத்தினால் கோவிலுக்கு பிராசாதம் என்ற பெயர் வழங்கப்படுவதாக சில்பரத்தினம் எனும் நூல் கூறும், ஆலயங்களும் அங்கு அமைக்கப்பட்டுள்ள விக்கிரகங்களின் பெருமை பற்றி அப்பர் சுவாமிகள்,

குறிகளும் அடையாளமும் கோயிலும்
நெறிகளும் அவன் நின்றதோர் நேர்மையும்
அறிய ஆயிரம் ஆரணம் ஓதினும்
பொறியிலீர் மனம் என்சொல் புகாதே   எனவும் இக்கருத்தை சிவஞானசித்தியாரும்,
திருக்கோயிலுள்ளிருக்கும் திருமேனி தன்னை
சிவனெனவே கண்டவர்க்கு சிவனுறைவானங்கே
உருக்கோலி மந்திரத்தால் என நினையுமவர்க்கு
முளனெங்கும் மில்லனிங்குள னென்பார்க்கும்
இருப்பாய வடிவாகுயிந்தனத்தினெர்போல்
மந்திரத்தின் வந்துதிப்பனிருஞ் சுரப்பிக்கெங்கும்
உருஞ்சானா வொண்ணாத பால்முலைப்பால் விம்மி
உருகுவதுபோல் வெளிப்பட்டருறுவானன்பர்க்கே   எனவும் மெய்கண்டதேவரும்,

"ஆலயந்தானும் அரனெனத் தொழுமே" எனக் கூறுவதன் மூலம் ஆலயத்தின் தொன்மையும் மேன்மையும் புலனாகின்றது. மேலும் இந்துக்கள் இயற்கைச் சூழலை நன்கு பயன்படுத்தினர். ஆலயப் பண்பாட்டினைப் பேணி வந்துள்ளமை இந்து நாகரிக வரலாற்றில் மற்றொரு சிறப்பம்சமாகும். ஆலயம் உருவாகும் பூமியே புனிதமானதாகவும் பூசைக்குரியதாகவும் ஆயிற்று. இத்தகைய இயற்கைச் சிறப்புமிக்க இடங்களில் இறைவனுக்கென ஆலயங்கள் எழுப்பவும் தலயாத்திரை மேற்கொள்ளவும் வழிபடவும்

செய்தனர். மிகப் பழைய நூல்களில் ஒன்றாகிய பிருஹத் சம்ஹிதை ஆலயங்களைக் குறிப்பிடுமிடத்து

வனோபாந்த நதீசைல நிர்ஜரோ பாந்பூமிஷு
ரமந்தே தேவதா நித்யம் பூரேஷுத்யான வத்சுச

"சோலைகள், ஆறுகள், மலைகள், ஊற்றுக்கள், பூங்காக்கள் நிறைந்த இடங்களில் தெய்வங்கள் உறைகின்றன" என இந்நூல் குறிப்பிடுகின்றது. தெய்வீகத்தை உணர்த்தும் இத்தகைய இடங்களே ஆலயங்கள் அமைப்பதற்கு ஏற்றவையாகக் கொள்ளப்பட்டன. ஆலயம் அமைய வேண்டிய இடம் பற்றி தந்திர அமுச்சயம் என்ற பிறிதொரு நூல்.

தீத்தாந்தே நடிநீதடே ஜலநிகே ஸ்தீரே சங்கமே
சைலக்ரே ''அ'' த்திதடே மனோபவன யோஸ்த்யானதேசே ததா
சித்தாத்யாய தனேஷு வா குருவரோ க்ராமே பூரே புத்தனே
தேசே (அ) ந்யத்ர மனோ ரமே சுரசமிஜாயாயம் க்சிதிம் கல்பயே

"தீர்த்தக்கரை, ஆற்றங்கரை, கடற்கரை, ஆறுகள் சங்கமமாகும் இடம் மலையுச்சி, மலைச்சரிவு, வனம், பூங்கா, பூந்தோட்டம், சித்தர்களின் இருப்பிடம், கிராமம், நகரம் மற்றும் வனப்புமிக்க இடம் ஆகியவற்றில் ஒன்றினைக் குருவானவர் தேர்ந்தெடுக்க வேண்டும்" எனக் குறிப்பிடுகின்றது. இவ்வாறு இந்துப் பண்பாட்டின் நிலைக்களனாக விளங்கும் ஆலயங்கள் ஆகம மரபிலே அமைந்துள்ளன என்பதனை தமிழ்மந்திரம், தமிழ் ஆகமம் என்று போற்றப்படும் திருமூலரின் திருமந்திரத்தில் நாம் காணலாம். கோயிலின் வழிபாடு பற்றியும், அமைப்புப்பற்றியும் மிகத்தெளிவாக கூறுகின்றார். திருக்கோவில் அமைப்பு பற்றி

தூயவிமானமுந் தூலமதாகுமால்
ஆய சதாசிவ மாகு நற் சூக்குமம்
பாய பலிபீடம் பத்திர லிங்கமாம்
ஆய ஆரணியை ஆய்ந்து கொள்வார்கட்கே எனவும் சைவசமய நெறியில்,

"தூலலிங்கமாந்தாபி சூக்குமா முள்ளிலிங்கத் மேலும் பலிபத்திரம்" எனவும் கூறுகிறது.

திருமூலர் சிவாலய பூசை பற்றிக் கூறுமிடத்து
முன்னவனார் கோயில் பூஜைகள் முட்டின்
மன்னர்க்கு தீங்குள வாரி வளல்குன்றும்
கன்னல் களவு மிகுந்திடுதல் காசினி
என்னருந் நந்தி எடுத்துரைத்தானே

இவ்வாறாக ஆலயங்கள் ஆகமமுறையில் நடைபெறுகின்றன என்பதும் அங்கே பூஜைகள் நடைபெறாவிடின் ஏற்படும் தீமை பற்றியும் திருமூலர் மிகத் தெளிவாகக் கூறுகின்றார். திருமூலர் தரும் இக்கருத்துக்களின் அடிப்படையில் சில விடயங்கள் தெளிவாகின்றன. கோயில்கள் ஆகமமரபில் நடைபெற வேண்டுமென்பதும் கோயில்களில் கடமை புரியும் சிவாச்சாரியார் ஆகமத்தில் ஆழ்ந்த அறிவுடையவராயிருத்தல் வேண்டுமென்பதும் வற்புறுத்தப்பட்டுள்ளது. எனவே திருமூலர் ஆகமங்களின் பெயர்களைக் கொண்டு ஆகம கால ஆய்வின் முடிவினை ஓரளவு ஏற்க முடிகிறது.

ஆலயத்திற்கும் ஆகமங்களுக்குமிடையேயுள்ள தொடர்புகளை விளக்கும் சான்றுகள்.

ஆகமங்களின் காலத்தைத் தவிர நிர்ணயிப்பதில் அறிஞர்களிடையே கருத்து வேறுபாடுகள் நிலவுகின்றன. எனினும் ஆகம காலத்தை வரையறுக்க முயன்ற அறிஞருள் விண்டர் நீட்ஸ், ஸ்கோமெரஸ், ஃபகுவார் போன்றோர் குறிப்பிடத்தக்கவராவார். ஆகமங்களைப் பற்றி ஓரளவே அறிய கூடியதாயினும் அதன் கால எல்லையை வரையறுப்பது முடியாததாகும் எனக்கூறும் விண்டர் நீட்ஸ் ஏனைய ஆசிரியர்களின் கருத்துக்களின் அடிப்படையில் ஆகம காலத்தைக் குறிப்பிட முனைகிறார். ஸ்கோமெரஸ் கி.பி.1ம் அல்லது 2ம் நூற்றாண்டுகளில் திருமூலரும் ஏனைய தமிழ்ப் புலவர்களும் ஆகமங்களைப் பெருமளவில் பயன்படுத்தியிருப்பர் எனக் கொண்டு ஆகமங்கள் கிறிஸ்துவுக்கு முன்னைய காலங்களில்

நிலவியிருந்திருக்கலாமென்கிறார். ஆனால் திருமூலர், மாணிக்கவாசகர் ஆகியோரது காலத்தை கி.பி.8ம், 9ம் நூற்றாண்டாகக் கொள்ளும் ஃபர்குவார் கி.பி.7ம் 8ம் நூற்றாண்டுகளை ஆகமத்தின் பின் எல்லையாகக் கொள்வார். இவ்விருவரது கருத்துக்களிலும் ஃபார்குவாரது கருத்துக்களையே விண்டர் நீட்ஸ் ஏற்கிறார். திருமூலர் மாணிக்கவாசகர் ஆகியோரது கால நிர்ணயத்தில் நிலவும் கருத்து வேறுபாடுகளுக்கு மத்தியில் இவ்விருவரது காலமும் ஆகம காலத்திற்கு ஒரு மைல் கல்லாக அமைவதை நாம் மறுப்பதற்கில்லை. கர்மாகார் என்ற அறிஞர் ஆகமங்களின் காலம் பற்றிக் குறிப்பிடுமிடத்து சுவேதாஸ்வர உபநிடதமும் பகவத்கீதையும் எழுதப்பட்ட ஓரிரு நூற்றாண்டுகளையடுத்து ஆகமங்களும் இலக்கிய வடிவம் பெற்றிருக்கலாமென்பர். மகாபாரதத்தில் ஆகமங்கள் பற்றிய குறிப்புக்களை எடுத்துக்காட்டி அதைச்சான்றாகக் கொண்டு மகாபாரதம் முடிவில் அதாவது கிறிஸ்துவுக்கு முற்பட்ட 2ம் நூற்றாண்டில் மகாபாரதம் முழுநூல் வடிவம் பெற்ற காலத்தில் ஆகமங்கள் எழுத்து வடிவம் பெற்றிருக்கலாமென்பதே இவரது கருத்தாகும்.

தென்னாட்டில் வளர்ச்சி பெற்ற சைவத்திற்கு சிவாகமங்கள் பெருமளவில் உதவியுள்ளன. புராணங்கள், ஆகமங்கள் கூறும் திருவுருவங்களிற்குரிய தெய்வீக விளக்கக் கதைகளையும் ஐதீகங்களையும் கூறுவன. வடமொழி புராண கருத்துக்களும் ஆகம மரபும் தென்னாட்டுச் சைவத்தில் முக்கிய இடம் பெற்றன. தென்னாட்டில் ஆகமங்களும் அவற்றை அடிப்படையாகக் கொண்டெழுந்த நூல்களும் சமஸ்கிருத மொழியில் குறிப்பாக கிரந்த வடிவிலேயே எழுதப்பட்டமை குறிப்பிடத்தக்கது. இவ்வரிவடிவ முறையின் தொடக்க காலத்தைக் கொண்டு ஆகமங்கள் தமிழ்நாட்டில் எழுத்து வடிவம் பெற்ற காலத்தை நாம் ஓரளவு ஊகிக்க முடியும். பல்லவ காலத்தில் எழுதப்பட்ட லிபிக்கு "பல்லவ கிரந்தம்" என்ற பெயர் வழங்கப்பட்டது.

தென்னிந்தியாவில் பல்லவ காலத்தில் இரண்டாம் நரசிம்மனின் காலம் (கி.பி.700-728) ஆனது சமயத்தைப் பொறுத்தமட்டில் ஆகம மரபு பேணப்பட்ட வகையிலும் குறிப்பிடத்தக்க காலமாகும். இம்மன்னன் சிறந்த சிவபக்தன், சைவ சித்தாந்த நெறியில் ஈடுபாடுடையவன். காஞ்சி கைலாசநாதர் கோவில் உட்பட பல கோயில்களை எழுப்புவித்தவன். இவன் பெற்ற பட்டங்கள் இவனது சமய உணர்வினை வெளிப்படுத்துகின்றன. ஆகமங்களைப் பிரமாணமாக ஏற்று அம்மரபைப் பேணியமைக்கான அகச்சான்றுகளை அவனது கல்வெட்டுக்களில் காணலாம். "ஆகமத்தைப் பிரமாணமாகக் கொண்டவன்" (ஆகமப்பிரமாண) "ஆகமத்தைப் பின்பற்றுபவன்" (ஆகமானுசாரி) "ஆகமம் கூறும் உயர் ஞானமாகிய சைவசித்தாந்தத்தையே தனது வழியாகக் கொண்டவன்" (சைவசித்தாந்தமார்க்க) ஆகிய பெயர்கள் பொருத்தமாக அமைகின்றன. இச்சான்றுகளிலிருந்து இம்மன்னன் காலத்தில் ஆகம மரபில் அமைந்த பண்பாட்டு நிலை சிறப்பாகக் காணப்பட்டிருக்கலாமென்பதை உணரமுடிகிறது.

நாயன்மார்கள் ஆகமங்களைப் பற்றி தமது பதிகங்களில் பாடியுள்ளமை கவனிக்கத்தக்கது. சம்பந்தர் (ச.தேவாரம் 111-23-6) "தொகுத்தவனருமறை அங்கம் ஆகமம் வகுத்தனன்" எனவும் (ச.தே 111 39-2) "ஆகமத்தோடு மந்திரங்கள் அமைந்த சங்கதம்" எனவும் அப்பர் சுவாமிகள் (அப்பர் தேவாரம் 15 -4) "பனையிலாகமஞ் சொல்லுந்தன் பால்நிற்கே" எனவும் சுந்தரர் (சுந்தரர் தேவாரம் 84-8) "அண்டர் தமக்காகமநூல் பொழியும் ஆதியை" எனவும் (சு.தே 96-6) "அம்மானே ஆகம சீலர்க்கருள் நல்கும் பொம்மானே" எனவும் பாடுகின்றார். சிவனோடு தொடர்புபடுத்திய நிலையில் அவர்கள் ஆகமங்களை குறிப்பிடுகின்றபடியால் அவர்களது காலத்தில் ஆகம கருத்துக்களும் மரபும் நன்கு அறிமுகமாகியுள்ளன என்பது தெளிவு.

மேலும் சேக்கிழாரும் ஆலயங்களிற்கும் ஆகமங்களுக்குமிடையே உள்ள தொடர்பை
பொங்குமாமறை புற்றிடம் கொண்டவர்
எங்குமாயிருந்தவர் பூசனைக்
கங்கள் வேண்டு நிமித்தமாராய்ந்துள்ளான்
துங்கவாகமஞ் சொன்ன முறைமையால்
எனவும்
எய்திய சீராகமத்தியியம்பிய பூசனைக்கேற்ப
கொய்த மலரும் புனலு முதலான கொன்னைந்தார்
மைதழையுங் கண்டத்து மலைமருந்தை வழிபாடு
செய்துவருந் தவமுடைய முனிவர் சிவகோசரியார்

எனவும் கூறுகிறார். இன்னும் இறைவனுக்கும் ஆகமத்திற்கும் உள்ள தொடர்பை மாணிக்கவாசகரும் "ஆகமாகி நின்றண்ணிப்பான்தாள் வாழ்க" எனவும் கூறுகிறார். அதேபோல் இறைவனை அடைய சுலபமான வழி எதுவென சத்யஜோதி சிவாச்சாரியார் "எளிமையான உபாயங்களால் ஆன்மாக்களுக்கு முத்தியைக் கொடுக்கின்றமையால் சைவசாத்திரங்களான ஆகமங்களே கைக்கொள்ளத்தக்கன" எனக் கூறுகின்றார். இவ்வடிப்படையில் சைவசமயத்தில் "உயிர்க்கூட்டங்கள் முத்தியடைய வேண்டும் என்ற காரணத்திற்காகவே இறைவன் சாத்திரங்களைப் படைத்தான். சாத்திரங்கள் மூலம் சாதனைக்குரிய வழிகளைக் காண்பித்து அவற்றால் முத்தி அருள்வதே இறைவனின் நோக்கம்" என கிரணாகமம் கூறுகிறது. இவ்வாறாக இந்துக்கள் மத்தியில் ஆலயங்கள் "இறைவன் சாந்நித்தியம் பெற்று ஆன்மாக்கள் உய்யும் பொருட்டு அருள்பாலிக்கும் இடமாகிய ஆலயம்" ஆலய சேவைபற்றி விரிவாக அறிதற்குரிய ஆதார நூல்கள் சிவாகமங்கள் ஆகும்.

ஆகமங்களும் தந்திரங்களும் மூன்று பிரிவுகளாக பிரிக்கப்படுகின்றன. சைவம், வைணவம், சாக்தம், சிவனை முமுமுதற் கடவுளாகக் கொண்ட சைவாகமம், விஷ்ணுவை முழுமுதற் கடவுளாகக் கொண்ட வைஷ்ணாவகமும், சக்தியை முழுமுதற்கடவுளாகக் கொண்ட சாக்தாகமம் (தந்திரங்கள்) இவை 64 ஆக வகுக்கப்பட்டுள்ளன. இவை தட்சிணம், வாமம் எனவும், வைஷ்ணவாகமங்கள் பாஞ்சராத்திரம், வைகாசை எனவும் கூறப்படுவன. பாஞ்சாராத்திராகமங்கள் 219 அல்லது 223 ஆனால் அவற்றிலே சில ஆகமங்கள் கிடைத்துள்ளன. சைவ ஆகமங்கள் நான்கு வகைப்படும். கபால, காளமுக, பாசுபத, சைவம் என்பனவாகும். சைவம் காஷ்மீரசைவம், சித்தாந்த சைவம் என வகுக்கப்படுகின்றது. காஷ்மீர சைவம் வடஇந்தியாவில் பின்பற்றப்படுகின்றது. சித்தாந்த சைவம் தென்னிந்தியாவில் மட்டும் பின்பற்றப்படுகின்றது. சித்தாந்த அடிப்படை 28 ஆகமங்கள் உண்டு. ஒவ்வொரு ஆகமமும் உபாகமங்களைக் கொண்டு விளங்குகின்றது. அவை 207 ஆகும். பரமசிவனின் சதாசிவ மூகூர்த்தத்திலிருந்து 28 ஆகமங்களும் உருவாகின்றன. முதல் பத்தும் சிவபேதம் எனவும் ஏனைய 18ம் உருத்திரபேதம் எனவும் கூறப்படுகின்றன. தந்திராவதார படலம் ஒவ்வொரு ஆகமத்தின் விபரம், உபாகமங்கள் அவற்றைப் பரப்பிய ஆசிரியர்கள் சிஷ்ய மரபு போன்ற விபரங்களைத் தருகின்றன. ஆகமத்தின் பிரதான அம்சம் தெய்வ வழிபாடு சிறப்பாக உருவ வழிபாடு, கோயில் சார்ந்த ஏனைய விடயங்களையும் அவை மட்டுமின்றி சைவசித்தாந்த தத்துவம், தனிமனித சமூக கடமைகள், மரபுகள் என்பனவற்றைத் தெளிவாகக் கூறுகின்றன.

சிற்சில உட்கருத்துக்களின் அடிப்படையில் தான் ஆலயங்கள் கட்டப்படுகின்றன என்பதை எல்லா ஆகமங்களும் கூறுகின்றன. ஆலயம் என்பதற்கு எல்லாம் ஒடுங்குமிடம் என்று பொருள். எல்லோரும் ஒருங்கே கூடி கடவுளை வழிபடுவதற்கு இடமாகவுள்ளது ஆலயம். பசுவாகிய ஆன்மா தனது மும்மலங்களிலிருந்து நீங்கி இறைவனிடம் ஒடுங்குவதற்கு இடமாகவுள்ளது ஆலயம். இறைவனுக்குரிய இடமாகத் திகழ்வது எனக்கூறும் விளக்கமும் உண்டு. உடம்பினை இருப்பிடமாகக் கொண்டு உயிர் விளங்குவது போன்று ஆலயத்தை இருப்பிடமாகக் கொண்டு ஆண்டவன் விளங்குகின்றார். தோல், குருதி, இறைச்சி, எலும்பு, மஜ்ஜை, மேதஸ், சுக்கிலம் எனப்படும் ஏழுவகை தாதுக்களால் உடம்பு அமைக்கப்பட்டிருப்பது போல் ஆலயமும் செங்கல், வெண்கல், கருங்கல், நீறு, மணல், நீர், காரம் எனப்படும் ஏழுவகைப் பொருட்களால் கட்டப்பட்டுள்ளது. ஆலயத்தை ஒரு மனித வடிவமாகக் கொண்டால் கர்ப்பக்கிரகம் என்பது சிரசு, அர்த்தமண்டபம் கழுத்து, மஹாமண்டபம் மார்பு, யாகசாலை நாபி, கோபுரம் பாதம் எனவும் மற்றொரு வகையில் ஆலயம் என்பது உடலாகக் கொண்டால் கோபுரம் வாய், நந்தி நாக்கு, கொடிமரம் உள்நாக்கு, தீபங்கள் பஞ்சேந்திரியங்கள், கர்ப்பக்கிரகம் இதயம், சிவலிங்கம் உயிர் எனக் கருதப்படும். இதே கருத்தைத் திருமூலர்.

உள்ளம் பெருங்கோயில் ஊனுடம்பாலயம்
வள்ளல் பிரானார்க்கு வாய் கோபுரவாசல்
தெள்ளத் தெளிந்தார்க்கு சீவன் சிவலிங்கம்
கள்ளப் புலனைந்தும் காளா மணிவிளக்கே
எனவும் அப்பர் சுவாமிகளும்
காயமே கோயிலாக கடிமனப் பொய்கையாக எனப் பாடுகின்றார்.

கர்ப்பக்கிரகத்தை அடுத்துள்ள பிரகாரம் அர்த்தமண்டபம், அதற்கடுத்த பிரகாரம் அந்தர்ஹாரம் எனவும், அதற்கடுத்தது மத்தியஹாரம் எனவும், அதற்கடுத்து மார்யாதா எனவும்,அதற்கடுத்து மஹாமர்யாதா எனவும் மஹாமாயாதா முதற்கொண்டு அர்த்தமண்டபம் வரை 5 பிரகாரங்கள் எனக் கணக்கிடுவர். அர்த்த மண்டபத்தை நீக்கி கர்ப்பக்கிரகம் வரை 5 பிரகாரங்கள் எனக் கருதுவதுண்டு. காரணசரீரம், கஞ்சுகசரீரம், குணசரீரம், சூக்குமசரீரம், ஸ்தூலசரீரம் என ஆன்மாவிற்கு 5 வீத உடல்கள் உண்டு காரண சரீரம் ஆனந்த மயபோசம் கஞ்சுகசரீரம், விஞ்ஞானமயகோசம், சூக்குமசரீரம் பிராணமயகோசம், குணசரீரம் மனோமயகோசம், ஸ்தூலசரீரம் கன்னமயகோசம் எனப்படும். ஐந்தாவது பிரகாரத்தை நோக்க நான்காவது பிரகாரம் நுண்மயமானது. அவ்வாறே அண்மைய கோசத்தை நோக்க பிரணமயகோசம் நுண்மயமானது. இவ்வாறே மற்றைய பிரகாரங்களையும் கோசங்களால் ஒப்பிடலாம்.

காரண சரீரமாகிய ஆனந்தமயகோசம் மிக நுண்மையானது. இவ்வாறே கர்ப்பக்கிரக விவரணமும் மிக நுண்மையானது. எனவே சரீர தத்துவமே ஆலயத்தத்துவம் என்பது நன்கு புலனாகிறது. மூன்று பிரகாரம் மட்டும் உள்ள ஆலயம் தூல, சூக்கும, காரண சரீரங்கள் எனும் மூன்றையும், இரண்டு பிரகாரங்கள் உள்ளவை ஸ்தூலம், சூக்குமம் எனும் உபசரீரங்களையும் ஒரே பிரகாரம் உள்ளதில் ஐந்து சரீரங்களும் அடங்கும்.

ஓர் ஆலயத்தில் ஐந்து வகை லிங்கங்கள் உண்டு என பரமேஸ்வர ஆகமம் கூறுகின்றது. விமானதூல லிங்கம், கர்ப்பக்கிரகம், சூக்குமலிங்கம், பலிபீடம் அதிசூக்குமலிங்கம், துவஜதம்பம், காரணலிங்கம், மூலலிங்கம் மஹாகாரணலிங்கம் இவ்வாறாக சைவாகமங்களில் உயரிய நோக்கம் மனிதனைத் தெய்வீக நிலையாக ஆக்குவதே அடிப்படைக் குறிக்கோளாக கொண்டனவாகும். சைவவாககமங்கள் சைவசித்தாந்த உயர் ஞானத்திற்கு ஆதார நூல்களாக திகழ்வதைப் பெரும்பாலான அறிஞர்களின் மரபு ரீதியாகவும் ஆராய்ச்சி மூலமாகவும் ஏற்றுக்கொண்டுள்ளனர். சைவசித்தாந்த சாத்திரத்திற்கே அவற்றின் அறிவு இன்றியமையாததாக வேண்டப்படுவதாகும்.

சைவசித்தாந்தம் குறிப்பிட்டுப் பேசும் பதி, பசு, பாசம் ஆகிய முப்பொருள்களும் திருக்கோயிலுள்ள அமைப்போடு தொடர்புபடுகிறது. சிவலிங்கம் பதி எனவும், நந்தி பசு எனவும், பலிபீடம் பாசம் எனவும் கொள்ளப்படுகிறது. வேதாகமங்களும் சித்தாந்த நூல்களும் குறிப்பிடும் இம்முப்பொருளைக் கோவிலில் இவ்வாறு உயர்த்தி நிற்பதைக் காண்கின்றோம். விக்கிரகங்களை ஆழ்ந்த வட்டமாக அமைந்த திருவாசி பிரணவமேயாகும். சிவனை மறைத்து நடுவே இடம்பெறும் திரைச்சேலை மாயையாகும். திருவருள் எனும் சக்தியே துணை நாடி அதை அகற்றி அறிவு எனுங் கண்கொண்டு வழிபடுபவர்கள் சிவதரிசனப்பேறு பெற்று பேரானந்தப் பெருவாழ்வு பெறுவர். இதுபோலவே காரணாகமமும் துவஜஸ்தம்பம் பதி எனவும், கொடிக்கயிறு திருவருட்சக்தி, கொடிச்சீலையில் வரையப்பட்ட ரிஷபம் பசுவையும் தர்ப்பைக்கயிறு பாசத்தையும் குறிக்குமென்று கூறுகிறது.

ஆலய தரிசனத்தால் ஆன்மாக்கள் பக்குவமடையும் முறையினையும் சிவாகமங்கள் தெளிவாக விளக்குகின்றன. ஆலயத் திருக்குளத்தில் மூழ்குதல் சக்திநிபாதம் என்பதைக் குறிக்கும். அதாவது திருவருள் வீழ்ச்சியைப் பெற்று மேலும் பக்குவமடைதலைக் குறிக்கும். பிரகாரங்களை வலம் வருதல் தத்துவங்களைக் கடந்து சிவத்தை அடைதல் என்பதை உணர்த்தும், பலிபீடம், நந்தி, கொடிமரம் ஆகிய இவற்றின் தரிசனத்தால் ஆன்மா பாசம், பசு, பதி எனப்படும் முப்பொருள் உணர்ச்சி பெற்று பலிபீடத்தருகே வீழ்ந்து வணங்குவதால் வினைநாட்டமும் பாசநீக்கமும் அடையும் ஆலயத்திலுள்ள மண்டபங்களை கடத்தலால் மூலாதாரம் முதலிய ஆறு ஆதாரங்களைக் கடந்து அதிகார நந்தியின் இடத்தை அடைவதால் அதிகார முக்தனாகி பின்பு சிவலிங்க தரிசனத்தால் அபரமுக்தன் எனும் நிலையை ஆன்மா அடைகிறது.

சிவலிங்கம்

"ஆகமம் கூறும் கிரியை யாவும் திருவுருவங்களை அடிப்படையாகக் கொண்டமைந்தவையாகும். திருவுருவ வழிபாடு இன்றேல் ஆகம வழிபாடு இல்லை" என சைவத் திருக்கோயில் கிரியை நெறியில் பேராசிரியர் கா.கைலாசநாதக்குருக்கள் (பக்கம் 125) குறிப்பிடுகின்றார். எனவே திருவுருவ வழிபாடு

பற்றித் தனி அம்சமாக கொண்டவர்க்கும் ஆகமக்கிரியை பற்றி அறிவதற்கு திருவுருவங்கள் பற்றிய அறிவு முக்கியம் என மேலும் குறிப்பிடுகின்றார். திருக்கோயில் வழிபாடு தனி மனிதனுக்கென்று உருவாகவில்லை. மக்கள் அனைவரும் சென்று வழிபடுவதற்காகவே தேவாலயங்கள் உருவாகின. இம்மக்கள் பெருந்தொகையினர், இவர்களுட் பெரும்பாலானோர் அறிவு நிலையில் அடித்தளத்தையேனும் அணுகாத நிலையினர். எனவே வழிபடும் முறை இவர்கட்கு ஏற்றவாறு எளிதாய் அமைய வேண்டிய நிலையினை ஒட்டியே வழிபடும் சாதனங்களும் அமைந்துவிடுகின்றன. இவ்வாறு எளிதாய் அமைய வழிசெய்வது விக்கிரகங்களாகும். விக்கிரக வழிபாடு சைவத்திற்கன்றி வைஷ்ணவம் உள்ளிட்ட அனைத்துச் சமயங்களிற்கும் இன்றியமையாது வேண்டப்படுகின்றது. பிம்பம், விக்கிரகம், மூர்த்தி, பேரம், பிரதிமை முதலிய பல்வேறு பெயர்களும் திருவுருவத்தைக் குறிக்கச் சிறிய நூல்களில் பலவாறாகக் காணப்படுகின்றன. குணங்குறியற்ற இறைவனை குணங்குறிகளால் வகுக்கும் எல்லைக்குள் அகப்படுத்திப் புறத்தோற்றம் கொடுத்து கட்புலனுக்குள் அடங்கச் செய்யும் முயற்சியின் விளைவே நாம் வழிபட நிறுவும் விக்கிரகம் ஆகும்.

உருவமற்ற இறைவன் ஆன்மாக்கள் உய்யவேண்டிய கருணை மேலீட்டால் உருக்கொள்கிறான். அவன் பல நிலைகளை மேற்கொண்டு அருள் பாலித்ததினால் உருவங்கள் பல திறத்தன. இந்திரியங்களாற் கிரகிக்க முடியாத இறைவனையறிய வகையறியாது தடுமாறும் தரங்குறைந்தவர்களுள் விவேகமும் பக்குவமும் மிக்கவர்களுக்கு உரியது சிவலிங்கத் திருமேனியாகும். இதைக் கிரகித்து உணரமாட்டாதோருக்கே கை கால் முதலிய உறுப்புக்களை பொருந்தி நிற்கும் இதர தோற்றங்கள் ஆகும்.

லிங்கம் என்பதற்குரிய பொருளைக் காரணாகமம், கிரணாகமம், சுப்ரபேதம், வாதுளம், காமிகம் முதலிய ஆகமங்கள் அழகாகவும் தெளிவாகவும் கூறுகின்றன. "எந்த இடத்தில் பிரளய காலத்தில் சேதன, அசேதன பிரபஞ்சங்கள் அனைத்தும் லயம் அடைந்ததும் பின் படைப்புக் காலத்தில் எதிலிருந்து உற்பத்தியாகின்றனவோ அதுவே லிங்கம் என்பது "லிங்" என்பது லயத்தையும் (ஒடுக்குதலையும்) "கம்" என்பது தோற்றத்தையும் குறிக்கும் என்றும் சிவபெருமான் படைப்பு முதலான ஐந்தொழில்களாலும் பிரபஞ்சத்தைச் சித்தரிக்கின்றதால் சிவலிங்கம் எனப் பெயர் பெற்றது" என்று "வருணபத்ததி" எனும் நூல் விளக்கம் தருகின்றது.

சிவபெருமானுக்கு மூன்று விதத் திருமேனிகள் உண்டு.

1. அருவத்திருமேனி (இது வடிவமில்லாததால் குறிப்பிட்ட வடிவத்தால் சுட்டிக்காட்ட முடியாது)
2. உருவத்திருமேனி (இது வடிவம் கொண்டு விளங்குவது, சோமஸ்கந்த வடிவம் முதலியன அடங்கும்)
3. அருவுருவத் திருமேனி (இதுவே சதாசிவ வடிவம் ஆலயத்திலுள்ள சிவலிங்கம் சிவபெருமானின் திருமெனியையே இது குறிக்கும்)

ஓர் வடிவம் கொண்டு விளங்கியதால் உருவம் என்றும், இன்ன வடிவம் என்று குறிப்பிட்டுக் கூறமுடியாததால் அருவம் என்றும் லிங்கவடிவத்தை அவ்வுருவம் என்றும் உருவத்திருமேனி முதலான மூன்றும் நிஷ்களம், சகளம், சகளநிஷ்களம் என ஆகமங்களில் குறிக்கப்பட்டுள்ளன. இவற்றையே சில ஆகமங்கள் தத்துவம், மூர்த்தி, பிரபாவம் என வேறு விதமாக குறிப்பிடுகின்றன.

அவ்யத்தலிங்கம், வ்யக்தலிங்கம், வ்யக்தாவ்க்தலிங்கம் என சிவலிங்கம் மூன்று வகைப்படும். இவற்றுள் அவ்யத்தலிங்கம் என்பது நிஷ்களலிங்கம் தத்துவங்களுக்கெல்லாம் அப்பாற்பட்டு விளங்கும் சிவபெருமானே அவ்யத்தவடிவில் உள்ளார். இரண்டாவது வ்யக்தலிங்கம் மகேஸ்வரரிடமிருந்து தோன்றிய இருபத்தைந்து வடிவங்களும் ஆகும். வ்யக்தம் என்பது கை, கால், முகம் முதலான அங்கங்களெல்லாம் வெளிப்பட்டு விளங்குதல் ஆகும். வ்யக்தாவ்யக்தலிங்கம் என்பது அருவுருவத்திருமேனியாகிய சிவலிங்கமாகும். வ்யக்தாயத்தமான சிவலிங்கம் சுயம்பு, தைலகம், திவ்யம், ஆரூடம், மானுடம், ராஸசம், பானம் எனப் பலவகைப்படும். சுயம்பு லிங்கம் என்பது தானாகத் தோன்றியதாகும். பூமியைத் தாங்கிக்

கொண்டிருக்கும் ஆதிசேடனின் அளவற்ற சிரசுகள் ஒருமுறை அசைந்ததால் காலாக்னிருத்திரருடைய கோபாக்கினியிலிருந்து மூன்று தீப்பொறிகள் உண்டாயின. அந்தத் தீப்பொறிகளே சிவலிங்கங்களாக மாறின. இவை நிர்மூல, சமூலம் பார்த்திவம் என மூன்று வகைப்படும். நீர்மூல சுயம்பு லிங்கம் நீருக்குள் இருப்பது. சமூல சுயம்பு லிங்கம் மலையிலிருப்பது பார்திவ சுயம்பு லிங்கம் மண்ணுக்குள் இருப்பதாகுமென இவ்வாறு சுயம்பு லிங்கம் பற்றிக் காமிகாமம் கூறுகிறது. பாரமேசுவராகமம் இன்னொரு வகையில் சுயம்பு லிங்கம் பற்றிக் கூறுகிறது.

கூத்தப் பெருமான் தமது ஜடாபாரம் அவிழ்ந்து அலைய பெருங்கூத்து நிகழ்த்திய போது ஜடாமகுடத்திலிருந்து திவ்விய கங்கையின் நீர்த்துளிகள் உலகெங்கினும் சிதறின. அவ்வாறு சிதறிய நீர்த்துளிகள் சிறுலிங்கவடிவம் பெற்றன. இவையே சுயம்புலிங்கமாகும். உமாபதிசிவாச்சாரியார் தமது "குஞ்சிதாஸக்ரிஸ்தவம்" எனும் ஸ்தோத்திர நூலிலே இக்கருத்தைக் குறிப்பிடுகின்றார். காரணம், வாதுளம், சூக்குமம், சுப்ரபேதம் எனும் நான்கு ஆகமங்களும் சுயம்புலிங்கத்திற்கு உரியனவாம்.

இதே போல் சைவத்திருக்கோயில் கிரியை நெறியில் பேராசிரியர் கா.கைலாசநாதக்குருக்கள் லிங்கம் உயரிய தத்துவங்கள் பலவற்றை உணர்த்தி நிற்பது. லிங்கம் என்ற சமஸ்கிருத சொல்லிற்கு "அடையாளம்" என்று பொருள். சிவனைக் குறியாக நிறுவப்பட்டதால் இது இலிங்கமாயிற்று உபநிடதங்கள் இறைவன் பெருமையை எடுத்தோதுகின்றன. அவன் மக்களின் அறிவிற்கு எட்டாதவன். இந்திரியங்களுக்கு இவனைக் கிரகிக்குமாற்றலில்லை என்கிறது சுவேஸ்தாஸ்வதர உபநிடதம் கையால் தொடமுடியாதவனை கண்ணால் பார்க்க இயலாதவனை வாழ்த்தி வணங்கும் பொருட்டு நினைக்கும் போதும் அவனை கிரகிக்க முற்படுவோருக்கு இலிங்கம் அவனைக் குறிக்கும் அடையாளமாகும். இலிங்கமானது அவனை உணர்த்துதல் கருவியாக விளங்குகின்றது. இது பற்றியே இதற்கு இலிங்கம் எனப் பெயர் ஏற்பட்டது.

வேதங்கள் யாகத்தில் வளரும் தீயைப் போன்றது. தூய்மை வாய்ந்த தெய்வீகத்தீயை நடுநாயகமாகக் கொண்டு தான் வேதகால வழிபாடு நிகழ்ந்தது. கட்புலனுக்கு அகப்படாத தேவர்கட்கு கட்புலனாகும் அக்னியே பிரதிநிதி. இவ்வக்கினி குளிர்ந்து நெருங்கி இறுகித் திரண்ட உருவங் கொண்டது. பொன்னிறமான தீ குளிர்ந்த நிலையில் கருநிறம் பெறுவது அனைவரும் அறிந்ததே. இவ்வாறு அக்கினி இறுகிய நிலையே லிங்கம். பிரமனும் மாலுவும் அடி முடி தேடும் வண்ணம் இறைவன் ஒளிவீசும் தீப்பிளம்பாய் தோன்றிய நிலையை நினைவூட்டுவதே லிங்கம். தேவரின் வேண்டுதலுக்கு தீப்பிழம்பு வடிவம் நீங்கி இலிங்க வடிவாயினன் என்பன சமய நூல்கள் இலிங்கம் குவிந்த தோற்றம் இவ்வுண்மையைத் தெளிய வைக்கிறது. (பக் 117-118) என்று கூறுகின்றார். இதற்குச் சான்றாக திருமூலரும்,

> பிரமனும் மாலும் பிரானே நான் என்னப்
> பிரமன் மால் தங்கள் தம் பேதமையாலே
> பரமன் அனலாய் பரந்து முன்னிற்க
> அரனடிதேடி அற்றுகின்றாரே

அடுத்து தைவிகலிங்கம் தேவர்களால் பிரதிஷ்டை செய்யப்பட்டது. காமிகம், விஜயம், சுவாயம்புவம், அனலம் எனப்படும் நான்கு ஆகமங்கள் இலிங்கத்திற்குரிய திவ்யலிங்கம் என்பது தேவ இருடிகளால் ஸ்தாபிக்கபட்ட சிவலிங்கமாகும். இந்தியம், ஸஉறஸ்ரம், தீப்தம், அஜிதம் எனும் நான்கு ஆகமங்களும் இவ்லிங்கத்திற்குரியன.

மானிட இருடிகளால் ஸ்தாபிக்கபட்ட இலிங்கம் மானுடலிங்கம் ஆகும். வீரம், விமலம், சந்திரஞானம், பிம்பம் எனும் ஆகமங்கள் இவ்லிங்கத்திற்குரியன. ராட்சஸர்களால் ஸ்தாபிக்கப்பட்ட இலிங்கம் ராட்சஸலிங்கத்திற்கு புரோகிதம், லலிதம், லலித்தம், ஸந்தானம் ஆகிய ஆகமங்கள் இதற்குரியனவாகும். பானன் எனும் அசுரனால் பூஜை செய்யபப்பட்டு ஸ்ரீசைலம் நீலகண்டம் நேபாளம் முதலிய பல இடங்களிலும் காணப்படும் லிங்கம் பானலிங்கமாகும். இவ்லிங்கம் பற்றி தனி ஆய்வே மேற்கொள்ளலாம். பரமேஸ்வரன், சர்வோக்தம், அம்சுமான், கிறனம் ஆகிய ஆகமங்கள் இவ்லிங்கத்திற்குரியனவாம். இவற்றைவிட ரத்தினம், உலோபம், சளிகம் எனும் லிங்க வகைகளும் உண்டு. இவற்றை இடம் விட்டு இடம் மாற்றுவதால் சலலிங்கம், (சலம்-அசைவது) எனக் கூறுவர். சுயம்புலிங்கம் அசலம் எனப்படும். (அசலம்-அசையாதது)

பாணலிங்கம், சலலிங்கமே. இவற்றைத்தவிர ஏகாசிலிங்கம் விவயகிரலிங்கம் எனவும் உண்டு. இவற்றைப் பற்றி கிரணாகம் கூறுகிறது. (அசிரம்கோணம்)

வழிபாட்டின் பயனாகக் கிடைக்கக்கூடிய பேறுகள் பலவாக இருந்ததால் சிவலிங்க பேதங்களும் மிகப் பலவாகக் காணப்படுகின்றது. இவ்விதமான இலிங்கத்தை வழிபடுவதால் இன்ன பலன் என்பது போன்ற விபரங்களை எல்லாம் ஆகமங்கள் விரிவாக எடுத்துக் கூறுகின்றன. முகலிங்கம் என்று ஒருவகையுண்டு. சிவலிங்கப்பகுதியில் ஒன்று முதல் ஐந்து வரை முகங்கள் அமைக்கப்பட்டிருப்பது முகலிங்கம் எனப்படும். லிங்கத்தின் உச்சிப்பகுதி எந்த வடிவத்தில் உள்ளதோ அந்த வடிவத்தையொட்டி ஆட்யம், ஆனாட்யம், சுரெட்யம், ஸர்வசமம் எனப்படும். இவற்றுள் ஸர்வசமம் எனும் லிங்கத்தில் மட்டுமே முகலிங்கம் அமைக்கலாம். ஏனைய மூன்றிலும் அமைக்கலாகாது.

இவ்வாறாக சிவலிங்கம் சைவவழிபாட்டில் முக்கிய இடம் வகிக்கிறது. இத்தகைய சிவலிங்க வகைகளை "அடிமுடி தேடல்" (2ம் தந்) "இலிங்கபுராணம்" (2ம்தந்) "அண்டலிங்கம்" "ஆத்மலிங்கம்" "சதாசிவலிங்கம்" "சிவலிங்கம்" "பிண்டலிங்கம்" (7ம் தந்) எனும் பகுதிகளில் மிகத் தெளிவாகத் தருகிறார். சைவசித்தாந்தம் கூறும் நவபேதமும் இவ்லிங்கத்தினுள்ளேயே அடங்கியுள்ளது. என்பதற்கும். இவ்வாய்வின் முக்கிய நோக்கமாகிய சிவாகமங்களில் கூறப்படும் சிவலிங்கத்தில் செய்யப்படும் நவகண்ட ஸ்பர்சாகுதி பற்றிய சிந்தனைக்கும் சான்றாக திருமூலரின் திருமந்திர பாடல் ஓர் உயர் வழிகாட்டியாக அமைகிறது.

மலர்ந்த வயன்மால் உருத்திரன் மகேசன்
பலந்தரும் ஐம்முகன் பரவிந்து நாதம்
நலந்தருஞ் சக்தி சிவன் வடிவாகிப்
பலந்தரு லிங்கம் பராநந்தியாமே

மாலின் கொப்புழில் தோன்றிய அயனும் அம்மாலாகிய அரியும் அரனும் ஆண்டானும் பயனுருவும் அருளாகிய ஐம்முகனும் மேலாம் விந்து நாதங்களும், நன்மையுறும் சக்தி சிவன் வடிவங்களும் நிறைந்த குறைவிலா இன்பப்பயனுக்கு வாயிலாகிய பாடிப்பரவிப் பணியும் பணியாம் நற்றவத்தைத் தந்தருளும் நந்தியைப் பெருமானே சிவலிங்கமுமாவான் எனக் கூறுவதன் மூலம் இவ்வாய்விற்கு ஓர் சான்றாக அமைகிறது.

பாரத நாட்டிலும் இலங்கையிலும் சரி சிவனுக்கென கோயில் அமைக்குமிடமெல்லாம் வழிபடுவதற்கு இலிங்கத்தையே முக்கிய விக்கிரமாகக் கொள்ளப்படுகிறது. இந்தியாவில் தெற்கே கன்னியாகுமரி முதல் வடக்கே காஷ்மீர் வரை லிங்க வழிபாடு ஒரே மாதிரியாகப் பரவியுள்ளது. வடக்கே வழிபடும் இடங்களெல்லாம் சைவர்கள் சிவலிங்கத்தை மட்டுமே நிறுவி வழிபடுவர் தென்நாட்டில் சிவனுடைய மூர்த்தி பேதங்கள் நிறுவி வழிபடுதல் நிகழ்வதாயினும் இவ்வழிபாட்டில் இலிங்கத்திற்கே முக்கியத்துவமுண்டு. கோயிற் கருவறையில் நிறுவப்படுவது சிவலிங்கமேயாகும்.

இவ்வாறாக சிவலிங்கத்தில் சிவன் சாந்நித்தியமாக உறைகின்றான் என்கின்ற நம்பிக்கை பாவனா முறையாக வழிபடுவதே சைவவழிபாட்டின் உயர் நோக்கம். சண்டிசராற் சிவலிங்கமாகப் பாவிக்கப்ட்ட மணற்குவியல் பேரருள் சுரந்தமை பாவனையின் ஆற்றலை வெளிப்படுத்துகின்றது பாவனையின் ஆற்றலை உமாபதிசிவாச்சாரியார்,

விட நகுல மேவினும் மெய்ப்பாவிகளின் மீறும்
கடலிருள் போதிவண்கன் எனக் குறிப்பிடுகின்றார். திருமூலரும்,
உறுவ(து) அறிதண்டி ஒண்மணற் கூட்டி
அறுவகை ஆள் ஐந்தும் ஆட்டத்தன் தாதை
செறுவகை செய்து சிதைப்படுமுனிந்து
மறுமழு வால்வெட்டி மாலைபெற்றேனே

இவ்வகையாக இறைவனின் அருள்வேண்டித் திருக்கோயில் கருவறையில் அன்பர்களால் வணக்கம் பெறும் சிவலிங்க வடிவத்தில் சதாசிவ வடிவத்தைப் பாவித்து வழிபடவேண்டும். சதாசிவவடிவம் என்பது

ஞானமயமான திருமேனியைக் குறிக்கும். நினைப்பாற்றல் (சங்கல்பம்) ஒன்றினாலேயே இறைவன் காரியங்களை நிகழ்த்துகிறான் என்பது உண்மையேயெனினும் அவ்வாறு நினைப்பதற்கு பரம்பொருள் ஒரு வடிவம் தாங்கியே ஆகவேண்டும். அவ்வடிவம் நம்முடைய தேகம் போன்று அசுத்தமாயையின் தொடர்பில்லாமல் மந்திரங்களால் ஆனதூயமேனியாக இருக்கும். இந்தத் திருமேனியையே வித்யாதேகம் என காமிகாகமும் (3.426) சப்தபிரம்மரூபம் என்று அஜிதாகமமும் (1:13-26) கூறுகின்றன. மிகவும் ஒளி பொருந்திய மந்திரமாயமான சதாசிவம் எனப்படும் சதாசிவப்பெருமானின் வடிவத்தை காமிகாகமம் (3:32-334) கூறுகின்றது. இக்கருத்தினை திருமூலரும் (திருமந்திரம் 7ம் தந் 1700) கூறுகின்றார். சதாசிவர் ஐந்து திருமுகங்களும் பத்துத் திருக்கரங்களும் உடையவர். ஒவ்வொரு முகத்திலும் மூன்று திருக்கண்கள், வலக்கரங்களில் சூலம், வஜ்ரம், கத்தி, பரசு, அபயமுத்திரை என்பவற்றையும் இடக்கரங்களில் நாகம், பாசம், மணி, அக்கினி, அங்குசம் என்பவற்றையும் தாங்கியிருப்பர். பாம்பினைப் பூணூலாக அணிந்திருப்பர். மூன்றாம்பிறைச் சந்திரனால் அலங்கரிக்கப்பட்ட ஜடாமகுடம் உடையவர். சாந்தமான தோற்றம் உடையவர். திருமூலரும்,

அஞ்சுமுகமும் ஐம்மூன்று கண்ணுள
அஞ்சினொடஞ்சு கரத லந்தானுள
அஞ்சுடன் அஞ்சாயுதமுள ஓம்பியென்
நெஞ்சு புகுந்து நிறைந்து நின்றானே' '

இவ்வாறாக பரிபூரணமாக அமைந்த சதாசிவப் பெருமானின் திருவுருவம் நம்முடைய சரீரம் போன்றது எனக் கருதல் கூடாது. கண்ணாடியில் பிரதிவிம்பம் போன்றும் ஆகாயத்தில் இந்திரவில் போன்றும் ,ஈஸ்வரசரீரம் உள்ளது என அப்பையதீட்சிதர் அவர்கள் "சிவார்ச்சனா சந்திரிகை" எனும் நூலில் கூறுகின்றார். இவ்வாறாக மந்திரமயமான சரீரம் தாங்கி இறைவன் அருளாவிட்டால் தியானம் பூஜா முதலியன நடைபெற வழியில்லை. நாதங்களின் உற்பத்திக்குக் காரணமாக இருக்கும் கழுத்து முதலான தானங்களுக்கும் இடமில்லாமற் போகும். உயிர்க் கூட்டங்களுக்கு அருள் புரிவதற்காகவே வடிவில்லாத பரம்பொருள் வடிவு கொள்ள முந்துகிறது என கிரணாகமம் கூறும். இதுதுணைச் சிறப்பு வாய்ந்த சிவலிங்க பூஜா பலனை காமிகாகமம் சிறப்பாக கூறுகின்றது. சிவலிங்க வழிபாடு செய்வதால் ஏற்படும் பலன்களாவது அக்னிபூஜை, வேதங்கள் மிகுந்த தட்ஷிணையுள்ள யாகங்கள் இவையெல்லாவற்றையும் விட கோடிமடங்கு உயர்ந்ததாகும். ஒரு மடங்கு கூட சிவலிங்கபூஜைக்கு சமமாகமாட்டாது. இவ்வாறான சிவலிங்கப் பூஜையை ஜனமடைந்த ஆன்மா த்ரோகியால் பூஜிக்கப்படவில்லையோ அப்படிப்பட்டவன் வெகுகாலம் வரை துக்கக் கடலாகிய சம்மாரத்தில் சஞ்சரிக்கிறான். சிவபூஜையால் சிவபிரானை பூஜிக்காமல் புசிப்பதற்கு துணிவிரனாதல் வேண்டும் என்கிறது.

இவ்வாறான எங்கும் வியாப்பித்திருக்கும் இறைவனை திருக்கோவிலில் ஸ்தாபிக்கப்படும் சிவலிங்கம் அல்லது மூர்த்தி பேதங்களில் சாந்நித்தியம் பெறச் செய்தலே கிரியை பல நிறைந்த கும்பாபிஷேகம் ஆகும்.

ஆகமம் கூறும் கிரியை மரபுகள்

இந்துக்கிரியை மரபின் சிறப்பினை அறிய உதவுவன வேதசிவாகம இலக்கியங்களே ஆகும். வேதங்களும், ஆகமங்களும். சமயம், தத்துவம், கலை ஆகிய மூன்று அம்சங்களையும் இணைக்கும் சாதனங்களாக விளங்குகின்றன. சைவ வழிபாட்டின் மரபின் வளர்ச்சிக்கு இவற்றின் பங்கு அளப்பரியதாகும். வேதநெறி தழைத்து ஓங்கவும் மிகுசைவத்துறை விளங்கவும் இவ்விரு முதல் நூல்களும் விளங்குகின்றன. சமயத்தைப் பின்பற்றுகின்ற ஒருவன் சாதனையில் ஈடுபட வழிவகுப்பன கிரியை ஆகும். சிவாகமங்கள் கூறும் சரியை, கிரியை, யோகம், ஞானம் ஆகிய நான்கு பாதங்களைக் கடைப்பிடிக்க உதவுவன ஆலயங்களாகும். இவை நான்கும் ஒன்றினை ஒன்று தழுவி நிற்பன. இவற்றுள் கிரியையை நோக்கின் ஆலயத்தில் பூஜை என்ற பதத்திற்குள் அடங்குகின்றது.

பூஜை என்பதன் அர்த்தத்தில் நமஸ்யை, சுபசிறி, ஸபர்யை, தர்ஜனை, அர்ச்னை, வரிவஸ்யை, அர்சனை, பரிபர்யை, உபாசனை என்பவைகள் ஒத்த சொற்களாக அமரகோசம் கூறுகின்றது. எல்லாக் கர்மாக்களையும் நிறைவுறும்படி செய்வதாலும் உபாசகனுக்கு ஒத்த ஞானத்தை கொடுப்பதாலும் பூஜை

எனப் பெயர் பெற்றது. இதைத்தான் மெய்கண்ட சாஸ்திரங்கள் "கிரியை என மருவும் அவையாவும் ஞானம் கிடைத்தற்கு நிமித்தம்" என்கின்றன. அன்றியும் "புண்ணியமானதும் நன்மையளிப்பதும் பாவத்தை அழிப்பதும் மகாபாதங்களை தீர்க்க நீக்கவல்லதும் எல்லாவகை வேள்விகளின் பயன்களையும் அளிப்பதே நித்தியார்ச்சனம்" என்று பூர்வகாரணாகமம் கூறுகின்றது. இத்தகைய பெருமையுடைய பூஜை ஆகம முறைப்படி ஆத்மார்த்தம், பரமார்த்தம் என இருவகையாக பகுக்கப்பட்டுள்ளது. தனக்கு தன்னைச் சார்ந்தவருக்கும் நன்மையளிக்கும்படி வீட்டில் செய்யும் பூஜை ஆர்த்தமார்த்தமாகும். குருவால் அளிக்கப்படா லிங்கத்திலே, ஸ்தண்டிலத்திலோ தனதான்மாவிலோ சோமயம் முதலான 'ஷணிக லிங்கங்களிலோ, மண்டபத்திலோ, ஜலத்திலோ ஆத்மார்த்த பூஜை செய்யலாமென காரணம், காமிகம் கூறுவன. கிராமத்திலோ, நகரங்களிலோ உள்ளவர்களின் நலன் கருதி தேவர், முனிவர், மனிதர் ஆகியோர்களால் பிரதிஷ்டிக்கப்பட்ட லிங்கங்களிலோ அல்லது சுயம்புலிங்கங்களிலோ, ஈஸ்வர அகழ்மூர்த்திகளிலோ ஆலயங்களில் செய்யப்படும் பூஜை பரார்த்தம் எனப்படும். இது எல்லோருக்கும் நன்மையளிப்பது மட்டுமன்றி செய்பவனுக்கும் நன்மையாயிருக்கும்.

ஆத்மார்த்த பூஜைக்கு எல்லோரும் அதிகாரிகள், பரார்த்த பூஜைக்கு "சிவதிவிஜகர்கள்" தாம் அதிகாரிகள் என்பது ஆகமங்களின் அபிப்பிராயம். மேலும் ஆத்மார்த்த பூஜையில் துவாரபூஜை, சண்டேசருக்கு நிவேதனம், ஆமந்தரணஹவிர்நிவேதனம், நித்யோற்சவம் பெரிய மணியடிப்பது, திரைபோடுவது சுத்த நிருத்தம் என்பன கிடையாது. பொதுவாக பரார்த்த ஆலயங்களின் ஒரு ஆவரணம் முதல் ஐந்து ஆபரணம் வரை உண்டு அஷ்ட, சோடச, த்வாத்ரிம்சத், (32) பரிவாரங்கள், அங்கலிங்கங்கள், கௌரியாலயம் பக்தாலயங்களோடு அமைந்திருப்பது வழக்கமாகும். இத்தகைய பரார்த்த ஆலயங்களில் செய்யப்படும் கிரியைகள் ஆகமங்கள் கர்ஷணம், பிரதிஷ்டை, உற்சவம், பிராயசித்தம் என வகுத்துள்ளன.

இவற்றை மேலும் கர்ஷணாதி பிரதிஷ்டாந்தம், பிரதிஷ்டாதி, உற்சவாந்தம், உற்சவாதி, பிராயசித்தாந்தம் என மூவகையாக கூறுவதுடன் இவையனைத்தையும் ஒன்றாக இணைத்து "காஷ்ணாதி பிராயசித்தாந்தம்" எனக்கூறும் மரபினை ஆகமங்களில் காணலாம். ஆகமங்கள் கூறும் முறைப்படி ஆலயம் உருவாவதற்குத் தகுந்த நிலத்தைத் தேர்ந்தெடுத்தல் அதனை எவ்விதம் புனிதப்படுத்தி ஆலயம் ஒன்றை உருவாக்கும் ஆரம்ப நிலைவரையுள்ள பகுதிகள் கர்ஷணம் எனப்படும்.

இதன் பின் முறைப்படி உருவாக்கப்பட்ட ஆலயத்திற்கு கும்பாபிஷேகம் எனப்படும் குடமுழுக்கு விழா நிகழ்த்தினால் தான் இறைவனின் சாந்நித்யம் (திருத்தோற்றம்) என்பது நிறைவாக இருக்கும் என ஆகமங்கள் கூறுகின்றன. நான்கு விதமான கும்பாபிஷேகம் பற்றி எல்லா ஆகமங்களும் அதன் வழிவந்த பத்ததிகளும் இயம்புவன.

1. அனாவர்த்தனம் - கோயிலே இல்லாமலிருந்து புதிதாகக் கோயில் கட்டி குடமுழுக்கு நிகழ்த்தினால் அது அனாவர்த்தனம் ஆகும்.
2. ஆவர்த்தனம் - வெகுகாலத்திற்கு முன்னர் கோயில் கட்டப்பட்டு பூஜையில்லாமலும் இடிந்து சீர்குலைந்து இருந்தால் அதனைச் சீர்திருத்தி தூய்மை செய்து கும்பாபிஷேகம் நிகழ்த்துதல் ஆவர்த்தனம் ஆகும்.
3. புனராவர்த்தனம் - கர்ப்பக்கிரகம் விமானம் பிரகாரம் கோபுரம் பலிபீடம் கொடிமரம் தெய்வபடிமங்கள் ஆகிய இவற்றில் சேதம் ஏற்படின் விமானங்கள் வண்ணம் அழிந்திருந்தாலும் முன்னர் சாத்தப்பட்ட அஷ்ட பந்தனம் சிதைந்திருந்தாலும் பாலாலயம் செய்து எல்லாவற்றையும் சரிப்படுத்திக் கும்பரிபஷேகம் செய்வது புனராவர்த்தனம் ஆகும்.

அந்தரீதம்

கர்ப்பக்கிரகம் முதல் மர்யாதா எனப்படும் பிரகாரம் வரை உள்ள இடத்தில் எதிர்பாராத விதமாக மரணம் ஏற்பட்டாலும் தீட்டு முதலிய தோஷம் உடையோர் கொடிமரம் தாண்டி பிரவேசித்தாலும் நாய், கழுதை, பன்றி உள்ளே நுழைந்தாலும், தீபங்களில் வீழ்ந்து விட்டில் பூச்சி, ஈ, எறும்பு முதலிய மரணமடைந்தாலும் பிராயசித்தம் செய்து சாந்தி செய்வது அந்தரீதம் எனப்படும். எவ்வாறாயினும் பிரதிஷ்டை என்பது முதல் சொன்ன மூன்றுமே என்பதும் அந்தரீகம் எனும் பிராயசித்தம் பல வகைப்பட்டன. என வாமதேவபத்ததி குறிப்பிடுகின்றது.

அனாவர்த்தன பிரதிஷ்டைக்குரிய அம்சங்கள் என அவை முகூர்த்த நிர்ணயம், சல்யஉத்தாரணம், த்ரவ்யலிபாகம், கர்ப்பநியாசம், கணேச பூஜை, கிராமசாந்தி, பிரவேசபலி, ரட்சோக்ணஹோமம், திசாஹோமம், சாந்திஹோமம், மூர்த்திஹோமம், வாஸ்துசாந்தி, நவக்கிரகஹோமம், மிருத்சங்கிரிஹணம், அங்குரார்ப்பணம், ரட்சாபந்தனம், ஜலாதிவாசம், தான்யவாசம், நயனோன்மீலனம், கிராமபிரதட்சிணம், சயரோஹணம், அக்னிகார்யம், நாமகரணம், பிம்பசாந்தி, பிம்பபிரதட்ஷிணம், பிம்பஸ்தாபனம், அஷ்டபந்தனம், சடத்துவநியாசம், சாங்கோபாங்கபிராயங்கநியாசம், யாகமுடிவில் ஸ்பரிசாகுதி, யாத்ராதானம், கும்பஉத்தாபனம், ஸ்தூபிஸ்தாபனம், துவாரம், மண்டபம், பிரகாரம், துவஜம், பலிபீடம் முதலியவற்றின் ஸ்தாபனம், இலிங்கத்திற்கு நவதனுகல்பனம், சகளீகரம், ஆவாஹனம், கும்பாபிஷேகம், ஆசிர்வாதம், ரட்சாவிஜர்சனம், அவபிருதம், ஆசார்யோற்சவம், மண்டலபூஜை, மண்டலபூஜோதிஸவம், மண்டல பூர்த்தி என்பனவாகும். ஆவர்த்தன பிரதிஷ்டைக்கு சல்யோத்தாரணம், ஜலாதிவாசம், தான்யாதிவாகம், நயனோன்மீலனம், புரபிரதட்ஷணம், சயனாரோஹணம், நாமகரணம் ஆகிய கிரியைகள் கிடையாது. புனராராவர்த்தன பிரதிஷ்டைக்கு ஆவர்த்தன பிரதிஷ்டை போன்றே கிரியைகள் உண்டு. இதில் சாங்கோபாங்க பிரத்யங்கம் எனப்படும் மூவகை அனுக்ஞை உண்டு. அனுக்ஞை என்பது கிரியைகளை ஆற்றமுன்பு இறைவனிடம் அனுமதி பெறலாம். ஒன்று சாங்கம் மற்றத உபாங்கம், சிவனிடமும் உமையிடமும் அனுமதி பெறல் சாங்கம் ஆகும். உபாங்கத்தில்

கணேசன் சிவனாரின் வலக்கண்
முருகன் சிவனாரின் இடக்கண்
நந்தி சிவனாரின் மூக்கு
சண்டேஸ்வரர் சிவனாரின் காது

எனவே இம்மூர்த்திகளிடம் அனுமதி பெறல் உபாங்கமாகும். இதில் (ஆவர்த்தனம், புனராவர்த்தனம்) பிரதிஷ்டைகளில் ஏற்கனவே தாபனமாகிய மூர்த்தியிருந்தே செய்ய வேண்டும். இதை விடுத்து ஏனைய மூர்த்திகளிடம் செய்யலாகாது என்பது ஆகமவிதியாகும்.

எவ்வெவ்சமயங்களில் எவ்வெவ்வாறு பிராயசித்த வடிவமாக பிரதிஷ்டை நடைபெறவேண்டுமோ அவற்றை உரியவாறு நிகழ்த்துதல் அந்தரீகம் ஆகும். இதற்கு சுபமுகூர்த்தம் கிடையாது. முதற் கூறிய மூன்று பிரதிஷ்டைகளுக்கும் சுபமுகூர்த்தம் பார்க்கப்படல் வேண்டும். அவ்வாறே கலாகர்ஷணம் எனும் கிரியை முதன் மூன்று பிரதிஷ்டைகளிலும் நிகழல் வேண்டும். கலாகர்ஷனம் என்பது பூஜிக்கப்பட்ட லிங்கத்திலிருந்து இறைசக்தியை கும்பத்தில் ஆவாகித்தலாகும். உலக நன்மைக்காக செய்யப்படும் கும்பாபிஷேகத்தின் பொருட்டு பிம்பத்திலிருந்து கும்பத்திற்கு எழுந்தருளுமாறு குருவானவர் இறைவனை வேண்டி செய்வதே கலாகர்ஷணம் ஆகும். மீண்டும் கருவறையில் பிரதிஷ்டை காலங்களில் பிம்பஸ்தாபனம் செய்து இறைவனிடம் அங்க சக்திகளான சகளஷடத்துவ வியாசம் செய்து இறை சாந்நித்தியம் லிங்கத்தில் அல்லது பிம்பங்களில் சூர்யர்சந்திரர் இவ்வுலகில் நிலவும் வரை எழுந்தருள வேண்டும் என பிரார்த்தித்து செய்யப்படுவதே ஸ்பர்சாகுதி எனும் கிரியை ஆகும். இது திரிகண்ட ஸ்பர்சாகுதி (ஆன்மா, வித்யா, சிவ) எனவும் நவகண்ட ஸ்பர்சாகுதி என இரண்டு விதமாகக் கூறப்படுகிறது. இவ்வாறு பிரதிஷ்டை நிகழ்ந்தபின் ஆலயங்களில் நித்தியபூஜை நிகழும். இதுவும் நித்யம், நைமித்திகம், காமிகம் என விரிவடைந்து நிற்பதைக் காணலாம். இவ்வாறாக இந்துப் பண்பாட்டின் நிலைக்களனாக விளங்கும் ஆலயங்களும் அவற்றோடு தொடர்புடைய திருவுருவ வழிபாடு, கிரியை வழிபாடு என்பவற்றை ஓர் முறையில் சிவாகமங்கள் கூறி நிற்கின்றன.

ஞாலம் ஏழுமாம் ஆலவாயிலார்
சீலமே சொலீர் காலன் வீடவே -சம்பந்தர்

நித்திய பூசையும் அதன் தத்துவமும்

ஸாஹித்ய சிரோமணி, வித்யா கல்பநிதி,
சிவஸ்ரீ மு.பரமசாமிக்குரு முத்துக்குமார சாமிக்குருக்கள்.
நயினை ஸ்ரீ நாகபூசணி அம்மன் தேவஸ்தானம்

முற்பிறப்பில் செய்த புண்ணியம் மேலீட்டால் கிடைத்தற்கரிய மானிட சென்மத்தை எடுத்த நாம், செய்யும் வழிபாடானது ஆன்மார்த்த பூஜை, பரார்த்த பூஜை என இரு வகைப்படும்.

சிவாச்சாரியரால் தீக்ஷையின் போது கொடுக்கப்பட்ட இஷ்டலிங்கத்தை வாங்கிப் பூசிப்பது ஆன்மார்த்த பூஜையாகும். சகல ஜீவராசிகட்கும் அனுக்ரஹஞ் செய்யும் பரம் பொருளின் கிருபாநோக்கத்தைப் பெறும் பொருட்டுத் திருக்கோயில்களில் விக்கிரகங்களைப் பிரதிஷ்டை செய்து பூசிப்பது பரார்த்த பூஜையாகும்.

ஆன்மார்த்த பரார்த்த பூஜைகளின் வாயிலாகச் சிவபெருமானையும் அகிலலோக ஜனனியாகிய பராசக்தியையும் உபாசிக்கும் கிரமங்களை அறிவுறுத்துவன முதனூல்களாகிய சிவாகமங்கள் ஆகும்.

சிவாகமங்களால் ஆலயங்களில் விதிக்கப்படும் பூஜைகள், நித்தியம், நைமித்தியம், காமியம் என மூன்று வகையின. தினந்தோறும். செய்யப்படும் பூஜை நித்தியம். உற்சவம், பிரதிஷ்டை முதலியன நைமித்தியம். உலகப்பேற்றினை அவாவிச் செய்யப்படும் கிரியை அல்லது வழிபாடு காமியமாகும்.

எல்லாக் காரியங்களையும் நிறைவு படுத்துவதாலும் ஆன்ம ஞானத்தை உண்டு பண்ணுவதாலும் வழிபாடு பூஜை எனப் பெயர் பெற்றது. மனத்தில் பாவனைகளும், அதற்கேற்ப வாக்கில் மந்திரங்களும், உடம்பில் அதற்குரிய செயல்களும் ஒன்றுபட்டிருக்கும் நிலையே பூஜை அல்லது வழிபாடாகும். காரணாகமம் பூஜை என்பதற்கு விளக்கம் கூறுகிறது.

பூர்யந்தம் ஸர்வகர்மானி ஜாயதே ஞான மாத்வமனி
பூரணாத் ஞானதாத் யஸ்மாத் பூஜா சப்தமி ஹோச்யதே!!

எவ்வெவற்றால் எல்லாச் செயல்களிலும் நிறைவும், தன்னிடத்தில் தூய அறிவும் ஞானமும் உண்டாகிறதோ அதுவே பூஜை ஆகும். "பூ என்பது நிறைவையும் ஜா என்பது ஞான வளர்ச்சியையும், பூஜை என்ற சொல் குறிப்பிட்டுச் சொல்லுகிறது" எனக் காரணாகமம் நவில்கிறது. சைவஞ்சிவனுடன் சம்பந்தமாவது என்பது திருமூலர் திருமந்திரம். திருக்கோயிலில் செய்யப்படும் செயல்கள் யாவும் சிவசம்பந்தமுள்ளனவாகும். மந்திரம், கிரியை, பாவனை இம்மூன்றும் சைவ சித்தாந்த தத்துவப் பொருள் பொதிந்து விளங்குகின்றன.

பாவனை என்பது சிவசம்பந்தமான எண்ணங்கள் மந்திரம் இந்த எண்ணங்களைக் கொண்ட சொற்களாகும். மனனம் + திராணம் என்ற இரண்டு சொற்களின் சேர்க்கையால் மந்திரம் என்ற சொல் அமைகின்றது. மனனம் என்பது எல்லாவற்றையும் அறியும்படி உள்ள நினைவு. இந்த நினைவை ஸம்சார சாகரத்திலிருந்து காப்பதே திராணமாகும் என்று காமிகாகமத்திலே சொல்லப்பட்டிருக்கிறது. எனவே சைவசித்தாந்த சிந்தனைக் கருத்துக்களைப் பாதுகாத்து வரும் மகாவாக்கியங்களே மந்திரங்களாகும்.

மனத்தில் பாவனைகளும், வாக்கில் மந்திரங்களும் எழுகின்றன. மந்திரம் பாவனை இவ்விரண்டினையும் வெளிப்படுத்தும் செயல்களே கிரியைகள் எனப்படுகின்றன. திருக்கோயில்கள் கட்டப்படுவதிலிருந்து பூஜைகள் முடியும் வரை மந்திரமில்லாமற் கிரியைகளில்லை என்பது சிவாகமக்

கருத்து மஹாகும்பாபிஷேகச் சடங்குகளில் சைவசித்தாந்த தத்துவக் கருத்துக்கள் நிரம்பியிருப்பதை நன்கு உணரலாம். உதாரணமாக, ஆகமங்கள், இறைவன் (சிவன்) எல்லாம் வல்லவர், எங்கும் நிறைந்தவர். ஆன்மாக்களுக்கு அருள் புரிவதற்காகவே அவர் மனம் வாக்கிற்கு எட்டாத தமது சொரூப நிலையிலிருந்து அருவம், உருவம், அருவுருவம் என்ற மூன்று நிலைகளில் (தடத்த நிலையில்) வடிவம் கொண்டுள்ளார் என்றெல்லாம் இறைவனைப் பற்றித் தத்துவ உண்மைகள் கூறப்படுகின்றன.

மனம் என்பது கருத்துக்கள் தோன்றுமிடம். இது அரூபமாகும். எனவே பாவனைகள் அரூபமாகும். வாயிலிருந்து உச்சரிக்கப்படும் சொற்களே எழுத்து வடிவமாக ஆவதினால் உருவமும், அரூபமும் கூடிய உருவ அரூவமாகும். இது மந்திரங்களாகும். நம்புறக் கண்களுக்குத் தோன்றும் செயல்கள் உருவங்களாகும். எனவே இறைவனைப் போலவே கிரியைகளுக்குரிய முத்திரைகள், மந்திரங்கள், பாவனைகள், மூன்றும் உருவம், அருவ அரூபம், அருவம் என்று மூன்று வடிவில் அமைந்துள்ளன எனலாம்.

உத்தமோத்தமமாகக் கூறப்படும் எட்டுக் காலப்பூஜை முதல் அதமத்தில் மத்திமமான ஒரு காலப் பூஜை வரையில் பரார்த்தாலயங்களில் செய்யுமுறைகள் ஆகமங்களில் கூறப்பட்டுள்ளன. விடியற் பூஜை முதல் அர்த்தயாமப் பூஜை வரையுள்ள பூஜா காலங்களில், தொடக்கம் முடிவு இவைகளில் சில மாறுதல்கள் காணப்படினும் அபிஷேகம் முதலிய உபசாரங்களில் விஷேட மாறுதல்கள் இல்லை. பொதுவாக உபசாரங்கள் யாவும் பிருதிவி, அப்பு, தேயு, வாயு, ஆகாயம் என்ற ஐந்து பூதங்களில் அடங்கும் எனச் சித்தாந்த சாராவளியால் அறியப்படுகிறது. சந்தனம், கிழங்கு, பழம், வேர், புஷ்பம், அன்னம் இவைகளாற் செய்யப்பெறுவன பார்த்திவ உபசாரம், தீர்த்தம், பால், வேஷ்டி, பட்டு, தயிர், இவைகளாற் செய்யப்பெறுவன அப்பின் உபசாரம் நவரெத்தினம் தீபம் பூஷணம் முதலானவற்றால் செய்யப்பெறுவன. ஆக்னேய உபசாரம் தூபம், சாமரம் இவை வாயவ்ய உபசாரம் மணி, கானம் முதலியன ஆகாய சம்பந்தமான உபசாரம். எனவே இறைவனுக்குச் செய்யப்படும் எல்லா உபசாரங்களும் ஐம்பூத ஆக்கமாம்.

திருச்சிற்றம்பலம்

செய்ய மேனியன் தேனொடு பால் தயிர்
நெய்ய தாடிய நீலக் குடியான்
மையலாய் மறவா மனத்தார்க்கெலாம்.
கையி லாமன கக்கனி யொக்குமே
திருச்சிற்றம்பலம்

தேனும், பாலும், தயிரும், நெய்யும் கொண்டு திருமுழுக்காட்டிய நீலக்குடி அரன்மேல் காதல் கொண்டு மறவாத மனத்தினர்க்கெல்லாம் உள்ளங்கை நெல்லிக்கனி போல் சிவந்த திருமேனியானாய் அப்பெருமான் புறப்பட்டு அருள் புரிவான் என்பது இத்தேவாரத்தின் பொருள்.

“தசாபாரதம் தோயேன் க்ஷீரேண ஆயுஷ்யர்கவர்த்தனம்” அதாவது நீரினால் பத்து அபராதங்களைப் போக்குகிறார். பாலினால் ஆயுளை விருத்தி செய்கிறார் என்று சிவாகமம் கூறுகிறது. இவ்வாறு எல்லா அபிஷேகத்திரவியங்களுக்கும் பயன் காணப்படுகிறது.

அகில், கர்ப்பூரம், புனுகு முதலிய வாசனைத் திரவியங்கள் கலந்து அருட்சத்தியமான சந்தனத்தைச் சாத்துகின்றவர்கள். பிரபஞ்ச வைராக்கியமுடையவர்களாய்ச் சிவலோகத்தைச் சேர்வார்கள். ஒருபோதும் இறைவனுடைய சிரசில் மலர் இல்லாதிருத்தல் கூடாது. வெண்ணிறப்புஷ்பங்கள் சாத்துவிக குணமுடையன. அவைகள் வெள்ளெருக்கு வெள்ளலரி பிச்சி, கொக்கிறகு, மந்தாரை, புன்னை, நந்தியாவர்த்தம், மல்லிகை, முல்லை முதலியவைகளாம். இப்புஷ்பங்கள் கொண்டு சாயரஷை, அர்த்தயாமம் என்னுங் காலங்களில் அருச்சித்தவர்கள் மோஷத்தையடைவார்கள். செந்நிறப் புஷ்பங்கள் இராசதகுணமடையன. அவை செந்தாமரை, செங்கழுநீர், செவ்வலரி, செங்கடம்பு முதலியனவாம். இப்புஷ்பங்கள் கொண்டு இராசத காலமாகிய மத்தியானத்தில் அருச்சித்தவர்கள் போகத்தையடைவார்கள்.

அக்ஷதைசத்துருசயத்தையும், அறுகு சகோதரருக்குச் செய்த குற்றத்தையும், எட்பூ பிரமகத்தி

தோஷத்தையும், கொன்றைப்பூ மாதாவுக்குச் செய்த குற்றத்தையும், வெள்ளெருக்கம்பூ அன்னிய ஸ்திரீகளைச் சேர்ந்த தோஷத்தையும், நீலோத்பலம் வாக்குத் தோஷத்தையும் குங்குமப்பூ நவக்கிரக பீடையையும், வில்வம் பொய் சொன்னபாபத்தையும், கோங்கம்பூ கள்ளுண்டபாபத்தையும் கத்தரி குட்டரோகத்தையும், துளசி வறுமையையும், தும்பைப்பூ ரோகத்தின் தோஷத்தையும் நெய்தலும், நெல்லியும் பலவகைரோகத்தையும் சாந்தி செய்யும் என்று சைவபூஷணம் முதலிய நூல்கள் கூறுகின்றன.

திருச்சிற்றம்பலம்

நொச்சியே வன்னி கொன்றைமதி கூவிளம்
உச்சியே புனைதல் வேடம் விடை யூர்தியான்
கச்சியே கம்பம் மேவிய கறைக் கண்டனை
நச்சியே தொழுகி னும்மேல் வினைநையுமே’ ’
திருச்சிற்றம்பலம்

திருஞானசம்பந்தமூர்த்தி நாயனார்.

மிருதுவாக இழைகளையுடையதும் வெண்மை நிறமுடையதுமாகிய பட்டுவஸ்திரத்தையும், அம்பிகைக்குச் சிவப்புப் பட்டு வஸ்திரத்தையும் அன்புடன் சாத்தியவர்கள் சிவலோகத்தையடைந்து ஒவ்வோரிழைக்கும் ஆயிரம் கற்பகாலம் வாழ்வார்கள். இது திரோதான சத்தி நீங்குதலென்னும் பாவனையாம்.

நறுமலர்களைக் கையில் எடுத்துக் கொண்டு இறைவன் இறைவியின் சிரசில் மும்முறை சாத்துதல் புஷ்பாஞ்சலியாகும். இது ஆன்மா ஆன்ம போதம் நீங்கிச் சிவபோதம் பதியுஞ் சமயத்தில் மனம் வாக்குக் காயத்தால் வந்த பாபமும் ஆகாமியம், சஞ்சிதம், பிராரத்தம் என்னும் வினைகளும் நீங்குதல் என்னும் பாவனையாகும்.

சிவபோகத்தையடைந்த ஆன்மா, மீண்டும் பிரபஞ்சத்தை நோக்காவண்ணம் சிவபோகத்திலே திளைத்து நிற்கும் பாவனையே, மணியடித்துத் தூபம் தீபம் ஆசமனம் அருக்கியங்களைக் கொடுத்து மனோரா முத்திரையுங் காட்டுதலாகும்.

தூபபாத்திரத்தின் முகத்தில் அக்னியும், தண்டத்தில் இறைவனும், பாதத்தில் பிரஜாபதியும் அதிபர்களாக இருக்கிறார்கள். கிரியா சத்தி ரூபமாகிய தூபத்தைச் சன்னிதானத்திலிடுவதனால் ஆன்மாவை மறைத்திருக்கும் ஆணவ மலசத்தியாகிய அறியாமை நீங்கும் என்பது ஆகமங்களிற் கண்ட உண்மை.

சித்சத்தியின் வாசமாய் ஞான விளக்கமாயிருப்பது தீபம். சிவசந்நிதானத்திலே தீபமேற்றி வருபவர்களுக்கு இறைவன் அபமிருத்யு நிவாரணத்தையும் பாப நீக்கத்தையும் அறிவையும் இஷ்ட சித்திகளையும் கொடுத்தருளுவர். அன்ன நிவேதனத்தினால் தான்ய விருத்தியும் சுபீட்சமும் உண்டாகும்.

கற்பூரம் வெண்மை நிறத்தைப் பொருந்தி அக்னி பற்றிய விடத்தே அதன் வடிவமாக விளங்கி, ஓர் பற்றுமில்லாமல் முற்றுங் கெட்டு ஆகாயத்துடன் கலந்து அத்துவிதமாய் விளங்கல் போல், ஆன்மா வெண்மை நிறமான சாத்விக குணத்தைப் பொருந்தி ஞானாக்னி பற்றிய விடத்தே பசுத்தன்மை நீங்கச் சிவத்தன்மை விளங்கப்பெற்று ஸ்தூல சூக்ஷ்ம சரீரங்கள் நீங்க பெற்று எல்லாப் பற்றுங் கழன்று சிவத்தோடு கலந்து அத்துவிதமாய்ப் பேரானந்தப் பெருவாழ்வு அடைதல் வேண்டும் என்னும் குறிப்பை உணர்த்துவதற்காகக் கற்பூர ஆராதனை செய்யப்படுகிறது.

சிவாகமம் கடல் போன்றது இறைவன் வாக்கிற்கும் மனத்திற்கும் எட்டாதவன். இறைவனாலேயே திருவாய் மலர்ந்தருளப்பட்ட சிவாகமங்களிலிருந்து பூஜையின் தத்துவம் என்பது பற்றித்தினையளவு எழுதியதை இறைவன் திருவடியில் சமர்ப்பிக்கின்றேன்.

திருக்கோயிலிழிவு

திருக்கோயில் இழிவு என்பது, திருக்கோயிலுக்குச் செய்யும் இழிவு என்றபடி திருக்கோவிலுக்குச் செய்யும் இழிவால் வரும் கேடு இங்கு கூறப்பெறும்.

தாவரலிங்கம் பறித்தொன்றில் தாபித்தால்
ஆதவன் முன்னே அரசு நிலை கெடுஞ்
சாவதன் முன்னே பெருநோய் அடுத்திடுங்
காவலன் பேர்நந்தி கட்டுரைத் தானே
(திருமந்திரம்)

பொருள :

தாவரலிங்கம் பறித்தொன்றில் தாபித்தால் கோயிலிலுள்ள அருவுருவத் திருமேனியாகிய இலிங்கத்தைப் பிடுங்கி வேறோரிடத்தில் வைத்தால் ஆதவன் முன்னே அரசு நிலைகெடும் - வைப்பதன் முன்னம் ஆட்சி அழியும், சாவதன் முன்னே பெருநோய் அடுத்திடும் - பிடுங்கி வைத்தவன் இறப்பதற்கு முன்னே தொழுநோயால் பீடிக்கப்படுவான். காவலன் பேர்நந்தி கட்டுரைத்தான் இவ்வாறு என்னுயிர்க் காவலனாகிய சிவபெருமான் கூறியருளினார்.

விளக்கம - தாவர இலிங்கம் நிலைபெறுத்தப் பெற்ற நந்தியினது திருவுரு.

கருத்து - பூர்விகமாக அமைக்கப்பட்ட லிங்கத்தை எடுத்து வேறு இடத்தில் அமைக்கலாகாது. அதாவது வேறு இடத்தில் ஸ்தாபிக்கலாகாது.

கட்டுவித் தார்மதிற் கல்லொன்று வாங்கிடில்
வெட்டுவிக் கும்அபி டேகத் தரசரை
முட்டுவிக் கும்முனி வேதிய ராயினும்
வெட்டுவித் மேவிடும் விண்ணவன் ஆணையே
(திருமந்திரம்)

பொருள்:

கட்டுவித்தார் மதில் கல்லொன்று வாங்கிடில் - கட்டுவிக்கப் பெற்ற நிறைந்த மதிலில் ஒரு கல்லைப் பெயர்த்தெடுத்தால், அபிடேகத்தரசரை வெட்டுவிக்கும் - அத்தீமை மகுடாபிஷேகம் செய்விக்கப் பெற்ற மன்னரை வெட்டி வீழ்விக்கச் செய்யும் முனி முட்டுவிக்கும் - முனிவரது தவத்தை முடிவுபெறாமல் செய்யும் வேதியராயினும் வெட்டு வித்தே விடும் - கல்லைப் பெயர்த்தவா் வேதியாராக இருந்தாலும் அவர்களையும் வெட்டி வீழ்த்தும் படி செய்யும், விண்ணவன் ஆணை. இது சிவனது ஆணையாகும்.

கருத்து - திருக்கோவில் மதிலுக்கு ஊறு செய்யலாகாது

ஆற்றரு நோய்மிக் கவனி மழையின்றிப்
போற்றரு மன்னரும் போர்வலி குன்றுவர்
கூற்றுதைத் தான்திருக் கோயில்க ளெல்லாஞ்
சாற்றிய பூசைகள் தப்பிடில் தானே
திருமந்திரம்

பொருள் :

கூற்றுதைத்தான் திருக்கோயில்களெல்லாம் - இயமனை உதைத்தவனாகிய இறைவன் எழுந்தருளியுள்ள கோயில்களில், சாற்றிய பூசைகள் தப்பிடில் - வேதாகமங்களில் விதிக்கப்பெற்ற நித்திய, நைமித்திய வழிபாடுகள் தப்புமாயின், ஆற்றரு நோய் மிக்கு பொறுக்க முடியாத நோய் மிகுந்து, அவனி மழையின்றி பூமியில் மழை குறைந்து, போற்றரும் மன்னரும் போர்வலி குன்றுவர் - போற்றுதற்கு அருமையான அரசரும் போர் செய்யும் திறமையில் குறைவர்.

கருத்து : திருக்கோயில்கள் நித்திய நைமித்திய பூஜைகள் தப்பாமல் நடைபெற வேண்டும்.

முன்னவ னார் கோயில் பூஜைகள் முட்டிடின்
மன்னர்க்குத் தீங்குள வாரி வளங்குன்றுங்
கன்னம் களவு மிகுந்திடுங் காசினி
என்னரு நந்தி எடுத்துரைத்தானே' '
(திருமந்திரம்)

பொருள் :

முன்னவனார் கோயில் பூஜைகள் முட்டிடின் - முதல்வனுடைய திருக்கோயில் பூஜைகள் நடவாது தடைப்படுமாயின், மன்னர்க்குத் தீங்குள - அரசருக்குத் தீமைகள் உளவாம், வாரிவளங்குன்றும் - மழைநீர் வளப்பம் குறையும், காசினி கன்னம் களவும் மிகுந்திடும் - உலகில் கன்னக்கோல் கொண்டு செய்யும் களவு மிகும், என்னருநந்தி எடுதுரைத்தான் - என்று அருமையான நந்தி இறைவன் எடுத்துக் கூறினான்.

கருத்து : நித்திய நைமித்திய பூஜைகள் தப்புமாயின் மன்னர்க்குத் தீங்கும் நீர்வளப் பங்கள் குறையும். காசினியில் கன்னம் களவு மிகும்.

'பேர் கொண்ட பார்ப்பான் பிரான் தன்னை அர்ச்சித்தாற்
போர் கொண்ட வேந்தர்க்குப் பொல்லா வியாதியாம்
பார்கொண்ட நாட்டுக்குப் பஞ்சமு மாம் என்றே
சீர் கொண்ட நந்தி தெரிந்துரைத் தானே''
(திருமந்திரம்)

பேர் கொண்ட பார்ப்பான் பிரான் தன்னை அர்ச்சித்தால் - தகுதி பெறாத பெயரளவில் உள்ள பிராமணன் இறைவனுக்குப் பூஜை செய்தால், போர் கொண்ட வேந்தர்க்குப் பொல்லா வியாதியாம் - போர்மேல் செல்லும் மன்னர்க்குப் பொல்லாத வியாதி உண்டாம், பார் கொண்ட நாட்டுக்குப் பஞ்சமுமாம் என்றே - உலகம் முழுவதும் வியாபித்துள்ள நாட்டில் பஞ்சமும் உண்டாகும் என்று, சீர் கொண்ட நந்தி தெரிந்துரைத்தான் - சிறப்பு மிக்க நந்தியெம்பெருமான் ஆராய்ந்து கூறியருளினான். பூசைகள் நடைபெறாவிடின் அதனால் ஏற்படும் விளைவுகளையும் விக்கினங்களையும் விளங்கிக் கொண்டு ஆலயத்தில் நடைபெற வேண்டிய பூசைகளின் மகத்துவத்தையும், அவற்றின் அவசியத்தையும் அறிந்து, அதனைப் போற்றிப் பரவி எமது ஆன்ம இலட்சியத்தினை அடைய முயல்வோமாக. தெய்விகக் கைங்கரியங்கள் முட்டின்றி முறை முறையே நடைபெறவும் அதனால் நாடு செழிக்கவும், அனைத்து ஜீவராசிகளும் நன்மை பெறவும் அம்பிகையின் திருவருளை வேண்டிப் பிரார்த்திப்போமாக.

மகாசக்தி மகத்துவமலர் - (1998) தழுவியது

இன்னல்களையும் எம்பெருமான் நீயே

கவிஞர் அகளங்கன்

அகிலாண் டேஸ்வரியின் அருகிருந்தே அருளும்
அகிலாண் டேஸ்வரரே அன்னை
வன்னிவள நகரில் வளம்சேர் பதியாகி
எண்ணமெ லாம்நிறையும் கோவிற்குளம் அதனில் (அகிலா......)

என்னுயிர் உடலாகி எழிலுரு முதலாகி
இன்னல்க ளைப்போக்கும் எம்பெரு மான் நீயே (அகிலா......)

கண்ணினில் ஒளி நீயே கருத்தினில் நிறைவாயே
உண்ணஅ ரிய பெரும் உத்தம மாம் மருந்தே (அகிலா......)

பண்ணினில் உனைப்பாட பதமெனக் கருள்வாயே
வண்ணநி லவசையும் வளர்சடைப் பெருமானே (அகிலா......)

பன்னிரு திருமுறையில் பரவும் மெய் யடியார்கள்
உன்னிரு திருவடியை உருகி நினைந்தனரே (அகிலா......)

மின்னல் சடையசைய மிளிர்கொன்றைப் பூவசைய
கன்னல் இதழ் அசைய களிநடம் இடும் இறையே. (அகிலா......)

சைவத்தமிழ் இலக்கியங்களின் சில அடிப்படைகள்

அருட்கலைமணி, சித்தாந்தப் பண்டிதர்,
வாகீசகலாநிதி, **கனகசபாபதி, நாகேஸ்வரன**,M.A.
முதுநிலை விரிவுரையாளர், மொழித்துறை,
சமூக விஞ்ஞான மொழிகள் பீடம்,
சப்ரகமுவ பல்கலைக்கழகம்,
பெலிகுல்லோயா,
இலங்கை.

உலக சமயங்களின் வரலாறுகள் மிகவும் உண்மையானவையாகவும் உன்னதமானவையுமாகும். சமூகங்களனைத்தும் சமயங்களைச் சார்ந்தே வளர்ந்துள்ளன. வரலாறு, இலக்கியம், பண்பாடு, நாகரிகம், கலைகள், கல்வி, கண்டுபிடிப்புக்கள் என்னும் துறைகளினூடே மனுக்குலத்தின் மகத்தான தொடர் வரலாற்றை அறியமுடிகிறது. சமய இலக்கியங்களின் அடிப்படைகளையும், பொருள் மரபுகளையும் அவற்றின் பண்பாடுகளையும் அறிந்து கொள்வதற்குச் சமய வரலாறு, இலக்கிய வரலாறு, நாயன்மார் வரலாறு, விக்கிரகவியல் வரலாறு என்பன சமய இலக்கியங்களின் தோற்றத்திற்கான பின்னணியைச் சமயங்களின் பின்னணியுடன் அறிவதற்குரிய சிந்தனைகளை இக்கட்டுரையிலே நோக்குவோம்.

"உலக மதங்களின் வரலாறு" 1 என்னும் நூல் இந்துமதம், இஸ்லாமிய மதம், கிறிஸ்துமதம், புத்தமதம், சமணம், சீக்கியமதம், யூதமதம், பார்ஸிசமயம் என்னும் மதங்கள் பற்றி ஆராய்கிறது. இந்துமதம் என்னும் முதற்கட்டுரையிலே மேல்வருமாறு கருத்துக்கள் உள்ளன.

"தனி ஒரு மனிதனின் பெயரால் குறிப்பிடாமலும் எந்த ஒரு கடவுளின் பெயரால் குறிப்படாமலும் மக்கள் சமுதாயத்தின் பெயரால் குறிப்பிடப்படும் பெருமை பெற்றது இந்துமதம். என்றும் நிரந்தரமானது என்ற கருத்தில் சனாதன மதம் என்றும் வேதத்தை அடிப்படையாகக் கொண்டது என்பதால் வைதீகமதம் என்றும் பிராமணங்கள் பின்பற்றுவதால் பிராமன மதம் என்றும் உபநிடதக் கருத்துக்களைக் கைக்கொண்டு நடப்பதால் உபநிடதமதம் அல்லது வேதாந்த மதம் என்றும் இதைக் கூறுகின்றனர். இந்து மதம் மதமாற்றத்தில் நம்பிக்கை கொள்வதில்லை எந்த மதமும் உண்மையாக வாழ்ந்தால் நன்மையைத் தரமுடியும். என்று அது நம்புகிறது. இந்து மதத்திற்குத் தனி ஒரு ஸ்தாபகர் கிடையாது.2.

சிந்துவெளி கண்டுபிடிக்கப்பட்ட சிந்துவெளிச் சின்னங்கள் சைவ சமயத்தின் அடிப்படைகளை வெளிப்படுத்தின. ஹரப்பாவில் பழைய நாகரிகச் சின்னங்கள் சைவசார்புள்ள நாகரிகமே அங்கு நிலவியது என்பதை மெய்ப்பித்துள்ளன. யோகிகளின் உருவங்கள், பசுபதி சிவனின் சிற்பங்கள், மரம், பாம்பு இவற்றைப் பூசைப் பொருளாகக் காட்டுகின்ற அடையாளங்கள், தேவி, சக்தி வழிபாட்டின் சின்னங்கள் போன்றவை காணப்படுகின்றன. இவை இந்து மதத்தின் அங்கமாக சைவ வழிபாட்டு முறைகளின் ஆதி உருவங்களாக இருக்க வேண்டும் என்று எண்ண செய்கின்றன. இச்சான்றுகளைக் கொண்டு இந்து மத இலக்கியங்களும் செழுமைமிக்கனவாயமைய வாய்ப்புண்டாகின்றது. இதனை வரலாற்றுத் தொன்மைச் சிறப்பு என்றுங் கருதலாம். ஆதலால் இந்துசமய அல்லது சைவத்தமிழ் இலக்கிய மரபு என்பது மிக நீட்சியுடைய பழம் பெருமையுடையது என்பது உணரப்படும். இதனை மதச்சார்பு நிலை இலக்கியங்கள் என்று கொள்ளாது "இலக்கியத்தின் தோற்ற இயற்கை" என்றே குறிப்பிடுவது தகும். சைவத் தமிழிலக்கியங்கள் இயல்பான இயற்கையினடியாகத் தோன்றுவது என்ற பேருண்மையை உணர்வது அவசியம்.

இந்து சமய நூல்கள் சுருதி, ஸ்மிருதி எனப் பிரிக்கப்பட்டுள்ளன. இவை ஆதி இலக்கியங்கள் என்றும் அழைக்கப்படுவன. மூலநூல்கள் என்றும் கொள்ளப்படுவன. வேதங்கள் அறிவு நூல்கள் வேதங்களில் மந்திரங்கள் உள்ளன. வடமொழியிலே இவை அமைந்துள்ளன. இருக்கு, யசுர், சாமம், அதர்வணம் என்பனவே வேத இலக்கியங்கள் "மந்திரங்கள்" "ஸ்லோகங்கள்" எனவும் வழங்கப்படும். இருக்கு வேதத்தில் 16,552 மந்திரங்களுள் யசுர்வேதத்தில் 2086 மந்திரங்களும், சாமவேதத்தில் 1875 மந்திரங்களும் அதர்வன வேதத்தில் 5987 மந்திரங்களும் உள்ளன. சைவ சமயத்தின் மிகப்பழைய பெருமை பெறும் மூலாதார இலக்கியங்கள் வேதங்களாகும். இருக்கு வேதம் மிகப்பழைய மந்திரங்களைக் கொண்டது. இது கிருஷ்ண த்வைபாயனர் என்ற வேத வியாசரால் பலருக்குச் சொல்லித்தரப்பட்டது. வேதங்கள் இறைவனாலருளிச் செய்யப்பட்டவை. எனவே நம்பிக்கையும், படைப்புத்திறனுமிக்க "இறைத்தத்துவம்" இங்கு முதன்மை பெறுவது நோக்கற்பாலது. மனித முயற்சிகளுக்கெல்லாம் மேலானது இறையருளென்பதால் இறையிலக்கியங்கள் மனித விமர்சனங்களுக்கும் அப்பாற்பட்டவை. எனினும் பல்கலைக்கழகம் போன்ற இன்றைய உயர்கல்வி நிறுவனங்கள் மனித முயற்சியிலான இலக்கியங்களையும், படைப்புக்களையும், முயற்சிகளையும் முதன்மைப்படுத்துவதனையும் மனங்கொள்ளல் வேண்டும். துறைசார் பண்புகள் இவ்விடத்தில் முதன்மையானவையாகின்றன. பல்கலைக்கழகத்திலே சமயஞ்சார் கற்கை நெறிகளும் தத்துவங்களும் தத்துவஞ்சார் கற்கை நெறிகளும், ஒப்பீட்டுச் சமயக் கற்றை நெறிகளும் இடம்பெற்றுள்ளமை மனங்கொலற்பாலது. சமய இலக்கியங்கள் குறித்த உயர் ஆராய்ச்சிகளும் விரிவுரைகளும் கூடப் பல்கலைக்கழகங்களிலே தனித்துறைகளாகவே நிகழ்கின்றன.

சைவசமயத்தின் மிகப்பழைய பெருமை பெறும் இலக்கியங்கள் வேதங்களாகும். இருக்கு வேதம் மிகப்பழைய மந்திரங்களைக் கொண்டது. இது துதிகளின் தொகுதி. யசுர் வேதத்தில் வேள்வி போன்ற சடங்குகளுக்குரிய விதிகள் முறைகள் அவற்றின் பயன்கள் என்பன சொல்லப்பட்டிருக்கின்றன.

உலக மதங்களெல்லாம் இசையை அடிப்படையாகக் கொண்டுள்ளன என்பது பேருண்மை ஆனால் சைவ இலக்கிய வரலாற்றிலே இசையுடன் கூடிய வேதமாகச் 'சாமவேதம்' அமைந்துள்ளது. வேதங்களை அருளிச் செய்த இறைவன் தம்மை இவற்றின் துணைக் கொண்டு பூசித்து வழிபடலாம் என்பதையே வேத இலக்கிய வரலாறு உணர்த்துகிறது. நான்கு வேதங்களெனும் பகுப்புமுறை வேத வியாசரால் வகுத்தமைக்கப்பட்டது. சங்கிதைகள், பிராமணங்கள், ஆரணியங்கள், உபநிடதங்கள் என்று வேதங்கள் உள்ளன. வேத வழிபாட்டு மரபே இன்றும் அனேக சைவத் திருக்கோயில்களிலே பாராயணமுறைமையுடன் ஆகம வழிபாட்டு முறையாகவும் உள்ளன. இம்மரபுகள் சைவத்தமிழ் இலக்கியங்களிலே இடம் பெறுவது இயல்பானதே.

சைவ சமய அடிப்படை இலக்கியங்களுட் புராணங்கள் பிரதான இடத்தை வகிக்கின்றன. புராணங்கள் 18. திருமறை வரலாற்றிலே "பஞ்சபுராணம்" என்னும் மரபில் பெரியபுராணம் பன்னிரண்டாந் திருமுறையாக இடம் பெற்றுள்ளது. இதிகாசங்கள் என்பபடுபவை மகாபாரதம், இராமாயணம், சிவரகசியம் என்பனவாகும். சிவரகசியம் நூல் கிடைத்திலது. எனினும் இலக்கிய வரலாற்று நோக்கிலும் இதிகாச நோக்கிலும் சமுதாய இயங்கியல் நோக்கிலும் மகாபாரதமும் இராமாயணமும் மிகப் பிரதான இடத்தினைவகித்து வருகின்றன. விமர்சன நோக்கிலும் விவாத நோக்கிலும், பல்கலைக்கழக ஆராய்ச்சி நோக்கிலும், பட்டிமண்டப நோக்கிலும், பகுத்தறிவு நோக்கிலும், பண்பாட்டு நோக்கிலும், மகாபாரதமும் இராமாயணமும் இன்றும் சைவத் தமிழ் இலக்கியங்களாகவே இலங்குகின்றன.

மனிதன் சமூகத்தில் ஆற்ற வேண்டிய கடமைகளை வகுத்துத் தருபவை தரும சாஸ்திரங்கள் "ஸ்மிருதி" என்ற வடமொழிச் சொல்லுக்கு "நினைவு" என்று பொருள். தருமசாஸ்திரங்கள், இதிகாசங்கள், புராணங்கள், ஆகமங்கள், தரிசனங்கள் ஆகியவை ஸ்மிருதிகளாகும். மனு ஞாக்யவல்கியர், பராசுரர் போன்ற பெரியோர்கள் இந்த நூல்களை இயற்றியுள்ளனர். திருவள்ளுவர் போன்றோரும் ஸ்மிருதிக்காரர்களே.

ஆகமங்கள் கடவுளின் திருவுருவ வழிபாட்டுக்குரிய வழிகளைக் கூறும் நூல்கள் 4 தந்திரங்கள் என்பன மந்திரங்களுக்கு ஒத்து உடலின் உறுப்புக்கள் ஏற்றுக் கொள்ளும். கோவில்களையும் பொருட்களை வைக்க வேண்டிய இடங்கள் முறைகளைக் குறிக்கும். தந்திர சாஸ்திரங்கள் கூறும் சில யோகமுறைகள்

கிரியைகள் முதலியன பயங்கரமானவை. சரியாகப் பின்பற்றாவிட்டால் பயங்கரமான விளைவுகளை ஏற்படுத்தும். வேத இலக்கியமரபு பின்பற்றவேண்டிய ஆசாரத்தில் கடும் நியமங்கள் உள்ளன. எனவே இவை அதிகமாகப் புழக்கத்தில் கிடையாது. எனினும் சைவத் தமிழ் இலக்கிய விதிமுறைகளிலே இவற்றின் கருத்துத்தாக்கம் செல்வாக்குச் செலுத்தியுள்ளமை கருதத்தக்கதே. பொதுவாக இந்து மதத்தை அறிய உபநிஷதங்கள், பிரம்மசூத்திரங்கள், கீதை இம்மூன்றும் அடிப்படை நூல்களாகும் 5. இவற்றின் அடிப்படை விதிகளும், கோட்பாடுகளும், கொள்ளைகளும் சைவத்தமிழ் இலக்கியங்களிலே பொதுளியமைவனவாகும்.

இந்து மதத்தில் எல்லாவற்றிற்குமே மதிப்புண்டு. வேதாந்தத்திற்கு அளிக்கப்படும் பெருமை யோகிகளுக்கு உண்டு. பக்தர்களுக்கும் உண்டு. சிவனை வழிபட்டால் கிடைக்கும் சித்தி பலன்கள் விஷ்ணுவையோ சூரியனையோ வழிபடுபவனுக்கும் கிடைக்கும் பக்தனுக்கு உள்ள பெருமை பொதுநல ஊழியனுக்கும் உண்டு. அனைவருக்கும் ஒரே நிபந்தனை தான். உண்மையாக முறைப்படி வழிபட வேண்டும். அது ஒன்று தான் உரைகல்.

சைவத்தமிழ் இலக்கியங்களிலே அடிப்படை விடயங்களான மறுபிறவி, விதிப்பயன், சாதிமுறை தவப்பயன் என்பன சரியாகப் புரிந்து கொள்ளப்பட வேண்டும். இக்கொள்கையை ஏற்றுக் கொள்ளமுடியாத மறுதலிப்பு வாதிகள், சைவத்தமிழ் இலக்கியம் என ஒன்று கிடையாது என எழுதியும், பேசியும் சாதித்தும் தமது வரட்டுச் சித்தாந்தத்தை முழங்கி வருகின்றனர். இவர்கள் தம்மையே புகழ்ந்து திரியும் சுயநலச் சிந்தனையாளர்களே என்பது வெள்ளிடைமலை. ஞானமார்க்கம், பக்திமார்க்கம் என இரு மார்க்கங்கள் உள்ளன. சரியை, கிரியை, யோகம், ஞானம் என்பனவும் சைவசமய இலக்கிய அடிப்படைகளாக விளங்குகின்றன. தொல்காப்பியம் சுட்டும் முதல், கரு, உரி என்னும் அம்சங்களுடன் தொடர்புடையவை சரியை, கிரியை, யோகம், ஞானமார்க்கங்கள். இலக்கியத்தின் பயன் கருதிய இக்கோட்பாடு சைவத் தமிழிலக்கியத்தின் உயிர்க்கோட்பாட்டோடும் உலகக்கோட்பாட்டோடும் ஒத்திசைவது. இவ்விளக்கங்களை மேலும் முன்னெடுக்க வடமொழி, தென்மொழி அறிவும், புலமையும், பாண்டித்தியமும், தெளிவும் அவசியம் என்பதனை ஈண்டுக் குறிப்பிடுவது பொருந்துவதாகும். இலக்கியத்திலே உணர்ச்சி முக்கிய அம்சமாகும். அது சமுதாய உணர்ச்சி, மனித உணர்ச்சி, மத உணர்ச்சி, நுண்ணுணர்ச்சியெனப்படும். காதலுணர்ச்சி, இயற்கையுணர்ச்சி, அன்புணர்ச்சி எனப்பலப் பிரிவுகளாயமையும் சைவத் தமிழ் இலக்கியங்களான தேவாரத் திருமுறைகளிலே இவ்வுணர்ச்சிகள் நிரம்பியுள்ளன. மனுக்குல வரலாற்றென்பதிலிருந்து மொழியின் புலப்பாட்டுணர்ச்சியை முன்னிலைப்படுத்துவனவே சைவத் தமிழ் இலக்கியங்களெனில், அவற்றிலே மனித வாழ்வின் பற்றுறுதியும், செழுமையும், வனப்பும், வண்ணங்களும் நர்த்தனமாடும் பாங்கைக் காணும் மனவிரிவு கல்வியாளர்க்கு ஏற்பட வேண்டும். திறனாய்வு, விமர்சனம் என்பதிலே இடம் பெறும் தனிநுட்பத்திறன் இத்தகு நோக்கு நிலையினாலேயே உருவாகும். செழுமைமிக்க பாரம்பரியங்களின் உசாவலை மேற்கொள்ளும் அறிவு ஜீவிகளாலேயே சைவத்தமிழ்ப்பாரம்பரியம் முன்னெடுக்கப்படும். இதில் நிரம்பிய சமுதாய உணர்ச்சி நலன் உண்டு. இதிலே மாற்றுக் கருத்துக் கிடையாது. "அறிவு மார்க்கம்" என ஒன்று உண்டாகில் "பக்தி மார்க்கம்" "ஞானமார்க்கம்" என்பனவும் உண்டல்லவா? எனவே ஒன்றை மட்டும் உயர்த்தி பிடிக்க வேண்டும் என்றில்லையல்லவா? ஆதலினாலே சைவத்தமிழ் இலக்கியச் செந்நெறியின் அடிப்படைகளை விசாரணை மூலம் மேலும் முன்னெடுத்தலவசியம்.

மனிதரிடத்து அறிவுணர்ச்சி, புலனுணர்ச்சி, ஆன்மீகவுணர்ச்சி, அன்புணர்ச்சி, அகந்தையுணர்ச்சி, ஆணவுணர்ச்சி, அற்பவுணர்ச்சி, பக்தி உணர்ச்சி, பரிவுணர்ச்சி, சாந்த உணர்ச்சி, சமூகஉணர்ச்சியெனப் பல்வகையுணர்ச்சிகள் எழுச்சி பெறுவதுண்டு. இவற்றுட் கோபவுணர்ச்சியும், யுத்தவுணர்ச்சியும், அழிவுணர்ச்சியும் உலகையே துவம்சம் செய்து நிர்மூலமாக்கிவிடவல்லன. இவற்றை சைவத்தமிழ் இலக்கியங்கள் அடிப்படைக் கொள்கைகளாகப் பேசியுள்ளன. உணர்ச்சியும் ஆசையும் இணையும் பொழுது கடும் தாக்கம் நிகழும். சுருக்கமாகவே மண், பெண், பொன் என்று மூவாசைகளைக் குறிப்பிடும் சைவத்தமிழ் தத்துவ இலக்கியவாதிகள் இறைவனாலேயே இவற்றிலிருந்துருவாகும் அவலங்களை நீக்க முடியும் என்று முடிவுரைக்கும். மனித ஆசைகளின் வேகமும், வீறும், எழுச்சியும், துடிப்பும் அடங்கும் நிலையில் "சுகங்கிடைக்கும்" என்ற செய்தி நிம்மதி தருகின்றதாயமைவது பிரதியட்சம். அறிவுணர்ச்சியின் எல்லை விரிவு "பிரபஞ்சவியல்" ஆய்வாகவே எப்பொழுதும் பரிணமிக்கும். சைவத்தமிழ் இலக்கியச் செல்நெறியின் ஆழமும், அகலமும் இத்தகு கண்ணோட்டத்திலே கண்டு விளக்கி விவரிக்கத்தக்கதே.

சைவத்தமிழ் இலக்கியங்கள் விதிமுறையாகவும், விளக்க(கிரியா) முறையாகவும் இயல்வன. அனைத்து அம்சங்களையும் பற்றி விவரிப்பன. பக்தி மார்க்கமே உணர்ச்சி கொண்ட மனிதர்களுக்கு மிகவும் பயன்படுவதாகும். 6. அதனை சற்று விளக்குதல் நடைமுறைப் பயனுடையதாகும். பக்தி 9 வகையாகப் பிரிக்கப்பட்டுள்ளது. சிரவணம், கீர்த்தனம், ஸ்மரணம், பாதஸேவனம், அர்ச்சனம், வந்தனம், தாஸ்யம், சக்யம், ஆத்மநிவேதனம் என்பன அவை. இவ்விடத்திலே தேவார முதலிகளுள் ஒருவரான சுந்தரமூர்த்தி நாயனார் "பொய்மையாளரைப் படாதே எந்தை புகலூர் பாடுமின் புலவீர் காள்" என்று கட்டளையிடும் முறைமை காணத்தக்கது. இவ்வெடுகோளுக்கான விளக்கமாகவே பக்திமார்க்கம் விவரிக்கப்படுகிறது. துள்ளுகிற மனதைச் சுருக்கி அடக்கி ஈடுபாடு கொள்ளும் பக்தி மார்க்க உணர்வு நிலைகளை அறிதல் வேண்டுமல்லவா?

1. சிரவணம் - ஆண்டவனின் கதை, லீலைகள், புகழ், பெருமை கேட்டல்.
2. கீர்த்தனம் - அவற்றை சொல்லல்.
3. ஸ்மரணம் - அவற்றைச் எண்ணியிருத்தல்.
4. பாதஸேவனம் - ஆண்டவனுக்குச் சேவை செய்தல்.
5. அர்ச்சனம் - பூசை செய்தல். (அர்ச்சித்தல்)
6. வந்தனம் - ஆண்டவனைத் துதித்தல்.
7. தாஸ்யம் - அவனுக்கு அடிமை செய்தல்.
8. சக்யம் - அவன் நட்பை வேண்டிப் பெறல்.
9. ஆத்மநிவேதனம் - ஆத்மசமர்ப்பணம்.

இவற்றுள் எதை மேற்கொண்டாலும் அது பக்தி தான். சைவத் தமிழ் இலக்கியங்கள் கருத்தளவில் பொருளடிப்படையிலே கருமமார்க்கம், வினை செயல்வகை, வினைப்பயன், முடிவு என்பவற்றைக் கூறும். இதன் விளக்கம் தத்துவாத்தமானது. கர்மமார்க்கம் என்று சைவசித்தாந்தத்தில் விவரிக்கப்படும். சைவகாரத்திலே இம்முறைமை குறிப்பிடத்தக்க முக்கியத்துவமிக்கது. தெய்வத்தை எந்த உருவில் கண்டாலும் அதை வழிபடுகின்றவன் தான் செய்யும் காரியங்களிலே "நாம்" என்ற எண்ணம் நீத்து பயனில் விழைவையும் மறந்து செயலாற்றும் போக்கே கர்மமார்க்கத்தின் அடிப்படை. மானுட வாழ்க்கையே பிரத்தியட்சச் சான்று. இவ்விடத்திலே பொதுவிதியொன்று சுட்டத்தகும். அதாவது சைவத்தமிழ் இலக்கிய அடிப்படைகள் என்பது "மனித ஒழுகலாறுகளினடியாகத் தோன்றும் உன்னதங்கள்" ஆகி நிற்பது தான்.

"யோகமார்க்கம்" என்பது யோகம் பெற்றுச் சித்தி பெற்ற சித்தர்கள் பற்றியது. இவர்களின் பேச்சும் நடத்தைகளும் நம் பகுத்தறிவுக்கு விநோதமாகவும் விரோதமாகவும் காணப்படும். ஆதலினால் உலக மக்கள் பலர் யோகிகளை அறிந்துணர வாய்ப்பில்லை. எனினும் யோகியரது முன்மொழிவுகள் என்றும் பொய்ப்பதில்லை. யோகிகள் சுயநலமற்றவர்கள், எல்லோருக்கும் நல்லன செய்பவர்கள், உள்நோக்கம் எதுவுமற்றவர்கள், தெளிந்த நெஞ்சினர், இயற்கையை நேசிக்கும் மேலார்கள், லீலர்கள், (புண்ணிய சீலர்களே, 'சித்தாந்தம்' கற்ற சம்பிரதாயம் உயிரற்ற உடல் போலாகும். சைவஇந்துமத இலக்கிய தத்துவத்திலே துவைதம், வைணவம், (விசிஷ்டாத்வைதம்), சைவசித்தாந்தம், வேதாந்தம் என்கிற அத்வைதம் என்ற நான்கு கோட்பாடுகள் உள்ளன. துவைதம் என்றவுடன் 13ஆம் நூற்றாண்டில் ஆரம்பக்கட்டத்தில் வாழ்ந்த ஸ்ரீமத்துவாச்சாரியார் பெயர் நினைவுக்கு வருதல் வேண்டும்.

"விசிஷ்டாத்வைதம்" என்பது பக்திமார்க்கத்தின் ஒரு அங்கமாகவே கொள்ளப்படுகிறது. இந்தப் பக்தி இயக்கம் தெற்கே (தமிழ்நாட்டிலே) 7ஆம், 8ஆம் நூற்றாண்டுகளிலே நாயன்மார்களாலும், ஆழ்வாராதியராலும் நிலை பெற்றது.

ஆண்டாள் என்ற பெண், திருப்பாணாழ்வார் என்ற தாழ்த்தப்பட்ட சாதியினர் முதலிய பன்னிரண்டு ஆழ்வார்கள் வளர்த்த பக்தி நாலாயிரத் திவ்வியபிரபந்தங்கள் என்ற பக்தி நூலாக வெளிவந்துள்ளது. பக்தியை ஞானத்துடனும், கருமத்துடனும் இணைத்து நாதமுனி, யமுனாச்சாரியார், ராமானுஜாச்சாரியார் என்ற ஆச்சாரியர்களால் வகுக்கப்பட்ட ஒரு சித்தாந்தமே விசிஷ்டாத்வைதம் எனவும் அதற்கு ஆச்சாரியராக

ஸ்ரீராமானுஜாச்சாரியரையும் கொள்ளப்பட்டிருக்கிறது. இவர் பன்னிரண்டாம் நூற்றாண்டில் பரம்பொருள் வெறும் தத்துவமல்ல, நிர்க்குணமல்ல, சகுணமூர்த்தியே தான் என்று இந்தத்துவம் நிறுவுகிறது.

சைவத்தமிழ் இலக்கியங்கள் தான் "மோட்சம்" பற்றிப் பேசுவன. மாக்ஸிஸ இலக்கியங்கள் சாதி, பொருளுற்பத்தி, உயர்உழைப்பு, சமத்துவம், சுரண்டல், பாலியல், விக்கிரகங்கள் பற்றிப் பரக்கப் பேசுவன. உற்பத்தி, பிறப்புவிதிகள் குறித்த உயர் உண்மைச் சிந்தனைகள் சைவத் தமிழிலக்கியங்களிலே பேசப்பட்டுள்ளமை போன்று பிறகால இலக்கியங்களிலே விவரிக்கப்படவில்லை. மனிதம், உயிர், மானுடம் பற்றிப் பேசுவனவே இலக்கியங்கள். ஆகவே உயிரின் மோட்சம், கதி, பயன், முடிவு என்பன பற்றிப் பேசும் சைவத்தமிழ் இலக்கியங்கள் எக்காலத்துக்கும் ஏற்புடைமையாயமைவன.

பக்தியின் ஒரு வழியாலேயே உயிர்கள் மோட்சமடைய முடியும். பக்தியின் எல்லைதான் சரணாகதி, சரணாகதி என்பது தன்னை முழுமையாகவே ஸ்ரீ நாராயணிடம் ஒப்படைப்பதாகும். கர்மம், ஞானம் இரண்டுமே பக்திக்கு அங்கங்கள். எல்லாச் சம்பிரதாயங்களிலுமே குருவுக்கு மிகவுயர்ந்த இடம் உண்டு. இந்த மார்க்கத்தில் அது மிகவும் அதிகம். மோட்சம் - முத்தி என்றால் உயிர் பரமபதம் அடைந்து அவனுக்கு (உள்ள பொருளான இறைவனுக்கு) கைங்கர்யம் செல்வதாகும்?!. நவீன இலக்கியவாதிகள் அப்படியொன்றில்லையென மறுப்பர். காணமுடியாதவொன்றை, மனிதனுக்கப்பாற்பட்டதைப் பெரும்பாலும் நம்புவதில்லை. நம்பிக்கை கொள்ளவைப்பதுமில்லை என்ற விதியை படைப்பாளரும், திறனாய்வாளரும் கடைப்பிடிப்பர். "நிலைபேறுடைமை" குறித்த எதிர்பார்ப்பு உங்கட்கு வந்துவிட்டது என்பது மட்டும் எனக்குப் புரிகிறது.

சைவசித்தாந்தம், வேதாந்தம், ஆகமம் ஆகிய இரண்டையும் ஒற்றியது. இதன்படி பரமேசுவரன் முழுமுதல் - சிவனே என்று கூறுகிறது. சைவத்தமிழ் இலக்கியங்கள். அவனுக்கு அனைத்து ஆற்றல்களும் உண்டு. அவன் எங்கும் நிறைந்தவன் எல்லாம் அறிந்தவன், மாறாதவன், ஆதி அந்தம் அற்றவன், முழுமைப் பெற்றவன், அன்பே உருவானவன், உயிர்கள் பசுக்கள் என்று அழைக்கப்படும். அவைகளும் பதியைப் போலவே சச்சிதானந்த சொரூபிகள் ஆனால் அவை தங்களை அநித்தியமாகவும், அறிவற்றனவாகவும் எண்ணிக் கொண்டு விடுகின்றன. மும்மலங்கள் பேசப்படுகின்றன. சரியை, கிரியை, யோகம், ஞானம் என்ற நான்கு அனுஷ்டானங்கள் மூலமாகவே உயிர்பக்குவமடைய முடியும். தகுதி பெற்ற உயிருக்குச் சிவனே வந்து வழிகாட்டுவான் என்று சைவதமிழ் இலக்கியங்களான தேவாரத் திருமுறைகளும் திருவாசகம் போன்ற நூல்களும் கூறும்.8

சைவத்தமிழ் இலக்கியங்களின் அடிப்படைச் சித்தாந்தமாக மிளிரும். "சைவசித்தாந்தம்" பதினோராம் நூற்றாண்டில் தமிழகத்தில் ஒரு முழுச் சித்தாந்தமாக உருப்பெற்றுவிட்டது. இதற்கு ஆதாரம் இருபத்தெட்டுச் சைவாகமங்கள், வேதங்கள், தேவாரங்கள், பெரியபுராணம், மெய்கண்ட சாத்திரங்கள் முதலியனவாகும்.

சைவத்தமிழ் பக்தி இலக்கியங்கள் பலவழிகளிலேயும் பயன்படுவனவாகும். மெய்யுணர்வை அடைய பக்தி மார்க்கமே சிறந்தவழி. மறைகளாகிய வேதங்கள் உரைக்கும் உட்பொருளை உணராது புரியாது நிகழ்த்தப்படும் வெற்றுச் சடங்குகளால் பயன் ஒன்றும் விளையாது என்று சங்கரர் மக்களுக்கு எடுத்துரைத்துள்ளார். சங்கரர் தாம் கண்ட புதுநெறியை விளக்க இந்தியா பூராகவும் சுற்றுப்பிரயாணம் மேற்கொண்டு பத்திரிநாத், துவாரகை, பூரி, சிருங்கேரி, காஞ்சி ஆகிய இடங்களில் மடங்கள் அமைத்து அவற்றைச் சமயப்பிரசாரம் செய்யும் நிலையங்களாக்கினார். காசியில் தம் கொள்கையை விளக்க பள்ளியொன்றை நிறுவினர். இது தான் இன்று பெரும்பெரும் விமர்சகர்கள் கூறும் (school of Thoughts) இக்கொள்கையின் தொடக்கம்.

சைவத்தமிழ் இலக்கியங்கள் இந்துமதத்தை நிறுவக்கூடிய கருத்துவளத்தைக் கொண்டமைவன. சைவ இலக்கியகாரர். சைவ பெரியோர்கள் எதையும் தடுக்கவில்லை. விலக்கிவைக்கவுமில்லை. அவர்கள் அறிவுக்குத்தக்கபடி பொருளையும் பொருத்தத்தையும் தெரிந்து கொண்டு செய்யச்சொல்லி கொடுத்தார்கள் 9. சைவத்தமிழ் இலக்கியங்கள் வழிபாடுகள், நோன்புகள் (விரதங்கள்), உற்சவங்கள் இம்மூன்றும் தனித்தனி வீடுகளிலும் கோயில்களிலும் நடக்கினறன.

சைவத்தமிழ் இலக்கியங்கள் கற்பனையையன்றி உண்மையை - அன்றாட நிகழ்வுகளைப் பற்றிப் பேசுகின்றன. இலட்சியம் - குறிக்கோள் - நோக்குகள் குறித்த சரியான வழிகாட்டலை அவை தருகின்றன.

"உருவவழிபாடு" ஒவ்வொரு வீட்டிலும் ஒரு சாமியறையில் உண்டு. இறையுருவங்களின் படங்கள் வைக்கப்பட்டிருக்கும். தூபதீபம் காட்டி வழிபடுவதும், மிகவும் எளிமையாகத் தேவாரத் தோத்திரங்கள், திருவாசகம், திவ்வியப்பிரபந்தங்கள், மந்திரங்கள், பக்திப் பாடல்கள், கீர்த்தனைகள், தனிப்பாடல்கள் பக்தி உணர்வுக்கு உருக்கொடுத்துப் பாடப்படுவதுண்டு. சடங்குகள், நோன்புகளும் வழிபாட்டுக்கு மெருகு சேர்க்கின்றன. சைவதமிழ் இலக்கியங்களல்லாதவை சடங்குகள், நோன்புகள், கோயில்களையும் அவற்றின் உயர்பெறுமானங்கள் எனக் கருதப்படுவனவற்றையும் எள்ளி நகையாடிக் கிண்டலும், கேலியும், கேவலமுமடக்கி விமர்சிக்கின்றன. சைவத் தமிழ் இலக்கிய மரபில் பெண்கள் சில விரதங்களைக் கைக்கொண்டு வழிபாடு செல்வர். குறிப்பாக கந்தஷஷ்டியும், கௌரிகாப்பும் - நோன்பும் குறிப்பிடற்பாலன. சுருக்கச் சொன்னால் ஒவ்வொரு இந்துவும் மனச்சாந்தி பெறவும், வீடு பெறவும் அவனுக்கு வழிகாட்டியாக ஒரு கோவில் வேண்டும். அதனுள் ஒரு தெய்வம் வேண்டும். அந்தத் தெய்வத்தின் அருள் வேண்டும். இதைத்தான் விசுவரூபமாகவும், அணுவின் உருவத்திலும் காட்டித் தருகிறது. இந்துமதம் 10. சைவத் தமிழ் இலக்கியங்களின் மேலான குறிக்கோளும் இவைதான்.

"மனிதர்களுக்குக் கிடைத்த ஒரே பற்று இறைவனே" என்பதால் அவ்விறைவனை வணங்கிக் "காரிய சித்திக்கு பக்தி அவசியம்" தாங்கமுடியாத துன்பம் வரும் போது இறைவனின் பாதத்தை உறுதியுடன் பற்றிக் கொள்ள வேண்டும். துன்பத்தைத் தாங்கும் சக்தியை இப்பிறவியிலேயே அளிக்குமாறு இறைவனிடம் வேண்டிக் கொள்ளச் சைவத் தமிழிலக்கியங்கள் தலைமை என்பது பெறுமதிமிக்கது. வேறுபாடுகள் அற்றது. கொள்கையால் ஒன்றுபட்டது. குழைவானது. சைவத்தமிழ் இலக்கிய கர்த்தாக்கள் பிதாமகர்கள் என்றென்றும் உயர்வாகவே மதிக்கத்தக்கவர்கள். காரணம் அவர்தம் மனவிரிவு, நாயன்மார்கள், ஆழ்வார்கள், தாயுமானவர், திருமூலர், சேரமான், திருமாளிகைத்தேவர், அபிராமிப்பட்டர், சேந்தனார், சேக்கிழார், கச்சியப்பசிவாச்சாரியார், நக்கீரர் போன்றோர் சைவ இலக்கியங்களின் பிதாமகர்கள். தமிழ்மொழிகளினாலேயே இலக்கியஞ் செய்தனர். தமிழைப் போற்றியும், ஏத்தியும் வாழ்த்தியும், வழுத்தியும் பாடினர்.

பக்தியின் முதிர்ச்சியினாற் பிரபத்தி நிலை உண்டாகும் போது பக்தன் தன்னுணர்வற்றுத் தனக்கென ஒன்றையுங் கோராது இறையுணர்வாகிறான். அன்பு போன்று பக்தியும் உள்ளமும் ஓர் அனுவபமாகும். இந்த உணர்ச்சியை இதுவெனச் சுட்டவோ விளக்கவோ முடியாது. அனுபவத்தில் உணரவேண்டும். பக்தியைப் பற்றிப்பல நூல்களைப் படிப்பதினாற் பக்தி உண்டாகப்போவதில்லை.

இக்காலத்தில் எமது கல்வி பகுத்தறிவுக் கல்வி. பகுத்துப் பகுத்து வாழ்க்கையிற் சலித்துப் போகிறோம். "பக்தியைக் காட்டுவதற்கு அடியார்களின் பாடல்களே உறுதுணையாகின்றன. இதனை உண்மை விளக்கம்.

தத்துவங்கள் எல்லாம் சகசமாய் ஆன்மாவில்
பெத்தத்தில் நிற்கின்ற பெற்றிபோல் – முத்திதனில்
சித்தமலம் அற்றார் செறிந்திடுவர் என்று மறை
சத்தியமா ஓதியிருந் தான்'' 12 என்று பாடுகிறது.

"ஆன்மவிடுதலையே அறிவின் முடிந்த பயன்" 13. சைவத்தமிழ் இலக்கியத்துள் மாபெரும் கூறாயுள்ள சித்தர் மரபும் பக்தி இலக்கிய பாரம்பரியத்திலே பெருமிடத்தை வகிக்கின்றன. எனக்குத் தமிழ் கற்பித்த பல்கலைக்கழகப் பேராசான் பேராசிரியர், கலாநிதி கார்த்திகேசு சிவத்தம்பி எழுதிய "மதமும் கவிதையும் - தமிழ் தலைவர்" என்னும் நூல் முக்கியமானது. பேராசிரியர், கலாநிதி சிவத்தம்பி மேல்வருமாறு எழுதுகிறார்.

"பக்தி இலக்கியம் அனைத்திந்திய உலகத் தளங்களில் நின்று நோக்கும் பொழுது

தமிழ்க் கவிதை மரபின் பிரதான பரிமாணங்களில் ஒன்று ஆகும். ஆனால் அதனை அவ்வம் மதநிலை நின்று பார்த்து விளக்கங்கள் அளிக்கும், விளக்கங்கள் பெறும் புலமை உசாவல் முறைமையே பெருவழக்காக உள்ளது.

பக்தி இலக்கியத்தினை, இலக்கிய ஆக்கமாக இலக்கிய வெளிப்பாட்டு முறைமைகள் பலவற்றை உள்ளடக்கிய ஒரு இலக்கியத் தொகுதியாக சுருக்கக் கூறின் இலக்கியப்படைப்பாக பார்க்கும் ஒரு மரபு இல்லையென்றே கூறவேண்டும். அதாவது சாதாரண இலக்கியப் படைப்புக்கள் போல இவற்றைப் பார்த்தல் கூடாது. இவை அதற்கு அப்பாற்பட்டவை என்ற ஒரு நிலைப்பாடு இங்கு தொழிற்படுகிறது'', 14. என்ற பேராசிரியர் சிவத்தம்பியின் கருத்து முற்றிலும் அச்சொட்டாகப் பொருத்தமானதாகிறது. பக்தி இலக்கியத் தடத்தினைச் சாரியாக அதன் தத்துவார்த்தத் தளத்தில் நின்று புரிந்து கொள்வதற்குப் பேராசிரியரின் இவ்வரிகள் அனுபவ காட்சிகளாகும்.

''மதமும் கவிதையும் - தமிழ் அனுபவம்'' என்ற பேராசிரியர்,கலாநிதி கா.சிவத்தம்பியின் கொழும்புத் தமிழ்ச்சங்க உரை (நூலில்) யில் இடம்பெறும் மிகப்பிரதான கருத்துக்கள் செய்திகள் குறிப்பிடப்பாலன.

''மதம் என்னும் நிறுவனம் இல்லாத சமூகமே

இல்லை என்பது சமூக மானிடவியல் துறையின் பதிகை ஆகும்.

கவிதை என்பது ஓர் உணர்வு நிலையின் வெளிப்பாடு. (Expression) ஆகும். தமிழிலக்கியத்தில் இந்த மத உணர்வு சார்ந்த இலக்கியங்களைப் "பக்தி இலக்கியம்" எனும் தொடர் கொண்டு குறிப்பிடுகிறோம்.

தமிழிற் பக்தி இலக்கியம் எனப் பொதுப்படையாகக் குறிப்பிடுவது கி.பி.ஏறத்தாழ 500 முதல் 900 வரை தோன்றிய சைவ, வைஷ்ணவப் பாடல்களாகும். பாடல்கள் எளிமையான மொழியிலே மக்களிடையே மக்களுடன் இணைத்துப் பாடப்பட்டவை என்பது தெரிகின்றது. வெளியே நடக்கும் இன்னல்களால் அல்லலுற்று வேதனைப்பட்டுக்கிடக்கும் நமது தலைமுறைக்கு இந்துமத அனுபவப் பாடல்கள் இலக்கிய நிம்மதி ஒன்றினைத் தருகின்றன என்பது மறுக்கமுடியாத ஓர் உண்மையாகும். கோயிற் பண்பாட்டு எழுச்சியுடன் பக்தி இலக்கியத்தையும் தொகுக்கும் பண்பு தொடங்குகின்றது. தமிழ் இலக்கியம் இத்தகையதொரு தொகுப்பு முறைமையினாலேயே பேணப்பட்டு வந்தது. (பத்துப்பாட்டு, எட்டுத்தொகை, பதினெண்கீழ்க்கணக்கு) அந்தப் பட்டியலில் பத்தாம் நூற்றாண்டின் பின்னர் தேவார திருவாசகங்களும் பாசுரங்களும் சேர்ந்து கொள்கின்றன. தேவாரப்பாடல்களின் பின்னர் தோன்றிய திருவிசைப்பாப் பாடல்களிலே மறைஞானப் பண்பைக் காணலாம். கருவூர்த்தேவரின் பாடல்களில் இப்பண்பு துல்லியமாகத் தெரியத் தொடங்குகின்றது. கடவுளைக் கருத்துருவமாய்ப் பார்க்கும் பண்பு அவரிடத்திற் பெரிதும் காணப்படுகிறது.

குமரகுருபரர், அருணகிரி, அபிராமிப்பட்டர் போன்ற இறையனுபவஸ்தர்கள் 15ஆம், 16ஆம், நூற்றாண்டுக்குரியவர். இக்காலத்தில் முருகவணக்கமும், தேவி வணக்கமும் தமிழில் முக்கியப்படுகின்றன.15. என்ற பேராசிரியர் கா.சிவத்தம்பியின் கருத்துக்கள் கவனிக்கத்தக்கவை.

''பக்தி உணர்வு சமுதாயத்திலே கிளர்த்தபோது கிளர்ந்தெழும் தேவை அல்லது சூழல் ஏற்பட்ட போது.

''உளங்கனிந்த போதெல்லாம் உவந்து வந்து யாருமே'' என்று திருமுறை பாடுகிறது. ''என்னை நன்றாக இறைவன் படைத்தனை தன்னை நன்றாகத் தமிழ் செய்த மாறே'' என்று பாடுகிறார் திருமூலர். ''தன்னை நன்கு தமிழ் செய்வதற்காகவே இறைவன் என்னை நன்கு படைத்தான் என்கிறார். பிறப்பின் பிறவியின் நோக்கம் இவ்வரிகள் மூலம் உணர்த்தப்படுகின்றன. வள்ளல்களைப்பாடிப் பரிசில் வாழ்க்கை வாழ்ந்த நெறியாளி, சமய உணர்வை மையமாகக் கொண்ட இடைக்காலத்திலே மானுடம் பாடும் குறிப்பு ஏற்கத்தக்கதாகச் சமயகுரவர்கள் கருதவில்லை.

கொள்ளும் பயனில்லை குப்பை
 கிளர்ந்தன்ன செல்வத்தை
வள்ளல் புகழ்ந்து தம் வாய்மை
 இழக்கும் புலவீர்காள்
கொள்ளக் குறைவலன் வேண்டிற் றெல்
 லாம் தரும் கோதில் என்
வள்ளல் மணிவண்ணன் தன்னைக்
 கவி சொல்ல வம்மினோ என்கிறார் நம்மாழ்வார.

"பக்தி இலக்கியத்தில் இக்குறிக்கோள் செல்வாக்குப் பெற்றுக் கவிதையரங்கிலே மேலாண்மை செலுத்தியது. சமய உணர்வில் வீழ்ச்சி என்று கொள்ளாவிடினும் அதன் தளர்ச்சி என்று கொள்ளத்தக்க சூழல் உருவான போது உலகியல், சமுதாய இயல் உணர்வு மேலோங்கிய காலத்தில் கடவுட்பாடல் செல்வாக்கை இழந்தது. சமய உணர்வினைச் சற்றும் தளராமலேயே சமுதாய உணர்வுக்கும் அரசியல் விடுதலைக்கும் தம் கவிதைத் திறனைக் காணிக்கையாக்கினார் பாரதியார்"[16]

"பெரியபுராணத்தின் பின்னர்த் தமிழில் எழுந்தது திருவிளையாடற்புராணம். சிவனடியார்கள் பெரியபுராணத்தில் பெற்றுள்ள இடத்தையே சிவபெருமான் திருவிளையாடற் புராணத்தில் பெற்றுள்ளார். எனினும் சமண பௌத்த காப்பியங்கள் போலன்றி தொன்மக்கூறுகள் மிகுதியாக இதில் இடம் பெற்றுள்ளன." [17]

பத்துப்பாட்டிலுள்ள மற்ற ஆற்றுப்படைகளைப் போலன்றித் திருமுருகாற்றுப்படை அடியாரொருவரை இறைவனிடம் ஆற்றுப்படுப்பது புதியமுறையெனப் பலரும் கூறுவர். காரைக்காலம்மையார் சமய வளர்ச்சியின் பொருட்டுத் துறவு பூண்ட சைவத் துறவியெனலாம். நிலையாமையையும் யாக்கையின இழிவையும் தமது பாடல்களில் மிகத் தெளிவாகப்பாடுகிறார். [19]

வெள்ளியம்பலத்துத் திருநடம் கண்ட பதஞ்சலியின் காலம் காரைக்கலம்மையாரின் சமகாலமாகும். அம்மையாரும் இறைவன் கூத்தினைத் திருவாலங்காட்டிற் கண்டார். பதஞ்சலியை இவர் பாடலிற் குறிக்காமல் அவர்க்கு முற்பட்டவர் என எண்ணவேண்டியுள்ளது. நக்கீரர் முதலானோரும் அம்மையைக் குறிக்காமையும் கருத வேண்டும். கண்ணப்பரையும் அம்மையார் குறிக்காமையால் அவர் அம்மையாருக்கும் முந்தியவராகலாம். முதல் நாயனார் அவரேயென்பது அனைவர் கோட்பாடாகும்.

"அம்மையாரது பாடல்கள் ஆண்டாள் பாடலின் உருக்கமும் ஈடுபாடுமுடையன. அப்பன் ஆடுங்காட்சி வருணனை கலிங்கரத்துப்பரணிப் பேய்களையும் நினைவுறுத்துகின்றன. வருணனைகள் அளவும் செம்மையுடையன. இறைவன் ஆட்டத்தைப் படிக்கையில் ஆடலை நேரிலே" காணும் உணர்ச்சி பொங்கி வருகின்றது".[20]

திருமந்திரம் என்ற உயர்ந்த ஞானப்பனுவலைத் தமிழகத்திற் களித்தவர் திருமூலர். அவர் ஒரு தாந்திரிகர். அவர் நாயன்மார்களுள் ஒருவராகத் திருத்தொண்டர்தொகையுள் குறிப்பிடுகின்றார். எனவே சுந்தரர் காலமாகிய கி.பி.7ஆம் நூற்றாண்டின் இறுதி அல்லது 8ஆம் நூற்றாண்டுத் தொடக்கத்திற்கும் முந்தினவர். அப்பர் சம்பந்தர்க்கும் முற்பட்ட நாயன்மாருள் இவரை ஆராய்ச்சியாளர் எண்ணுகின்றனர். அப்பரும் சம்பந்தரும் திருவாவடுதுறைக் கோவிலுக்கெழுந்தருளிய போது திருமந்திரத்தை அவர்கள் கொடிமரத்தின் கீழிலிருந்து எடுத்ததாகக் கர்ணபரம்பரையொன்றுள்ளது. திருமூலரது சொற்கள் சுருக்கெனத்தைப்பவை. ஆணித்தரமானவை. சமூகத்திருத்தத்திலும், தமிழுணர்ச்சியிலும் நக்கீரரைப் போன்றவர். வள்ளுவர் அறத்தை உலகியலோடொட்டிக் கூறினார். திருமூலர் அதனை ஆன்மவியல், யோகவியல்களுடன் இணைத்துக் கூறினார். சைவசித்தாந்தத்தின் தனிமுதல் நூல் திருமந்திரம், தமிழில் கடவுளியலுக்கும் அதுவே முதநூலாகும். குறளும் மந்திரமும் இரட்டை நூல்களெனலாம்.

ஆழ்வார் நாயனார் பக்தித் தோத்திரப் பாடல்கள் தமிழிலக்கியத்தின் ஒரு சிறப்பியல்புடைய பகுதியாகும். சங்க இலக்கியங்களிலும் சிலப்பதிகாரம் முதலிய நூல்களிலும் ஏழிசைபற்றி மிகுதியாகப் பேசப்படுகின்றது. அவ்வேழிசைக்கு இலக்கியமயமானவை இப்பந்திப்பாடல்கள் சம்பந்தர் தேவாரத்தில் மட்டும் 70 பண்களுக்குரிய அமைப்புக்களிலிருப்பதாகக் கண்ணுற்றனர். இக்காலவேளைகளில் மகேந்திரன் கடன்பாண்டியன் முதலிய அரசரும் எட்டாம் நூற்றாண்டில் பரலிந்தக நெடுஞ்சடையன் போன்ற அரசரும் தத்தம் சமயத்தை விட்டுச் சைவத்திற்கும் வைணவத்திற்கும் மாறியுள்ளனர்.

ஏழாம் நூற்றாண்டில் இத்தகைய மாற்றத்திற்கு இவ்விருநாயன்மாருமே காரணமாவர். அடுக்கி வந்த இன்னல்களை அசையாமற்றாங்கி இவர்கள் வளர்த்தது சமயம் மட்டுமன்றி இலக்கியமாகும். [22] வயதும் நீண்ட அனுபவமின்றியும் சிறந்த இலக்கியங்கள் உண்டென்பதற்குச் சம்பந்தரது பாடல்களே சான்றாகும். இவற்றால் அருளுணர்ச்சியும் பண்டே உள்ளத்தில் அமைந்து கிடக்கும் பண்புமே இலக்கியத் தோற்றத்திற்குப் பெருங்காரணம் என்பது புலப்படும். அப்பரது பாடல்களில் அறமும் உலகனுபவமும் மிகுதியாகக் காணப்படுமெனில் சம்பந்தரது பாடல்களில் இயற்கை வருணனை மிகுதியெனலாம்.

சைவத்தமிழ் இலக்கியங்களாய் மிளிரும் சம்பந்தரது பாடல்களிலே இயற்கை வருணனையின்பமும், இசைக்குறிப்புக்களும், பாவடிகளும் மிகவுடையன. எளிமையும், சொல்லணிப் பாடலும் இவர் தேவாரத்துள்

மிக்குள்ளன. வச்சிரநந்தி சங்கத்தூண்டுதலால் சமணர் எண்ணற்ற இலக்கியங்களை பார்த்துச் சமயத்தைப் பரப்ப முயன்றனர். அதற்கெதிராகச் சைவரும் செய்த முயற்சியே தேவாரப்பாடல்களும் 11 ஆந் திருமுறைப் பாடல்களுமென்னலாம். சமண எதிர்ப்புச் சம்பந்தரது பாடல்களில் மிகுதி. இவரது தேவாரக் குறிப்புக்களைக் கொண்டே அவ்வூரில் பிற்காலச் சோழர் கற்கோயில் கட்டியும் திருமுறையோதவும் ஏற்பாடு செய்தனர். இவ்விரு செயல்களுமே சைவம் அழியாமல் நின்றமைக்கும் வளர்ந்தமைக்குங் காரணங்கள். அவற்றிற்கு வித்திட்டன தேவாரவிலக்கியங்கள். [23.]

சுந்தரர் பாடல்கள் நிலையாமையையும் உலகத் துன்பத்தையும் மிகவாக வற்புறுத்துகின்றன. வரலாற்றுச் சான்றுகள் பொதிந்தன. சமயக்காழ்ப்பும் தெளிவாகக் காணப்படுகின்றது. வாழ்க்கையில் மிகவும் அடிபட்டமையால் அப்பர் சம்பந்தர் போன்று அவ்வளவு பாடல்களைச் சுந்தரர் எழுதமுடியவில்லை.24.

சைவத் தமிழ்பக்தி இலக்கியப் பரப்பில் மணிவாசகரின் திருவாசகமும் திருக்கோவையாரும் 8ஆம் திருமுறையிலடங்குவன. நாயக நாயகிபாவத்தில் பாடப்பட்டது. திருவாசகம் என்பது இலக்கிய வரலாற்றாசிரியர்களது கருத்தாகும். சிவனே திருவாசகத்தை எழுதியதாக அதன் வரலாறு கூறுகிறது. திருவாசகத்திற்கு உருகாதார் ஒரு வாசகத்திற்கும் உருகார். இராமலிங்க வள்ளலார் திருவாசகத்தைப் பாடினால் "நற்கருப்பஞ்சாற்றினிலே தேன் கலந்து பால் கலந்து செழுங்கனித் தீஞ்சுவை கலந்து ஊன் கலந்து உயிர் கலந்து உவட்டாமல் இனிப்பதுவே" என்று பாடுகிறார்.

சைவத்தமிழ் இலக்கிய வரலாற்றிலே பல்லவ மன்னரது காலத்தில் பக்தி இலக்கியங்கள் தோற்றம் பெற்றமைக்கான காரணங்கள் பிரதானமானவை. வாழ்க்கை நிலையாமையை அளவு கடந்து வற்புறுத்தியமை. உலகியல் இன்பங்களை இழிவுடன் ஒதுக்கியமை, துறவை வற்புறுத்தியமை, பெண்களை இழிவுடன் ஒதுக்கியமை. சமய வாழ்வையும் உலகியல் வாழ்வையும் ஒன்றோடொன்று தொடர்பற்ற இரு துருவங்களாக கொண்டமை, நடைமுறை வாழ்வுக்குப் பொருந்தாத கோட்பாடுகள் என்பன காரணமாகப் பக்தி இயக்கம் தோன்றியது. சைவத்தமிழ் இலக்கிய வரலாற்றில் சைவாலயங்கள் தோறுஞ் சென்று ஆலய வழிபாட்டினை மேற்கொண்ட போது பக்தி கனிந்த திருப்பாடல்களை இசையோடு கலந்து வழங்கியதன் மூலம் தமிழரின் பாரம்பரியக் கலைகள் அழிந்துவிடாமல் பேணப்பட்டது. தலமகிமை, பிரதேசமகிமை, அழகு என்பனவற்றையும் பொருளாக அமைத்துப் பாடிய உத்தியினாலும் மக்களது உள்ளங்களில் நிலவும் பிரதேச உணர்வைப் பயன் செய்து ஆலயங்களைப் போற்றவும் பேணவும் வழி செய்தது. புராண இதிகாசக் கதைகளைத் சைவத்தமிழிலக்கயங்களான பக்திப் பாடல்களில் இணைத்ததன் மூலம் சமய நம்பிக்கையும் சமய அறிவும் வழங்கப்பட்டன.

சங்ககால அகத்திணைமரபு, பல்லவர்கால பக்திப்பாடல்களில் சிற்சில மாற்றங்களுடன் இடம் பெற்றன. உலகியலின்பம் இறையின்ப பக்திக்கு வழி கோலும் "இறைக்காதல்" அன்புடன் வெளிப்படுத்தப்பட்டது. உலகியற் காதல் தெய்வீகக் காதலாகப் பரிணமிக்கிறது. ஆன்மீக வெளிப்பாடு, உணர்ச்சிப்பெருக்கு, எளிமை, இனிமை, ஓசைநயம் என்பன பக்திப்பாடல்களின் - சைவத்தமிழ் இலக்கியங்களின் தனிச் சிறப்புகளாகும். பதிகங்களாகப் பாடல்களமைந்தன. சமண பௌத்த மதத்துக் கொள்கைகளையும் அவர்களது போலி வேடங்களையும் தயவுதாட்சண்யமின்றி உக்கிரமாகக் கண்டனம் செய்தமை பக்தி இலக்கிய நெறியின் மிகப் பிரதான அம்சமாகும். சைவத்தமிழ் இலக்கியங்கள் அற்புதங்கள் பலவற்றை நிகழ்த்தியுள்ளன.

சந்துஷ்டி

மனநிறைவு: *நினைத்தது நடந்தாலும், நடக்காவிட்டாலும், நினைத்ததை அடைந்தாலும், அடையாவிட்டாலும், கவலைப்படாமல் இருக்கின்ற நிலை தான் சந்துஷ்டி*

நம்பி ஆரூரர்
(பா நாடகம்)

கவிஞர் தமிழ்மணி **அகளங்கன்**

(சுந்தரமூர்த்தி நாயனாரை சிவபெருமான் ஓலை காட்டி ஆட்கொண்ட சம்பவம், கவிதை நாடகமாக்கப்பட்டுள்ளது)

காட்சி I

இடம் : திருமண மண்டபம்

பாத்திரங்கள : சுந்தரர் கிழப்பிராமணர், மணப்பெண், சடங்கவி சிவாச்சாரியார், நரசிங்கமுனையரையர் (அரசன், இரு பிராமணர்கள், சபையோர்)

(திருமணச்சடங்குகள் நடைபெற்றுக்கொண்டிருக்கும் போது கிழப்பிராமணர் ஒரு பக்கத்தால் உள்ளே நுழைகிறார். நரை தாடி, கையில் தண்டு, வெள்ளாடை, திருநீற்றுப்பூச்சு)

கிழப்பிராமணர் : நிறுத்துங்கள்! நிறுத்துங்கள்!

சுந்தரர் : (எழுந்து கைகளை நீட்டி) நெற்றிக் கண்ணுடைய நிர்மலனை நினைவூட்டும் கற்றைச் சடையுடையீர்! கரத்திலே தண்டு கொண்டீர், முற்றும் வெண்ணீறு முகத்திலே ஒளிதிகழச் சற்றும் அகந்தையிலாச் சாந்தந் தவழ்முகத்தீர் இற்றைக்கு இங்கே எழுந்தருளப் பெற்றது யான் அற்றைப் பிறப்பில் செய் அருந்தவத்தின் பயன் தானோ பெரியவரே! பெரிதுவந்து வரவேற்றேன் எழுந்தருள்க இங்கே.

(ஆசனத்தைக் காட்டுகிறார்)

நரசிங்க முனையரையர்

(சுந்தரரை வளர்த்தவா) :ஆற்று நுரைபோன்ற அழகிய வெண்நரை போற்றுந் திருநீற்றால் பொன்னுடலை மறைத்து

அதிலே

சாற்றும் வெண்துகிலைத்

தரித்தீர் பெரியவரே,

ஏற்றதோர் பொழுதுவந்து

எய்தினீர் இங்கே

வருக! அமர்க.

சடங்கவி சிவாச்சாரியார்

(பெண்ணின் தந்தை) : மணவிழா நடக்கும் நேரம்

மன்றுக்கு வந்துள்ள

இணையிலாப் பெரியோய்!

இங்கே எழுந்தருள்க.

வாழப்போகும் இந்த வாழைக் குருத்துக்களை

வாழ்த்துங்கள் நன்றாய்.

கிழப்பிராமணர் : வாழ்த்துவது இருக்கட்டும்
வழக்குண்டு இவனோடு
வாக்குறுதி தனை மறந்து
மணக்கோலம் பூண்ட இது
யார்க்குறுதி தேடியோ
மணமகனே! ஆரூரா
இது செய்தல் தகுஞ்செயலா
என் வழக்கின் பின்பே
இது செய்தல் தகும், அன்றி
மன்வழக்கம் இதுவென்று
மணவாழ்க்கை தொடங்குகின்ற
நின்வழக்கம் நல்லதல்ல
நினைத்துப்பார் நடந்தவையை
நீ செய்தல் தகுஞ் செயலா

சுந்தரர் : வழக்கா! எனக்கா!
அப்படி ஏதுவும் உண்டேல்
அதற்கு முன் நானோ வீணே
இப்படிக்கோலம் பூண்பேன்
இதயத்தில் எதை நினைத்தீர்
செப்படி வித்தை காட்டும்
செயலுக்கா வந்து சேர்ந்தீர்
(கோபமாக)
ம் ..... கூறுங்கள்
உம் வழக்கை முடியாது
இம் மணத்தை யான்முடியேன்

கிழப்பிராமணர் : (புன்னகையோடு)
ம்.......... ம்.........
நீ என் அடிமை நீ
என் ஏவல் புரிவதன்றி இந்தப்
பெண் ஏவல் புரிவதென்றும்
பொருந்தாது அதை உணர்க.

சுந்தரர் : (பெரிதாகச் சிரித்து விட்டு)
அடிமை யாருக்கு யார் அடிமை.
பித்து பிடித்தவர் போல் பிதற்றுகின்ற பெரியவரே
பிராமணர்களுக்குப் பிராமணர் அடிமையாதல் - எந்தப்
பிறப்பிலும் இல்லை.
அங்கமெல்லாம் நரைவிழுந்தும்
அறிவிலே குழந்தை நீர்.
தண்டு கொண்டு நடந்து வந்து - என்னைத்

தொண்டு கொள்ளத் துடிக்கிறீரே
கண்டு கொள்ளும் என் வார்த்தை
காதைச் சரி செய்யும்
நானோர் பிறவிப் பிராமணன்
நான் யார்க்கும் அடிமையில்லை.
பித்துப் பிடித்ததோ பெரியவரே பிதற்றாதீர்.

கிழப்பிராமணர் : அப்பனே!
கத்திப் பேசினால்
சத்தியம் பொய்க்குமோ.
பித்தன் நானென்றால் ஆகட்டும்.
அன்றியும்
பேயன் நானென்றால் அதுவும் ஆகட்டும்.
இத்தனைநாள் உன்னை
ஏவல் கொள்ளாது இருந்த நான்
பித்தன் தான் - அன்றியும்
அடிமையோடு இச்சபையில்
அதிவாதம் புரிகின்ற
பேயனும் ஆகுவன்யான்.
எது எப்படி இருப்பினும்
இது இப்படி ஆகவேண்டும்
நீ என் அடிமை.
என் ஏவல் புரிவதற்கு
இப்போதே புறப்படு.

சுந்தரர் : சபையோரே! பெரியோரே! எத்தகை அநீதி இது.
அவைக்குதவாக் கதைபிதற்றும்
அறிவிலியின் வார்த்தையிலே
எதைக் கண்டீர். ஏன் மௌனம்.
பிறந்த நாள் தொடங்கி இங்கே
பேசும் இந் நாள் வரைக்கும்
எவர்க்கும் நான் அடிமையாக
இருந்ததும் உண்டோ.
சபையிலே வந்து நின்று
சத்திய வான்போல் சொன்னால்
எவையுமே மெய்த்திடுமோ.
என் வாழ்வு பொய்த்திடுமோ.

சபையிலுள்ள ஒருவர் : பெரியவரே!
ஆரூரனாம் இவரை அடிமை என்றும் அத்தொழில் புரிகவென்றும் அழைக்கின்றீர். அதற்கான ஏதேனும் அத்தாட்சி உண்டா?

கிழப்பிராமணா : ஆம்...ஆம்... இல்லாமலா
இவன் மட்டுமென்ன, இவனது
பரம்பரையே எனக்கு அடிமை
அத்தாட்சி இல்லாமல் அழைப்பேனா?
அடிமைச் சீட்டு, இங்கே இருக்கிறது.
பித்தனென்று என்னைப் பேசிடும் இவனின்முன்னே
பித்தனாய் ஆகிடவோ பெருஞ்சபைக்கு வந்தேன்யான்
எந்தனாய் விட்டான் இவன்
எத்தனை பிறவிகளில் எனக்கடிமை செய்தவன்
அத்தனையும் பொய்யென்று அகன்றுவிடப் பார்க்கின்றான்
விடுவேனா.... என் அடிமை இவன்
இவனை நான் நன்கறிவேன்
குற்றமாய்ச் சொல்லேன்
குடி குடி ஆட்கொண்டேன்

சுந்தரர் : (கோபமாக)
அடிமை ஓலை
அப்படியும் ஒன்றா
பழைய மன்றாடி போலும்
(சிரிக்கிறார்)
பொய்.......... பொய்........
சுத்தப்பொய்
சத்தியம் எதுவென்று இப்போது காட்டுகிறேன்.
வித்தகன் போல் வந்து வீண்வழக்குத் தொடுத்து
விழலுக்கு நீரிறைக்கும் வீரரே!
எங்கே அந்த ஓலை. எடும் பார்ப்போம்.
காட்டும் அந்த ஓலையை.

கிழப்பிராமணர் : அடிமை நீ. உன் ஆண்டவன் நான். அவ்வோலை பார்ப்பதற்கு அருகதை உனக்கில்லை கைகட்டி வேலை செய்யும் அடிமை, என்னிடம் கைநீட்டி ஓலை வாங்கத் தகுதியோ,
கொடேன் உன்னிடம்.
(சுந்தரர் பறிக்க முயல சபைக்குள் செல்கிறார் கிழப்பிராமணர் சுந்தரர் ஓலையைப் பறித்துக் கிழித்தெறிகிறார்)
முறையோ! இது முறையோ........!
மன்றுக்கு வந்த என் முனந்தனைப் பறித்தாய்
ஓலையா நீ கிழித்தாய் இல்லை இல்லை
உண்மையின் ஒழுக்கத்தின் காலைக் கிழித்தாய்
ஓலையைக் கிழித்தால் மட்டும்
ஓடுமோ மறைமை எங்கும்
ஓலையைக் கிழித்துவே உண்மைக்கு அத்தாட்சி

இவன் என் அடிமை
அல்லாது போனால் என் ஓலை செல்லாது போம் படிக்குக்
கிழிப்பானேன்.
அப்போதே அஞ்சினேன்
இப்போது செயலற்றேன்
தப்பேதும் நானறியேன்
சங்கரர் எது நீதி.

சபையோரில் ஒருவர் : முறையில்லா முறைதன்னை
முறையாக்க முயன்றுள்ள
முறையில்லா முதியவரே!
முறையாகக் கூறும்
எங்கே உம் இருப்பிடம்.

கிழப்பிராமணர் : இங்கு தான், அண்மையில் தான்
அருமறைகள் வளர்க்கின்ற
திருமுனிகள் வாழுமிடம்
அரோகரா ஒலி எழுப்பும்
அடியவர்கள் வாழுமிடம்
திருவெண்ணெய் நல்லூர் தான்
அது நிற்க.
ஓலையைக் கிழித்ததற்கு
ஒருவரோ இருவர் அல்ல
ஊரெல்லாம் சாட்சி
ஊரெல்லாம் சாட்சி.

சுந்தரர் (அமைதியாக) : வெண்ணெய் நல் லூர் தன்னில்
விரும்பி நீர் உறைவீர் ஆயின் - நீர்
எண்ணிய முடிப்பதற்கு எழுந்தங்கு சென்று நின்று
திண்ணமாய் ஆடும் - இந்த
தீநெறி வழக்கை.

கிழப்பிராமணர் : திருவெண்ணெய் நல்லூர் அன்றி
ஒருவேறு சபையே யேனும்
புனித நாள் மறையோர் முன்னர் போயினும்
புரியவன்யான் என் வாழக்கை.
நீ என் புரிந்தாலும் அடிமை ஆக்கி
ஆண்டு கொண்டன்றி வேறு
அகலேன் யான் அறிந்து கொள்க.

காட்சி II

இடம : நீதி மன்று 4 பேர் நீதிபதிகளாக அமர்ந்திருக்கிறார்கள்.

பாத்திரங்கள : சுந்தரர், கிழப்பிராமணர், நீதிபதிகள், சபையோர்.

கிழப்பிராமணர் : (சபை முன் நின்று கொண்டு)
ஆரூரன் இவன். என் அடிமை.
காட்டிய அடிமைச் சான்றைக்
கைப்பற்றிக் கிழித்துப் போட்டான்.
வாதலால் உண்மை தோன்றாது
என்பர் முன்னோர்கள்.
ஆதலால் உம்முன் வந்தேன்
இது எந்தன் வழக்கு.

நீதிபதி ஒருவர் : ஆரூரரே!
இதற்கென்ன பதில்

ஆரூரர் : நான் ஆதி சைவன் - யாவரும்
அறிய நான் ஓர் அந்தணன்
அந்தணன் அடிமை ஆதல்
அருமறை வழக்கோ.

நீதிபதி ஒருவர் : மறையவர் அடிமை ஆதல்
மாநிலந் தன்னில் இல்லை
முறையல சொன்னீர் ஐயா!
முன்னென்றும் கண்டதில்லை.

கிழப்பிராமணர் : வழிவழியாய் வருவதன்றோ.
வழக்குஇவன் - தன்
வழிவந்த ஓலையைத் தான் வைத்திருந்தேன்
கிழிந்து விட்டான் - இவன்தான்
தந்தையின் தந்தை தந்த
சான்றோலை அது தான்.
விந்தையே அல்ல பெரியீர் இவன்
முந்தையே கிழித்தும் மூலவோலையை அல்ல
படியோலை - மூலவோலை
என் கைதனில் உண்டு
கிழிப்பான் என்றே
படியோலைக் காட்டிப் பார்த்தேன் - அப்
படியேதான் கிழித்தும் விட்டான்.
என் அடிமை பற்றி எனக்கா தெரியாது
விரும்பினால் இவன் தன் தந்தை
அவர் தந்தை எழுதித் தந்தென்
இருப்பிலே இருந்த ஓலை
காட்டினால் இழுத்தெடுத்துக்
கிழிப்பது வழக்கோ - உலகம்
பழிப்பதும் இவையோ.

நீதிபதி ஒருவா் : ஆருரரே! இவா் உம்மை
அடிமை என்று நிரூபித்தால்

சுந்தரா் : அனைத்து நூல் உணா்ந்தீா் - ஆதி
சைவன் என்று அறிவீா் - என்னைத்
தனக்கு ஓா் அடிமை என்றிவ்
வந்தணா் சாதித்தாரேல்
எனக்கு என் சொல்லலாகும்.
இது பெரும் மாயையாகும்.
கணக்கு இது விதியென்றன்றோ
கருதலாம்.

நீதிபதி ஒருவா : பெரியவரே!
அடிமை இவன் என்று சொன்னீா்
அதனை நீா் சொல்லால் அன்றி
அத்தாட்சிப் படுத்த வேண்டும்.
ஆட்சியில் ஆவணத்தில்
அன்றி மற்று அயலாா் தங்கள்
காட்சியில் மூன்றில் ஒன்று
காட்டினால் நம்புவோம் யாம்.

கிழப்பிராமணா் : முன் இவன்
மூட்சியில் கிழித்த ஓலை படியோலை
மூல ஓலை மாட்சியில் காட்ட வைத்தேன்
ஒரு தலை அன்றி - நீதி
ஒழுங்குடன் சொல்வீா் ஆயின்
கெடுதலை அறியா யானும்
காட்டுவன் மூல ஓலை.

நீதிபதி (ஒருவா்) : நீதி வழுவா நெறிமுறையில் மன்றமைத்தோம்
நீதியினால் ஏதேனுஞ் செய்தறியோம்.
காட்டுக நீா்.
(ஓலையைக் கிழப் பிராமணா் எடுத்து நீட்ட நீதிபதி வாசிக்கிறாா்)
அருமறை நாவல் ஆதிசைவன் ஆரூரன் செய்கை பெருமுனி வெண்ணெய் நல்லூா்ப் பித்தா்க்கு யானும் என்பால் வருமுறை மரபுளோரும் வழித்தொண்டு செய்தற்கு ஓலை இருமையால் எழுதி நோ்ந்தேன். இதற்கிவை என் எழுத்து.
ஆம்............ ஆம்
சாட்சிக் கையெழுத்தெல்லாம்
சரியாய்த் தான் இருக்கிறது
(மற்றவா்களுக்கும் காட்டி யோசிக்கிறாா்)
ம்..... ம்.....
இன்னும் ஒன்றுண்டு
ஆரூர! .... இவை

உம் தந்தையின் தந்தை
கை எழுத்தா என்று கவனமாய்ப்
பார்த்துச் சொல்லும்.

கிழப்பிராமணர் : (கோபமாக)
இன்னும் இவனோ இவ்வோலை காண்பான்.
முன்னும் கிழித்த முறை மறந்து போனீரோ
பாட்டனின் எழுத்து வேறு
பார்ப்பதற்கு உண்டாம் ஆயின்
காட்டுக, ஒப்பு நோக்கிக்
காணட்டும் இந்த மன்று
அது அமையும் அன்றி
அடிமையாம் இவன் தன் சாட்சி
அடுக்குமோ. என்ன நீதி.

நீதிபதி ஒருவர் : ஆம்............... ஆம்............... அதுதான் சரி
அப்படியே செய்வோம்
(பாட்டனின் கையெழுத்து தருவிக்கப்பட்டு ஒத்துப் பார்க்கப்படுகின்றது)
இரண்டும் ஒத்திருக்கின்றது.
இனிச் சொல்ல ஒன்றும் இல்லை.
நான்மறை முனிவனார்க்கு
நம்பி ஆரூரர் தோற்றீர்.
பான்மையில் ஏவல் செய்தல் பணி.

சுந்தரர் : விதிமுறை இதுவே யாகில்
யான் இதற்கு
இசையேன் என்னல் இசையுமோ
இன்றே இசைந்தேன்.

நீதிபதி ஒருவர் : ஆவணந் தன்னில் உம் ஊர்
இவ்வூராய் இருக்கக் கண்டோம்
ஆயின் உம்
திருமிகு இல்லம் எங்கே செப்புக.

கிழப்பிராமணர் : என்னை
ஒருவரும் அறியீர் ஆயின்
என்பின்னே வருக.
(யாவரும் செல்கின்றனர்)

காட்சி III

இடம் : கோயில்

பாத்திரங்கள் : சுந்தரர், கிழப்பிராமணர், நீதிபதிகள், சபையோர் (கிழப்பிராமணர் சிவன் கோவிலுக்கு அழைத்துச் செல்கின்றார்)

நீதிபதி ஒருவர் : எங்கள் தம்பிரான் கோயில் புக்கது
என் செயல். (பிராமணர் மறைகிறார்)

சுந்தரர் : (சிவபெருமானை இடப வாகனத்தில் கண்டு கைகூப்பி வணங்குகிறார்)
மன்றுளீர் செயலோ - என்னை
வலிய ஆட்கொண்ட செய்கை
என்றும் உன் அடிமையாகும்.
இன்பத்தை மறந்து போனேன்.
நன்றிதை அறியாப் பாவி
நாயினுஞ்சிறியேன் ஆகி
அன்று நான் வாதில் நின்றேன்
அவதூறு பலவுஞ் சொன்னேன்
அடியவன் எனை ஆட்கொண்டு
அரியநற் காட்சி தந்தாய்.

சிவபெருமான் : (அசரீரியாக)

மற்று நீ வன்மை பேசி வன்தொண்டன் என்னும் நாமம் பெற்றனை நமக்கும் அன்பிற் பெருகிய சிறப்பின் மிக்க அற்சனை பாட்டேயாகும். ஆதலால் மண்மேல் நம்மைச் சொற்றமிழ் பாடுக.

சுந்தரர் : வேதியன் ஆகி என்னை வழக்கினால் வெல்ல வந்த ஊதியம் அறியாதேனுக்கு உணர்வு தந்து உய்யக் கொண்ட கோதிலா அமுதே! இன்றுன் குணப்பெருங் கடலை நாயேன் யாதினை அறிந்து என் சொல்லிப் பாடுகேன்.

சிவபெருமான் : முன்பெனை நீ
பித்தன் என்றே பேசினை
ஆதலால் - என்னைப்
பித்தா என்றெடுத்துப்
பிறையறப் பாடுக.

சுந்தரர் : பித்தாப் பிறைசூடிப் பெருமானே
அருளாளா
எத்தால் மறவாதே நினைக்கின்றேன்
மனத்துன்னை
வைத்தாய் பெண்ணைத் தென்பால்வெண்ணெய்
நல்லூர் அருட்துறையில்
அத்தா உனக்காளாய் இனி
அல்லேன் எனலாமோ.

முற்றும்

திருவாசகத்தில் புராணங்களின் செல்வாக்கு

தமிழ்மாமணி, தமிழருவி
த.சிவகுமாரன் B.A.(Hons)

தேனினுமினிய திருவாசகத்தை எட்டாந் திருமுறையாகப் போற்றும் நாம், அன்பினால் ஆண்டவனை எட்டும் வகையில் வழிகாட்டும் அதனாழத்தை, அருட்திறத்தை பல வகைகளில் ஆய்ந்து பயன்கொள்ளல வேண்டும். திருவாசகம் கொண்டுள்ள பெருமைகள் பலப்பல. உலகியல் அரங்கேற்றம் காணாத நூல், இறைவனே வந்து பரிசாகப் பெற்றுச் சென்ற நூல், மனிதன் சொல்ல இறைவன் எழுதிக் கொண்ட நூல் என்பதுடன் ஞானஅழுகை எவ்வாறிருக்கும் என்பதனை உலகிற்கு தெளிவுபடுத்திய நூல் இது எனலாம்.

கடையூழி வருந்தனிமை கழிக்கவன்றோ
உடையான் உன் வாசகத்தின் ஒரு பிரதி கருதியதே

என்ற பின் வந்த அருள் வாக்குகளெல்லாம் அதன் அவசியத்தை, ஆண்டவன் ஏற்றருளிய அழகையெல்லாம் எடுத்தியம்புவன. உலகியற் தேவைக்காக நாம் நித்தமும் அழுவது 'ஊன அழுகை'. இறைதேவைக்காக மணிவாசகர் அழுதது 'ஞானஅழுகை'. அதுவே திருவாசகம். இறைமீது கொண்ட உரிமை உணர்வு காரணமாக ஏற்பட்ட உணர்ச்சிகளை திருவாசகம் நெடுகக் காணலாம். இகழ்ச்சி, ஏக்கம், கழிவிரக்கம், அழுகை, இறுமாப்பு, தெளிவு என பற்பல உணர்ச்சிகளின் கலவை பக்தியுணர்வில் புகுந்தால் எப்படியிருக்கும் என்பதை திருவாசகத்தில் காணலாம்.

சமயகுரவர் நால்வருள் முதல் மூவர் சற்று வேறு நிலைப்பட்டவர்கள். அதிலும் சம்பந்தரும் அப்பரும் சைவசமயத்தை உலகில் கோலோச்சும் சமயமாக மாற்றிவிட ஓர் பக்தி இயக்கமே நடத்தியவர்கள். அவர்கள் பாடல்கள் எங்குமே பொதுவாக ஓர் முறைமையை கொண்டிருக்கும்.

1. இறைவனின் புராணச்சிறப்புக்கள்,
2. தலவர்ணனை
3. அவ்விறைவனை வழிபடின் பெறும் பயன்கள்

என்பன விரவிக்கிடப்பதைக் காணலாம். புராணக் கதைகளில் வரும் சிவனின் அருட்சிறப்புக்களை மக்களுக்கு எடுத்துக்கூறி அவர்களை வழிப்படுத்துவதை ஒரு உத்தியாகவே அவர்கள் கையாண்டுள்ளார்கள்.

ஆனால் மணிவாசகரோ!, இந்நிலைக்கு மாறுபட்டவர், குருந்த மர நிழலில் தன்னை ஆட்கொண்டு பின் விட்டுச் சென்ற பரமனை நினைந்து நினைந்து, பதை பதைத்து இழந்த ஒப்பற்ற மாணிக்கத்தை மீண்டும் கைக்கொண்டு விடவேண்டும் என்று தீராத தாகத்துடன் தேடியலைந்தவர்க்கு முன்னவர்களைப் போல 'இயக்கம்' நடத்தும் எண்ணம் இல்லை. 'தன்னிலை, ஆண்டவன் பெருமை' இவற்றையே மீண்டும் மீண்டும் சொல்லியழுதவர், தன்னையுமறியாமல் ஆங்காங்கே சிவனின் புராணச் செய்திகளை, பெருமைகளை தன் பாடல்களில் பொதிந்து சென்றுள்ளார். ஒப்பிடின், முன்னவர்கள் குறிப்பிட்ட புராணச் செய்திகளுடன் இவர் செய்திகள் மிகக் குறைவே. ஆயினும் அரியதை, உரியதை குறிப்பிட்டுள்ளார். அவற்றுள் சிலவற்றை நோக்குவோம்.

திருமால், பிரம்மன் அடிமுடி தேடிய புராணச் செய்தியை எடுத்தாளாதவர்கள் மிகக்குறைவு. அதனை மணிவாசகர் அழகுறப் பயன்படுத்துகிறார். கல்வி, செல்வம் இரண்டின் பெருமையால் ஆணவம் கொள்வோர் இறைவனைக் காணார், பக்தியொன்றினால் தேடுவோர்க்கே இறைக்காட்சி சாத்தியம் என்பதனை குறிப்பிட, அவ்வரலாற்றை நுட்பமாகப் பயன்படுத்துகிறார். திருத்தெள்ளேணம் முதலாம் பாடலில்,

திருமாலும் பன்றியாய்ச்
சென்றுணராத் திருவடியை
உருநாமம் அறியவோர்
அந்தணனாய் ஆண்டு கொண்டான். என்றுரைப்பார்,

திருவெம்பாவையிலும் இச்செய்தியை ஐந்தாம் பாடலில் மீளக் குறிப்பிடுவார்.

மாலறியா நான்முகனும் காணா
மலையினைப் போலறிவோம். .

காலத்தால் பிந்திய நூல் திருவிளையாடற்புராணம். மதுரையில் நடந்த, சிவனின் அருட்செயல்களை அழகாகக் கூறுவது, அதில் வரும் புராணச் செய்திகளை திரட்டித்தரும் திருவாசகப்பாடல் ஒன்றைக் காண்போம்.

பண்டாய நான்மறையில் மூன்றாம் பாடலில்

காட்டகத்து வேடன் கடலில் வலைவாணன்
நாட்டிற் பரிபாகன் நம்வினையை – வீட்டி. என்று அமைகிறது.

இப்பாடலில் 'நாட்டிற் பரிபாகன்' ஆக சிவனான வரலாறு மணிவாசகர் வாழ்க்கையில் நடந்தது. அகச்சான்றாக தன் வரலாற்றையும் தருகின்றார். இதனால் மணிவாசகர் காலம் அருளாளர்கள் வரலாற்றில் பிற்பட்டதாகக் கொள்ளவும் இடமுள்ளது.

பெரியபுராணம் முதலாக பல நூல்கள் சிலாகித்து பேசும் இன்னொரு வரலாறு கண்ணப்பருடையது. ஆதி சங்கர் சொல்வார்,

பக்திஹிம் நகரோத்யகோ:
வனசரோ பக்தா வதம் சாயதே:.:
'பக்தி எதைத்தான் செய்யாது, ஒரு வேடன்
உயர்ந்த பக்திமான் ஆனானே! என்பார்.

பக்தியின் செயல்வல்லமை சொல்ல வந்த பட்டினத்தடிகளும் மூன்று அருட்செயல்களைக் குறிப்பிடுவார்.

'வாளால் மகவரிந்தூட்டியது, மாது சொன்ன சூளால் இளைமை துறந்தது, நாளாறில் கண்ணிடந்தப்பியது' என்பனவே அவை. அவற்றுள் மாணிக்கவாசகருக்கு உயர்வாகத் தோன்றியது 'கண்ணிடந்தப்பியதோ' என்னவோ?

'கண்ணப்பன் ஒப்பதோர் அன்பின்மை
கண்டபின். (திருக்கோத்தும்பி - நாலாம் பாடல்)

திருவம்மானை எட்டாம் பாடலில், திருக்கேதாரத்தில் கௌரியம்பாள் பக்தியால் பரமனை பூசித்துப் பெற்ற பேற்றை,

'பெண் சுமந்த பாகத்தன், பெம்மான்.' என்றும்

திருவுந்தியாரில் முதலாம் பாடலில் முப்புரங்கள் தகனமானவாற்றை 'ஆணவம் கொண்டார் அழிவர்' என்பதை சுட்டியுரைக்கப் பயன்படுத்துகிறார்.

'வளைந்தது வில்லு விளைந்தது பூசல்
உளைந்தன முப்புரம் உந்தீ பற
ஒருங்குடன் வெந்தவா றுந்தீபற' என்பார்.

வில்வளையும் வேகத்தையும் அம்பு புறப்படும் அம்சத்தையும் மேற்சொன்ன பாடலின் ஓதும் ஓசையழகில் காண்பது ஓதுவார்க்கு இன்பமளிப்பதேயாகும்.

திருவாசகத்தின் ஒரு பாடலிலேயே பல புராணச் செய்திகளை காணக்கூடியவாறு அமைந்துள்ள பாடல் திருபொற்சுண்ணத்தின் பதினெட்டாம் பாடலாகும். பிரமன் தலையைச் செண்டாக வைரவர் கொண்டமையும், தக்கயாக நிர்மூலத்தில் சூரியனின் பற்கள் உடையுமாறு வீரபத்திரர் செய்தமையும், தாருகாவனத்து முனிவர்கள் ஏவிய யானையை சிவன் கொன்று தோலினைப் போர்த்தமையும் மார்கண்டேயருக்காக யமசங்காரம் செய்தமையும், முப்புரங்களை தகனம் செய்தமையும் இப்பாடலில் குறிப்பிடப்படுகின்றன. தன் வழமைக்கு மாறாக மணிவாசகர் ஒரே பாடலில் எல்லாவற்றையும் குறிப்பிடுவது இங்கே தான்.

''அயன்தலை கொண்டு செண்டாடல் பாடி
அருக்கனை எயிறு பறித்தல் பாடி
கயந்தனை கொன்றுரி போர்த்தல் பாடி
காலனைக் காலால் உதைத்தல் பாடி
இயைந்தன முப்புரம் எய்தல் பாடி
ஏழையடியோமை யாண்டு கொண்ட
நயந்தனைப் பாடி நின்றாடி யாடி
நாதற்குப் பொற்சுண்ணம் இடித்து நாமே.

ஏலவே நான் குறிப்பிட்டது போன்று மணிவாசகர் புராணச் செய்திகளை தன் பாடல்களில் பயன்படுத்தியமை மிகக் குறைவே. அவ்வாறு பயன்படுத்திய செய்திகளிலும் இரண்டு பண்புகளை முக்கியமாகக் குறிப்பிடும் வரலாறுகளைத் தெரிவு செய்தே பயன்படுத்தியிருக்கிறார், என்பது கூர்ந்து நோக்கின் புலனாகும்.

அவை வருமாறு,

1. பக்தி ஒன்றினாலேயே இறைவனை அடையலாம்.
2. ஆணவம் கொண்டு சிவநிந்தனை செய்வோர் யாராயினும் அவர்கள் அழிவார்கள்.

என்பனவே அவையாகும்.

தன்நிலை விளக்கமாக இறைவனை நோக்கி மணிவாசகர் அழுத 'ஞானஅழுகையின்' வெளிப்பாடான திருவாசகத்தில் உலகம் பயன்பெற அவர் உரைத்த புராணச் செய்திகள் சிலவேயாகினும் அவை எம் இறையியல் வாழ்க்கையில் செல்வாக்குச் செலுத்தி பக்தி நெறியில் எம்மை நிற்கச் செய்வதாக.

தேவ அட்ட மங்கலங்கள்	எண்வகை மணங்களுமெவை?
1.கண்ணாடி	1.பிரமம்
2.இடபம்	2.தெய்வம்
3.தீபம்	3.ஆரிடம்
4.ஸ்ரீ வற்சம்	4.பிரசாபத்தியம்
5.இரட்டைச்சாமரம்	5.சாந்தருவம்
6.சங்கு	6.ஆசுரம்
7.ஸ்வத்திகம்	7.இராக்கதம்
8.பூரணகும்பம்	8.கைகாசம்

சிவதாண்டவம்

நாட்டியக்கலைமாணி, பரதகலாவித்தகர், நிருத்தியவாணி
நாட்டியஎழில், நாட்டிய கலாரத்னா.
திருமதி. சூரியயாழினி வீரசிங்கம்
நிருத்திய நிகேதன நுண்கலைக்கல்லூரி

"குனித்த புருவமும் கொவ்வைச் செவ்வாயும் பூத்த குமிழ் நகையும் ஆகாய கங்கையால் பனித்த சடையும் பவளம் போன்ற திருமேனியும் அம்மேனியின் அளகிற்கு மெருகூட்டும் வெண்ணீறும் இனித்தமுடை யெடுத்த பொற்பாதமும் கண்டுகளிக்கும் பேறு கிட்டுமானால் இவ்வுலகில் எத்தனை முறை வேண்டுமாயினும் பிறக்க ஆவல் கொண்டுள்ளேன்" என தில்லை அம்பலக் கூத்தப் பிரானின் ஆனந்த தாண்டவத்தை கண்ணுற்று மெய்மறந்து பாடுகிறார் அப்பர் சுவாமிகள்.

நாம் செய்யும் நிறுத்தத்திற்கு பொருள் இல்லாமல் இருக்கலாம். ஆனால் உலகப் பொருள்கள் அனைத்தும் தன் உருவானவனுமான எம்பெருமான் நிறுத்தம் செய்யப்புகுந்தால் ஆயிரம் ஆயிரம் கருத்துக்கள் தாமாகச் சென்று அந்நடனத்தை சரண்புகாவோ! ஆமாம் எம்பெருமான் செய்யும் நிறுத்தத்தில் அரிய பொருள்களைக் கண்டு ஆன்றோர் பலர் விளக்கம் தந்துள்ளனர்.

படைத்தல், காத்தல், அழித்தல், மறைத்தல், அருளல் ஆகிய ஐந்தொழில்களையும் புரியும் பொழுது எம்பெருமானின் மனதில் பொங்கி எழும் ஆனந்த வெள்ளமே தாண்டவமாக பரிணமிக்கிறது.

ஐந்தொழில்களையும் சிவபிரானே செய்கின்றார் என்பதை விளக்கும் அற்புத வடிவமே நடராஜ மூர்த்தம் ஆகும். இக்கருத்தை திருமூலர் பின்வருமாறு கூறுவர்.

காளியோடாடிக் கனகா சலத்தாடிக்
கூளி யோடாடிக் குவலயத்தே ஆடிக்
நீடிய நீர் தீ, கால் நீள் வானிடையாடிக்
நாளுற அம்பலத்தே ஆடும் நாதனே

என திருமூலர் தனது திருமந்திரத்தில் கூறுகின்றார்.

சிவபிரானே பஞ்சபூத நாயகனாக விளங்குகின்றார். பஞ்சகிரிகைகள் (ஐந்தொழில்கள்) அவனே செய்கின்றார். திருக்காஞ்சியில் நிலமாகவும் திருவானைக்காவில் நீராகவும் திருவண்ணாமலையில் தீயாகவும் திருக்காளத்தியில் காற்றாகவும் திருத்தில்லையில் ஆகாயமாகவும் நின்று அருள் புரிகின்றார். மேலும் இறைவன் ஊன்றிய பாதம் நிலத்தையும் முடியில் உள்ள கங்கை நீரையும் இடக்கையில் ஏந்திய அக்கினி தீயையும் விரிந்தசடை காற்றையும் திருவாசியில் நின்று எழும் பிரபைவிசும்பையும் சுட்டுவதாக கொள்ளலாம் அதனால் இறைவன் பஞ்சபூத நாயகன் என பெயர் பெறுகின்றான்.

சிவனுடைய நடராஜ வடிவத்தில் வலது பாதம் அபஸ்மாரபுருஷன் எனப்படும் முயலகன் மீது ஊன்றிய நிலையிலும் இடது பாதம் தூக்கிய நிலையிலும் காணப்படும். பின் வலது கையில் உடுக்கையும் பின் இடது கையில் தீயும் உள்ளன. முன் வலக்கரம் அபயகரமாகவும் முன் இடக்கரம் வீசுகரமாகவும் விளங்குகின்றது. உடுக்கை ஏந்திய கை படைத்தல், அபயகரம் காத்தல், தீ ஏந்திய கை அழித்தலையும், ஊன்றிய பாதம் மறைத்தலையும் குஞ்சிதபாதம் (தூக்கிய திருவடி) அருளலையும் சுட்டி நிற்கின்றன.

இதனையே கீர்த்தனை ஆசிரியர்களிலே முத்துத்தாண்டவர்.

நிருத்தம் செய்தாரே ஐயர் சச்சிதானந்த நிருத்தம் செய்தாரே
நிருத்தமான மன்றுள் சிவசிதம்பரநாதன்
தித்திமி திமிதிமி திக்கிடத்திக் கிடகிட தித்திரு
தத்திமி திமிதத் ததிங்கிண தொம் என..

எனவும் ஆடவெடுத்த பாதம் எம்மை ஆளவெடுத்த எனவும் கூறுகிறார். மாரிமுத்தாப்பிள்ளை.

"காலை தூக்கி நின்றாடும் தெய்வமே என்னை கைதூக்கி ஆள் தெய்வமே ...." எனவும் கோபால கிருஸ்ண பாரதியார்.
"நடனம் ஆடினார் வெகு நாகரீகமாகவே
கனக சபையில் ஆனந்த (நடனமாடினார்) எனவும்
பாபநாசவம்சிவன்

கொஞ்சும் சதங்கை கலீர் கலீர் என
குழவி இளம்பிறை பளீர் பளீர் என
நஞ்சம் தவளும் நீல கண்டமும் மின்ன – ஒரு
நங்கை கங்கை சடையில் குலுங்க
நடமாடும் எனவும் பாடியுள்ளார்.

இவ்வாறு உருக்கமாகப் பாடியுள்ள கீர்த்தனைகளை வேறு மொழிகளில் காண்பது அரிதாகும்.

சிவம் என்றும் அழியாத நித்தியமான உணர்வாகும். காட்சியாகவும் அமைதல் சிவநடனத்தினால் புலப்படுத்தப்படுகிறது. சிவனை பொருளாகக் காணல் உணர்வாகக் காணல் என்றவாறு மலங்களால் சூழப்பட்ட ஆன்மாக்கள் வேறு வேறாக அறிகை கொள்ளல் சிவதாண்டவத்தில் பின்வருமாறு இடம் பெறுகிறது.

பொருளாகக் காணல் - சிவனின் நடன சிற்பத்தை காணல்
உணர்வாகக் காணல் - சிவனின் ஆடல் மனஎழுச்சிகளை மனதில் அமைத்தல்

சிவனின் நடனத்தை மனதிலே பிரதிநிதித்துவப்படுத்தும் போதும் அதனை தியானத்தின் வழியாக மேலும் மேலும் உள்ளத்தில் வடிவமைப்புச் செய்யும் பொழுதும் மீள் பிரதிநிதித்துவப்படுத்தும் போதும் மீநிலை உணர்வுகள் தோன்றுவது பாசுரங்களில் குறிப்பிடப்பட்டுள்ளது.

அண்டசராசரங்கள் முழுவதையும் அந்த ஆடல் தழுவி நிற்கின்றமையை மீநிலை புலக்காட்சி அனுபவத்தின் மூலம் காரைக்கால் அம்மையார் தான் கண்ட காட்சியில் தெரிவிக்கின்றார். அதாவது.

இறவாத இன்ப அன்பு வேண்டி பின்.
அறவா நீ ஆடும் போது உன்
அடியின் கீழ் இருக்க வென்றா என பாடியுள்ளார்.

சிவநடனம் என்ற எண்ணக் கருவானது தனிநடனம் என்ற கண்ணோட்டத்தில் ஆராய்ந்து முடிவு பெறத்தக்கது அன்று. இது ஒரு தொகுப்பு நிலையான எண்ணக்கரு. சைவசித்தார்ந்தம், சைவஉளவியல், சைவஅறிக்கையியல், சைவப்பண்பாடு, மறைஞானம் புலன்களின் தொகுப்பில் சிவதாண்டவத்தின் விரிவை நோக்க வேண்டியுள்ளது.

பரதநாட்டியம் என்ற எண்ணக்கருவை ஏனைய ஆடல் வடிவங்களிலும் மேம்பட்டது என தமிழ் மரபிலே காரணமாக கூறப்படுகின்றது. அறிவையும் உணர்வுகளையும் கடந்த அதீத அழகியல் இந்துமரபில் ஆழமாக வேரூன்றி உள்ளது. தமிழ் பக்தி இலக்கியங்களில் சிவனின் ஆடல் பற்றி செய்திகள் தொகுத்து நோக்கும் போது அவை தெய்வீக பேருண்மை கொண்ட அழகியல் சிந்தனைகளை உள்ளீடாகக் கொண்டிருத்தல் தெளிவாகிறது.

புலன்களை அடிப்படையாகக் கொண்ட அழகியல் நுகர்ச்சி புலன்களை கடந்த அழகியல்

நிகழ்ச்சியாக அமைவதை இந்து அழகியலில் காணமுடியும். காமத்தினால் உண்டாகும் நடனங்களை காமவிடுப்புக் கருவி ஆக்கி சிவநடனத்தின் பேருண்மையாகிறது. சிவநடனம் தெய்வீகத்தையும் ஆத்மீகத்தையும், முத்திநெறியையும் அறிவிக்கும் ஆடல் செயல் முறையை தன்னகத்தே கொண்டுள்ளது. முக்தி நெறிக்கு தயார்ப்படுத்தல் ஓர் அழகியல் வடிவமாக அது அமைகிறது. சிவனை மெய்ப்பொருளாகக் கொண்ட பரதநாட்டியம் முத்திநெறிக்கு ஆத்மீக உணர்வுகளை உள்ளத்தில் ஏற்படுத்துகிறது. கலையின் உட்பொருளே உண்மையான சிவமாயிற்று சிவமே அழகாயும் ஆனந்தமாயும் உண்மையாயும் அமைந்தது.

ஆனந்தம் ஆடரங்கு ஆனந்தம் பாடல்கள்
ஆனந்தம் பல்லியம் ஆனந்தம் வாக்சிகம்
ஆனந்தம் ஆக அகில சராசரம்
ஆனந்தம் ஆனந்தம் கூத்து கந்தானுக்கே

என ஆடலின் அழகு விளக்கப்படலாயிற்று.

இதனையே பல்லவர் காலத்தில் தோன்றிய நாயன்மார்கள் தமது தேவார திருவாசகப் பதிகங்களின் வாயிலாக எடுத்தியம்புகின்றனர். சிவபிரானின் ஐந்தொழில்களும் ஆனந்த நடனத்துடன் நடந்தேறுகின்ற அனுபூதி அனுபவம் பல சந்தர்ப்பங்களில் விதந்துரைக்கப்படுகிறது. “நட்டப்பெருமானை நாளும் தொழுவோமே” என சம்பந்தரும் அதிசயம் போல நின்று அனலவி ஆடும்” என்று நாவுகரசரும் “கருத்தாடு கரத்தில் தமருகமும் ஏரி அகழும் கரிய பாம்பும் பிடித்தாடி புலியூர் சிற்றம்பலத்தெம் பெருமான்” என சுந்தரரும் பாடி அருளியமை குறிப்பிடத்தக்கது.

தில்லையின் சிறப்பு சிவனின் ஆடலுடன் தொடர்புபடுத்தப்படுகிறது. தில்லையில் நடராஜர் எழுந்தருளிய சிற்சபை எனவும் சிற்றம்பலம் எனவும் திருமஞ்சனம் கொள்ளும் சபை கனகசபை எனவும் பொன்னம்பலம் எனவும் ஊர்த்துவ தாண்டவமூர்த்தியாக எழுந்தருளியிருக்கும் சபை நிறுத்தசபை எனவும் உற்சவமூர்த்திகள் எழுந்தருளி இருக்கும் சபை தேவசபை எனவும் ஆயிரங்கால் மண்டபம் உள்ள சபை இராசசபையாகவும் ஐந்து திருச்சபைகள் தில்லையிலே காணப்படுகிறது. தில்லை என்பது புலியூர் பெரும்பற்றப்புலியூர் என்ற பெயர்களாலும் அழைக்கப்படும்.

மானாட மழுவாட மதியாட புனலாட மங்கை சிவகாமியாட
மாலாட நூலாட மறையாட திறையாட மறைதந்த பிரமன் ஆட
கோன் ஆட வானுலகக் கூட்டம் எல்லாம் ஆட குஞ்சரமுகத்தான் ஆட
குண்டலமிரண்டுமாட தண்டை புலியுடை ஆட குழந்தை முருகேசன் ஆட
ஞானசம்பந்தரோடு இந்திரன் பதினெட்டு முனிபட்ட பாலகுருமார் ஆட
நரைதும்பையருகாட நந்தி வாகனமாட நாட்டியப் பெண்கள்
ஆடவினை ஓட உன்னைபாட என்னை நாடி இதுவேளை விடுதோடி

ஆடி வருவாய் நேசனே சிவகாமி நேசனே எனை ஈன்றதில்லை வாழ் நடராசனே” என தில்லையோடு தொடர்புபடுத்தி தில்லை வாழ் நடராஜப் பெருமானின் ஆடல் பற்றி கூறப்படுகின்றது.

தில்லையில் ஆடும் அம்பலக் கூத்தரின் நினைவுகளை சைவநாயன்மார்களும் அடியார்களும் பல வண்ண அனுபூதி நிலைகளில் விளக்கி உள்ளனர். அவற்றின் தொடர்ச்சியாக பிரம்மா, விஸ்ணு, சிவன் ஆகிய முப்பெருந்தெய்வங்களின் உறைவிடமாக தில்லை கருதப்படுகிறது. பரதநாட்டியக்கலை நடராஜ வழிபாட்டோடு இணைந்து வளர்ந்தது. முறைமை சார்ந்த நாட்டியக்கல்வி மரபும், முறைமை சாரா நாட்டியக்கல்வி மரபும் பரதநாட்டியக் கலையை வளர்க்க துணை செய்தன. சிதம்பரத்தை அடியொற்றி இருந்த இசை மரபுகளும் பரத நாட்டிய வளர்ச்சிக்கு உதவி செய்தன. கர்நாடக இசைக்கும் பரத நாட்டியத்திற்கும் அடித்தளமாக இருந்த முத்துசுவாமி தீட்சிதர் தில்லை நடராஜரது ஆடல் கோலங்களை பாடலினால் விளக்கியுள்ளார். “ஆனந்த நடனப் பிரகாசம் சிற்சபேசம், சிதம்பேஸ்வரம் சித்தியாமி சிவகாமிபதிம் சிந்தையாம் யசூம்சித்த யோகம்” எனும் பல கீர்த்தனைகள் மூலம் சிவாசமேஸ்வரம் இப்பிரபஞ்சத்திற்கு அதிபதியாய் தில்லை மூவாயிரர்க்குத் தலைவனாய் அன்பின் உறைவிடமாய் காட்சி தருபவனுமாகிய இறைவன் குஞ்சிதபாதம் எடுத்து பிரபஞ்ச நடனம் ஆடுபவனாய் விளங்கும் ஆடல்க்கோலங்கள் தன் பாடல்கள் மூலம் விளக்கி உள்ளார்.

அதே போல கோபால கிருஷ்ண பாரதியார் "சபாபதிக்கு வேறு தெய்வம் சமனாகுமா, ஆடியபாதமே கதி, நடனம் ஆடினார். ஆடும் சிதம்பரமோ, கனகசபாபதி தரிசனம் ஆகிய கீர்த்தனைகளை இயற்றியுள்ளார். இவை தில்லையில் தெய்வீகத்தையும் பரதநாட்டியத்தின் உயிர்த்துடிப்புக்களாகவும் வெளிப்படுத்தப்படுகின்றன. இவ்வாறு முத்துத்தாண்டவர், பாபநாசசிவன், தஞ்சைநால்வர் மாரிமுத்தாப்பிள்ளை, தண்டாயுதபாணிப்பிள்ளை போன்றோரும் சிவனது ஆடல் கோலங்களை கீர்த்தனைகளாக வடித்துள்ளனர்.

அம்பலக்கூத்தன் ஆடி அருள் செய்யும் அழகு சாதாரண மனித விழிகளிற்கு விளங்காது மனத்தின் முகத்தே தோன்றும் காட்சியே அடியவர்களிற்கு நித்தியானந்தமாகிறது. இவ்வகையான அகக் காட்சியின் மனஎழுச்சியைத் தூண்டும் கலைவலிமையே பரதநாட்டியத்தின் உட்பொருளாகும்.

சிவனை ஆடவல்லோன், ஆடற்கரசன், ஆடல் அழகன், கூத்தப்பிரான், தில்லை கூத்தர், நடராயர் என்ற திருநாமங்கள் சூடப்பெற்றவர். பிரபஞ்சத்தின் தோற்றம், விரிவு, ஒழுக்கம் ஆகியன சிவநடனத்தில் விளக்கம் பெறுகின்றன. சிவன் எத்தனை ஆடல்களை புரிந்தாலும் அவற்றின் மூலத்துவம் ஒன்றே. சிவனது பல வகையான நடனங்களுள் முப்பெரும் நடனங்கள் விதந்து குறிப்பிடப்படுகின்றன. அவையாவன.

1. சிவபிரதோஷ தோத்திரத்திலே விளக்கம் பெறும் நடனம்.
2. சிவனுடைய தாமசீகமூர்த்தமான வைரவர் அல்லது வீரபத்திரர் ஆடும் நடனம்.
3. தில்லை சிற்றம்பல பொற்சபையில் இடம்பெறும் இசையிட்ட அல்லது நாதாந்த நடனம்.

சிவபிரதோஷ தோத்திரத்தில் விளக்கம் பெறும் நடனம்

இது கைலாய மலையிலே மாலைப்பொழுதில் தெய்வீக பல்லியத்துடன் ஆடிய ஆடலாகும். மூவகை உலகின் மாதாவை பொன் அரியணையில் இருக்கச் செய்து சூலபாணியாக சிவன் நடனம் ஆடினார். கலைவாணி வீணை வாசித்தார். இந்திரன் வேணுகானம் இசைத்தான். பிரம்மன் தாளம் இட்டார். பொருளரசி பாடல் இசைத்தார். விஸ்ணு மத்தளம் இசைத்தார். இந்த இறை நடனத்தைக் காணவும் சுவைக்கவும் கந்தருவர் இயக்கர், பாதகர், உரகர், வித்தியாதரர், அமரர் ஆகியோரும் மூவுல மக்களும் ஒன்று கூடினர்.

வைரவர் அல்லது வீரபத்திரர் ஆடும் நடனம்.

பூதகணங்கள் புடைசூழ சிவபிரான் தேவியோடு நடனம் ஆடுகின்றார். சிவனுடைய தாமசீக மூர்த்தமான வைரவர் அல்லது வீரபத்திரர் ஆடும் நடனம் இதனை சம்ஹார தாண்டவம் எனவும் கூறுவர்.

தில்லை சிற்றம்பல பொற்சபையில் இடம்பெறும் நாதார்ந்த நடனம்.

இசையிட்ட நடனம் அல்லது நாதாந்த நடனம் என அழைக்கப்படும் தில்லை அம்பலப் பொற்சபையில் இடம்பெறுகிறது. தாருகாவனத்து முனிவர்களை பணியவைத்தபின் முனிவர்களும் தேவர்களும் கூடியிருந்த பொன்னம்பலத்திலே சிவன் இத்தாண்டவத்தை அதாவது நாதாந்த நடனத்தை ஆடினார். நாதாந்த நடனத்தில் சிவனின் தோற்றம் பின்வருமாறு வர்ணிக்கப்படுகின்றது. நான்கு கரங்கள் உடையவராகவும் சடாபரம் கொண்டவராகவும் சடையிலே பாம்பும் கபாலத்தோடும் பெண் உருவில் அமைந்த கங்கையும் காணப்படுகிறது. மேற்சடையில் ஆபரணங்கள் விளங்க கீழ்ச்சடை இங்கிதமாய் ஆட நடனம் புரிகின்றார். வலக்காதில் கடுக்கனும் இடக்காதில் தோடும் கழுத்தில் மாலையும் உண்டு. ஒரு கையில் கடகமும் மறுகையில் காப்புவளையும் இடையில் ஒளிரும் உதரபந்தமும் காலிலே சதங்கையும் கைவிரலிலும் கால்விரலிலும் கணையாழியும் உண்டு. இறுக்கமான உடற்சட்டையும் காற்றில் அசையும் உத்தரீயமும் உள்ளது. வலக்கை டமருகமும் மற்றைய வலக்கை அபயமுத்திரையாகவும் உள்ளது. இடக்கை ஒன்றில் அக்கினியும் மற்றைய கையில் பாம்பும் முயலகனை சுட்டிக் காட்டியவாறு உள்ளது. இடதுகால் தூக்கிய திருவடியாக உள்ளது.

தில்லைக் கூத்தனின் திருநடனத்தின் வழியாக இரு செயல்கள் இடம் பெறுகின்றன. அவையாவன. நல்வினைகள் தொகுக்கப்படுகின்றன. தீவினைகள் அழிக்கப்படுகின்றது. இறைவனின் தூக்கிய திருவடியும் ஊன்றிய திருவடியும் இவ்விரு செயல்களையும் குறிக்கிறது.

தூக்கிய திருவடியும் அபயகரமும் நல்வினைகள் தொகுக்கப்படுவதையும் அருள் வழங்குவதையும் குறிக்கிறது. ஊன்றிய திருவடியும் அக்கினி ஏந்திய கரமும் தீவினைகள் பொசுக்கப்படுவதை சுட்டிக் காட்டுகின்றது.

சிவநடனத்திற்கும் திருவாசிக்கும் இடையே உள்ள தொடர்புகள் சிவநடனத்தில் குறிக்கப்படுகிறது. திருவாசி என்பது ஊனநடனம் எனப்படும். சிவனது ஆடல் ஞான நடனத்தை குறிக்கிறது. சிவன் பதியையும் திருவாசி ஆன்மாவையும் குறிக்கின்றது. சிவனிற்கும் ஆன்மாவிற்கும் உள்ள இடைவெளியாக திருவாசிக்கும் சிவனுக்கும் இடையேயுள்ள இடைவெளி விளங்குகின்றது. சிவநடனம் ஒருபுறம் கட்டற்ற உணர்ச்சிப் பெருக்கையும் தடுக்க நிலைப்பட்ட சிந்தனைகளையும் ஒன்றிணைக்கும் குறியீடாக உள்ளது. மெய்ப்பாடுகளாகிய நகை, அழுகை, இழிவிரல், மருக்கை, அச்சம், பெருமிதம், வெகுளி, உவகை, சாந்தம் என்பவை நிலையில்லாது தோன்றி மறையும் உளக்கிளர்ச்சிகள் என்பது சிவநடனத்தில் உள்ளது. இவை அனைத்தும் உள் ஒளியை தூண்டும் அசைவுகளை கொண்டிருக்கும்.

இறைவனே ஓசையும் ஒளியுமாய் நிற்கின்றான். தமிழ் மரபில் ஆடலும் இசையும் பிரிக்க முடியாத மூலக் கூறுகளாக விளங்குகின்றன. சிவன் ஆடல் சிவனது வடிவமாகவும் பாடல் சக்தியின் வடிவமாகவும் ஒன்றிணைத்துள்ளது. இவ்வாறு ஒன்றுபட்டு நிற்கின்ற பரம்பொருளின் இயக்கத்தில் தான் பிரபஞ்சத்தின் தோற்றமும் விரிவும் ஒடுக்கமும் இடம்பெறுகின்றன.

சிவாயநம என உச்சரிக்கும் ஒளியானது ஆன்மாக்களை சிவனை நோக்கி அழைத்துச் செல்லும் நெறிப்பாட்டு ஒளியாக விளங்குகின்றது. சிவநடனத்தில் இடம்பெறும் நேர்அசைவு, சுழல்அசைவு, முன்அசைவு, பின்அசைவு, பக்கஅசைவு, வட்டஅசைவு ஆகிய பெரும் அசைவுகளும் நெற்றிச் சுருக்கத்தில் இருந்து கால்சுருக்கம் வரையான நுண்அசைவுகளும் முத்திரை வழியாகப் பிறப்பிக்கப்படும். நடுநிலை அசைவுகளும் கட்புலனுக்கு பலவகைப் பயிற்சிகளை கொடுக்கின்றன. சிறிய அசைவுகள் பேரின்பத்தை நோக்கிய படிக்கற்களாகவும் பெரிய அசைவுகள் பேரின்பத்துள் ஆன்மாக்களை இழுக்கும் விசைகளாகவும் கொள்ளப்படுகிறது.

சிவனின் திருநடனத்தை ஸ்ரீ பஞ்சாஞ்சாச்சரத்தோடு ஒப்பிட்டுக் கூறுவர். திருவடி "ந" கரத்தையும், திருவுதுரம் "ம" கரத்தையும், திருத்தோள் "சி" கரத்தையும், திருமுகம் "வா" கரத்தையும் திருமுடி "ய" கரத்தையும் சுட்டி நிற்கின்றது. துடி "சி" கரத்தையும், வீசுகரம் "வ" கரத்தையும், அபயகரம் "ய" கரத்தையும், அக்கினி "ந" கரத்தையும் முயலகன் "ம" கரத்தையும் சுட்டுவதாகக் கூறுவர்.

இவ்வாறு இறைவன் ஆடிய திருநடனத்தின் தத்துவப் பொருளை மேற்கொண்டு நோக்கினோம். சிவனின் தாண்டவங்கள் 108 தாண்டவங்கள் என வரையறை செய்யப்பட்டுள்ளன. அவற்றில் ஏழு வகை தாண்டவத்தினை சப்த தாண்டவங்கள் எனக் கூறுவார். 108 தாண்டவங்களையும் 108 கரணங்களையும் 108 கரணங்கள் என அழைப்பர்.

பரதமுனிவர் பிரம்மதேவனின் ஆணைப்படி முறையாக அரங்க தேவதைகளை பூசை செய்தபின் "அமிர்தமதனம்" எனும் நாட்டியத்தை பிரயோகம் செய்தார். அதனை கைலாயமலையிலே சிவபிரான் முன்நிலையில் அரங்கேற்றினார். அதனை கண்ணுற்று மகிழ்ந்த சிவபிரான் தான் முன்பு சந்தியா காலத்தில் அபிநயம் செய்த நிறுத்தத்தோடு அமிர்தமனம் எனும் பரதநாட்டியத்தை இணைத்தால் தகும் என கூறினார். தண்டு எனும் நந்தி பகவானை தனது நிருத்தமுறைகளை பரதமுனிவருக்கு உபதேசிக்க வேண்டும் என ஆணையிட்டார். தண்டுமுனிவரும் பரதமுனிவருக்கு சிவபிரானின் தாண்டவத்தை உபதேசித்தார். சிவபிரானின் நிறுத்தம் 108 கரணங்களுடன் கூடியவை.

108 தாண்டவங்கள்

1. தலபுஷ்பபுடம்
2. வர்த்திகம்
3. வலிதோருகம்
4. அபவித்தம்
5. ஸமநகம்
6. ஸீநம்
7. ஸ்வஸ்திகரேசிதம்
8. மண்டலஸ்வஸ்திகம்
9. நிகுட்டம்
10. அர்த்தநிகுட்டம்
11. கடிச்சின்னம்
12. அர்த்தரேசிதகம்
13. வக்ஷஸ்வஸ்திகம்
14. உன்மத்தம்
15. ஸ்வஸ்திகம்
16. பிருஷ்டஸ்வஸ்திகம்
17. திக்ஸ்வஸ்திகம்
18. அலாதம்
19. கடிஸமம்
20. ஆக்ஷிப்தரேசிதம்
21. விக்ஷப்தாசஷிப்தகம்
22. அர்தஸ்வஸ்திகம்
23. அஞ்சிதம்
24. புஜங்கதிராஸ்தம்
25. ஊர்த்வஜானு
26. நிகுஞ்சிதம்
27. மத்தல்லி
28. அர்த்தமத்தல்லி
29. ரேசகநிகுட்டம்
30. பாதாபவித்தகம்
31. வலிதம்
32. கூர்ணிதம்
33. லலிதம்
34. தண்டபக்ஷம்
35. புயங்கதிரஸ்தரேசிதம்
36. நூபுரம்
37. வைசாகரேசிதம்
38. பிரமரம்
39. சதுரம்
40. புஜங்காஞ்சிதம்
41. தண்டரேசிதம்
42. விருச்சிககுட்டணம்
43. கடிபிராந்தம்
44. லதாவிருச்சிகம்
45. சின்னம்
46. விருச்சிகரேசிதம்
47. விருச்சிகம்
48. வியஸிதம்
49. பார்ச்வநிகுட்டம்
50. லலாடதிலகம்
51. கிராந்தம்
52. குஞ்சிதம்
53. சக்ரமண்டலம்
54. உரோமண்டலம்
55. ஆக்ஷிப்தம்
56. தலவிலாஸிதம்
57. அர்களம்
58. விக்ஷிப்தம்
59. ஆவிருத்தம்
60. தோலபாதகம்
61. விவிருத்தம்
62. விநிவிருத்தம்
63. பார்ச்வக்ராந்தம்
64. நிசும்பிதம்
65. வித்யுத்பிராந்தம்
66. அதிகிராந்தம்
67. விவர்த்திதகம்
68. கஜக்ரிடிதகம்
69. தலஸம்ஸ்போடிதம்
70. கருடப்லுதகம்
71. கண்டஸீசி
72. பரிவிருத்தம்
73. பார்ச்வஜானு
74. கிருத்ராவலிநகம்
75. ஸ்ந்நதம்
76. ஸீசி
77. அர்தஸீசி
78. ஸீசிவித்தம்
79. அபக்ராந்தம்
80. மயூரலலிதம்
81. ஸர்ப்பிதம்
82. தண்டபாதம்
83. ஹரினப்லுதம்
84. பிரேங்கோலிதம்
85. நிதம்பம்
86. ஸ்கலிதம்
87. கரிஹங்தகம்
88. பிரஸர்ப்பிதகம்
89. ஸிம்ஹவிக்ரீடிதம்
90. ஸம்ஹாகர்ஷிதம்
91. உத்விருத்திம்
92. உபருதம்
93. தலகட்டிதகம்
94. ஜநிதம்
95. அவஹித்தகம்
96. நிவேசம்
97. ஏலகாக்ரீடம்
98. ஊரூத்விருத்தம்
99. மதங்கலிதகம்
100. விஸ்ணுகிராந்தகம்
101. ஸம்பிராந்தம்
102. விஷ்கம்பம்
103. உத்கட்டிதம்
104. விருஷபகிரீடிதம்
105. லோலிதம்
106. நாகாபஸர்ப்பிதம்
107. சகடாஸ்யம்
108. கங்காவதரணம்.

சிவதாண்டவ இலக்கணம்

சிவதாண்டவம் பன்னிரண்டு எழுத்துக்களைக் கொண்ட சதுரச்ர அடதாளத்தில் செய்யப்படும் இந்த தாளம் இரண்டு லகுக்கள் இரண்டு துருவங்கள் கொண்ட சமகதியில் விளங்கும்.

பொதுவாக நிருத்தியத்தில் வலது பக்கத்தில் கை, கால்களை அபிநயம் செய்து அத்தகைய ஹஸ்தபாத விந்யாசத்தையே இடது பக்கத்தாலும் செய்து கரணத்தையோ அங்காரத்தையோ முடிக்க வேண்டும். இந்த தாளம் நன்மையானது துருவதாளத்தில் தீர்மானம் அமையும்.

1. ஆனந்த தாண்டவம்.

உலகம் தோன்றுவதற்கும் அதற்குரிய அசைவுகளை வெளிப்படுத்தும் அபிநயம் இதில் காணப்படும் விளம்பித லயையில் தொடங்கும். பிரம்மனின் ஒளி வடிவான பிரணவம் (ஓம்) என்னும் நாதம் தோன்றும். இதன் ஆனந்தத்தால் சைதஞ்சம் தோன்றும். உயிரினங்கள் உயிர் பெற்றதற்கு அவற்றின் அசைவுகள், பார்வை, புருவம் தலையால செய்யும் அபிநயங்கள் ஹஸ்தம் சாரி, கரணம் என்பன நாட்டிய முறையை ஒட்டி உறுப்புக்களின் அபிநயம் இந்த நிருத்தியத்தில் பயன்படுத்தப்படும்.

தாண்டவத்தில் பயன்படுத்தும் சில ஒலிகள்.

ஜம் ஜம் ஜம்கிட துமகிட
தீம் தீம் தீம் கிட திகிதிகி திநகிட
ஜங்கிட தீம்கிட துமகிட கிடதக
தந்தான திகிதையீ தகதக தரிகிட தைய்யா!

2. சந்தியா தாண்டவம்

இத்தாண்டவம் விளம்பிதலயத்தில் துவங்கி மத்திம லயத்தில் முடிவுபெறும். இது அபிநயங்கள் இன்றி காப்பியச் சுவையைத் தோற்றுவிக்கும் மெய்ப்பாடுகளும் நன்கு விளக்கும் பேரின்பத்தை தோற்றும் ஒலியினாலே புலப்படும்படி ஆடுவது ஆகும். இசையும் தாளலயங்களுடன் பாவத்தையும் புலப்படுத்துவதாக அமையும்.

ஜம் ஜந்த கிடதக ததீம் தீந்த கிடதக – 2
ஜந்தக தைதக தீத்தக தளாங்
தஜம் ஜந்த தஜம் ஜந்த கிடதகதை – 2
தாம் கிடதகதை தைகிட தகதை கிடதகதை
தாம் கிட தகதை கிட தைய்யா தையத்தகிட தக
தத்தீம் தித்தி தித்தி தாகு தத்தக தக தக ஜணுதகதிகதக.

3. கலிகதாண்டவம்

திரிவுர ஸம்ஹார தாண்டவமும் இதைப் போன்றது வீரம், சினம், அச்சம் எனும் சுவை விளங்கும் அர்த்தநாரீச்வரர் நடனத்தை வலது கையால் அபிநயம் செய்யும் போது தாண்டவ முறையையும் இடது கையால் அபிநயம் செய்யும் போது லாஸ்ய முறையையும் பின்பற்றி செய்ய வேண்டும். முதலில் சூலத்தை ஏந்தி அரக்கனை குத்தியது போல வலதுகையால் அபிநயம் செய்தல். வீரம் கொப்பளிக்கக் அச்சம் விளைவிப்பதாக அமைய வேண்டும். இடது கையால் அபிநயம் செய்யும் போது வீரத்துடன் மங்கையர்க்கு இயல்பான மென்மையையும் கலந்து நளினமான முறையில் அமையும். இதற்கு சக்ராகாரவரணம் எனும் முறை பயன்படுத்தப்படும்.

1
1. திரு திகு தைய்யா திணாந்த் திக் தித்தக
3
தித்தரங்தக ஹாம் ஹூம் தடானதரி

1
2. தடான தரிதிரு தைய்யா தீடாந்த் தித தித் தக
3
தித்தாங் தக ஹீம் ஜக நனணை
3. ஜனநக ணகண தைய்ய திடாந்த தித்தித்தக
3
தித்தரங்தக ஹீம்கி டெத்ரி தீரகட

இந்த ஜதியில் துவக்கத்தில் எண் ஜதி வாசிக்கப்படும். இரண்டாம் முறை 4வது பகுதியில் உள்ள சொற்கட்டை கொண்டு முதற் பகுதியில் முதல் எழுத்துக்கள் சிலவற்றை தவிர்த்து அங்கு இந்த சொற்களை பயன்படுத்தித் தாளத்தை சரிப்படுத்தி

தடான தரிதிகு தைய்ய திடாந்த தித்தித் தக
தித்தரங்தக ஹீம் ஜகண கணகண

ஜதி சில முத்திரைகளுடன் அடவுகளுடன் துவங்கப்பெறும். இரண்டாம் முறை மிருதங்கச் சொற்களில் மாறுபாட்டை ஒட்டி முதற்பகுதியில் சில மாறுபாடு இருந்தால் மற்றையதில் நிருத்தியம் செய்யப்படும். குயவன் தன் சக்கரத்தில் மீது மண்ணைப் பிசைந்து வைத்து சக்கரம் சுற்றி வந்ததும் பாத்திரத்திற்கு சீரான தோற்றம் வருவது போல சக்கரகார பரணமும் வளைவுகளைக் கொண்டு நிருத்தியத்தில் முறையே விந்யாசங்கள் மாறி முடிவில் எழில் மிகு நிருத்திய முறையாகத் தோற்றம் பெறும்.

4. விஜயதாண்டவம்

இத்தாண்டவம் முதலில் விலம்பித லயையில் துவங்கி நிருத்தியமாகி துருத லயையுடன் முடியும். இதில் முக்கிய பாத்திரம் சிவன் முத்திரைகளுடன் அபிநயம் துவங்கி அபிநயம் தொடர்ந்து செய்யப்படும் கஜாசுரனைக் கொன்ற பிறகு செய்யப்படும். நிருத்தியத்தில் வீணையில் வாசிக்கபப்டும் தகனங்களைப் போன்ற ஜதி மிருதங்கங்கத்தில் வாசிக்கப்படும்.

ஜக ஜக ஜகஓக கணகண கணகண
ஜகாக்கண கணகண கண
கண ஜங் கண ஜங்
கணாம் கணாம் கண.

5. ஊர்த்வ தாண்டவம்

லாஸ்யம் தாண்டவம் இரண்டும் இணைந்ததாகும். பரமசிவன் ஒரு காலைத்தூக்கி தலைமேல் வைத்துக் கொண்டு நாட்டியம் செய்வதாக இருந்தாலும் இன்று இதை அபிநயம் செய்யும் போது அவ்வாறு செய்வதில்லை. புகழ் பெற்ற உதயசங்கர் இதை அபிநயம் செய்யும் போது பரமசிவன் உடல் மேற்பகுதி ஆடையை வீசியெறிந்தது போலவும் பார்வதி அவ்வாறு செய்ய இயலாமல் தோல்வியை ஒப்புக் கொண்டது போலவும் மாற்றி அபிநயம் செய்தாராம்.

இதில் மிருதங்க அல்லது டமருக ஜதியில் குறிப்பிட்டுள்ள ஜதிகளை ஒருவர் பின் மற்றொருவராக உடனுக்குடன் நிருத்தியம் செய்வர். மிருதங்க ஜதி முதலில் குறைந்த எழுத்துக்களுடன் துவங்கிப் போகப் போக வளர்ந்து மீண்டும் முறையாகக் குறைந்து கொண்டே வரும்.

கிடஜம் நிகஜம் கிண்ணக ணகஜம்
நகஜம் நகஜம் நகநக திகிஜம் திகிஜணகஜம்
நகஜம் தகஜம் நகதரி திகிஜம் தரிஜம் தரிஜம் தருந்தரிகிடஜம்
தரித தரித தரிதாகிட தைய்யா தத்த தாஹும் தாதிரிகிடஜம்
தஜம் தணம் தரும் தரும் கிணாம் ஜணும் திமிதேகிடஜம்
ஜம் ஜம் கிடதக கிநநக கிநநக தகிட தகிட தாகிட தையஜம் தஜிஜம்.

தஜம்
தகஜம்
தகதரிதஜம்
தகரிதி தகணக தகதரிஜம்

இதில் தாளம் இடைவிட்டு வரிசைகள் ஒலிக்கப்படும்.

1. தாம் . ததீம்
2. திரிகிடதாம் . திரிகிடதை
3. தகதரிகிடதாம். தாம்ககுங்தரிதை
4. ஜகணண ணகணகத . ணதோங்கணதகதை
5. ஜந்தரி குந்தரி ஹந்தரி தோம் தரீ தம்
6. ஹங்க குந்தரிந்தர ஹதரிங்கண
7. கண கண ணகஜக கங்கணரிங்கண
8. ததிமி ததிமி திமித திமித குந்தரி கிடதக
9. ஜகணக ஜந்தரி. ணக திதி தந்தா
10. தக∴ண∴கண. திரிகிட தோம்
11. ஜந்தரிகிட. தரிகிட தோம்
12. தாம் கணகணதை

இவ்வாறு இருவர் தாம் முதல் ததீம் இடையில் உள்ள காலத்திற்கு இடைவிட்டு ஒன்று முதல் நான்கு வரை முதல் எண் சொற்களை ஒருவரும் இரண்டாம் எண் சொற்களை மற்றவரும் ஆடுவர். ஐந்து முதல் எட்டு வரை ஒருவர் பின் மற்றொருவர் ஒவ்வொரு வரிசையும் ஆடி முடிவில் முதலில் ஆடியது போல இடைவிட்டு ஆடுவர்.

6. உமா தாண்டவம்

2. தோஹம் தோஹம் தேவரம். தம்∴∴2∴∴
தேவாரம் தத்தோம் தாம் தோம் கிணகத்த
ததோம் தாத்த ததோம் தாத்த திரிகிடதை

3. தணாம் ததாதிதை தகத்தக ததிமி
தாங்கிட திகிட தத்த ததத தததை
தர்க ரங்க ரங்க ரங்கத்துங்க
த்வாங்க தகதக தகதக திகிதக
த்லாங்க திகி தக ஜணுதக
தித்திதைய்ய தைய்யம் தெய்ய தெய்யம் திடதிட
பமிகிடபமிகிட பாங்கிட ஜணு ஜணு
தணாம் ஜணும் தணாம் ஜணும் தாம்.

மத்திம லயத்தில் தொடங்கி திரிபுடை தாளத்திலாவது துருவபதத்திலாவது பல கதிகளுடன் ஆடப்படும்.

துருவபதம்

ஹர! ஹர! பரமத கணாதிப! தேவ! பவஹர! சங்கர! பரமசிவ என கீதத்தை முழுவதும் பாடி 32 எழுத்துக்களை கொண்ட முழு ஆவ்ருத்தத்திற்கு ஜதிகள் ஆடப்படும் "ஹரஹா" எனும் நான்கு எழுத்துக்களை குறைத்துப் பாடி அந்த நான்கு எழுத்துக்களுக்குச் சரியாகும். மிருதங்க ஜதியை நிரப்பி 32 எழுத்துக்கள் ஆவ்ருத்தம் + நான்கு எழுத்துக்களைக் கொண்ட மிருதங்க சொற்கள் கலந்து 36 எழுத்துக்கள் கொண்ட ஜதியை ஒலிக்கச் செய்து துருவம் முடிக்க வேண்டும்.

7. **ஷம்ஹார தாண்டவம்**

கிர்கிடதெது தடான் தள தள தள தளாங்த்
தள தள தளம் தளாங்க் திரிதிதாங்க்
ப்ளாம் ப்ளாம் ப்ளாம் திட திட திட ரிங்கண
கண கண தடான் தத்ரே திதித்தரே திரேந்த
கிடதக தடாந்த் கிடதக தளாங்க் தகதிக
தராங்க் திடத்து கிண கிண தோம்.

இவ்வாறு முத்தாய்ப்புடன் தொடங்கும்.

இயற்கையுடன் ஒன்றிப் படைப்பின் சிறப்பினை உணர்ந்து கொண்ட நடனக்கலைஞன் இறைவனிடம் மனம் ஒன்றித் தன்னை அப்பெருமானுக்கு முழுமையாக அர்ப்பணம் செய்து கொண்ட போது தான் தாண்டவத்தை நன்கு ஆடமுடியும். தாண்டவம் தான் நாட்டியக் கலைக் கருவூலம் ஆகும். சிவதாண்டவத்தை விளக்க வேண்டுமானால் அதுவே ஒரு பெரு நூலாகிவிடும். அதன் பெருமையை இந்நூல் படிக்கும் அன்பர்கள் சிறிதளவேனும் உணர்ந்து கொள்ளக் கூடும் என்ற கருத்துடன் இச்சிறு விளக்கம் இங்கு தரப்பட்டுள்ளது.

வாழ்வின் வழிகாட்டி

கருணை

- ***கருணை என்பது இன்பத்தைத் தருவது. கருணை இன்பமயமானது***
- ***கருணை உண்ணிடமே இருத்தல் வேண்டும் வெளியில் கருணை காட்டினால் மட்டும் போதாது.***
- ***கருணை உள்ள மனிதன் இருந்த இடத்திலே தொண்டு செய்வான்***

பக்த்தன்

- ***பக்த்தன் என்பது மனிதர்களுக்கு மத்தியில் எதுமனம் என்று கண்டு பிடிப்பவன்.***
- ***திடமான எண்ணம் என்பதே அவன் நிலையாகின்றது.***

மனிதன்

- ***இயலாமையை உணர்ந்து உதவி செய்பவனே மனிதன்***
- ***ஞானி தண்ணீருக்க. சந்தனத்திற்க. விபூதிக்கு மத்தியிலேயே கடவுளைப் பார்க்கின்றான். சராசரி மனிதன் வெறும் அபிஷேகத்தையே பார்க்கின்றான். ஞானி கடவுளை எதிலும் பார்க்கின்றான்***

இந்துக்கோயிற் பண்பாட்டு மரபுகள் ஓர் அறிவியல் பார்வை...

செல்வி. கார்த்திகாயினி நவரெட்ணராஜா

காலம் தோறும் இந்துப்பண்பாட்டை வளம்படுத்தும் ஊடகங்களில் மிகவும் தொன்மையானது திருக்கோயில் காலம் காலமாக சமயத்தினை வளப்படுத்துவதோடு சமுதாய முன்னேற்றத்திற்கும வழிகாட்டியாக அமைவுறுவதும் திருக்கோயில்களே. மக்களின் சமய, சமூக வாழ்வின் அடிநாதமாக விளங்கும் திருக்கோயில் சார் பண்பாட்டு மரபுகள் அறிவியல் பூர்வமான சிந்தனைகளை தன்னகத்தே கொண்ட ஒரு அறிவியல் கூடமாக விளங்குவதை காணலாம்.

21ம் நூற்றாண்டில் அடியெடுத்து வைத்துள்ள இக்காலகட்டத்தில் விஞ்ஞானம், தொழிநுட்பம் சார் கண்டுபிடிப்புக்கள் வியக்கத்தக்க முறையில் மனித வாழ்வில் பல்வேறு நடவடிக்கைகளுக்கு வழி சமைத்து கொடுத்துள்ளது. இத்தகைய காலகட்டத்தில் சமயமும் அதனை சார்ந்த சடங்குகளும் போலியானவையாகவும் மூடநம்பிக்கை சார்ந்தவையாகவும் விமர்சிக்கப்படுகின்றன. இத்தகைய போக்கில் இருந்து சமயமும் சமய நடைமுறைசார்ந்த பண்பாட்டு மரபுகளும் மாற்றம் பெற வேண்டுமாயின் அவற்றின் அறிவியல் சார்சிந்தனைகள் விளக்கமாக விரிவாக விபரிக்க வேண்டிய தேவை எமக்கு உண்டு.

இத்தகைய பிண்ணனியில் இந்து கோயில் பண்பாட்டு மரபுகளை ஆராயும் போது வியக்கத்தக்க சிந்தனைகள் அறிவியல் பூர்வமாக வெளிப்படுவதை காணலாம். இந்துக் கோயிற் பண்பாட்டு மரபுகளில் பல்வேறு அம்சங்கள் சிறப்பிடம் பெறுகின்றன. குறிப்பாக ஆலயஅமைப்பு, ஆலயம்சார்கிரியைகள், வழிபாட்டு மரபுகள், கலையம்சங்கள், சடங்குமுறைகள் என்பன சிறப்பிடம் பெறுகின்றன. இவை அனைத்தும் ஒரு அறிவியல் பாங்கினைக் கொண்டிருப்பது எமது சமயத்திற்கே உரித்தான சிறப்பியல்புகளில் ஒன்றாகும். இவற்றை தனித்தனியே ஆராய்வது இக்கட்டுரையின் பிரதான நோக்கமாகும்.

முதலில் ஆலய அமைப்பை எடுத்துக் கொண்டால் அதில் அறிவியல் பூர்வமான சிந்தனைகள் விரவி காணப்படுவதைக் காணலாம். ஆலயம் அமைப்பதற்கு பயன்படும் பொருட்கள் முதற்கொண்டு அவைகளின் அளவுப்பிரமாணம் வரையான அனைத்து அம்சங்களும் ஒரு கணித அறிவியல் நோக்கில் அமையப் பெறுவதை காணலாம். மேலும் திட்டமிட்ட ஒரு பொறியியல் முறையை பண்டை கால எம் சமயத்தவர் பேணி வளர்த்து இன்றுவரை அதனை பின்பற்றிச் செல்வதை காணலாம். வானளாவிய கோபுரங்களையும், விமானங்களையும் காணும் போது அறிவியல் ஆன்மீகத்தோடு இணைவதை புலனாகிறது.

ஆகம விதிப்படி அமைந்த ஆலயங்களில் காணப்படும் கோபுரங்கள் கூம்புருவாக (Phyamid) காணப்படும். இதற்கு அறிவியல் ரீதியில் விளக்கம் உண்டு. அண்டவெளியில் காணப்படும் மனித உடலிற்கு தேவையற்ற கதிர்களை பரவிடச் செய்வதால் பாதுகாப்பைக் கொடுப்பதால் இங்ஙனம் அமைத்தனர். இத்தகைய சிந்தனைகள் அறிவியல் கோயில் பண்பாட்டோடு எத்துணை தூரம் ஒத்துழைத்துள்ளமை புலனாகிறது.

கோயிற் பண்பாட்டில் சிறப்பிடம் பெறும் விக்கிரகங்களை எடுத்துக் கொண்டால் இவை கருங்கல், பல உலோக வகை போன்ற பொருட்களால் ஆக்கப்படுகின்றன. இவற்றிற்குக் காரணம் உண்டு. நம்முன்னோர்கள் அறிவியல் ரீதியில் சிந்தித்து விஞ்ஞான நோக்கிலேயே இதனை அமைத்துள்ளனர். கல்லானது எப்பொருளையும் தம்பால் இழுக்கவல்லது. பஞ்சபூதங்களான நிலம், நீர், தீ, காற்று, ஆகாயம் எனும் பொருட்களை தன்னகத்தே கொண்ட பொருள். எனவே கல்லினால் செய்யப்படும் விக்கிரகங்கள் பக்தர்கள் இழுக்கும் தன்மை கொண்டது.

கோயிலில் ஒரு கல்லை பார்த்து கடவுள் என நாங்கள் நம்பிக்கையுடன் அழைக்கின்றோம். எவ்வளவுக்கு எவ்வளவு நம்பிக்கை வைக்கிறோமோ அவ்வளவுக்கு அவ்வளவு எண்ண அலைகள் எம்மில் இருந்து புறப்பட்டு எமது சக்தியில் ஒரு பகுதிகயையும் தாவிச் சென்று அந்தக்கல்லில் சேர்க்கிறது. இப்படியே பல நூற்றுக்கணக்கானவர்களின் சக்தி அக்கல்லில் சேர்வதால் அக்கல் மிகவும் சக்தியுடையதாகின்றது. அதே சமயம் மனதை ஒரு நிலைப்படுத்தி இறைவனை நாம் தொழும் போது எமது உயிர்ச் சக்தி மேலும் அதிகரிக்கின்றது. மேலும் சக்தி எம்மிலிருந்து கல்லுக்குச் செல்கிறது.

இச்சமயம் உயிர்ச்சக்தி குறைந்த ஒருவர் உதாரணமாக நோயுற்ற ஒருவர் நம்பிக்கையுடன் பிராத்திப்பாரானால் கல்லிலிருந்து அவருக்கு மின்சக்தி கிடைக்கின்றது. அவரின் நோயும் குணமாகும் வாய்ப்பு அதிகரிக்கின்றது.

உலோக விக்கிரகங்களை எடுத்துக் கொண்டால் சிறப்பிடம் பெறும் செப்பு உலோக விக்கிரமானது மிக ஆற்றல் கொண்டதாய் காணப்படுகின்றது. செப்பு பொதுவாக பல்வேறு செயற்பாடுகளுக்கு அவசியமானது. குறிப்பாக மின்சாரத்தை கடத்த ஒலியை ரேடியோ கருவிகள் மூலம் கடத்த அவசியமானது. இதனை பல்லாயிரம் ஆண்டுகளுக்கு முன்பே நம் மெஞ்ஞானிகள் கண்டு இவ்உலோகத்தினால் திருவுருவங்களை அமைத்து அதன்மூலம் திருவருட்சக்தியையும் பக்தர்களையும் தொடர்புபடுத்தும் பாங்கை காணமுடிகின்றது. இன்றைய விஞ்ஞானம் கண்டுபிடிக்கும் தர்க்க ரீதியான உண்மைகளை எம்மெய்ஞானம் மேற்கூறிய செயற்பாட்டின் மூலம் கண்டுள்ளது. கோயிற்பண்பாட்டு மரபில் இத்தகைய அறிவியல் சிந்தனை புரையோடி இருப்பதை அறியமுடிகின்றது.

விக்கிரகங்களை எழுந்த மானத்தில் அமைக்காது அவற்றிற்கு என அளவு பிரமாணங்களை வகுத்து செல்லும் முறையில் கணித மற்றும் பொறியியல் சிறப்பிடம் பெறுவதை அவதானிக்க முடிகின்றது. மேலும் மிக நுணுக்கமான, துல்லியமான தொழிநுட்ப முறையும் பின்பற்றப்படுவதை வரலாற்று காலசிறப்பான ஆலயங்களை அசைபோட்டு பார்க்கும் போது தெளிவாக புலனாகின்றது.

திருக்கோயில் வீதிகளில் காணப்படும் மடங்கள், சுவர்கள் போன்றவற்றிற்கு வர்ணங்கள் பூசுவதை விட காவிப்பூச்சுக்களே அதிகம் பூசப்பட்டிருக்கும் இதற்குக்காரணம் விஷப்பூச்சிகள் சுற்றாடலை அண்மிக்காது என்பதே வசதிகள் பெருகி விட்ட இக்காலத்தில் ஆலயங்களில் இக்காவிகள் பூசப்படக்காரணம் இத்தகைய ஆரோக்கிய சிந்தைனையே மூலமாகும்.

இந்துக் கோயிற் பண்பாட்டு மரபில் கிரியைகள் சிறப்பிடம் பெறுபவை. இக்கிரியை அமைப்பில் அறிவியல் ஆழமாக வேரூன்றுவதை காணலாம். பொதுவாக கிரியைகளை மேற்கொள்ளும் போது அழகுணர்வின் மூலம் மனம் தெளிவடைகின்றது. தூய்மையாகின்றது. இங்கே அறிவியல் அடிக்கடி இன்றைய பேசும் “உளநலம்” மேன்மையுறும் எம்முன்னோர் மனிதமனம் பற்றிய சிந்தனைகளை ஆலயத்தினை முன்நிறுத்தி அதனூடாக வளப்படுத்திய பாணி மருத்துவர்களையே சிந்திக்க வைத்த செயலாகும்.

திருக்கோயில் பலவற்றிலும் இடம்பெறும் பல்வேறு கிரியைகளின் போது வளர்க்கப்படும் ஹேமப்புகை, வேள்வியாகக் காற்று என்பன மனித உடலையும் சூழலையும் தூய்மைப்பெறச் செய்கின்றன. இது விஞ்ஞான ரீதியில் நிரூபிக்கப்பட்ட உண்மையாகும்.பல ஆண்டுகளுக்கு முன்பு இந்தியாவில் கோபால் நகரில் ஏற்பட்ட இரசாயனவாயு கசிவின் காரணமாக அப்பகுதி மக்கள் அனைவரும் மூச்சுத்திணறல், மயக்கம் போன்ற உபாதைகளுக்கு உள்ளாகினர். இவ்வேளையில் அந்தணர் ஒருவர் தன் வீட்டில் சிறிய அளவில் ஒரு ஹோமம் வளர்த்து அப்புகையை சுவாசித்தார். இதனால் அவர் அதிகநேரம் ஆரோக்கியமாக இருந்தார். இச்செயல் ஆலயத்தில் பெரிய அளவில் இடம்பெறும் போது அவை சூழலையும் ஒழுங்குபடுத்துவதை காணலாம். ஹேமம் வளர்க்கப் பயன்படுத்தப்படும் நெய், சமித்துக்கள் போன்றவற்றால் உண்டாகும் புகை காற்று மண்டலத்தில் மேகமாக உருவெடுத்து மழையாக பொழிவதாக இன்றைய ஆய்வாளர்கள் கருத்து தெரிவிக்கின்றனர்.

ஆலயக்கிரியைகளிலும், ஆலய வழிபாட்டிலும் நீர் புனிதமான இடத்தை வரலாற்றுக் காலம் முதற் கொண்டே பெற்றுவருவதை நாம் எமது சைவத்தமிழ் இலக்கியங்கள் முகமாக அறிந்துள்ளோம்.

ஒரு மனிதன் வழிபாட்டில் ஈடுபட வேண்டுமாயின் முதலில் அவனது அகப்புறச்சுத்தம் பெரிதும் அவசியம். இங்கு புறச்சுத்தத்தை எமது சமய நாளாந்த கடமையாக நித்திய கருமமாக கொண்டுள்ளதை அவதானிக்கலாம். புறச்சுத்தங்களான குளித்தல், தோய்த்து உலர்ந்த ஆடை அணிதல் போன்றன மிக முக்கியமான அனுட்டானமாக கோயில் பண்பாட்டில் பேணப்படுகின்றது. சுத்தம் சுகம் தரும் எனும் சுகாதார அறிவியல் இங்கு வெளிப்படுவதைக் காணலாம்.

ஆலயங்களில் இடம்பெறும் அபிஷேகம் எனும் கிரியையின் போது பல்வேறு பொருட்கள் பாவிக்கப்படுகின்றன. அவை எண்ணெய், அரிசி, மா, மஞ்சள், பஞ்சகவ்யம், பஞ்சாமிருதம், பழவகைச்சாறு, இளநீர், அன்னம், விபூதி, குங்குமம், சந்தனம், பன்னீர், கும்பஜலம், கங்கை நீர் இவை அனைத்தும் குளிர்ச்சியை தரும் பொருட்களாகும். இவற்றில் காணப்படும் மருத்துவகுணம் இன்றைய சமூகத்தினை மிகவும் கவர்ந்திருப்பது குறிப்பிடத்தக்கது.

சிவசின்னங்களில் ஒன்றாக போற்றப்படும் 'விபூதி' சரும நோய்களைப் போக்கவல்ல சாதனம். சாணத்தை தொற்று நீக்கியதாக இன்னும் கிராமங்களில் பயன்படுத்துவதை காணலாம். மேக்குரிக்குளோரைட்டு (Mercnricchloride) எனப்படும். சரும நோய்களை கட்டுப்படுத்தும் பதார்த்தம் 5% சாணத்தில் காணப்படுகின்றது. எனவே தான் எம்மக்கள் விபூதியை நெற்றியில் மட்டுமின்றி உடல் பூராகவும் தரிப்பதை வழக்கமாகக் கொண்டுள்ளனர் கிரியைகளை முன்னிறுத்தி மஞ்சள், அறுகு, வேப்பிலை, வில்வம், துளசி, சாம்பிராணி போன்ற தொற்று நீக்கிகளை பயன்படுத்திய அறிவியல் பாதை எம் சமயத்தின் பாற்பட்டதே.

பொட்டு இடுதலும் கூட விஞ்ஞான நோக்குடையதாக உள்ளது. சந்தனக்கட்டையினை அரைத்துப் பெறப்பட்ட சந்தனப்பொட்டு இருகண் புருவங்களுக்கு இடைப்பட்ட இடமான கவன ஈர்ப்பு புள்ளியில் (Point of Concentration) வைப்பதால் குளிர்மையை பெறமுடியும். இதனால் மனித மனம் தெளிவாகவும் அமைதியாகவும் மகிழ்ச்சியுடையதாகவும் இருப்பதை காணலாம். சந்தனத்தின் குணத்தை மேலும் ஆராயும் போது மலம், பித்தம், நாவின் ருசியின்மை போன்றவற்றை முறைப்படுத்தும் தன்மை கொண்டதாய் உள்ளது.

ஆலயங்களில் இடம்பெறும் பல்வேறு கிரியையின் போது தீபாராதனை காட்டப்படும். தீபாராதனைக்கு பயன்படும் கற்பூரம் ஆலயத்தில் சனம் வெள்ளமாக கூடி நிற்கும் வேளை வெளியிடப்படும் காபனீரொட்சைட்டை (Co2) எனும் வாயுவை அகற்ற வல்லது. இதனால் அச்சூழலில் உள்ள காற்று தூய்மையாகின்றது.

திருக்கோயில் அபிஷேகங்களில் சிறப்பிடம் பெறும் பால், தயிர் போன்றவை தனிச்சிறப்பு கொண்டவை. பாலாபிஷேகம் தனிச்சிறப்பு கொண்டது. கொடிய நோய்களை எதிர்க்கும் சக்தி கருங்கல்லில் பாலாபிஷேகம் செய்யும் போது ஏற்படும் கதிர்வீச்சிற்கு உண்டு என்று அறிவியல் ஆய்வுகள் கூறுகின்றது.

எமது சமுதாய வைபவங்கள், விழாக்கள், கோயிற்கிரியைகள் போன்றவற்றில் முக்கியமான இடம் பெறும் பால் நிறையுணவாகவும் பிணியகற்றும் மருந்தாகவும் பயன்படுகிறது. பாலில் 87%, நீர் 3.4%, புரதம் 4.6%, வெல்லம் 1.1% கனியுப்பையும் கொண்டதாக உள்ளது. விரத நாட்களில் பாலினை உணவாக உட்கொள்வதற்கு மேற்கூறிய காரணிகளே காரணம். எனவே எம் முன்னோர் உணவுத் தொழிற்பாடு முறைமை சார்ந்த அறிவியலை நன்கு அறிந்துள்ளதனாலேயே ஆலயத்தினூடாக அதனை வளர்ப்பதனை காணலாம்.

எமது திருக்கோயில் பண்பாட்டில் சுற்றுப்பிரகாரங்களை வலம் வந்து வணங்குதல் என்றொரு மரபு உண்டு. ஆகம விதிகளுக்கும், சைவ அநுட்டான விதிகளுக்கும் ஏற்ப 1,3,5,7,9 போன்ற தடவைகள் இவ் செயற்பாடுகள் மேற்கொள்ளப்பட வேண்டும் என்பது விதி விரத காலங்களிலும் நேர்த்தியின் பொருட்டும் இச்செயற்பாடுகள் அதிகளவில் இடம்பெறுவதைக் காணலாம். எம்முன்னோர்களது இத்தகை விதிகள் ஆரோக்கிய வாழ்வினை குறிக்கோளாக வைத்து செயற்பட்டிருப்பதை காட்டி நிற்கின்றது. இத்தகைய வலம் வரும் செயற்பாடுகள் மூலம் மூச்சு முறைமை ஒரு சீரான நிலைக்கு கொண்டு வரப்படுவதுடன் அமைதியான சீரான ஒழுங்கான சுவாசசுற்றோட்டம் நிகழ்வதற்கு வாய்ப்பு ஏற்படுகின்றது. மேலும் உடலிற்கு ஒரு உடற்பயிற்சியாகவும் இச்செயற்பாடு அமைவது ஆரோக்கியமானது. எம்திருக்கோயில்

பண்பாட்டு மரபுகள் எத்துணை தூரம் ஆரோக்கிய வாழ்வை வேண்டி நிற்பது புலனாகிறது.

திருக்கோயில் வழிபாட்டில் இடம்பெறும் அங்கப்பிரதிஷ்டை, அடிஅழித்தல், பஞ்சாங்க, அட்டாங்க நமஸ்காரம் போன்றவை தொடர்ச்சியாக செய்யும் போது உடலில் காணப்படும் வாத உபாதைகள், பித்தச்செயற்பாடுகள், உடற்பருமன் போன்றவற்றிலிருந்து விடுபட உதவுவதோடு தேக ஆரோக்கியத்தினை வளப்படுத்துவன. விநாயகப் பெருமானை வணங்கும் முறைகளாவன “குட்டி வணங்கல்” “தோப்புக்கரணம்” போன்ற அறிவியல் ரீதியான ஆக்கபூர்வமான பலனைத் தருபவை என்றால் மிகையில்லை. குட்டிக்கும்பிடும் போது ஏற்படும் நரம்பு மண்டல அதிர்வலைகள் ஞாபக சக்தியை அதிகரிக்கச் செய்வதாக விஞ்ஞானிகள் கூறுகின்றனர்.

எனவே இத்தகைய நடைமுறையினை எம்முன்னோர்கள் காலம் தோறும் பேணி ஒவ்வொரு தலைமுறையினருக்கும் வழங்கி வந்த இச்செயற்பாடுகளையும் அறிவியல் சிந்தனைகளின் வெளிப்பாடாக கருதி பேணுவது ஒவ்வொரு சைவசமயிகளதும் கடமையாகும்.

இந்துக்களது திருக்கோயில் வழிபாட்டு மரபில் தலவிருட்ச வழிபாடு காலம் காலமாக பேணப்பட்டு வரும் மரபாகும். ஆல், அரசு, வேம்பு போன்ற விருட்சங்கள் காணப்படும் இடங்களில் நாம் ஆலயங்களை அமைப்பது ஒரு மரபாகும். இதற்கு விஞ்ஞானம் விளக்கம் தருகின்றது. அதாவது மலட்டுத்தன்மை உள்ள பெண்கள் இவை போன்ற விருட்சங்களை சுற்றி வலம் வரும் போது கர்ப்பப்பை சம்பந்தமான நோய்கள் சுகமடைகின்றன. இம்மரங்களின் காற்றை சுவாசிப்பதன் மூலம் மலட்டுத்தன்மை குறைவடைவதாக கூறப்படுகின்றது.

திருக்கோயிலை முன்நிறுத்தி நந்தவனம் அமைத்தல் எனும் செயற்பாடு மேற்கொள்ளப்படுவதை காணலாம். வேம்பு, வில்வம் போன்ற பெரிய மரங்களையும் மலர்களை தரும் பூமரங்களையும், மருத்துவகுணம் கொண்ட மூலிகைகளையும் உள்ளடக்கியதாக ஆலயங்களில் நந்தவனம் அமைவுறுவதை காணலாம் இத்தகைய மரபினை பின்பற்றியே “மரம் வளர்ப்போம்” எனும் கோசங்கள் இன்று வலுப்பெற்று சுற்றுப்புறச் சூழலியல்சார் சிந்தனைகளுக்கு உள்ளீடாக அமைவுறுவதை காணமுடிகின்றது.

இந்துப்பண்பாட்டு மரபில் விரதங்கள் இன்றியமையாத இடத்தைப் பெற்றுள்ளன. சமய தத்துவ ரீதியில் பல்வேறு காரணங்களை அடிப்படையாகக் கொண்டு விரதங்களுக்கு விளக்கம் கற்பிக்கப்படுகின்றது. ~~இன்றைய இளம் தலைமுறையினர் சிலர் போலித்தனமான நாகரீகப் போர்வையில் சிக்குண்டு விரதங்களை பல்வேறு விதமாக விமர்சிப்பதும் உண்டு. இத்தகையோரது விமர்சனங்களுக்குதக்க பதிலுரைகள் விஞ்ஞான அறிவியல் ரீதியில் காணப்படுவதை அவர்கள் புரிந்து கொள்ள வேண்டும்.~~

விரத அநுட்டானங்களின் போது புறச்சுத்தியாகிய சரீர சுத்தமும் அகச்சுத்தியான மனச்சுத்தமும் மிகவும் அவசியம். இவற்றின் ஊடாக “சுத்தம்” எனும் அறிவியல் அறிவுறுத்தப்படுவதை காணலாம். ஒரு தொழிற்சாலை போன்றே எமது உடல் அத்தொழிற்சாலைக்கு ஓய்வு கொடுப்பது இன்றியமையாததே. எனவே தான் “விரதம்” எனும் பெயரால் எமது உடல் உறுப்புக்களில் ஒன்றாகிய உணவுக் கால்வாய்க்கும் அதனுடன் தொடர்பு கொண்டு சுரக்கும் சுரப்பிகளுக்கு ஓய்வு கிடைக்கும். இத்தகைய அறிவியல் பார்வை எம்முன்னோரிடம் பல்லாயிரம் ஆண்டுகளுக்கு முன்பே தோன்றி இருப்பதை இத்தகைய விரதங்கள் பற்றி ஆராயும் போது புலனாகிறது.

விரதங்களில் “உபவாசம்” எனும் முறையும் சைவசமயிகளால் ஆலயபண்பாட்டில் பேணப்படுகின்றது. ~~இதனை மருத்துவம் “இலக்கணம் பரமஅவுஷதம்” என்று கூறி மருத்துவ சிகிச்சை முறைகளில் கடைப்பிடிப்பதை காணலாம். இதனை ஆங்கிலத்தில் Stravation theraphy என அழைப்பர்.~~

தற்காலிகமாக உணவை விலக்குதல் சில நோய்களுக்குப் பரிகாரமாக விதிப்பதுண்டு. விரதம் என்பது ஆரோக்கிய நிலையில் (In healthy Condition) அகப்புறச் சுத்தங்களை மையமாகக் கொண்டு அனுஷ்டிக்கப்படுவது. அநாவசியமான ஊளைச்சதை எனப்படுவதை குறைத்து வீரியம், தேஜஸ் என்பவற்றை விருத்தியாக்கின்றது. விரத காலங்களில் வாழை இலையில் சாப்பிடுவதனால் ஒருவரின் எச்சில் மிச்சங்களை இன்னொருவர் பாவிப்பது தவிர்க்கப்படுகின்றது. ஆதலால் தொற்று நோய்கள் பரவுதல் தவிர்க்கப்படும். இத்தகைய சுகாதார ஆரோக்கிய வாழ்வு சார் அறிவியல் சிந்தனைகள் ஆலயப்பண்பாட்டில் விரதங்கள்

மூலம் மக்களிடம் பேணப்படுவதால் ஆரோக்கிய, ஆன்மீக வளர்ச்சியை ஏற்படுத்தும் என்பதில் ஐயமில்லை.

ஆலய பண்பாட்டில் வழிபாட்டு நோக்கில் விரத மரபில் உணவு சிறப்பிடம் பெறுகின்றது. விரத காலங்களில் சோறு, சாதம் எனப்படும் பச்சையரிசி சாதம், பருப்பு, காய்கறிகள், தயிர், மோர், நெய் என்பன முக்கிய இடம் பெறுகின்றன. இவை போசாக்கான உணவுகளைாக இருப்பது குறிப்பிடபாலது.

ஆலய வழிபாட்டை முன்நிறுத்தி சைவ உணவுப் பழக்கத்தை எமது முன்னோர் சமுகத்தில் கைக் கொண்டனர். தரமான உணவானது. உடல் ஆரோக்கியத்திற்கு மட்டுமின்றி உளநலனுக்கும் அவசியம் என்பதை எமது மூதாதையர் நன்கு அறிந்து வைத்துள்ளனர். எமது மக்களின் சைவ உணவுப் பழக்க வழக்கங்கள் உடல் நலத்துடன் உளநலனையும் பேணுவதில் அதிகம் உதவுகின்றன. குறிப்பாக நாவலர் பெருமானது சிந்தனைகளை கொண்டதாய் அமைகின்றன. திருவிழாக்களின் போது "கற்பூரச்சட்டி" எடுத்தல் இடம் பெறுவதை காணலாம். கற்பூரச்சட்டியினை தலையில் எடுத்துச் செல்வதால் உச்சியில் காணப்படும் "சகஸ்சக்கரத்தை" நேரடியாக தூண்டும் செயல் நடைபெறுகிறது. இதன் போது உடம்பினுள் ஜீவசக்தி அதிகரிக்க வழி ஏற்படுகின்றது. அடுத்து "காவடி" எடுத்தல் எனும் செயற்பாடு இடம் பெறுவதைக் காணலாம். உயிர்நிலைப் புள்ளிகள் மேல் ஊசிகளையும், வேல், சூலம் முதலிய பொருட்களை குற்றும் போது உயிர்நிலைப்புள்ளிகளினூடாக மின்காந்த ஓட்டம் சீராக நடைபெறும். இதன் மூலமும் ஜீவசக்தி அதிகரிக்கும். இத்தகைய செயல் முறைகளே இன்றைய "அக்குபஞ்சர்" முறை வைத்தியத்திற்கு அடி கோலியது. எனவே எம் ஆலயப் பண்பாட்டு மரபுகள் சில அறிவியல் சிந்தனைகளின் முன்னோடியாகவும் அமைவுறுவதைக் காணமுடிகின்றது.

ஆலய வழிபாட்டில் இடம்பெறும் பல்வகையான மலர்கள் ஆராதனைக்காக மட்டுமன்றி நோய் நீக்கும் மருந்தாக ஆயுள் வேதவைத்தியத்திலும், சித்தவைத்தியத்திலும் இடம் பெறுவதை காணலாம். ஆலயம் பண்பாட்டு கலாச்சாரத்தில் பெண்கள் தலையில் மலர் சூடுவது முன்னோர்களால் கடைப்பிடிக்கப்பட்டு இன்று வரை பேணப்படும் ஒரு மரபாகும். தலையில் மலர்சூடும் போது மூளையும் முள்ளந்தண்டு கொடியும் இணைக்கப்பட்ட இரத்த ஓட்டத்திற்கும் நரம்பியக்கத்திற்கும், சுவாசத்திற்கும் கேந்திரமையமாக விளங்கும் "மஞ்ஞானமுகம் (Medulla oblongatfu) நித்திய கருமவிதி சைவ உணவினை நன்கு வலியுறுத்தும். சுவாமி விவேகானந்தர் அவர்கள் "ஆசாரம் இல்லாத உணவு ஆன்மாவை அழிக்கும்" என்பர். இதனையே எம் ஆலய பண்பாடு அனுதினமும் காட்டி நிற்கிறது.

ஆலயப்பண்பாட்டில் நடைபெறும் நற்போதனைகள், கூட்டுப்பிரார்த்தனைகள் என்பன உளச்சாந்திக்கு உதவுவன. ஆலய வழிபாட்டில் இறுதியில் கொடுக்கப்படும் சர்க்கரைப் பொங்கல், கடலை போன்றன அளவில் சொற்பமாக இருந்தாலும் உண்டவுடன் ஒரு வித திருப்தியை கொடுக்கின்றன இப்பிரசாதனங்களில் காணப்படும் குளுக்கோசு அகத்துறிஞ்சப்பட்டு இரத்தத்தில் சேர்வதனால் மூளையிலுள்ள பசிமையம் தற்காலிகமாகச் சாந்தப்படுவது ஒரு நிகழ்வாகும்.

திருக்கோயில் வழிபாட்டில் "தியானம்" மிகச் சிறப்பான இடத்தை பெறுவது மன இறுக்கத்தை தளர்த்தி தூய்மையான மனஅமைதியை தரவல்லது. ஆலயங்களில் சிவாச்சாரியார் முதற் கொண்டு பக்தர்கள் வரை அனைவரும் தியானத்தில் ஈடுபடுவதை காணலாம். மனதை உள்முகமாக திருப்பி தியானத்தில் ஈடுபடுவதன் ஊடாக மனவிழிப்புணர்வை ஏற்படுத்த முடியும்.

ஆலயப் பண்பாட்டில் திருவிழாக்கள் எனப்படும் மகோற்சவம் மிகவும் முக்கியமான நிகழ்வாகும். இக்காலங்களில் சுற்றுச் சூழலில் அதிக அக்கறையை எம் முன்னோர்கள் செலுத்தியதை காணலாம். இக்காலங்களில் மக்களால் மேற்கொள்ளப்படும் நேர்த்திகள் அறிவியல் மலர் சூடும் பகுதியில் அமைவதால் உடலின் பல செயற்பாடுகள் துரிதப்படுத்தப்படும் எம்முன்னோரது கலாச்சார பண்பாட்டிலும் அறிவியல் மிளிர்வதை காணலாம்.

இந்துக்களது பண்டிகையில் சிறப்பிடம் பெறும் தமிழ் புத்தாண்டு காலங்களில் இந்து ஆலயங்களில் வழங்கப்படும். "மருத்துநீர்" பல்வேறு மருத்துவ குணங்களைக் கொண்டதாக காணப்படுகின்றது. மருத்து நீரை தலையில் தடவி பல தடவைகள் கைகளாற் தேய்க்கும் போது எழும் சூடு தலையின் சருமத்தினுள்ள நுண்நாடிகளையும் நாளங்களையும் விரிவாக்குவதால் சருமத்திற்கும் தலைமுடிக்கும் கூடிய இரத்தம் செல்கிறது. அத்துடன் மருத்து நீரில் காணப்படும் ஊட்டச்சத்துக்கள் தேய்க்கும் போது உட்செல்கின்றன.

இவற்றுள் விட்டமின் கூட்டுள் ஒன்றான "பான்டோதினிக் அமிலம்" முடிஉதிர்வு, நரைமுடி உருவாகல் என்பவற்றை தவிர்க்க உதவும். மேலும் மருத்து நீரில் காணப்படும் பல்வேறு மூலிகைகள் சருமநோய்களை தவிர்க்க உதவுவன. எனவே மருத்துவ அறிவியலை திருக்கோயில் வளர்த்து செல்வதை அவதானிக்க முடிகின்றது.

எனவே தொகுத்து நோக்கும் போது அறிவியல் என்பது இந்துப் பண்பாட்டிற்கு புதியதொன்றில்லை. அறிவியலில் இன்று சிறப்பிடம் பெறும் மருத்துவம், கட்டிடம், சுத்தம், உணவு, சோதிடம், கணிதம், ஆரோக்கியம் என்பவற்றை எமது திருக்கோயில் பண்பாட்டு மரபுகளும் கொண்டமைந்துள்ளமை தெளிவானதே. சமயம் என்கின்ற ரீதியில் இந்து சமயம் தன் நிறுவனமயமாக்கப்பட்ட ஊடகமான திருக்கோயில்கள் வாயிலாக அறிவியல் சிந்தனைகளை மக்கள் மனதில் விதைப்பதில் பெரிதும் பங்களிப்புச் செய்தமையைக் காணமுடிகின்றது.

எமது திருக்கோயில் பண்பாட்டு மரபுகள் தனியே ஆன்மீக வளர்ச்சியை ஏற்படுத்தாது அறிவியல் பூர்வமான சிந்தனைகளுக்கும் இடமளித்து இணைத்து செல்வதனாலேயே இன்று வரை எம் சமயமும் அதனைச் சார்ந்த பண்பாட்டு மரபுகளும் ஏனையோராலும் வியந்து பேசப்படுகின்றது.

> மதம் ஓட்டிச் செல்லாத விஞ்ஞானம் நடக்க
> முடியாத நொண்டியைப் போல்
> விஞ்ஞான ரீதியாக அமையாத மதம் பார்க்க
> முடியாத குருடனைப் போல

என்கின்ற விஞ்ஞானி "ஜனஸ்டீன்" கருத்து இச்சந்தர்ப்பத்தில் நினைவு கூறத்தக்கது. இந்து சமயத்தினுடைய அனைத்து அம்சங்களிலும் அறிவியல் மிக நெருக்கமான தொடர்பினைக் கொண்டுள்ளதை நாம் ஆலயப் பண்பாட்டினை அசைபோட்டு பார்க்கும் போது புலனாகிறது. ஆன்மீகமும் அறிவியலும் ஒரு தளத்தில் ஓரிடத்தில் சந்திப்பதை நாம் தெளிவாக விளங்கிக் கொள்ள முடிகின்றது.

உதவிய நூல்கள்

1. சிவசண்முகராஜா. சோ.யாழ்ப்பாண மக்களின் சைவ உணவுப் பழக்க வழக்கங்கள், சித்தமருத்துவ வளர்ச்சிக்கழகம், யாழ்ப்பாணம், 2002, பக் 68, 167.
2. ஞானகுமாரன்.நா, "இன்றைய நோக்கில் சமய வாழ்வு பற்றிய ஒரு சிந்தனை", புங்குடுதீவு மேற்கு இறுப்பிட்டி பெரிய புலம் ஸ்ரீ வீரகத்தி விநாயகர் ஆலய கும்பாபிஷேக மலர் - 2006, பக.37.
3. ஸ்வாமி, தியானம் அதன் விஞ்ஞானம், அறிவாலய வெளியீடு, சென்னை, 1990, பக் 5-28, 239.
4. லட்சுமணன்.கே.எஸ், நோய் நீக்கும் பூக்கள், திருமகள் நிலையம், சென்னை. 2003, பக் 6-10
5. ராதா தியாகராஜன், சிவநெறியும் சிவதொண்டரும் வானதி பதிப்பகம், 1986, பக்.32
6. குமாரசுவாமி சோமசுந்தரம், சிவசின்னங்கள், யாழ். இந்து மாநாடு சிறப்பிதழ், 2005, பக்.11
7. தவமணிதாசன்.வை.க, "விஞ்ஞான நோக்கில் இந்து சமய அநுட்டானங்கள்", எழில் சஞ்சிகை, கணித மன்ற வெளியீடு, 1978, பக்-38.

சிவமூர்த்தங்கள்

திருமதி.லோகாம்பிகை சுரேஸ் இந்திரன
(B.A,Dip.in.Edu)

சிவபெருமான் உயிர்களை உய்விக்கும் பொருட்டுக் கொண்டருளும் அருட் கோலங்கள் மூர்த்தம் எனப்படும். இம்மூர்த்தங்கள் திருக்கோயில்களில் மூர்த்திகளாக வழிபடப்படுகின்றன. இம்மூர்த்திகள் ஒவ்வொன்றும் உட்கருத்துக்களுடையதாயும், புராணக்கதைகட்கமைய அமைக்கப்பட்டதாயுமிருக்கின்றது. சிவபெருமான் அடியவர்கட்கு அருள் செய்யுமாறு அவர்கள் மனோபாவனைப்படியும், அவ்வருட் செய்கைக்கேற்றதுமான திருவுருவங்களைக் கொண்டவர். மூர்த்தங்கள் சிறப்பானவை ஆகும். இங்கு அறுபத்து நான்கு மூர்த்தங்கள் பற்றியும் நோக்குவோம்.

1. இலிங்கமூர்த்தி :

இங்கு இலிங்கத்தின் பிண்டிகை சக்தியுருவத்தையும், இலிங்கம் சிவவுருவத்தையும் குறிக்கின்றன. "லிங்" என்றால் "லயம்", "கம்" என்றால் தோற்றம். தன்னுள் லயமடையச் செய்த உலகுயிர்களின் தோற்றத்துக்கும் காரணமாக நின்று ஐந்தொழில் இயற்றும் ஆற்றலை உணர்த்துவதே இலிங்கமூர்த்தம்.

2. இலிங்கோற்பவர்

இலிங்கோற்பவம் என்ற சொல் இலிங்கத்தினுள் இடம்பெறும் தோற்றம் என்று பொருள்படும். இம்மூர்த்தம் சிவாலயங்களில் கருவறையின் மேற்குத் திசையில் மேற்கு நோக்கியவாறு பிரதிட்டை செய்யப்பட்டிருக்கும். சிவபெருமானே முழுமுதற்கடவுள் என்பதும், அகந்தை கொண்டவர்களால் அவரை அடையமுடியாதென்பதும் இம்மூர்த்தத்தின் மூலம் உணர்த்தப்படுகிறது.

3. முகலிங்கமூர்த்தி

சிவலிங்கத்தின் மேற்பகுதியில் முகங்கள் அமைந்திருக்குமாயின் அத்திருமேனி முகலிங்கம் என்று அழைக்கப்படும். முகலிங்க மூர்த்தம் ஆட்யம், அநாட்யம், ஸுரேட்யம், ஸர்வஸமம் என நான்கு வகைப்படும். முகத்தின் எண்ணிக்கைக்கேற்ப அது உணர்த்தும் தத்துவங்களும் வேறுபடும்.

4. சதாசிவமூர்த்தம்

ஐந்து முகங்கள், பத்துக்கரங்கள் கொண்டு விளங்கும் மூர்த்தம் சதாசிவ மூர்த்தம் ஆகும். இம்மூர்த்தத்திலிருந்தே இருபத்தெட்டு ஆகமங்களும் வெளிப்பட்டன. ஸத்யோஜாதம், தத்புருஷம், வாமதேவம், ஈசானம், அகோரம் என்ற ஐந்துமே சதாசிவத்தின் முகங்களாகும். அவற்றைவிட ஞானியர் மட்டும் அறியும் அதோ முகமொன்றும் இவருக்கு உண்டு.

5. மஹா சதாசிவமூர்த்தம்

இறைவன் எல்லாமாய், எங்குமாய் இருப்பதனை உணர்த்த மஹா சதாசிவமூர்த்தியாய் விளங்குகின்றான். இம்மூர்த்தம் இருபத்தைந்து முகங்களையும், இருபது கரங்களில் பல்வேறு ஆயுதங்களையும், இரண்டில் அபயவரதமும் பெற்று விளங்குவார்.

6. உமா மகேசமூர்த்தி

இறைவனும், இறைவியும் இணைந்து அமர்ந்த கோலத்தில் இருப்பது உமா மகேஸ்வர மூர்த்தம் எனப்படும். உலகத்து உயிர்கள் ஆண், பெண்ணாய் இணைந்து வாழ்ந்து உலக இயக்கம் இனிது நடைபெற சிவனும், சக்தியுடன் இணைந்து உறைவது உமாமகேச மூர்த்தம் ஆகும்.

7. சுகாசன மூர்த்தம்

அம்பிகை வேதாகமப் பொருளுக்கு விளக்கம் கேட்க இறைவன் மிக உயர்ந்த வசதியான இருக்கையில் அமர்ந்து அம்பிகையையும் அமர்த்தி வேதாகமப் பொருளை விளக்கினார். அம்பிகை உற்றுக் கேட்க இறைவன் உபதேசித்த நிலையில் அமர்ந்த கோலம் "சுகாசன மூர்த்தம்" ஆகும்.

8. உமேச மூர்த்தம்

அபய வரதத்துடன் இடப்பக்கத்தில் அம்பிகையுடன் விளங்கும் மூர்த்தம் உமேச மூர்த்தம் ஆகும்.

9. சோமஸ்கந்தமூர்த்தம்

இறைவன் உமையுடனும், கந்தனுடனும் விளங்கும் வடிவம் இதுவாகும். ஸத் - சித் - ஆனந்தம் என்ற மூன்றும் இறைவனின் வடிவம். சிவன் - ஸத், உமை - சித், முருகன் - ஆனந்தம், உண்மை, அறிவு, மகிழ்வு என்ற மூன்றான சேர்க்கையே சோமஸ்கந்த மூர்த்தத்தின் தத்துவம்.

10. சந்திர சேகரமூர்த்தம்

தட்சனிடம் சாபம் பெற்ற சந்திரன் இறைவனிடம் அடைக்கலம் புகுந்தான். இறைவன் மூன்றாம் பிறையை தனது திருமுடியில் சூட்டி சாபத்தை நீக்கி சந்திரனை வளர்வதும், தேய்வதுமாக மாற்றினான். சந்திரனைத் திருமுடியில் தரித்து அம்பிகையுடன் நின்ற கோலத்தில் இருப்பது சந்திரசேகர மூர்த்தம் ஆகும்.

11. ரிஷிபாரூடமூர்த்தம்

தருமத்தின் மீது தான் அமருவதை உணர்த்த இறைவன் விடைமீது அம்பிகையுடன் எழுந்தருளும் மூர்த்தம் ரிஷிபாரூடமூர்த்தம் ஆகும்.

12. ரிஷபாந்திகமூர்த்தம்

இறைவன் ரிஷபத்தின் மீது சாய்ந்தபடி கொம்புகளுக்கு இடையில் தனது கரத்தினை வைத்த நிலையில் விளங்குவது ரிஷபாந்திக மூர்த்தம் ஆகும்.

13. புஜங்கலலித மூர்த்தம்

புஜங்கம் என்றால் பாம்பு, லலிதம் என்ற அழகு எனவே இறைவன் அரவத்தினைப் பூண்டு அழகாய் விளங்கிய மூர்த்தம் ஆகும்.

14. புஜஸ்கந்தராக மூர்த்தம்

முனிவர்கள் அபிராமி வேள்வி நடத்தி இறைவனை அழிக்க நினைத்து வேள்விக் குண்டத்திலிருந்து வெளிப்போந்த கொடிய சர்ப்ங்களை அவர் மீது ஏவினர். இறைவன் அப்பாம்புக்களை முதலில் அச்சுறுத்துவது போல் நடித்தார். எனவே அரவங்களை அச்சுறுத்தியதால் புஜஸ்கந்தராகமூர்த்தி என அழைக்கப்பட்டார்.

15. ஸந்யாந்ருத்த மூர்த்தம்

இறைவன் பாற்கடலில் தோன்றிய நஞ்சினை உண்டு சற்றுக் களைத்தது போல் நடித்தான். தேவர்கள் கண் விழித்திருந்து இறைவனைப் போற்றினர். இறைவன் உமையும், தேவர்களும் காண ஒரு யாமப்பொழுது நடனமாடினார். அக்காலம் பிரதோஷகாலமாகும். அம்பிகை அருகிருந்து காண இறைவன் நடனமாடும் கோலத்தில் இருக்கும் வடிவம் ஸந்யாந்ருத்ய மூர்த்தமாகும்.

16. ஸதாந்ருத்ய மூர்த்தம்

இம்மூர்த்தத்தின் பொருள் எப்பொழுதும் நடனமிடும் திருக்கோலம் என்பதாகும். பஞ்சாட்சரமென்னும் திருவைந்தெழுத்தையே திருமேனியாகக் கொண்டு பஞ்சக்ருத்ய நடனத்தை அவர் எப்போதும் புரிகின்றார். பதஞ்சலி வியாக்கிரமபாதரும் அம்பிகையும் உடன் நிற்க நடனமாடும் மூர்த்தமே ஸதாந்ருத்ய மூர்த்தம் ஆகும்.

17. சண்டதாண்டவ மூர்த்தம்

காளியின் செருக்கினை அடக்கிட விரைவான கதியில் ஆடிய நடனமே சண்ட நடனமாகும். அதனை விளக்கிய சிவமூர்த்தமே சண்டதாண்டவ மூர்த்தம் ஆகும்.

18. கங்காதரமூர்த்தம்

அம்பிகையின் கைவிரல்களிலிருந்து பெருகிய பெருவெள்ளத்தை இறைவன் தனது தலைச் சடையின் ஒரு முடியின் நுனியில் தரித்தான். கங்கை வெள்ளத்தைத் தரித்ததால் அவனுக்குக் கங்காதரமூர்த்தி என்ற பெயர் ஏற்பட்டது.

19. கஸ்காவிஸர்ஜன மூர்த்தம்

இம்மூர்த்தியின் பொருள் கங்கையினை விடுத்த திருக்கோலம் என்பதாகும். பகிரதன் ஆகாய கங்கையை பூமிக்கும் கொண்டுவர தவமியற்றினான். கங்கையின் வேகத்தைக் குறைக்க இறைவனை வேண்டினான். அதன்படி இறைவன் வேகமாக வந்த கங்கையைச் சடையில் தரித்து சிறு பகுதியினை நிலம் மீது விடுத்தான். பகீரதனின் முன்னோர்களும் இப்பூவுலகுக்கும் உய்ய கங்கையினை விடுவித்தவன் தான் கஸ்காவிஸர்ஜன மூர்த்தி ஆகும்.

20. திரிபுராந்தக மூர்த்தம்

இறைவன் பிரமன், தேவர்களின் உதவி ஏதுமின்றி தனித்து நின்று தனது புன்சிரிப்பால் முப்புர அசுரர்களையும் அவர்களது கோட்டைகளையும் எரித்து அழித்ததனால் இறைவனை திரிபுராந்தகன் என்றனர் அதுவே திரிபுராந்தக மூர்த்தம்.

21. கல்யாண சுந்தர மூர்த்தம்

இறைவன் பார்வதியைத் திருமணம் செய்வதற்கு போகும் போது தனக்கே உரித்தான அரவு, ஓடு, எலும்பு, தோலாடை போன்றவற்றை விடுத்து அனைத்து அணிகலன்களும் பூண்டு ஆணழகனாய் வந்த நிலையில் இறைவனைக் கல்யாண சுந்தரர் என்றனர். அதுவே "கல்யாண சுந்தரமூர்த்தம்".

22. அர்த்த நாரீஸ்வரர்மூர்த்தம்

அம்பிகை திருக்கேதாரத்தில் விரதமும், தவமும் இருந்தாள். இதைக்கண்ட இறைவன் மகிழ்ந்து தனது இடப்பாகத்தில் சக்தியை இணைத்துக் கொண்டான். அன்று முதல் இறைவன் "அர்த்தநாரீசுரர்" எனப்பெயர் பெற்றார். இதுவே அர்த்தநாரீசுவரமூர்த்தம்.

23. கஜசம்கார மூர்த்தம்

இறைவன் தேவர் முனிவர்களுக்குத் துன்பம் செய்த கஜாசுரனுடன் (யானை வடிவுடைய ஓர் அசுரன்) போரிட்டு அவனை மாய்த்து அவனது தோலினை உரித்து தன் உத்தரியமாகச் சாத்திக் கொண்டான். எனவே யானை உருக்கொண்ட அசுரனை அழித்த நிலையில் இறைவனுக்கு "கஜசம்ஹாரமூர்த்தம்" எனப்பெயர் ஆகும்.

24. ஜ்வராபக்நமூர்த்தம்

சிவபெருமானின் விருப்பப்படி கண்ணனும் சிவனும் சிறிது போர் நிகழ்த்தினர். அதில் கடும் சீதன ஜீரத்தை திருமால் ஏவினார். அதன் ஆற்றலை ஒடுக்க சிவபெருமானும் ஒரு சீதன ஜீரத்தை ஏவினார். இதனால் திருமாலின் சுரத்தின் வீறு குறைந்தது. அதனால் பெருமானுக்கு "ஜ்வராபக்தமூர்த்தி" என பெயர் ஏற்பட்டது.

25. சார்த்தூலஹரமூர்த்தம்

முனிவர்கள் இறைவனை அழிக்கச் செய்த தீய வேள்வியிலிருந்து தோன்றிய பொருட்களில் வேகமாக ஒரு புலி வேள்வித் தீயிலிருந்து வெளிப்பட்டு வேகத்துடன் அழிக்கும் நோக்கில் வர அதனை இறைவன் தன் கரத்தில் பற்றி அதனைக் கொன்று தோலினை உரித்து போர்த்திக் கொண்டான். புலியினைக் கொன்ற கோலந்து இறைவனை "சார்த்தூலஹரமூர்த்தம்" என்கிறோம். இதுபோன்ற சம்கார மூர்த்தங்களில் எல்லாவற்றிலும் இறைவன் தனித்தே இருப்பான். அம்பிகை இடம்பெறமாட்டாள்.

26. பாசுபதமூர்த்தம்

அர்ச்சுனன் அவசரமாக பாசுபத அஸ்ந்திரம் பெறவிரும்பி கயிலை சென்று இறைவனிடம் தனது தேவையைக் கூற இறைவன் பாசுபதத்தைத் தருவித்து அவனிடம் கொடுத்து அதனை விடுக்கும் மந்திர முறைகளையும் உபதேசித்தான். கண்ணனும் உடன் சென்றிருந்தான். எனவே கண்ணனும் அருச்சுனனும் வணங்கி நிற்க இறைவன் பாசுபதம் கொடுக்கும் நிலையில் இருக்கும் வடிவமே "பாசுவதமூர்த்தம்" எனப்படும்.

27. கங்காள மூர்த்தம்

வாமனாவதார காலத்தில் திருமாலின் உக்கிரம் அடங்காது நின்ற வேளை தேவர்களின் வேண்டுகோளின்படி வாமனனின் முதுகெலும்பை எடுத்து அதனைத் தனது கையில் தரித்த கோலமே "கங்காளமூர்த்தம்" ஆகும்.

28. கேசவார்த்தமூர்த்தம் அல்லது சங்கரநாராயண மூர்த்தம்

இறைவனின் நான்கு சக்திகளில் திருமால் புருஷசக்தி ஆவார். இறைவன் வலப்புறம் சிவப்பாக மழுவும் அபயமும் தரித்து இடப்புறம் பசுமையாய்ச் சக்கரமும் வரதமும் கொண்டு "சங்கரநாராயணராகத்" தோன்றுவார். இது சிவ-விஸ்ணு ஒருமைப்பாட்டை உணர்த்தும் மூர்த்தங்களாகும். கேசவன் என்ற திருமாலைப் பாதியாகக் கொண்ட வடிவு தான் "கேசவாத்த மூர்த்தம்" ஆகும்.

29. பிட்சாடன மூர்த்தம்

தாருகாவனத்து முனிவர்களுக்கும், அவர்களது மனைவிமாருக்கும் இறை நினைப்பு எதற்கும் இன்றியமையாதது என்பதை விளக்க இறைவன் "பிட்சாபாத்திரம்" ஏந்திச் சென்ற கோலமே பிட்சாடன மூர்த்தம் ஆகும்.

30. சரபமூர்த்தம்

இறைவன் இரணியனை வதைத்தபின் அவரது உக்கிரம் தணிய தேவர்களின் வேண்டுகோளின்படி மனிதன் - சிங்கம் - பறவை மூன்றும் கலந்த வடிவமெடுத்தார். அவ்வடிவமே "சரபம்" என்பது இம்மூர்த்தம் இரண்டு சிங்கமும், இருபுறமும் இறக்கைகள், எட்டுக் கால்கள், மனிதஉடல் என்ற முறையில் அமைந்திருக்கும்.

31. சண்டேச அனுக்ரஹ மூர்த்தம்

விசாரசருமரை சிவகணங்களுக்குத் தலைமை தாங்கும் சண்டேசப் பதவியினை அளித்து அதற்கடையாளமாக அவரது தலையில் தமது மாலையினைச் சூட்டி அருளினார். எனவே சண்டேசுநாயனாருக்கு அருட்செய்த கோலமே "சண்டேச அனுக்ரஹ மூர்த்தம்" ஆகும்.

32. தட்சிணாமூர்த்தி

சனகர், சனந்தனர், சனாதனர், சனற்குமரர் ஆகிய சனகாதி முனிவர்கள் நால்வருக்கும் இறைவன் ஞான உபதேசம் செய்த மூர்த்தம் "தட்சிணாமூர்த்தமாகும்". தட்சிணாமூர்த்தி கல்லால மரத்தின் கீழ் தெற்கு நோக்கி அமர்ந்து சின்முத்திரை காட்டி மௌனமாக இருப்பார்.

33. யோக தட்சிணாமூர்த்தி

சனகாரி முனிவர்களுக்கு யோகம் பற்றி உபதேசிக்க வாயினால் பேசியும், யோகுசெய்து காட்டியும் அருளிய மூர்த்தம் "யோக தட்சிணாமூர்த்தமாகும்". தட்சிணாமூர்த்தி மௌனமாக உபதேசித்தான். யோக தட்சிணாமூர்த்தி பேசியும், செய்து காட்டியும் உபதேசித்தான்.

34. வீணா தட்சிணாமூர்த்தி

தும்புரு, நாரதர், சுகர் போன்ற இசைநாட்டமுள்ள முனிவர்களுக்கு வீணை செய்ய ஏற்ற மரம், செய்யும் முறை வீணை வகை, நரம்புகள், இசைக்கும் முறை, இசை நுணுக்கங்கள் பற்றியெல்லாம் விளக்கினான். தட்சிணாமூர்த்தியாகி வீணை தாங்கிய நிலையில் அவன் "வீணாதட்சிணாமூர்த்தி" எனச் சிறப்பிக்கப்பட்டான்.

35. காலாந்தகமூர்த்தம்

யமன் மார்க்கண்டெயனைத் தன் பாசத்தால் கட்டி இழுத்த போது அவனை தனது காலால் வதம் செய்தார் இறைவன். எனவே மார்கண்டேயருக்காக யமனைக் காலால் உதைத்த கோலமே "காலாந்தக மூர்த்தம்" ஆகும்.

36. காமதகனமூர்த்தம்

யோகமூர்த்தியாக இருந்த இறைவன் மீது மன்மதன் தனது ஐங்கணைகளை விடுத்தான். இறைவன் தனது நெற்றிக்கண்ணால் மன்மதனை எரித்தான். எனவே மன்மதனை எரித்த மூர்த்தி "காமதகன மூர்த்தியாகும்."

37. லகுனேஸ்வரமூர்த்தம்

அண்டை வெளியில் உள்ள பிரும்மாண்ட மண்டலங்களில் அமரேஸ்வர புவனங்கள் என்ற மண்டலத்தின் மத்தியில் "இலகுனேஸ்வர புவனம்" என்ற ஒளிமயமான இடத்தில் இறைவன் சிங்காசனத்தில் பேருருவுடன் அமர்ந்திருக்கின்றான். உலகங்கள், உயிர்களின் நிலைகளுக்கு ஏற்ப ஆங்காங்கே எழுந்தருளும் வேறுபட்ட உருவங்கள் "லகுனேஸ்வரமூர்த்தம்" எனப்படும். உபதேச பாவனையில் இவர் இருப்பார்.

38. பைரவமூர்த்தம்

அமரர்களை எதிர்த்த அந்தகாசுரனை கொல்வதற்கு இறைவன் கண்டோர் அஞ்சத்தக்க கோலம் கொண்டு (பைரவவடிவம்) தனது முத்தலைச் சூலத்தினால் அவனைக் கொன்றார். அந்த நிலையில் தான் இறைவன் பைரவமூர்த்தி என அழைக்கப்பட்டான். இம்மூர்த்தியை அந்தகாசுரசம்ஹாரமூர்த்தி எனவும் கூறுவதுண்டு.

39. ஆபத்உத்தாரணமூர்த்தம்

அடியார்களுக்கு இடுக்கண் வரும் போதெல்லாம் "ஆபத்பாந்தவர்" என அழைக்க இறைவன் இரண்டு காலும், கையும் கொண்ட எளிய கோலத்தில் வந்து அருள் புரியும் கோலமே "ஆபத் உத்தாரணமூர்த்தம்" ஆகும்.

40. வடுகமூர்த்தி

முண்டகாசுரனை வதைத்து வர இறைவன் தனது அம்சமான வடுகதேவரை அனுப்பினான். வடுகதேவர் முண்டகாசுரனை அழித்தான். வடுகதேவர் பைரவ அம்சமானதால் அவரை வடுகபைரவர் எனவும் கூறுவர். இம்மூர்த்தம் ஒரு கையில் பாத்திரமும் மற்றொரு கையில் தண்டுடன் இணைந்த பாம்பும் தரித்த வடிவுடன் காணப்படும்.

41. ஷேத்ரபாலகமூர்த்தம்

பெருவூழிக் காலத்திலும் உலகுயிர்களை ஊறுவிளையாமல் காத்து மீண்டும் அவற்றினை வெளிப்படுத்தி காப்பதனால் அவருக்கு ஷேத்ரபாலகர் என்ற பெயர் ஏற்பட்டது. ஷேத்திரம் என்றால் பூமி பாலகர் என்றால் காப்பவர்.

42. வீரபத்திரமூர்த்தம்

தேவர்களின் வேண்டுகோளின்படி இறைவன் தனது அம்சமான வீரபத்திரரை அனுப்பி வீரமார்த்தாண்டனை அழித்தார். அவரே வீரபத்திர மூர்த்தம் ஆகும்.

43. அகோராஸ்த்திரமூர்த்தம்

சுத்ததந்து என்பவன் இறைவனை மதிக்காமல் வேள்வி செய்தான். எனவே முனிவர்களின் வேண்டுகோளின்படி அவனின் வேள்வியையும் அழித்து அவனையும் சங்கரிக்க தனது அம்சமான வீரபத்திரரை அனுப்பினார். அவர் எட்டு கரங்கள் கொண்டு அச்சந்தரும் அகோரவடிவம் கொண்டு சுத்ததந்துவை சங்கரித்தார். அகோராஸ்த்திரமென்னும் படைக்கலனை விடுத்து சுத்ததந்துவை சங்கரித்த நிலையில் பெருமானை அகோராஸ்த்திரமூர்த்தி என்று அழைத்தனர்.

44. தட்சயக்ஞஹதமூர்த்தம்

தட்சன் இறைவனை வெறுத்து ஒதுக்கி வேள்வி செய்தான். தேவி அவ்வேள்வியை அழித்திட வேண்டும் என்று வேண்ட இறைவன் தனது நெற்றிக் கண்ணிலிருந்து ஆயிரம் முகங்களும் ஈராயிரம் கரங்களும் கொண்ட வீரபத்திரரை தோன்றிச் செய்து அவர் மூலம் தட்சனின் வேள்வியை தவிடுபொடியாக்கினார். வேள்வி அழிய "ஹதம்" செய்ததால் அவர் தட்சயக்ஞஹத மூர்த்தி என அழைக்கப்பட்டார்.

45. கிராத மூர்த்தம்

அருச்சுனன் இறைவனிடம் பாசுபதம் பெற தவமியற்றினான். அதே நேரம் மூசன் என்பவன் உயிர்களுக்குத் தீங்கு செய்தான். எனவே அருச்சுனனுக்குப் பாசுபதம் அளிக்கவும் மூசனைக் கொல்லவும் இறைவன் வேடுவக் கோலம் கொண்டு அம்பிகை வேட்டுவிச்சியாகவும் அருச்சுனன் இருக்கும் இடம் சென்று மூசனைக் கொன்றும், அருச்சுனனுக்குப் பாசுபதமும் அளித்தார். பாசுபதம் அளிக்க வேட்டுருவக் கொண்டு சென்ற வடிவமே கிராத மூர்த்தம் ஆகும்.

46. குருமூர்த்தம்

பாண்டிய மன்னனுக்குக் குதிரை வாங்கச் சென்ற திருவாதவூரர் ஆவுடையார் கோயிலில் ஒரு குருந்த மரத்தடியில் மானுட ஞானாசாரியர் வடிவில் இருந்த இறைவனின் திருவடியில் விழுந்து வணங்க ஞானாசாரியாரும் வாதவூரருக்கு ஞானோபதேசம் செய்து தீட்சையும் கொடுத்தார். வாதவூரர் மாணிக்கவாசகர் ஆனார். குருவடிவாகி உபதேசித்த அம்மூர்த்தியே குருமூர்த்தி ஆகும்.

47. அச்வாருடமூர்த்தம்

இறைவன் நரிகளைப் பரிகளாக்கி தானே குதிரைப் படைத்தலைவனாக குதிரை மீது ஏறிச் சென்று பாண்டியனிடம் குதிரைகளை ஒப்படைத்தான். இவ்வாறு குதிரை மீது ஏறிச் சென்ற மூர்த்தி "அச்வாருட-மூர்த்தி" ஆகும்.

48. கஜாந்திகமூர்த்தம்

பானுகோபனால் தாக்கப்பட்டு நான்கு கோடுகளையும், வலுவையும் இழந்த இந்திரனின் யானையாகிய ஐராவதம் இறைவனை நோக்கித் தவமிருந்து மீண்டும் கோடுகளையும், வலுவையும் பெற்றுக் கொண்டது. எனவே வெள்ளை யானையாகிய ஐராவதத்துக்கு அருள் செய்த கோலம் கஜாந்திக மூர்த்தம் ஆகும்.

49. ஜலந்தரவதமூர்த்தம்

ஜலந்தரன் என்ற அசுரனை அழித்த கோலமே ஜலந்தரவதமூர்த்தம் ஆகும்.

50. ஏகபாததிரிமூர்த்தம்

மும்மூர்த்திகளும் சிவனிடமிருந்தே தோன்றி ஊழி முடிவில் அவரிடமே ஒடுங்கும் அனைத்துக்கும் ஒருவனே காரணம் என்பதை உணர்த்த இறைவன் ஒரு கால் கொண்டு நிற்பான். பிரம்ம விஸ்ணுக்கள் இருபுறமும் இருக்க விளங்கும் மூர்த்தமே "ஏகபாததிரிமூர்த்தி" ஆகும்.

51. த்திரிபாதமூர்த்தி

பெருவூழிக்காலத்தில் பிரம்ம விஸ்ணுக்களுக்கு ருத்திரரும் தாம் தோற்றம் பெற்ற மகேஸ்வரனிடமே ஒடுக்கம் பெறுவர். இவ்வாறு மூவரும் இறைவனிடத்து ஒடுங்கும் காலத்துத் தோன்றும் உருவம் "த்திரிபாதமூர்த்தி" எனப்படும்.

52. ஏகபாதமூர்த்தம்

"ஒன்றே குலன் ஒருவனே தேவன்" என்ற திருமந்திர அருள்மொழிக்கிணங்க இறைவன் ஒருவனே. அவனே சிவன் என்பதை உணர்த்த சிவன் ஒற்றைக் காலில் தோன்றி "ஏகபாதமூர்த்தி" ஆகின்றான்.

53. கௌரிவரப்ரதமூர்த்தம்

அசுரனொருவன் உமை அம்மையின் உடலிலிருந்து தோன்றும் பெண்ணால் தான் வதைபட வேண்டுமென்று வரம் பெற்றிருந்தான். இறைவன் அருளால் உமை கருமை நிறம் எய்தி இமாலயம் சென்று உமையின் உடலிலிருந்து ஒரு பெண் தோன்றச் செய்து அப்பெண் அசுரனை அழித்தான். பின் உமையின் கருமை நிறத்தை நீக்கி வெள்ளை நிறமுடையவனாக்கிய இறைவனை “கௌரிவரப்ரதமூர்த்தி” என்றனர்.

54. சக்ரப்ரதமூர்த்தம்

திருமால் சக்கரம் ஒன்றைச் சிவனிடமிருந்து பெற வேண்டி இமயமலைச் சாரலில் லிங்கத் திருமேனி அமைத்து நாளொன்றுக்கு ஆயிரம் தாமரை மலர்க்கொண்டு அர்ச்சித்தான். ஒரு நாள் ஒரு மலர் குறையக்கண்டு தனது கண் ஒன்றை அகழ்ந்தெடுத்து பூரித்தார். எனவே அவரது பக்தியை மெச்சி சக்கரமொன்றினை இறைவன் திருமாலுக்கு அளித்த கோலமே சக்ரப்ரதமூர்த்தம் ஆகும்.

55. கௌரிலீலாசமன்விதமூர்த்தம்

கௌரியாகிய அம்பிகையுடன் இறைவன் திருவிளையாடல்கள புரியும் நிலையில் “கௌரிலீலாசமன்விதமூர்த்தி” என்பர்.

56. விஷாபஹரணமூர்த்தம்

திருப்பாற்கடலில் தோன்றிய ஆலகால நஞ்சினை இறைவன் உண்டு உலகினைக் காத்தது முதல் அவன் “விஷாபஹாரணமூர்த்தி” எனப் பெயர் பெற்றான்.

57. கருடாந்திக மூர்த்தம்

நந்தியம் பெருமானால் கருடனுக்கு துன்பம் ஏற்பட்ட வேளை அதனைத் தாங்காது அபயம் என்றார். இதனையறிந்த இறைவன் நந்தியிடமிருந்து கருடனை விடுவித்து அருட்செய்தார். கருடனைக் காத்த நிலையில் இறைவன் கருடாந்திக மூர்த்தி என அழைக்கப்பட்டார்.

58. பிரம்மசிரச்சேதமூர்த்தம்

இறைவனை மதியாதும், இகழ்ந்தும் பேசிய பிரம்மனை பெருமான் பைரவரைக் கொண்டு பிரம்மனின் நடுச்சிரத்தை நகத்தின் நுனியால் கிள்ளி எறிந்தார். அதுமுதல் பிரமன் நான்முகன் ஆயினான். அத்திருவிளையாடல் புரிந்த கோலமே பிரம்மச் “சிரச்சேதமூர்த்தம்” ஆகும்.

59. கூர்மஸம்ஹாரமூர்த்தம்

திருப்பாற்கடலைக்கடையும் போது திருமால் கூர்மவடிவெடுத்து மலையைத் தாங்கினார். இதனால் ஆமை வடிவான திருமால் தனது உக்கிரம் தணியாமல் பாற்கடலையும் மற்றைய கடல்களையும் கலக்கி அரிலுள்ள உயிர்களையும் துன்புறுத்தினர். அமரர்கள் இறைவனிடம் அதன் உக்கிரத்தைத் தணிக்க வேண்ட இறைவன் திருமாலின் கூர்மாவதாரத்தின் உக்கிரத்தைத் தணித்த சிவமூர்த்தம் கூர்மஸம்ஹாரமூர்த்த ஆகும்.

60. மத்ஸ்யசம்ஹாரமூர்த்தம்

கோமுகாசுரன் தீயோன், பிரம்மனின் படைத்தல் தொழிலுக்கு ஆதாரமான நான்கு வேதங்களையும் பறித்துச் சென்று கடலுள் மறைந்தான். பிரமன் திருமாலிடம் முறையிட திருமால் மீனுருக் கொண்டு கடலினுள் சென்று கோமுகாசுரனைக்கொன்று மறைகளை மீட்டான். மீனுருவம் கொண்ட திருமால் கடலைக் கலக்கி உயிர்களுக்குத் துன்பம் செய்தது. எனவே சிவன் வலையர் வடிவு கொண்டு கடலில் சென்று வலைவீசி மச்சத்தைப் பிடித்து அதன் உக்கிரத்தைத் தணித்தார். எனவே மீனின் உக்கிரம் தணித்த கோலமே “மத்ஸ்யசம்ஹாரமூர்த்தம்” ஆகும்.

61. வராஹசம்ஹாரமூர்த்தம்

இரண்யாட்சன் தவஞ்செய்து அரிய வரங்களைப் பெற்றதனால் உலகினைப் பாய்போற் சுருட்டி கடலுக்குள் மறைத்தான். எனவே நாராயணன் பன்றி வடிவெடுத்து நீண்ட தந்திப் பல்லினால் உலகினை நீருக்குள் இருந்து மீட்டார். வராகம் தனது உக்கிரம் தணியாமல் உலகிற்குத் தீங்கு செய்தது ஆயினும் எனவே இறைவன் அதனை அடக்கி அதன் கொம்பினையும் அணிகலன்களைத் தரித்தார். அம்மூர்த்தமே வராஹசம்ஹாரமூர்த்தம் ஆகும்.

62. ப்ரார்த்தநா மூர்த்தம்

சிவன் மீது உமையம்மை ஊடல் கொண்டாள். சக்தியின் ஊடலைத் தீர்க்க இறைவன் அவளைத் துதித்துப் போற்றிய வடிவமே “ப்ரார்த்தநாமூர்த்தம்” ஆகும்.

63. ரத்தபிஷாப்ரநாநமூர்த்தம்

பிரம்ம சுபாலத்தில் இருத்தப் பலியேற்கச் சென்ற பைரவ வடிவமே “ரத்தபிஷாப்ரதாநமூர்த்தம்” ஆகும். இறைவன் இரத்தத்திமிரால் ஏற்படும் அகந்தையை அழிக்கின்றான் என்பதே இவ்வரலாற்றின் உட்கருத்து.

64. சிஷ்யபாவமூர்த்தம்

பிரணவத்தின் பொருளை முருகன் சிவனுக்கு உணர்த்தி தந்தைக்கு உபதேசம் செய்தமையினாலே தகப்பன் சுவாமி எனும் பெயரை முருகன் பெற்றார். இவ்வாறு மாணவப்பணியுடன் முருகனிடம் பிரணவஉபதேசங் கேட்ட பெருமானின் கோலமே "சிஷ்யபாவமூர்த்தம்" எனப்படும்.

இவ்வாறு சிவபெருமான் 64 மூர்த்தங்களையும் அடியார் மேற்கொண்ட பெரும் கருணையினாலே அவர்களை உய்விக்கும் பொருட்டு கொண்டருளியமையை உணரக்கூடியதாக உள்ளது.

சிவாகமபூஷணம் டாக்டர் எஸ்.விசுவநாத சிவாச்சாரியாரின் சிவபெருமானின் அஷ்டாஷ்ட (64) மூர்த்தங்கள் என்ற நூலிலிருந்து.

சிவனின் கருணை பொழி திருமுகம்

அஞ்செலன்ற கரதலமுங் கணபண கங்கணமு
அரைக்கசைத்த புலியுடையு மம்புலிச் செஞ்சடையும்
கஞ்சமலர்ச் சேவடியுங் கனைகழலுஞ் சிலம்புங்
கருணைபொழி திருமுகங் கண்களொரு மூன்று
நஞ்சையுண்ட மணிமிடறு முந்நூலு மார்பு
நலந்திகழ் வெண்ணீற் றொளியு மறிமானு மழுவும்
பஞ்சடிச் சிற்றிடையுமையா ளொப்பனைப் பாகமுமாய்ப்
பால்வண்ண னுளத்திருக்கப் பயமுண்டோ எமக்கே

- அதிவீரராம பாண்டியன்

சிவனும் சித்தாந்தமும் ஒரு நோக்கு

செல்வி.நளினி வாசுதேவன்,
வவுனியா.

முப்பொருள் உண்மை பேசும் நெறியாக சைவசித்தாந்தம் விளங்குகின்றது. இது விஞ்ஞான யுகம். எந்தவொன்றையும் அறிவின் துணைக்கொண்டு ஆராய்ந்து உண்மை காண வேண்டும் என்று நினைப்பதே விஞ்ஞானத்தின் அடிப்படை. மனிதன் எவ்வளவு தான் அறிவின் துணை கொண்டு மேலே சென்றாலும் சமயக் கொள்கைகளை என்றும் மறந்ததில்லை. மனித இனம் என்று தோன்றியதோ அன்றே சமயமும் தோன்றியது. இப்பிரபஞ்சம் சடப்பொருட்களாலும், உயிருள்ள பொருட்களாலும் சூழப்பெற்றுள்ளது. இதனால் இப்பிரபஞ்சம் முழுதுமே மனிதனின் சிந்தனைக்கு நிலைக்களனாக இருந்தது. மனிதனிடம் சமய ரீதியான தெய்வ நம்பிக்கை உண்டான பின்னரே அவன் நல்ல குடும்ப வாழ்வு, சமுதாய கட்டுப்பாடு, அரசியல் அமைப்பு என்பன தோற்றம் பெற்று மனிதனை அறவழியில் நடப்பதற்கும் வழிகாட்டியது என பல நூல்கள் கூறுகின்றன.

இவ்வுலகப் பொருட்களை தோற்றுவித்து இயக்கும் ஒரு பரம் பொருள் உண்டு. இரவில் சந்திரன் தோன்றுவதும், பருவம் மாறாது காற்று வீசுவதும், மழை பெய்வதும், தாவரங்கள் உண்டாகி விளைவைத் தருவது, சூரியன் உதித்து மறைவதுவும் முதலான செயற்பாடுகளுக்கு ஒரு சக்தி இன்றியமையாததாக விளங்குகின்றது. அச்சக்தியையே இறைவன் என்ற பெயரில் அழைத்தார்கள். இக்கருத்தையே 19ம் நூற்றாண்டின் மாபெரும் மெய்ஞ்ஞானியாகிய சுவாமி விவேகானந்தர் "மீன்கள் எல்லாம் கூடி தமக்குள் ஒரு கடவுளை படைத்தால் அதற்கு ஒரு மீன் வடிவம் தான் கொடுக்க முடியும்" என்றார். மனிதன் நாமரூபமற்ற பரம்பொருளுக்குஒரு வடிவம் கொடுக்க விரும்பினான். அவனே இப்பிரபஞ்சத்தை ஆட்டுகின்ற "சிவன்" என்று கண்டுணர்ந்தான்.

அந்த வகையில் முப்பொருள் உண்மை பேசும் நெறியாகிய சைவ சித்தாந்தம் பதி, பசு, பாசம் என்னும் முப்பொருளில் பதியை முதன்மை பொருளாக கொள்கின்றது. பதி என்பதற்கு சிவம், பரமசிவம், கடவுள், இறை எனப் பல பெயர்கள் சுட்டப்படுகின்றன. "கடவுள்" என்ற சொல் இஸ்லாமிய மொழியில் பொக் (bog) என்ற பெயரால் அழைக்கப்படுகின்றது. புராதன வரலாற்று ஏடுகளில் ஆராயும் போது இயற்கைக் கடவுளை இப்பெயர் குறிக்கிறது என (Helmold) கெல்மோல்ட் என்ற அறிஞர் கூறுவதாக சொல்லப்பட்டுள்ளது. நன்மை, அருள், செல்வம் என்னும் பொருளில் இச்சொல் பயன்படுத்தப்படுகின்றது.

சைவ சித்தாந்தம் சிவனை முழுமுதற்கடவுளாக கொள்ளும் போது கடவுள் என்பதற்கு கட + உள் எனும் பகுப்பு, கடந்து + உள்ளார் அல்லது கடந்து + இருப்பார் என சுட்டப்படுகிறது. அதாவது சடத்தை அல்லது உள்ளத்தை கடந்திருப்பவர் எனவும் கொள்ளலாம். சைவசித்தாந்த கடவுள் கொள்கை தொடர்பாக கடவுள் ஒருவர் உண்டு என்பதை நிறுவிக் காட்டும் முயற்சியாக அதனுடைய கடவுள் இருப்பிற்கான பிரமாணங்கள் அமைந்துள்ளன. அதன் வழி காட்சி, அனுமானம், ஆப்தவாக்கியம் என்ற மூன்று பிரமாணங்களின் மூலமாக சைவசித்தாந்தம் கடவுள் இருப்பிற்கான காரணம் கூறுகின்றது. அனுமானத்தைக் கொண்டு மூன்று வழிகளில் கடவுட் கோட்பாட்டை சைவசித்தாந்தம் அணுகியுள்ளது. அவைமேல் வருமாறு.

1. உலகின் உண்மையைக் கொண்டு படைப்பின் அடிப்படைகளை ஆராய்வதன் மூலமாகவும்.

2. உலகின் உண்மையைக் கொண்டு அதனை படைத்தவன் ஒருவன் உளன் என்றும்.

3. குறைவுடைய பொருட்களில் இருந்து குறைவிலா நிறைவுடைய பொருளொன்று உண்டு என்பதன் மூலமாகவும் நிலை நாட்டுகின்றது.

அவன், அவள், அது எனும் அவை மூவினைமையின்
தோற்றிய திதியே ஒடுங்கி மலத்துளதாம்
அந்தம் ஆதி என்மனார் புலவர்

என்ற சிவஞானபோத முதற் சூத்திரத்திலேயே மெய்கண்டார் இறை இருப்பை எடுத்து விளக்குகின்றார்.

பதியானவர் சொரூபநிலை அல்லது சிறப்பியல்பு, தடத்தநிலை அல்லது பொது இயல்பு எனும் இரு நிலை கொண்டவராக விளக்குகின்றார். குணங்குறிகளைக்கடந்த சொரூபநிலையில் பரமசிவன் அருவம், உருவம், அருவுருவம் என்னும் முத்திருமேனிகளையும் கடந்த வரையும், மனம், வாக்கு, காயம் என்னும் திரிகரண நிலைக்கு அதீதமானவனாயும், விளங்கும் தன்மையினை

சிவனருவுருவமல்லன் சித்தினோடசித்துமல்லன்
பவமுதற்தொழில் களொன்றும் பன்னிரு வானுமல்லன்"

உமாபதி சிவாச்சாரியார் இச்சிவத்தின்
தன்மையினை

.........பதி பரமேயது தான்
நிலவும் அருவுருவின்றி குணம் குறிகளன்றி
நின்மலமாய் ஏகமாய் நித்தலாகி
....
திகழ்வது தற்சிவம் என்பர் தெளிந்துளோரே

ஊரிலான் குணங்குறியிலன் செயலிலா னுரைக்கும
பேரிலான் ஒரு முன்னிலான் பின்னிலான்

என்பன போன்ற அடிகள் ஊடாக உமாபதி சிவாச்சாரியார் சிவத்தின் தன்மையினை விளக்குவதைக் காணலாம்.

அடுத்து சைவசித்தாந்தம் சிவனாகிய பதிக் கோட்பாட்டை விளக்குமிடத்து "தடஸ்தம்" முக்கிய இடம் பெறுகின்றது. சொரூபநிலையில் அறிதற்கரிதான சிவன் தடஸத்தத்தில் குணங்குறிகளோடு கூடி பண்பு தொழில்களுடன் மாறுபட்டு அமையும் நிலையினை

அவையே தானே யாகி.
நீக்கமின்றி நிற்குமன்றே (சிவஞானபோதம்)

உலகெலாம் ஆகி உடனுமாய்
ஒளியாயோங்கி . (சிவஞானசித்தியர்)

உணர்வும் அவனே உயிரும் அவனே
புணர்வும் அவனே புலனும் அவனே
(திருமந்திரம்)

போன்ற செய்யுளடிகள் விளக்கி நிற்கின்றன. சித்தாந்த நூல்கள் இறைவன் ஒருவன் என உபசாரமாகக் கூறும் இடத்து லயம் அடைதலினால் "லயி" எனவும் போகங்கள் உடையதனால் "போகி" எனவும் கூறப்பட்டாலும் அவை காரிய வேறுபாட்டை ஒட்டியிருக்கும் என கூறப்படுகின்றது. இந்நிலையினையே சிவாக்கிரக யோகி என்பவர் ஐந்தொழில் தத்துவத்தை கூறி நவபேத வடிவங்களையும் சித்தரிக்கின்றமையைக் காணலாம்.

மந்திரமே தனுவான சதாசி வேசர்
மகேசருருத்திரர் திருமா லரோன் மூர்த்த
மராமறநின் நிடல் தடத்தப் பரிசதாகும

என்ற செய்யுள் வாயிலான தடத்த நிலையினது இலக்கணம் கூறப்படுகிறது.

ஐந்தொழில்களின் போது சிவன் ஒன்பது வடிவாக விளங்குகின்றான். சிவன் ஞான சக்தியை பொருந்திய போது அருவத்திருமேனியையும், இத்திருமேனியின் போது சிவம், சக்தி, நாதம், விந்து எனவும், சிவன் ஞானசக்தியையும், கிரியாசக்தியையும் உடைய போது அருவுருவத் திருமேனியையும் இத்திருமேனியின் போது சதாசிவன் ஆகவும், ஞானசக்தி குறைந்து கிரியாசக்தி கூடி இருக்கும் போது உருவத்திரு மேனியையும் இத்திருமேனியின் போது மகேஸ்வரன், உருத்திரன், விஷ்ணு, பிரம்மா என்ற வடிவத்தினையும் பெறுகின்றார். இதனை உமாபதிச்சிவாச்சாரியார்

சிவம் சக்தி விந்து சதாசிவம் நிகழ்ச்ச
நவத்திரு பேதமேக நாதனே நடிப்பென்பர்''

என தனது சிவஞானசித்தியாரில் கூறியுள்ளார். தடத்தநிலையின் சிறப்பினைக் கூறவந்த மாணிக்கவாசகர் தனது திருவாசகத்தில்

ஓர் நாமம் ஓர் உருவம் ஒன்றும் இல்லாற்கு ஆயிரம்
திருநாமம் பாடி நாம் தெள்ளேணம் கொட்டாமோ என குறிப்பிட்டுள்ளார்.

சிவனாகிய பரமசிவன் சகள, நிட்களமான முறையே மகேஸ்வரன், சதாசிவன் என்னும் வடிவங்களை ஆன்மாக்களின் ஈடேற்றத்திற்காக எடுக்கின்றார். சிவன் நிமிர்த்த காரணனாய் சக்தியின் துணையோடு பிரபஞ்ச தோற்ற ஒடுக்கநிலை பேற்றுக்கு காரணமாகின்றான். இதனை சித்தார்ந்த நூலான சிவஞான சித்தியார் பின்வருமாறு பாடுகிறார்.

எத்திறன் நிற்பான் ஈசன் அத்திறன்
அவளும் நிற்பாள்

பதியாகிய சிவனுக்கும், அவனுடைய சக்திக்கும் சம்பந்தமானது சமவாயம். சமவாயமானது ஒருகாலும் பிரிவற்றிருக்கையாதலால் சிவத்தை விட்டு சக்தியும், சக்தியை விட்டு சிவமும் இராது. ஆகையால் சக்தி சிவனது சம்பந்தம் சமவாயம் என்றும் அபேதமாய் தாதான்மியமாகச் சொல்லப்படுகின்றது.

இந்தவகையில் மனித மனமானது எல்லாவற்றுக்கும் ஓர் காரணத்தை இயல்பாகவே தேடும் தன்மை கொண்டது. காரண, காரிய தொடர்பின்றி எதுவும் உலகில் நிகழ்வதில்லை. பிரபஞ்சம் இருப்பது உண்மையெனில் அதற்கான காரணம் யாது என்ற ஆய்விலே மூலகாரணம் எது என்ற ஆராய்ச்சியில் ஈடுபட்டு முதற்காரணத்தை தேடும் இன்றியமையாமை எழுந்தது. அவ்வாறே உலகின் தோற்றத்துக்கு ஓர் கருத்தாவின் அவசியம் நாடப்பட்டது. அதுவே முதல் இயக்குனராகவும், அவரே இறைவன், பதி, சிவன் என்ற பெயராலும் அழைக்கப்படுகின்றது. வேதாந்தம், சித்தாந்தம் என்ற இருபெரும் தத்துவங்களில் கனி எனின் சித்தாந்தம் அதிலிருந்து பிழிந்தெடுக்கப்பட்ட சாறு போன்றது ஏனெனின் கனியை எவராலும் இலகுவாக உண்ண இயலாது. ஆனால் பிழிந்த சாறு எனின் சிறியோர் முதல் வயோதிபர் வரை இலகுவாக பருகி விடலாம். இந்தவகையில் இந்து சமயத்தின் முழுமுதற் கடவுளாகிய சிவன் சித்தாந்த தத்துவத்தில் எத்துணைத்தூரம் முக்கியத்துவம் பெறுகின்றது என்பதனை பல சித்தாந்த நூல்கள் வாயிலாக அறிந்து கொள்ள முடிகின்றது.

துணை நூல்கள்.

1. கலைவாணி இராமநாதன்,
அஷ்டபிரகரணம் கூறும் சைவசித்தாந்த கோட்பாடும் அறவொழுக்க சிந்தனைகளும் சத்தியஜோதியை அடிப்படையாகக் கொண்ட ஆய்வு யாழ்ப்பாண பல்கலைக்கழகம் - 2004.
2. கலைவாணி இராமநாதன்,
இந்து தத்துவ முறைகளான வேதாந்தமும் சைவசித்தாந்தமும் காட்டும் கடவுட் கொள்கை - ஓர் ஒப்பியல் ஆய்வு, யாழ்ப்பாணப் பல்கலைக்கழகம், இலங்கை, 1981.
3. சிவகுருநாதப்பிள்ளை.ந.
சிவஞானசித்தியார் ஆராய்ச்சி, தென் இந்திய சைவசித்தாந்த நூற்பதிப்புக்கழகம், திருநெல்வேலி.1977.
4. ஞானகுமாரன், நா.
சைவசித்தாந்த தெளிவு, செல்வம் வெளியீடு, பருத்தித்துறை.1994
5. மகாதேவன், ரி.எம்.பி.
இந்துசமய தத்துவம், குமரன் புத்தகஇல்லம், சென்னை. 1955. சித்தாந்த சாஸ்திரம் பதின்நான்கு(மூலமும் விளக்க உரையும்) சைவசித்தாந்த பெருமன்றம், மயிலாப்பூர், சென்னை, 1994.

சைவ சமயமும் சிவவழிபாடும்

திரு. ச. சுரேஸ்குமார்
வவுனியா வடக்கு பிரதேச செயலகம்

சிவ வணக்கம் ஆரியருக்கு முற்பட்ட காலப்பகுதியிலேயே இந்தியாவில் தோன்றியதாக சில அறிஞர்கள் கருதுகிறார்கள். இதற்கு சான்றாக சிந்து வெளியில் கண்டெடுக்கப்பட்ட சிவலிங்க வடிவங்கள் காணப்படுகின்றன. தொல்காப்பியம்,பத்துப்பாட்டு,எட்டுத்தொகை போன்ற சங்கத் தமிழ் இலக்கிய நூல்களிலும்,சிலப்பதிகாரம்,மணிமேகலை போன்ற நூல்களிலும் சிவன் அல்லது சைவம் என்ற சொற்கள் நேரடியாகப் பயன்படுத்தப்படாவிட்டாலும், சிவன் தொடர்பான செய்திகள் ஆங்காங்கே காணப்படுவதுடன் திருக்குறளிலும் கூட சைவ சித்தாந்த கருத்துக்களை ஒத்த கருத்துக்கள் காணப்படுகின்றன.

இவ்வாறு சிவ வணக்கத்துக்குரிய சான்றுகள் ஆரியருக்கு முற்பட்ட காலங்களிலிருந்தே கிடைத்து வந்தாலும் சைவ சித்தாந்தம் ஒரு தத்துவப் பிரிவாக உருவானது கி.பி. ஐந்தாம் நூற்றாண்டளவிலேயே என்று கருதப்படுகின்றது. இக்காலப் பகுதியில் வாழ்ந்த திருமூலரால் எழுதப்பட்டதும் சைவ சித்தாந்தத்தின் சாரம் என்றும் கருதப்படும் திருமந்திரம் என்னும் நூலிலே சைவ சித்தாந்தம் என்ற சொற்பயன்பாடு முதல் முதலில் காணப்படுகின்றது. சைவ சித்தாந்தம் என்னும் தத்துவப் பிரிவு சிவனை முழுமுதற் கடவுளாகக் கொண்டு வழிபடுகின்ற சமய நெறி சைவ சமயத்துக்கு அடிப்படையாக விளங்குகின்றது. சித்தாந்தம் என்பது சிந்தித்துக் கண்டறிந்த முடிவான உண்மை எனப்பொருள்படும்

இந்தியாவில் இந்து சமயத்தின் பெரும்பாலான தத்துவப் பிரிவுகள் வேதங்களையும் அவற்றின் இறுதிப்பகுதியாகக் கொள்ளப்படும் உபநிடதங்களையும் அடிப்படையாகக் கொண்டிருக்க, சைவ சித்தாந்தம் வேதங்களையும்,ஆகமங்களையும் அடிப்படையாகக் கொண்டுள்ளது. ஏராளமான ஆகமங்கள் உள்ளன. இவற்றுள் சில சைவ சமயத்துக்கும் வேறு சில வைணவ சமயத்துக்கும் மற்றவை சாக்த சமயத்துக்கும் உரியவை. சைவ சித்தாந்தத்துக்கு அடிப்படையான சைவ ஆகமங்கள் 28 ஆகும். இவற்றுள் தலையாயவை காமிகாகமம்,காரணாகமம் என்பன.

சைவ சமயம்

சைவ சமயம் சிவனை அல்லது சிவபெருமானை முழுமுதற் கடவுளாகக் கொள்ளும் சமயம் ஆகும். பிற சில முக்கிய சமயங்கள் போன்று இச்சமயத்தை ஒரு குறிப்பிட்டவர் தோற்றுவிக்கவில்லை. தற்போது இம்மதத்தினை 220 மில்லியன் மக்கள் பின்பற்றுகின்றனர்.

சைவத்தின் மூன்று பிரிவுகளாவன

- காஷ்மீர சைவம்
- வீர சைவம்
- சித்தாந்த சைவம்

இவற்றின் தத்துவங்கள், கோட்பாடுகள் ஆகியவற்றில் சில வேறுபாடுகள் இருந்தாலும் அவற்றின் அடிப்படைக் கொள்கைகளில் வேறுபாடு இல்லை. சைவ நெறியானது சிவத்தை பரம்பொருளாக கொண்டு வழிபடும் நெறியே ஆகும். சிவம் என்பது சிவனும் சக்தியும் சேர்ந்த பொருளாகும். இறைவனின் அருவுருவ நிலையே சிவலிங்கம் ஆகும். சக்தியும் சிவனும் கலந்ததாக இவ்வுரும் அமைந்துள்ளது.

சிவ சின்னங்களில் அதி முக்கியமானதாகக் கருதப்படுவது சிவலிங்கமாகும். நந்தி சிவபெருமானின் வாகனமாகும் சைவ ஆலயங்களிலும், சைவக்கொடியிலும் இந்தச் சின்னத்தை காண முடியும். சைவர்கள் நெற்றியில் அணியும் விபூதியானது மகா ஜோதியான இறைவன் மனிதர்களின் அறியாமையை எரித்துசாம்பலாக்கும் தன்மை படைத்தவர் என்பதைக் குறிக்கவும், நமது உடல் நிலையற்றது என்பதையும் காட்டும் சின்னமாக அமைகின்றது. சிவபெருமானுக்கும்,சக்திக்கும் சூலம் சின்னமாகக் இருக்கின்றது. பாவங்களையும்,துயரங்களையும்,அறியாமையையும் அழிப்பதைக் காட்டும் சின்னமாக சூலம் அமைந்திருக்கின்றது. நமது பாவங்களை அழிக்கும் தன்மையும்,துறவு நிலையையும் காட்டும் சின்னமாக காவி நிறம் காணப்படுகின்றது. சிவபெருமானுக்கு பிடித்த வில்வ இலையே சிவபெருமானை பூஜிப்பதற்காக பயன்படுத்தப்படுகின்றது. சைவம் என்பது ஒரு சமயம் என்ற வரம்புக்குப்பட்ட ஒன்றல்ல. எல்லா மதங்களையும்,மொழிகளையும் இனங்களையும் கடந்து, அனைத்து மக்களுக்கும் அனைத்து ஆன்மாக்களுக்கும் வாழும் வழியைக் காட்டுவதாக அமைந்துள்ளது. அன்பினை தெய்வமாக கருதும் நெறி சைவ நெறியாகும் எனினும் உலகின் பல பாகங்களிலும் வாழும் தமிழ் மக்கள் சைவ நெறியின் தத்துவத்தையும் தாப்பாரியங்களையும் கொஞ்சம் கொஞ்சமாக மறந்து வருகின்ற சூழலைக் காணமுடிகின்றது.

வேதங்கள்

இந்து சமயத்தின் அறிவு நூலாக காணப்படும் வேதங்கள் வித் என்ற வடமொழிச் சொல்லை அடிப்படையாகக் கொண்டது. வித் என்றால் அறிதல் என்று பொருள். இந்து சமயத்துக்கு அடிப்படையானவை நான்கு வேதங்கள் ஆகும். இதனால் இவை நான்மறை என்றும் கூறப்படும். அவை

ரித் வேதம்

யஷுர் வேதம்

சாம வேதம்

அதர்வண வேதம் ஆகும்

இவ் வேதங்கள் சமய முக்கியத்துவம் தவிர உலகின் மிகத் தொன்மையான நூல்களிலொன்று என்றவகையிலும் இதற்கு முக்கியத்துவம் உண்டு.

ஆகமங்கள்

ஆகமங்கள் இந்து சமய நூல்வகைகளுள் ஒன்றைச் சேர்ந்தவை. இவை பொதுவாகத் தென்னிந்தியாவிலேயே புழக்கத்தில் உள்ளன. இவை வேதங்களை அடிப்படையாகக் கொள்ளாதவை. எனினும் இவை வேதங்களுக்கு மாறானவையும் அல்ல. ஆகமங்கள் சரியை,கிரியை,யோகம்,ஞானம் எனும் நான்கு வகையான வழிபாட்டு முறைகள் பற்றிக் கூறுகின்றன. இவ் ஆகமங்கள் மூன்று பிரிவுகளாக பிரிக்கப்படுகின்றன.

சைவ ஆகமங்கள்

வைஷ்ணவ ஆகமங்கள்

சாக்த ஆகமங்கள் என்பனவாகும்.

சிவ விரதங்கள்

மகா சிவராத்திரி

சிவராத்திரி விரதம் இருவகைப்படும், ஒன்று மாத சிவராத்திரி மற்றயது மகா சிவராத்திரியாகும். இராத்திரி என்பது இருட்காலம் என்பதை யாவரும் அறிந்தது. எனினும் உண்மையான இருட்காலம் இறைவன் உலகம் முழுவதையும் ஒடுக்கி நிற்கும் காலம் ஆகும். இதனை "சர்வசங்கார காலம்" "பிரளயகாலம்" "ஊழிமுடிவு" என்று பலவாறாகக் கூறுவர். ஒவ்வொரு மாதமும் தேய்பிறை சதுர்த்தசி

இரவு மாத சிவராத்திரி ஆகும். சிவனடியார் பலர் இந்த சிவராத்திரியை மாதந்தோறும் தவறாமல் கடைப்பிடித்து(அனுஷ்டித்து) வருகின்றனர். மாசி மாதத்தில் வரும் தேய்பிறைச் சதுர்த்தசி இரவே மகிமை மிக்க "மகா சிவராத்திரி ஆகும். சிவராத்திரி மகாசிவராத்திரி,யோக சிவராத்திரி,நித்திய சிவராத்திரி,மாத சிவராத்திரி,பட்ச சிவராத்திரி என ஐந்து வகைப்படும். இவ் விரதம் அனுஷ்டிப்போர் (விரதம் பிடிப்போர்) முதல் ஒருநாள் ஒரு பொழுது உணவருந்தி சிவராத்திரியன்று உபவாசமாய் காலை ஸ்நானம் செய்து சிவ சிந்தனையுடன் கண்விழித்திருந்து நான்கு யாம வழிபாடு செய்யவேண்டும். அடுத்தநாள் காலையில் தீர்த்தமாடி சுவாமி தரிசனம் செய்து அடியார்களுடன் உணவருந்தி (பாரணை செய்து) விரதத்தை நிறைவு செய்தல் வேண்டும்.

மாசி மகம்

மாசி மாதம் மக நட்சத்திரம் கூடிய நாள் நடராஜப் பெருமானின் ஆறு அபிஷேகத் தினங்களில் ஒன்றாகையால் நடேசர் தரிசனத்திற்குச் சிறந்த நாளாகும். அம்பிகை தாட்சாயணியாகத் தாமரை மலரில் அவதரித்த நாள் இன்னாளாகும்.

சித்திரா பூரணை

வருடம் பிறந்து முதலாவதாக வரும் பூரண என்பதோடு, எமது தலை விதியை நிர்ணயிக்கும் எமது வாழ் நாள் கணக்குகளை எழுதிப் பேணும் யமதர்மராஜனின் கணக்குப் பிள்ளையாகிய சித்திரகுப்தர் திருவவதாரம் செய்த நாளுமாகும்.

தமது தாயை இழந்தவர்கள் இத்தினத்தில் தாயை நினைத்து விரதமனுட்டித்துப் பிரார்த்தனை செய்வதால் அன்னாரின் ஆன்மா சாந்தி பெறுகின்றது. பொதுவாக தாயார் இறந்த ஆண்டுத்திவசம் (முதலாம் ஆண்டு) முடியும் வரை இவ்விரதம் அநுட்டிக்கக்கூடாது என்பர். பெண்கள் தர்ப்பணம் பண்ணாது இவ்விரதத்தை அநுட்டிப்பர். இந்நாளில் கோயில்களிலும் ஏனைய புனித இடங்களிலும் கஞ்சி காய்ச்சி சித்திர புத்திரனார் கதைபடித்து எல்லோருக்கும் கஞ்சி வார்ப்பார். இந்நாளில் முன்னோர்கள் பொங்கல் வைத்துப் பூச்சொரிந்து குரவைக் கூத்தாடி வசந்த விழாவைக் கொண்டாடினர். காலப் போக்கில் இதை சிவனுடைய சிறப்பு விழாவாகவும் இறந்த அன்னையரின் பிதிர்த் தினமாகவும் அனுட்டிக்க ஆரம்பித்தனர். விரத நாள் அன்று உப்பைத் தவிர்த்து பசும்பால்,தயிர் உண்ணாமல் இருப்பதனால் பாவச்சுமை குறையும்.

ஆடி அமாவாசை

ஆடி அமைவாசை இந்து சமயத்தவர்களுக்கு மிகவும் புனிதமும் சிறப்பானதுமான தினமாகும். ஆடி மாததத்தில் வருகின்ற அமாவாசை ஆடி அமாவாசை விரதம் எனச் சிறப்புப் பெறுகின்றது. வானவியல் கணிப்பின்படி சூரியனும் சந்திரனும் ஒரே இராசியிற் கூடுகின்ற போதுள்ள காலம் அமைவாசை ஆகும். சூரியனைப் "பிதிர் காரகன்" என்றும் சந்திரனை "மாதுர் காரகன்" என்கின்றோம். எனவே சூரியனும் சந்திரனும் எமது பிதா மாதாக்களுடைய வழிபடு தெய்வங்களாகும்.

சூரிய பகவான் ஆண்மை,வீரம் என்பவற்றை எல்லாம் எமக்குத் தரவல்லவர். சந்திரன் எமது மனதுக்கு அதிபதியானவர். இதனால் மகிழ்ச்சி, தெளிவான தெளிந்த அறிவு,இன்பம்,உற்சாகம் என்பவற்றை எல்லாம் தரவல்லவர். இத்தகைய பெருமைகளை எல்லாம் தருகின்ற சூரிய,சந்திரனை தந்தை,தாய் இழந்தவர்கள் அமாவாசை,பூரணை தினங்களில் வழிபாடு செய்வர்.

ஆடி அமாவாசை தினத்தில் அதிகாலை நித்திரை விட்டெழுந்து தீர்த்தம் ஆடி,பின்னர் சிவாலய தரிசனம்,பிதிர்தர்ப்பணம்,அன்னதானம் செய்தல் என்பன முக்கியத்துவம் பெறுகின்றன. பிதிர் தேவர்களை சிரத்தையோடு வழிபாடு செய்து சிரார்த்தம் செய்வதால் பிதிர்களின் தோஷங்களில் இருந்து நீக்க முடியும் என்பது இந்துக்களின் நம்பிக்கை. யாழ்ப்பாணத்து மக்கள் புரதான காலம் தொடக்கம் கீரிமலை நகுலேஸ்வரத்தில் தீர்த்தமாடுவார்கள். மட்டக்களப்பு வாழ் மக்களுக்கு மாமாங்கப்பிள்ளையார் கோவில் அமிர்தகழியில் தீர்த்தமாடுவர். திருகோணமலை வாழ் மக்களுக்கு கோணேஸ்வரர் ஆலயத்தில் தீர்த்தமாடி பிதுர் கடனைச் செலுத்துவர். ஆடி அமாவாசை காலத்தில் கடல் தீர்த்தம் ஆடுதல் பாவத்தைப் போக்கி விமோசனத்தை தருகின்றது.

ஆனி உத்தரம்

ஆனி உத்தரம் நடராஜரின் அபிஷேக நாள். ஆனி மாதத்தின் உத்தர நட்சத்திரத்தில் வரும் இத்தினத்தில் உதயத்தில் நடராஜ தரிசனம் செய்யப்பட வேண்டும்.

ஆவணி மூலம்

ஆவணி மூலம் என்பது ஆவணி மாதத்து மூல நட்சத்திரத்திலே சிவபெருமானைப் போற்றி எடுக்கப்படும் விழாவாகும். ஆவணி மூல நாளிலே மதுரையில் கோயில் கொண்டிருக்கும் சொக்கநாதப் பெருமான் ஆடிய திருவிளையாடல் மக்களை மிகவும் கவர்வதாகும். செம்மனச் செல்விக்கான வரம்புப் பங்கினைத் தாம் அடைப்பதாக அவரிடம் பிட்டினைக் கூலியாகப் பெற்று, கூலிக்குரிய வேலையைச் செய்யாது நின்று சொக்கன் பிரம்படிபட்ட திருவியைாடல் ஆவணி மூலத்திற்குரியது. மதுரையிலே இவ்விழா விமரிசையாகக் கொண்டாடப்படும். பிட்டுத் திருவிழா என்றும் அங்கு இதனைக் கூறுவர். சுந்தரேசர் பொற்கூடையுடனும் பொன் மண்வெட்டியுடனும் இந்த விழா நாளில் வைகை ஆற்றிலிருந்து பக்தர் சூழ கோயிலுக்கு எழுந்தருளுவர். சிவபெருமான் மாணிக்கவாசகருக்காக நரிகளைப் பரிகளாக்கித் திருவியைாடல் புரிந்ததும் இந்த ஆவணி மூல நட்சத்திரத்திலே ஆகும். மூல நட்சத்திரத்தின் அதி தேவதை நிருதி என்னும் அசுரன் என்றும் அதனால் அசுர சக்தியின் செல்வாக்கினை சொக்கனின் மேல் ஏற்படும் பக்தி உணர்ச்சியின் மூலம் ஒழிக்க வேண்டும் என்று சைவர்கள் கருதுவர். தெய்வ பக்தியை வற்புறுத்துவதாகத் திருவியைாடல் அமைதல் குறிப்பிடத்தக்கது.

கேதாரகௌரி விரதம

ஆண்டுதோறும் புரட்டாதி மாத வளர்பிறை அட்டமி அல்லது நவமி அல்லது சுக்ல பட்ச தசமியில் இவ்விரதத்தை ஆரம்பிக்க வேண்டும். இருபத்தோரிழைகள் கொண்டதும் இருபத்தொரு முடிச்சுக்கள் கொண்டதுமான நூலினால் உருவாக்கப்பட்ட மந்திரக் கயிற்றை செய்து கொண்டு அன்றுமுதல் சிவபெருமானை மண்ணால் ஆக்கப்பட்ட விம்பத்திலும்,கும்பத்திலும் பூஜித்து இவ்விரதத்தை அனுஷ்டிக்க வேண்டும். தூய்மையான அழகான இடத்திலே மண்ணால் செய்யப்பட்ட சிவலிங்கத்தை அமைத்து கும்பம் வைத்து பூக்கள் வில்வம் முதலியனவற்றால் அர்ச்சனை செய்யவேண்டும். ஒவ்வொரு நாளும் கேதாரேஸ்வரனுக்கு இருதுபத்தொரு எண்ணிக்கை கொண்ட அப்பம்,வடை பழம்,பாக்கு,வெற்றிலை,பாயாசம்,சர்க்கரைஅன்னம்,புளி முதலிய நைவேத்தியங்களை வைத்து தூபதீபம் காட்டியும் சோடோபோசார பூஜை செய்தும் கேதாரேஸ்வரனை வழிபடுதல் வேண்டும். இருபத்தொரு நாளும் பூஜையில் வைக்கப்ட்ட இருப்பத்தொரு முடிச்சுக்கள் கொண்ட நூலினை இருபத்தோராவது திதியான அமைவாசைத் திதியில் இடது கையில் கட்டிக்கொள்ள வேண்டும்.

கேதாரம் என்பது இமயமலைசாரலைக் குறிப்பதாகும். அதாவது மலையைச் சார்ந்த வயல் பகுதியை கேதாரம் என்பர். இந்த இமயமலைக் கேதாரப்பகுதியில் சுயம்பு லிங்கமாககேதாரேஸ்சுவரர் தோன்றினார். சக்திரூபமான பார்வதி தேவி சிவனை நினைந்து வழிபட்டு அதன் பலனாக அர்த்தநாரியாகவும், அர்த்தநாரீசுவராகவும் ஒன்றுபட்ட தினமே கேதார கௌரி விரதமாகும். வயலில் ஆலமரத்தடியில் இருந்து இவ்விரதம் அனுஷ்டிக்கப்பட்டதால் கேதாரகௌரிவிரதம் எனவும் ஈசனை வழிபடுகின்றபடியால் கேதாரேஸ்வரி விரதம் எனவும் பெயர் பெறுகின்றது. அதாவது கைலைமலையில் தேவாதி தேவர்கள்,முனிவர்கள் சித்தர்கள்,கந்தர்வர்கள் புடைசூழ சிவன், பார்வதி தேவியோடு வீற்றிருக்கின்றார். பிருங்கிருடி முனிவரின் விகடான நடனத்தைக் கண்டு களித்த சிவனும் ஏனையோரும் முனிவரைப் பாராட்டினார்கள். இதனால் மகிழ்வுற்ற பிருங்கி முனிவர் அம்பிகையைத் தவிர்த்து சிவனை மட்டும் வலம் வந்து நமஸ்கரித்து நின்றார். இதனால் கோபம் கொண்ட அம்பிகை கைலைமலையை விட்டுத் தவம் செய்வதற்காக கௌதமுனிவரின் ஆச்சிரமத்திற்கு புறப்பட்டார். அம்பிகை வரவினால் ஆச்சிரமும் சூழலும் புதுப்பொலிவுடன் விளங்கியது. ஓமத்துக்குத் தேவையான பொருட்களைச் சேகரித்துக் கொண்டு வீடு திரும்பிய மாபெரும் தவஸ்தியான கௌதம முனிவர் தமது ஆச்சிரமம் பொலிவுற்றதன் காரணம் அம்பிகையின் வரவே என அறிந்து அவளை அர்ச்சித்து பூஜை செய்து விட்டு அம்பிகையிடம் இங்கு தாங்கள் வந்தமைக்குக் காரணம் என்ன என்று கேட்டார். அதற்கு அம்பிகை முனிவரை நோக்கி தபஸ்வியான சிவபெருமானின்

பாதியுடம்பை நான் பெறவேண்டும் என்றாள். முனிவரும் புராணங்கள்,சாஸ்திரங்கள் யாவற்றையும் அலசி ஆராய்ந்து கேதாரேஸ்வர விரதத்தை அனுஷ்டிக்கும் முறையை விளக்கமாக அம்பிகைக்குக் கூறியருளினார். முனிவரின் கூற்றுப்படி அம்பிகையும் 21 நாளும் சிவனைப் பூஜித்து சிவனின் பாதி உடலைப் பெற்று அர்த்தநாரீஸ்வரன் என்று எல்லோரும் போற்றும் படி சிவனின் இடப்பாகத்தில் அமர்ந்து எமக்கு அருள் புரிகின்றாள். இந்நாளில் அம்பிகை சிவனை நோக்கி எம்பெருமானே இவ்விரதத்தை உலகில் யார் செய்தாலும் விரும்பிய யாவற்றையும் பெறுவதற்கு அருள் புரியவேண்டும் என்று கேட்டுக்கொண்டார். சிவனும் அம்பிகையின் வேண்டுக்கோளை ஏற்று அங்கனமே ஆகுக என்று அருள் புரிந்தார்.

இவ்விரதத்தை ஐந்து மாதங்களிற்கு மேல் கர்ப்பிணியாக இல்லாத பெண்களும் மாதவிலக்கு நீக்கப்பபெற்ற பெண்களும் 21 நாட்கள் விரதமிருக்கலாம். ஏனையோர் மாதவிலக்கு அம்முறை வந்தபின் அமாவாசைத் திதிக்கு முன்னுள்ள 9 நாட்களோ 7 நாட்களோ மூன்று நாட்களோ அல்லது அன்றைய தினமோ இவ் விரதத்தை அனுஷ்டித்து 21 முடிச்சிட்ட கயிற்றை இடது புஜத்திலோ அல்லது மணிக்கட்டிலோ கட்டிக் கொள்ளலாம். கேதாரகௌரி தினத்தில் பார்வதி சமேதரான சிவபெருமானை வழிபட வேண்டும். ஆண்களும் இவ்விரதத்தை அனுஷ்டிக்கலாம். தம்பதிகள் சேமமாக இருத்தலும் பிணிநீங்கலும் செல்வம் பெறுவதற்கும் கன்னியர்களுக்கு விரைவில் திருமணம் நடைபெறுவதற்கும் சிவனருளைப் பரிபூரணாகப் பெறுவதற்கும் உகந்தது.

திருவாதிரை விரதம்

மார்கழியில் வரும் திருவாதிரை நட்சத்திரத்தோடு கூடிய நன்நாளில் அனுட்டிப்பது திருவாதிரை விரதம். இவ் விரதம் சிவபெருமானுக்கு மிகவும் உகந்ததாகும். இதனால் சிவபெருமானை ஆதிரையின் முதல்வன் என்றும், ஆதிரையான் என்றும் கூறுவர். மார்கழித் திங்கள் திருவாதிரை நாளன்று நடராசருக்குச் சிறப்புக்கள் நடைபெறும். அவற்றுள் சிதம்பரத்தில் நடப்பது மிகுந்த சிறப்புடையது. இவ்விரதம் சிதம்பரத்திலிருந்து அனுட்டிப்பது உத்தமோத்தமம். அங்கு ஆருத்ரா தரிசனம் செய்வதற்காக அநேகர் செல்வர். ஆருத்ரா என்பது ஆதிரையைக் குறிக்கும் சொல். இவ்விரதத்தில் உபவாசம் இருத்தல் சிறப்பாகும்.

திருவெம்பாவை

மாதங்களில் சிறந்தது மார்கழி மாதமாகும். மார்கழி மாதமே தேவர்களுக்கு விடியற்காலம். எனவே இறைவனை நினைத்து திருப்பள்ளி எழுச்சி,திருவெம்பாவை ஆகியன பாடுவதற்கு மார்கழி உகந்த மாதமாகும்.

மார்கழி திருவாதிரை நட்சத்திரத்திற்கு முந்திய ஒன்பது தினங்களும் திருவெம்பாவை உற்சவ காலங்களாகும். நடராஜபெருமானுக்கு உரித்தான உற்சவம் திருவெம்பாவையாகும். திருவாதிரை நட்சத்திர தினத்தன்று திருவெம்பாவை நிறைவு பெறுகின்றது. ஐந்தொழில்களின் அனுக்கிரகத்தைக் குறிப்பதாகையால் இவ்விழா எல்லா விழாக்களிலும் சிறப்புடையதாகும். மார்கழி திருவாதிரையில் நடைபெறும் நடேசர் அபிஷேகமும் அதனைத் தொடர்ந்து நடைபெறும் ஆருத்திரா தரிசனமும் ஆன்ம ஈடேற்றத்துக்கு இன்றியமையாதனவாகும்.

பிரதோஷ விரதம்

ஒவ்வொரு மாதமும் வரும் வளர்பிறை தேய்பிறை எனும் இரண்டிலும் 13ம் திதியாகிய திரயோதசித் திதியில் சூரிய அத்தமனத்திற்கு முன் ஒன்றரை மணி நேரமும்,பின் ஒன்றரை மணிநேரமும் உள்ள காலம்(மாலை 4.30 - 6.00) பிரதோஷ காலம் எனப்படும். இக்காலத்தில் சிவபெருமானைக் குறித்து இவ்விரதம் அனுட்டிக்கப்படும். ஐப்பசி,கார்த்திகை,சித்திரை,வைகாசி ஆகிய மாதங்களில் ஒன்றில் வரும் சனிப்பிரதோஷத்தில் தொடங்கி இவ்விரதத்தை அனுட்டிக்கத் தொடங்கலாம். பகலில் உணவை விடுத்து, பிரதோஷ காலம் தொடங்குவதற்கு முன்பே நீராடி,சிவபூசை முடித்துச் சிவாலய தரிசனம் செய்து,பிரதோஷகாலம் கழிந்தபின் சிவனடியாரோடு உணவு உட் கொள்ளல் வேண்டும். பிரதோஷ

காலத்தில் சிவாலயத்தை வலம் வந்து இடப தேவரையும் சண்டேசுவரரையும் கும்பிடுதற்கு விசேட முறை உண்டு. பிருதிவியிலுள்ள தீர்த்தங்களெல்லாம் பிரதோஷ வேளையில் சிவதரிசனத்தின் பொருட்டு நந்திதேவரை வந்தடைவதாகப் புராணங்கள் கூறுவதனால்,இந்நேரத்தில் நந்திதேவரது இரண்டு கொம்புகளுக்கும் இடையால் சிவதரிசனஞ் செய்தல் மிகவும் உத்தமமென அருள் நூல்கள் கூறுகின்றன. காப்பரிசி நிவேதனம் செய்வது சிறப்பைத் தரும். அதையே விரத உணவாகவும் உண்ணலாம். பிரதோஷ காலத்தில் சிவாலயம் சென்று தரிசிக்கும் போது வலம் வரும் முறைக்கு சோமசூத்திரப பிரதட்சண முறை என்று பெயர். அதாவது முதலில் சிவனையும்,நந்தியையும் வணங்கி இடமாக சண்டேஸ்வரரை வழிபட்டு அப்படியே திரும்பி வந்து முன்போல் சிவனையும்,நந்தியையும் வணங்கி வழக்கம் போல ஆலயத்தை வலமாக வந்து சண்டேஸ்வரர் ஆலயம் வரை வழிபட்டு அப்படியே திரும்பி வந்து முன்போல் சிவனையும், நந்தியையும் வணங்க வேண்டும் இவ்வாறு மூன்று முறை செய்ய வேண்டும் இதுவே சோமசூத்திரப் பிரதட்சண முறையாகும்.

மனம் பொறி வழி போகாது நிற்றற் பொருட்டு
உணவை விடுத்தேனுஞ் சுருக்கியேனும் மனம்,வாக்கு,காயம்
என்னும் மூன்றினாலும் கடவுளை விதிப்படி மெய்யன்போடு
வழிபடுதல் விரதமாகும் நாவலர் பெருமான்

விரதம் என்றால் ஐம்புலனடக்கம் என்பது பொருள். அதாவது சித்தத்தை ஒருமுகப்படுத்துதல், மனமானது பொறிவழிச் செல்லாது நிற்றற் பொருட்டு உணவை விடுத்தேனும்,சுருக்கியேனும் திரிகரண சுத்தியுடன் இறைவனைச் சிறப்பாக வழிபடுதல் ஆகும். விரதம் அனுட்டிப்பவர் விரதகாலங்களில் தாம்பூலந்தரித்தல்,புகைபிடித்தல்,பகலில் நித்திரை செய்தல், சிற்றின்பம் துய்த்தல் முதலியன செய்தலால் பிராயச்சித்தமற்ற பாவ தண்டனைகளுக்குள்ளாக்கப்படுவர். விரதங்கள் மனிதனுடைய வாழ்வை மேன்மையுறச் செய்து நன்மை நோக்கி இட்டுச் செல்கின்றன.

நாம் ஏன் பிறந்தோம்?
எங்கிருந்து வந்தோம்?
எங்கே போக வேண்டும்?
எங்கே போய்க்கொண்டிருக்கின்றோம்?
இந்த உடம்பு எப்படி வந்தது?
தானே வந்ததா?
ஒருவன் தந்து வந்ததா?
தந்தவன் யார்?
அந்த ஒருவனை அடையும் வழி யாது?
அடைந்தவர்கள் யார்?

என்ற இவ் வினாக்கள் உன் உள்ளத்தில் எழுக. அவைகளை நீ உணர்க. வந்த வேலையை மறந்து மயங்கி திரியாதே!



இதழ் - 8

சமூகத்தில் சமயம்

அருள்மிகு ஸ்ரீ அகிலாண்டேஸ்வரி சமேத ஸ்ரீ அகிலாண்டேசுரர் திருக்கோவில் தோற்றமும், வளர்ச்சியும்

திருமதி.யோகேஸ்வரி காந்தரூபன்
இந்து சமய ஆசிரியை.

‘‘கோயில் இல்லா ஊரில் குடியிருக்க வேண்டாம்’’ என்பது இந்து மக்களின் பொன்வாக்காகும். இதற்கமைய இந்துக்கள் தம் வாழ்விடங்கள் எல்லாம் கோயில் அமைத்து வழிபாடு இயற்றி வருகின்றனர். தொன்மையும் தனித்துவமும் கொண்ட இந்த மரபிற்கமைய வவுனியா கோயில்குளம் கிராமத்தில் ஒரு சித்தி விநாயகர் ஆலயம் (தற்போது மூத்த விநாயகர்) அமைக்கப்பட்டது.

கோயில்குளம் சித்தி விநாயகர் ஆலயம் அமைந்துள்ள நிலப்பரப்பு 1949ம் ஆண்டு மாதனையைச் சேர்ந்த திரு.சிவபாதம் என்பவர்க்கு வழங்கப்பட்டதாகும். 1955ம் ஆண்டு வரை இக்காணி திருத்தப்படாமல் இருந்துள்ளது. இக்கிராமத்தில் ஓர் ஆலயம் இல்லாத குறையை நிவர்த்தி செய்வதற்காக இக்கிராமத்தைச் சேர்ந்தவர்களான திரு.இ.கிருஷ்ணபிள்ளை, திரு.மு.தம்பாப்பிள்ளை, திரு.வேலுப்பிள்ளை, திரு.வே.கந்தையா, திரு.நாகலிங்கம் என்பவர்களின் முயற்சியால் இப்பொழுது அகிலாண்டேசுரர் திருக்கோயில் அமைந்துள்ள காணி திருத்தப்பட்டு அவ்விடத்தில் ஒரு விநாயகர் ஆலயம் அமைப்பது என தீர்மானிக்கப்பட்டது. அதற்கமைய திரு.அண்ணாமலை ஆச்சாரியாரின் கைவண்ணத்தில் உருவான விநாயகர் விக்கிரகத்தை (மூத்த விநாயகர்) 1955ம் ஆண்டு கார்த்திகை மாதம் பிரதிட்டை செய்யப்பட்டது.

இவ்விநாயகர் விக்கிரகம் பிரதிட்டை செய்த பின்னர் ஒருவராலும் பராமரிக்கப்படாமையால் திரு.க.சின்னத்தம்பி, திரு.வே.கந்தையா ஆகிய இருவரின் சுயமுயற்சியால் ஓலையால் வேயப்பட்ட சிறு கொட்டகையில் விநாயகர் விக்கிரகம் வைக்கப்பட்டது. பின்னர் இக்கொட்கை 1957ம் ஆண்டு இயற்கையின் சீற்றத்தால் சேதமாக்கப்பட்டது. மீண்டும் இவ்விருவராலும் தகரத்தால் ஒரு கொட்டகை அமைக்கப்பட்டு அவ்விடத்தில் விநாயகர் விக்கிரகம் வைக்கப்பட்டு திரு.க.சின்னத்தம்பி அவர்களால் விளக்கு வைத்து வெள்ளிக்கிழமையில் பூசை வழிபாடுகள் நடைபெற்றன. அத்துடன் சிவனுக்குரிய விரதமான திருவெம்பாவைப் பூசையும் அதிகாலையில் நடைபெற்றது.

இவ்வாறு பூசை, வழிபாடுகள் நடைபெற்று வரும் காலகட்டத்தில் கோயில் புதுக்குளம் மாதர் சங்கத்தைச் சேர்ந்த திருமதி.நல்லதம்பி, திருமதி.ச.அரசரத்தினம் என்பவர்களின் தலைமையில் இவ்விநாயகர் ஆலயம் பொறுப்பேற்கப்பட்டு பூசை வழிபாடுகள் மேலும் சிறப்பாக நடைபெற்றது. இக்கால கட்டத்தில் சிவனுக்குரிய விரதங்களான திருவெம்பாவையுடன் சிவராத்திரி விரதமும் சிறப்பாக நடைபெற்று வந்தன. இவ்வேளையில் இவ்விநாயகர் ஆலயத்திற்கு கட்டிடம் அமைக்க எல்லாம்வல்ல விநாயகரின் திருவருள் கைகூடியது இவ்வேளையில் விநாயகரின் அருளால் திரு.சோமசேகரம், திரு.நாகேந்திரம் ஆகிய இருவரும் கட்டிடம் அமைப்பதற்கு தாம் பொருள் உதவி செய்வதாக முன் வந்தார்கள். இதற்கமைய ஊர் பெரியவர்களின் முயற்சியாலும், மாதர் சங்கத்தினரின் முயற்சியாலும் கட்டிடம் எழுப்பப்பட்டு 1976ம் ஆண்டு சித்திரை மாதம் விநாயகர் விக்கிரகம் புதுக்கட்டிடத்தில் பிரதிட்டை செய்யப்பட்டது. இக்கட்டிடத்திற்கு முன் மண்டபம் ஒன்று சுண்ணாகத்தைப் பிறப்பிடமாகக் கொண்ட திரு.கந்தையா என்பவரால் ஓலையால் வேயப்பட்ட ஒரு கொட்டகை அமைக்கப்பட்டது.

இக்கொட்டகை வருடாவருடம் வேயப்பட வேண்டியதாகக் காணப்பட்டது. எனவே இக்கொட்டகை நிரந்தரமாக இருப்பதற்காக திரு.அரியரத்தினம் என்பவரால் தகரம் போடப்பட்டது. இவ்வாறு இவ்விநாயகர் ஆலயம் சிறிது சிறிதாக வளர்ச்சி அடைந்து வந்தது. இக்கால கட்டத்தில் ஸ்ரீ அகிலாண்டேசுரர்

அறங்காவலரின் ஒருவரான திரு.ஆ.நவரெத்தினராசா அவர்களது தலைமையில் மீண்டும் இம்முன் மண்டபம் பெரிதாக்கப்பட்டு பூசை வழிபாடுகள் நடைபெற்றன. இவ் ஆலயத்தின் பரிபாலனத்தை வழிபடுவோர்களால் அமைக்கப்பட்ட சித்தி விநாயகர் ஆலய சைவ மகாசபை 1987ம் ஆண்டு பொறுப்பேற்றது.

இச்சைவ மகாசபையின் தலைவராக திரு.இ.சண்முகமும், செயலாளராக திரு.ஆ.நவரத்தினராசாவும், பொருளாளராக திரு.நா.இராமநாதனும் இவர்களுடன் திரு.ஆ.உமாதேவன் அவர்களும் ஆலய வளர்ச்சியில் அரும் பாடுபட்டவர்கள். அவர்களது பெரும் பணியே இன்று போற்றப்படுகின்ற சிவாலயத்தின் தோற்றம் என்பதில் ஐயமில்லை.

இவ்விநாயகர் ஆலயத்திற்குரிய காண்டாமணிகள் திரு.மு.சிதம்பரப்பிள்ளை குடும்பத்தினராலும், திரு.ஆ.அம்பலவாணராலும் வழங்கப்பட்டன. இக்கால கட்டங்களில் சிவராத்திரி விரதம் மேலும் சிறப்பாக நடைபெற்றது. அத்துடன் நவராத்திரி, கந்தஷஷ்டி, விநாயகர்சஷ்டி திருவெம்பாவையுடன் கேதாரகௌரி விரதமும் முதலில் இருவருடன் தொடங்கி அடுத்தடுத்து மூவராகி, நால்வராகி, ஐவராகி இன்று பெருந்தொகையான அடியார்களால் மேற்கொள்ளப்படுகின்றன. இவ்விநாயகர் ஆலயம் அமைக்கப்பட்ட காலம் தொடக்கம் மூத்த விநாயகர் என்னும் நாமத்துடன் கும்பாபிஷேகம் நடைபெறும் காலம் வரை திரு.க.சின்னத்தம்பி அவர்களே பூசைகள், வழிபாடுகள் அனைத்தையும் செய்து வந்தார்.

இவ்வாறு இவ்வாலயம் மேன்மேலும் வளர்ச்சி அடைந்து விநாயகப் பெருமானின் பேரருளால் சைவத்தின் முழுமுதற் பொருளாகிய சிவபெருமானுக்கு வன்னிப்பகுதியில் ஓர் ஆலயம் கட்ட திருவருள் கைகூடி இன்று எம்மத்தியில் அகிலாண்டேசுரர் திருக்கோயிலாக காட்சி தருகின்றது.

ஆலய முகப்பில் வழிப்பிள்ளையாராக (மூத்த விநாயகர்) காட்சி கொடுத்துக் கொண்டு இருப்பவர் சித்தி விநாயகர். இவ்வாலயம் தான் அங்கு வாழ்ந்து வந்த மக்களின் மனதைக் குடிகொண்டு இன்று வானளாவிய தூபிகளையும், மாடங்களையும், மண்டபங்களையும் கொண்டு பார்ப்போர் பரவசநிலை அடையும் வண்ணம் அருள் பாலிக்கும் அருள்மிகு அகிலாண்டேஸ்வரி சமேத அகிலாண்டேசுரர் திருக்கோயிலாக அருள்பாலித்துக் கொண்டு இருக்கிறது.

இவ்வாலய காணியின் விஸ்தீரணம் 3 ஏக்கர் 6 பேர்ச்சாக இருந்த போதும் தற்போது 2 ஏக்கர் 6 பேர்ச்சாக உள்ளது. இக்காணியில் சிவாலயம் ஒன்று அமைக்க வேண்டும் என்ற எண்ணம் இருந்து வந்துள்ளது. அதற்கான ஏற்பாடுகள் செய்திருக்கலாம். ஆனால் அவற்றைப் பற்றிய சான்றுகள் ஒன்றும் கிடைத்திலது. அத்துடன் முயற்சி பண்ணியவர்களில் ஒருவர் தான் திரு.க.சின்னத்தம்பி அவர்கள் மற்றவர்கள் ஆலய அடிக்கல் நாட்டுக்கு முன்பே மறைந்துவிட்டார்கள்.

சித்திவிநாயகர் பரிபாலனத்தை 1987ம் ஆண்டளவில் பொறுப்பேற்ற சைவ மகாசபையினரில் திரு.ஆ.நவரத்தினராசாவும், திரு.நா.இராமநாதன், திரு.இரா.சண்முகம், திரு.ஆ.உமாதேவன் ஆகியோர் முன்நிற்க அடியார்கள் ஊக்கமும், ஒத்தாசையும் வழங்கிவர, காஞ்சிப் பெரியவரின் பூரண ஆசிர்வாதத்தின் மத்தியில் 18.08.1989 அதிகாலை 4 மணியளவில் நயினை ஸ்ரீ நாகபூசணியம்மன் தேவஸ்தான அறங்காவலர் சபைத் தலைவரும் தீவுப் பகுதி உதவி அரசாங்க அதிபராக இருந்தவரான திரு.ஆ.தியாகராசா அவர்களால் சங்குஸ்தாபனம் செய்விக்கப்பட்டது. இப்பணி சிறப்புற நடந்து வரும் வேளையில் 1993ம் ஆண்டு மார்கழி மாதம் காஞ்சிப் பெரியவரின் ஆஞ்ஞைப்படி காசியில் லிங்கம் பெற்று வரும் போது 1994ம் ஆண்டு தைமாதம் 6ந் திகதி வாரணாசியில் திரு.நா.இராமநாதன் அவர்களுக்கு சிவபதப்பேறு வாய்க்கப்பெற்றது. அதைத் தொடர்ந்து திருப்பணி சிறப்பாக நாளுக்கு நாள் புதுப்புதுமெருகுடன் நடைபெற்றுவந்தது. இதற்கான மற்ற மூலவிக்கிரகங்களை தமிழ்நாடு ஸ்ரீரங்கம் திரு.பழனியப்பன் ஸ்தபதியாரும் உற்சவ விக்கிரகங்களைத் தமிழ்நாடு சுவாமிமலை திரு.தேவசேனாபதி ஸ்தபதியாரும் தங்கள் கைவண்ணங்களைச் சிலை வண்ணங்களாக வார்த்து தந்தார்கள். அவையாவும் மனத்தை கொள்ளை கொள்ளும் பொலிவு கொண்டவை. இவற்றை திரு.ஆ.நவரத்தினராசா அவர்களும் , திரு.இரா.சண்முகம் அவர்களும் இந்தியா சென்று எடுத்து வந்தார்கள். இவற்றுக்கான பூரண ஒத்துழைப்பை வவுனியா அரசாங்க அதிபர்களாக இருந்த திரு.லங்காநேசன், திரு.தில்லைநடராஜா, திரு.கே.கணேஷ் அவர்களும், இந்து கலாச்சார அமைச்சராக இருந்த கௌரவ பி.பி.தேவராஜ் அவர்களும், அமைச்சு

செயலாளராக இருந்த திரு.கா.தயாபரன், இந்து சமய பணிப்பாளர் திரு.க.சண்முகலிங்கம், திருமதி.சாந்தி நாவுக்கரசன், திறைசேரி அதிகாரி சண்முகலிங்கம் போன்றோர் பெருந் துணைபுரிந்தனர்.

இந்தியாவில் இருந்து கொண்டு வரப்பட்ட விக்கிரகங்களை பிரதிஷ்டை செய்து குடமுழுக்கு செய்வதற்காக கும்பாபிஷேகக் குழு ஒன்றையும் திருப்பணிக்கு வாரி வழங்கிய கொடை வள்ளல்களையும் அனுபவமிக்க ஆலய பரிபாலன சபையினரையும், கல்விமான்களையும் ஒருங்குகூட்டி அமைத்து அதன்படி மகாகும்பாபிஷேக பிரதம குருவாக நயினை சிவஸ்ரீ சுவாமி நாத பரமேஸ்வரக் குருக்களைக் கொண்டு 01.05.1996இல் ஆவர்த்தன பிரதிஷ்டா மகா கும்பாபிஷேகம் இனிதே நடாத்தி முடிக்கப்பட்டது. இவை யாவும் "முன்னவன் முன் நின்றால் முடியாதது ஒன்றும் இல்லை" என்பது போல் கருணைக் கடலாம் சித்தி விநாயகர் பேரருளாலும் அம்மை அப்பனின் கருணை கடாச்சத்தாலும் தான் இனிது நிறைவெய்தின என்பது உண்மையாகும்.

திரு.ஆ.நவரத்தினராசாவும் அவருக்கு பக்கபலமாக திரு.இரா.சண்முகம் அவர்களும், திரு.ஆ.உமாதேவன் அவர்களும் மறைந்த திரு.இராமநாதன் குடும்பத்தினரும் ஆலய நிலையங்களை எடுக்கும் போது ஏற்படும் சந்தேகங்களை நிவர்த்தி செய்து ஊக்கமளித்த திரு.க.சின்னத்தம்பி (சித்திவிநாயகர் ஆதி ஸ்தாபகர், பூசகர்) அவர்களின் துணையோடு இச்சிவன் கோயில் திருப்பணியைத் தொடர ஒரு கை கொடுப்பதை மற்றக் கைகூடத் தெரியக் கூடாது என்ற மனநிலையில் வாரி வழங்கினார்கள் புண்ணிய சீலர்கள், அந்த நிதியில் உயர்ந்தது தான் இச்சிவாலயம் ஆகும். இதை இங்கு வரும் அடியவர்கள் யாவரும் அறிவார்கள்.

இச்சிவாலயம் ஆவர்த்தனப் பிரதிஷ்டா மகாகும்பாபிஷேகத்தை தொடர்ந்து தினமும் 3 காலப் பூசை நடைபெற்று வந்தன. மகோற்சவம் இரண்டு பிரிவாக நடைபெறுகின்றன. ஒன்று அகிலாண்டேஸ்வரருக்குரிய மகோற்சவம் பங்குனி உத்தரத்தை தீர்த்த நாளாக கொண்டு 15 நாட்கள் நடைபெற்றன. இரண்டாவது அகிலாண்டேஸ்வரிக்குரிய மகோற்சவம் ஆடிப் பூரத்தை தீர்த்த நாளாக கொண்டு 10 நாட்கள் நடைபெற்றன. இவ்விழாக்களுடன் பிரதோஷ விரதமும் மிகவும் சிறப்பாக நடைபெறுகின்றது. இச்சிவாலய விருட்சம் திருக்கொன்றையும், தீர்த்தம் அமிர்தவர்ஷினி ஆகும்.

இந்த மகோற்சவ விழாக்கள் யாவும் பெருச் சிறப்புடனும் கருணைக் கடலாம் முக்கண்ணன் துணையுடனும் நடைபெற்று வருகின்றன. இவை போலவே சிவனுக்குரிய விரதங்களில் மிகவும் முக்கியமானதும் மாதத்தில் இரு தடவை அநுட்டிக்கப்படும் பிரதோஷவிரதம் சிறப்பாக அநுட்டிக்கப்படுகின்றன. "பிரதோஷ விரதம் அநுட்டித்தால் பிறதோசம் எம்மை அணுகாது" என்றும் வாக்கிற்கமைய பெருந்திரளான அடியார் கூட்டம் இறைவனின் திருக்கோலத்தை நந்திதேவரின் கொம்புகளுக்கிடையில் கண்டு வணங்கும் காட்சி கண் கொள்ளாக் காட்சியாகும்.

சிவ விரதங்களில் சிறப்பானது சிவராத்திரி. இவ்விரதம் அகிலாண்டேஸ்வரர் ஆலயத்தில் அநுட்டிக்கப்படும் முறையே அழகு! பிரதோஷத்தில் திரளென கூடும் அடியார் கூட்டம் சிவராத்திரியில் அலைகடலென ஆர்ப்பரிக்கும் பூசைகளும், விழாக்களும் காண்பவர் மனதை கனிய வைக்கும். சிவராத்திரி விரதத்தில் இரவு நான்கு சாமப் பூசைகள் யாவும் நான்கு பாடசாலைகள் பொறுப்பேற்று செய்து வருகின்றன. இச்சிவராத்திரி விரத காலத்தில் அகிலாண்டேசுரர் ஆலய முன்றலில் உள்ள அகிலம் அரங்கில் இனிய இசை, நடன நிகழ்ச்சிகள் நடைபெறுகின்றன.

இவ்விழாக்காலங்களில் அகிலாண்டேஸ்வரர் அமுதசுரபி மண்டபத்தில் அன்னதானம் வழங்கப்படுவது உண்டு. ஒவ்வொரு விழாக்களின் போதும் அமுதசுரபி மண்டபம் நிரம்பி வழியும். பெயருக்கு ஏற்றாற் போல் இது உண்மையிலேயே அமுதசுரபி தான்!

மனம் அமைதி பெற அருளும், வயிறு அமைதி பெற உணவு மட்டும் போதுமா? போதாது. நாட்டின் அவலத்தில் அநாதரவாகவும், வறுமையாலும் வாடுகின்ற இளம் பிள்ளைகள்! குழந்தைகள் யாவரும் நலம் பெற வேண்டும் என நினைத்தான் அகிலாண்டேஸ்வரர் பன்றிக் குட்டிகளின் பசியைப் போக்க தாய்ப் பன்றியாக வந்தவர். பாரியில் தன் மக்கள் படும் இன்னலை கண்டு இமையாது

இருப்பாரா? இரங்கினார் அகிலாண்டேஸ்வரர் எழுந்தது இரண்டு அருளகங்கள் ஆண் பிள்ளைகளுக்கு தனியாகவும், பெண் பிள்ளைகளுக்குத் தனியாகவும் அமைக்கப்பட்டது. அருளக வேலைகள் தொடங்கும் போது போதிய நிதி இல்லை. ஆனால் அவன் அருளால் அள்ளி வழங்கினார். ஆர்வலர்கள் ஆரம்பத்தில் 70றகு மேற்பட்ட ஆண்பிள்ளைகளும், 50றகு மேற்பட்ட பெண்பிள்ளைகளும் இறைவன் துணையுடன் வளர்க்கப்பட்டனர். அவர்களுக்கு வேண்டியவற்றை வேண்டிய நேரங்களில் வேகத்துடன் செய்தது ஆலய நிர்வாகம்.

ஆலயத்தின் வளர்ச்சிப் பாதையில் இன்னுமொரு மைல் கல்லாக திருமண மண்டபங்கள் கைகோர்த்தன. முதலில் ஆலயத்தின் வடக்கு வீதிக்கருகில் காஞ்சி சிவமடம் என்னும் பெயரில் காஞ்சிப் பெரியவரின் அருளாசியுடன் அவரின் உருவப்படத்தை தன் மார்பில் தாங்கியபடி கம்பீரமாக அமைந்துள்ளது. மற்றைய மண்டபம் அகிலாண்டேஸ்வரி திருமண மண்டபம் என்னும் பெயரில் ஆலயத்தின் முன்றலில் முப்பெரும் தேவியரின் திருவுருவங்களை தன் நெற்றியில் கிரீடம் போல் தாங்கிய வண்ணம் காட்சியளிக்கின்றது. இவையாவும் இவ்வாறு இயங்க ஆலயத்தின் வளர்ச்சியில் மறுமுனையாக எல்லப்பர் மருதங்குளத்தில் முதியோர் இல்லம் ஒன்று அமைக்க திருவருள் கூடியுள்ளது. முதமையின் கொடுமையை பலர் அனுபவிக்க எம் பரம்பொருள் அதனைப் பார்த்திருப்பாரா? பார்த்தால் தான் முதியோர் இல்லம் ஒன்று இன்று கருவில் திருவுற்றுள்ளது.

இவையாவும் சமூகப்பணிகளாக அமைளப் பெற்றுள்ள வேளையில் ஆலயத்தின் தீர்த்தக்கேணி பல இலட்சரூபாய் செலவில் ஆலயத்தின் தெற்குவீதியில் செழிப்புடன் மிளிர்கின்றது. அமிர்தவர்ஷினி என்னும் திருநாமம் தாங்கிய அந்த தெய்வீக தீர்த்தம் முற்றிலும் சுண்ணக்கற்களால் அமைக்கப்பட்டுள்ளது. அமிர்தவர்ஷினியில் ஆதவனின் பொற்கிரணங்கள் பட்டுத்தெறிக்கின்ற காட்சிக்கு உவமைதான் என்ன?

“கோபுர தரிசனம் கோடி புண்ணியம்” என்னும் கூற்றுக்கிணங்க கோடி புண்ணியத்தை வாரி வழங்க இராஜகோபுரம் ஆலயத்தின் முகப்பை அலங்கரிக்க உள்ளது. அதனது பூர்வாங்க வேலைகள் யாவும் பெரும் முனைப்புடன் நிகழ்ந்து வருகின்றது. இறைவனின் துணையுடன் எடுத்த இத்திருப்பணி ஏற்றம் கண்டு நிறைவடையும் என்பதில் துளியும் ஐயமில்லை.

இவ்வாறு ஏற்றம் கண்டு வரும் இவ்வாலயம் இன்று 12 வரடங்கள் பூர்த்தியாகி பாலஸ்தாபனம் செய்யப்பட்டு குறுகிய காலப்பகுதியில் நால்வர் சந்நிதி, பள்ளியறை, பஞ்சலிங்கம், பஞ்சமுகலிங்கம், சூரிய, சந்திர,பாலமுருகன் போன்ற சந்நிதிகள் அமைக்கப்பட்டு இலங்கையில் எங்குமே நடைபெற்றிராத 33 குண்டங்களுடன் சிவாகம முறைப்படி அமைக்கப்பெற்ற யாகசாலையில் யாகம் நடைபெற்று இந்தியாவில் இருந்து வந்த வேதவிற்பன்னர்களால் வேதங்கள் ஓதப்பட்டு நாதாஞ்சலி, கீதாஞ்சலி, நிர்த்தியாஞ்சலி என்பன முறைப்படி நடைபெற்று 09.07.2008 அன்று புனருத்தாவரண கும்பாபிஷேகம் நடைபெற்றது.

இக்கும்பாபிஷேகத்திற்கு பின்னர் இவ்வாலயத்தில் 6 காலப் பூசை வழிபாடுகள் நடைபெற்று வருகின்றன. இவ்வாறு அன்புக்கும், பண்புக்கும் புரிந்துணர்விற்கும் பாலமாக விளங்குகின்ற இச்சிவாலயம் எல்லா சிவனடியார்களும் விரும்பி வந்து வழிபாடு செய்யும் அளவிற்கு சக்தி படைத்ததாக மூத்த விநாயகரின் பேரருளும் சைவத்தின் முழுமுதற் கடவுளாகிய அகிலாண்டேஸ்வரரின் பெருங்கருணையும் என்றும் துணை நிற்கும் என்பதில் ஐயமில்லை.

திருச்சிற்றம்பலம்

சமயம் மனிதம் பூத்த ஆரோக்கியமான சமுதாயத்தை கட்டியெழுப்பவேண்டும்

கவிஞர் முருக.வே.பரமநாதன்

பல்வேறுபட்ட சமயக் கோட்பாடுகள் இவ்வுலகிலே நிலவுகின்றன. இவற்றுள் நான்கு பெருமைமிகு மதங்கள் பிரபல்யமானவை. இவைகளால் வழிநடத்தப்படும் மக்கள் அந்தந்த மதப் பெயரால அழைக்கப்படுகின்றனர். இந்துக்கள், இஸ்லாமியர், பௌர்த்தர், கிறிஸ்தவர் என்னும் இவர்கள் உலகின் நாலா பாகங்களிலும் வாழ்கின்றார்கள். மொழி, நாடு, இனம், நிறம், பண்பாடு வேறுபடினும் சமயத்தால் ஒருமைப்பாடுடையவர்களே. இவற்றிலே கூட சில வேறுபாடுகள் இருக்கின்றன. இந்த வேறுபடும் சமயமெல்லாம் புகுந்து பார்க்கின் நதித்திரள்கள், பரந்த சமுத்திரத்திற் சங்கமம் ஆனது போலத்தான் என்பர். நதி ஒன்று படித்துறை வேறு. நகரம் ஒன்று சென்றடையும் பாதைகள் வேறு. எனவே சமயங்களை தேன்கூடு என்றால் சமயிகளைத் தேனீ என்றழைக்கலாம். தான் எந்தச் சமயத்தில் பிறந்தானோ அவன் அச்சமயத்தினன் ஆகின்றான். சமயம், மதம், மார்க்கம், நெறி என்பன ஒரு பொருட் பதங்கள். ஒரு பண்பாட்டுக் கோலமே சமயம் எனலாம். எது தொன்மையானது, எது பிற்பட்டது. எது சாலச்சிறந்தது என்பது அவ்வினா? எச்சமயத்தோரும் மனிதம் பூத்த ஆரோக்கியம் கனிந்த ஒரு சமுதாயமாகக் கட்டியெழுப்பட வேண்டும். இது தான் இன்று இன்றியமையாது வேண்டப்படுகிறது. மதம் வெறியாக மாறவோ, காழ்ப்பு நிலைக்கு மாறவோ கூடாது. மனித குலம் ஒன்று. இதையே திருமூலர், ஒன்றே குலமும் ஒருவனே தேவனும், என்றார். இந்த மனிதகுல ஒருமைப்பாடு நேயமாக, இணையும் போது, மனித நேயம் பற்றிய எழுச்சிகள் கூட வேண்டாதனவே. மனித உரிமை மீறல் நெகிழ்ந்து கொடாமையால் ஏற்பட்டதே. எல்லோரும் ஓரினம் எல்லோரும் ஓர் நிறை, நாம் சரி நிகர் சமானமானவர்களே என்ற மனிதம் இங்கே பூத்துக் குலுங்க வேண்டும். எல்லோருமதை அனுபவிக்க உரிமையுமுடையர். இதனால் வாழ்வு சுகந்தமடைகின்றது. சுகந்திரம் காண்கின்றது. புனிதமான மனிதம் பேணப்படுமிடத்து மதமும் பேணப்படும். எனவே தூய ஒழுகலாறுகள் சமயத்தின் பேரூற்றுக்கண் எனலாம்.

இக்கண்ணோட்டத்தில் சமரச நோக்குடன் சமயம் நெறிப்படல் ஒரு கோட்பாடு எனலாம். சிறந்த வாழ்வமைதியே சமயம் இது ஒருமுகப்படும்போது தாக்கங்கள் எழுவதற்கு இதயம் இடமளிக்காது. பாரத நாட்டின் மதச்சார்பற்ற கொள்கை முதன்மை ஸ்தானம் வகிக்கினும் மோதல்கள் தவிர்க்க வேண்டியனவே. இன்றைய யுத்த நெறியும் பனிப்போரும் சமய ஒன்று கூடலில் நிர்மூலமாக வேண்டிய சிந்தனைகள். உயர் மட்டங்களில் எல்லாம் எழல் முக்கியம். ஈது ஒரு வாழ்க்கை நெறி, மனிதனை மனிதனாக வாழ வைத்தாற் போதும். நீதிவழுவா நெறிமுறையில் மேதினியில் இட்டார் பெரியோர், என்பது ஔவை சிந்தனை. சைவநீதி என்பது போன்று, மனிதகுலம் நீதிவழுவா நெறியில் பாதையில் தம்மை இட்டுச் சென்றால் போதும் அவனே பெரியவன். அவளே பெரியவள். இட்டுச் செல்லாதவர் இழித்தவர். மனித ஜாதிக்கு இந்த நீதி தெரிந்தாற் போதும். இவ்வாறு இன்னொன்று சொன்னார் ஔவை. எச்சமயத்தோர் சொல்லும் தீது ஒழிய நன்மை செயல், என்பது அடுத்த அழுத்தம், தீமை பயப்பனவற்றை விட்டு, நன்மை தருவனவற்றைச் செய்யுங்கள். இது உலகச் சமயங்களின் ஒப்பினியன் என்றார் தமிழ் மூதாட்டி. தீயினுங் கொடிய தீமையை விட்டுவிடுங்கள் உங்களைப் பேணிப் பாதுகாக்க வேண்டுமாயின் பிறர்நலம் போற்றுங்கள் என்றார் தெய்வப்புலவர்.

"தீயவை தீயபயத்தலாற் தீயவை
தீயினும் அஞ்சப் படும்" பிறிதொரு காலத்தும், பிறிதொரு தேய்த்தும், பிறிதோர் உடலிலுஞ் சென்று சுடுதல் தீக்கின்மையின் தீயினும் அஞ்சப்படுவதாயிற்று என்றார்.

"தன்னைத்தான் காதலனாயின் எனைத் தொன்றுந்
துன்னற்க தீவினைப் பால்" பிறர் மாட்டுச் செய்த தீவினை தன்மாட்டுத் துன்பம் பயத்தல் பற்றி இக்குறள் பேசுகின்றது.

தாம்பூலம் (வெற்றிலை) சப்பித் துப்பும் போது உண்டாகும் எச்சிற் தூவானம் துப்புகின்றவனையே தீண்டுதல் போல அவரவர் செய்த தீவினை அவரவரையே வந்து சேரும். தாம் தாம் செய்த வினை தாமே அனுபவிப்பார். செய்தீவினை இருக்க தெய்வத்தை நொந்து ஆவதில்லை. ஆக "நன்மையே செய்யப் பிறந்த

நீ, நன்மை செய்யாவிடினும் தீமை செய்யாதே" என்பது விவேகானந்தர் வாக்கு. நல்லது செய்தல் ஆற்றீராயினும் அல்லது செய்தல் ஓம்புமின் என்றார் சங்கப் புலவர். எனவே ஒரு நல்ல மனிதகுலத்தை உருப்படுத்தாத சமயத்தின் ஆளுமை வெறும் தத்துவ ஒலி மட்டுமே.

மனித நிலையினின்று இழிந்த போது அம்மனிதனை மா(விலங்கு மிருகம்) என்றார் தொல்காப்பியர். படித்தவனையும் படியாதவனையும் பார்த்து விலங்கோடு மக்கள் அனையர் என்பர் வள்ளுவர். நீட்டோலை வாசியா நின்றான் குறிப்பறிய மாட்டாதவர் என்றார் மரம் ஔவையார். மனித அறிவை ஆறாக வகுத்தார்கள் ஏழாவது நிலையும் உண்டு. அது தெய்வாம்சமானது. அவர்களே மகான்கள், மகாத்துமாக்கள், தீனபந்துகள், உயிர், உலகம், உண்மைப்பொருள் (இறைவன்) பற்றிய கூர்ந்த சிந்தனைகள் உயர்ந்தவை. விழுமியங்கள் மனிதனுக்கே உரியன. அவை மனித விழுமியங்கள் எனப் பேசப்படும் இற்றை நாளில், மனிதத்தில் இருந்து விலகிய போது அவன் விலங்காகின்றான். மனிதம் விடுபட்டுப் பறந்தவனை பறவை எனலாம். மரத்துப்போன மனம் உடையவர்கள் மரம் தான். அதே போன்று கல் மனம் உள்ளவர்களும் இல்லாமல் இல்லை. உள்ளவர்களும் இல்லாமல் இல்லை. சில சீவராசிகளை நாம் போற்றுகிறோம். பயன்படுத்துகின்றோம். பண்பாடும் கருங்கற்களையும், மாணிக்கங்களையும் பேணுகின்றோம். மதிக்கின்றோம். மனிதம் பேணாத மனிதனை சுத்தத் தங்கமாகும். பரிசவேதியாகத் திகழ வேண்டும். சமயம், ஒழுக்கம், விழுப்பம் நிறைந்தது. உயிரிலும் மேலானது. மனிதனின் மேம்பாட்டு ஒழுங்கே ஒழுக்கம். மனிதன் எப்படியும் வாழலாமென்ற நிலைமாறி இப்படித்தான் வாழ வேண்டும் என்ற நெறிப்பாடே ஒழுக்கம். இந்த நீதி பேணப்பட வேண்டும். இதைச் சொன்னவர் வள்ளுவர். மனிதநீதி, மனநீதி, சமுதாயநீதி, தெய்வநீதி புரிந்த வாழ்வமைதியே சமயநீதி. நாம் மற்றவர்களைத் தீண்டினால் மற்றவர் நம்மைத் தீண்டுவார். நீதிக்காகவே வாழ்வு. வாழ்வுக்காகவே நீதியல்ல. மனுநீதிச்சோழனும் புகழ்ச் சோழனும் இதற்கு உதாரணம். வயோதிபர்கட்கே சமயம் என இளைஞர்கள் பட்டிமன்றம் பேசுகிறார்கள். இளைஞர்களின் இன்னாச் செயல்களை இனிமையாக்க குழந்தை நிலையிலேயே சமயமணம் பாலோடு ஊட்டப்பட வேண்டும்.

இவளே பால் நினைந்தூட்டுந் தாய்.

பரீட்சை எழுதுவதற்காகச் சமயம் அன்று. வாழ்வுப் பரீட்சையிலே உயர் புள்ளிகளைப் பெற்று, தன்னைத் தகுதியுடையவனாக்கச் சமயம் தேவை. எனவே சமயம் மனிதனை மாற்றுயர்ந்த மனிதனாக ஆக்கினாற் போதும். கடவுளாக, தேவர்களாகவோ மாற்ற வேண்டுமென்பதில். மனிதன் மனிதனாக வாழ்ந்தால் அவன் சமயி மனிதனுக்குப் புனிதம் பொது.

பல நூற்றாண்டுகளாகப் பழகிய சமய வாழ்வு வெறும் ஆலயங்களோடு மட்டும் நின்று விடாது. வீடும், பாடசாலையும் சமூகமும் அவன் நிலைக்களங்கள், ஒழுங்கும், ஒழுகலாறும், கல்வியும், கட்டுப்பாடும், கண்ணியமும் அவன் அடித்தளங்கள். அன்பு நாண் ஒப்புரவு கண்ணோட்டம் வாய்மை தூண்கள். தாமரை மலரின் வாசனை பூக்கும் குளத்தோடு நிற்கிறது. மல்லிகைக் கொடி எங்கோ ஒரு மூலையில் நின்று அலர்ந்தாலும் அதன் வாசனை கமகம என்று நெடுந்தூரம் வீசுகின்றது. சமய வாசனையும் மனித மணம் கமழ வேண்டும். அதன் பாதையிலே ஒழுகும் போது மாற்றான் வீட்டு மல்லிகைக்கும் மணம் உண்டு என்பதைச் சிந்திக்க வேண்டும். தளராது, தடுமாறாது புனிதமான இறையனுபவம். வெறும் வாய் வேதாந்தமாய் இல்லாமல், நடைமுறைச் சித்தாந்தமாய் அமைவதே சமய வாழ்வு. எல்லாச் சமயங்களினதும் ஆதார சுருதி அன்பு தான். இதைத் தீர்ந்த அன்பு என்றார் மணிவாசகர். அன்பே சிவம் என்பது திருமூலர் வாக்கு. வள்ளுவரோ, அன்பின் வழியது உயிர்நிலை என்றார் அருளென்னும் அன்பின் குழவி பற்றிப் பேசிவரும் அவரே இந்த முதிர்ந்த அன்பே மதம் போதிக்கும் பக்தி நெறி. கீதையின் பரபக்தி (மதுரபக்தி)

எனவே நாம் மனித சமுதாயத்தின் மேதகு குடிமகனாக வாழ நம்சமய ஆளுமைகள் எம்மோடு கரைந்து கரந்து நிற்க வேண்டும். ஒரு புதுமணம் நம்மில் விரையாக வாசனையாக காற்றில் மிதக்க வேண்டும். எனவே சைவசமயம் மனிதம் பூத்த ஆரோக்கியமான புதிய சமுதாயத்தைக் கட்டி எழுப்ப வேண்டும். சிறப்பாகப் புலம் பெயர்ந்து வாழும் மக்களின் எதிர்கால சுபிட்சம் இதிலே தங்கியுள்ளது. எனவே சிந்தித்துச் செயற்படுவோம்.

எனவே மனிதம் பூத்த ஆரோக்கியமான சமுதாயத்தைக் கட்டியெழுப்ப வேண்டும்.

மகா சக்தி மகத்துவமலர் - (1998) தழுவியது

இந்து ஆலயங்களும் சமூகப்பபணியும்

கா.ஆ.தியாகராசா தலைவர்,
நயினை நாகபூசணி அம்மன் கோயில்
முன்னாள் வேலணை உதவி அரசாங்க அதிபர்

“கோயில் இல்லா ஊரில் குடி இருக்க வேண்டாம்” என்பது முதுமொழி இதன் பொருள் என்ன? சற்று சிந்திப்போமானால் இதற்குள் புதைந்து கிடக்கும் புதிர்கள் எண்ணிலா. பல்வளமும் நிறைந்த சூழலில் தான் அன்று ஆலயங்களை அரசர்கள் அமைத்தார்கள். எதிர்காலத்தில் ஆலயத்தின் விரிவாக்கம் சூழலில் அமைக்கப்பட இருக்கும் அறச்சாலைகள், கல்விக்கூடங்கள், வைத்திய நிலையங்கள், கலையகங்கள், கருமகூடங்கள், அல்லங்காடி, நாளங்காடி போன்றவற்றை ஆலய சூழலில் அமைக்கும் வகையில் வகுத்த பின், குடிமக்களை செய் தொழில் அடிப்படையில் குடியமர்த்தி வேண்டிய அடிப்படைத் தேவைகளை நிறைவேற்றி குடியோம்பி பாதுகாத்து வந்தார்கள். குடிமக்களும் தாம் தாம் குடியமர்ந்த இடங்களை செய் தொழிலுக்கு ஏற்ப வளப்படுத்தி வாழப்பழகிக் கொண்டார்கள். இதனால் குடியும் வளர்ந்தது கோயிலும் வளர்ந்தது. தத்தம் தேவைகளை ஒருவருக்கு ஒருவர் புரிந்துணர்வுடன் பண்டமாற்று அடிப்படையில் பரிமாறி வாழ்க்கைப்படகை செலுத்தி வந்தார்கள். நிலபுலன்கள் தேவைக்கு ஏற்ப இருந்தது. பிறரிடம் கையேந்தும் நிலை இல்லை. இறை உணர்வுடன் இசைந்த வாழ்வு வாழ்ந்த மக்கள் காலப் போக்கில் தம் பாரம்பரியங்களைக் கைவிட்டு எப்போ கிராமப் புறவாழ்வை விட்டு நகர்புறம் நாடினார்களோ அன்று பிறந்தது புது உலகம்.

வாழிவியலில் மாற்றம் தொழில் நிலையில் மாற்றம் வசதிகளில் மாற்றம். இதனால் ஏற்பட்டது தேவைகள் பல. தேவைகளை நிறைவுசெய்ய யார் யார் முன்வந்தார்களோ அவர்களிடம் தம் பாரம்பரியங்களை கைவிட்டு அற்ப சொற்ப நலனுக்காக திசை மாறிச் சென்றார்கள். இவ்வாறு சென்றவர்கள் தம்மைத் தாமே ஏமாற்றி பிறரையும் தம்வழிக்கு அழைத்தார்கள். அழைக்கின்றார்கள். இன்றைய சூழ்நிலையும் அப்படியாகிவிட்டது. சனாதன தர்மத்தில் தளர்வு ஏற்பட்டுவிட்டதா? என்ன ஒரு நியாயமான ஒரு கேள்வியும் எழுந்துள்ளது.

இவ்வாறான ஒரு நிலை ஏற்பட காரணம் எமது சமய அமைப்புக்களில் உள்ள சிலகட்டுப்பாடுகள், செயற்பாடுகள் என்று கூறுவோரும் உள். 1960 க்கு முன் இருந்த ஒரு நிலை மாற்றத்தால் ஓரளவாகிலும் இன்றய நம் இந்து தர்மம் விழிப்புற்றது என்றாலும் நாட்டில் ஏற்பட்டுள்ள யுத்த சூழ்நிலையால் மீண்டும் ஒரு தாக்கம் எம் சமூகத்தை இருதலைக்கொள்ளி எறும்பாக்கிவிட்டது. வாழ்வா சாவா என்ற நிலையில் இருந்த மக்கள். கிடைத்த துணைவழி சென்று பின் அதன் வழியே தம்மை முற்று முழுதாக மாற்றிக் கொண்டார்கள். கரைபுரண்ட வெள்ளம் எப்படி கட்டுப்படுத்த முடியாத நிலையில் பீறிட்டுப் பாயுமோ அந்த நிலை இன்று எம் சமயத்திற்கு ஏற்பட்டுவிட்டது. கரை கடந்த கப்பலைக் கைதட்டி அழைத்தால் கப்பல் வருமா வரமாட்டாது.

இப்படியான ஒரு சூழ்நிலையை கருத்தில் கொண்ட செய்தி ஒன்று அண்மையில் யாழ்ப்பாண பத்திரிகை ஒன்றில் வெளிவந்தது. ஆண்டு தோறும் இடித்து இடித்து ஆலயங்களைக் கட்டுவதிலும்

வா்ணம் தீட்டுவதிலும் செலுத்தும் கவனத்தை அல்லற்பட்டு ஆற்ருது அழுத கண்ணீருடன் தொல்லைகள் சுமக்கும் நம் சமூகத்தின்பால்சிறிதும். கவனம் செலுத்தினால் நம் சமூக ஒரு அளவாகிலும் மனநிறைவு கொள்ளும். தாம் செல்லும் வழி தவறானது என்று தெரிந்து தெழிந்த மனத்துடன் மீண்டும் நம்வழிக்கு வரக்கூடும என்ற கருத்துப்பட இருந்தது அந்த செய்தி. இது முற்றிலும் மறைக்கவோ மறுக்கவோ முடியாத உண்மை என்றாலும் இந்த கருத்தை அடிப்படையாகக் கொண்டு பல ஆண்டுகட்கு முன்பாகவே ஓரளவாகிலும் சமயத் தொண்டுடன் சமூகத் தொண்டினையும் இணைத்து செயல்பட்டு வருகின்றன. சில கோயில்கள் இவைகள் செய்யும் சமூக சேவைகள் சில ஏவல் இடம் பொருள் காலம் அறிந்து செய்யப்படும் சேவைகளாக இருந்தாலும் சமூகத்திற்கு நிரந்தரமான சேவையாக அமைந்தால் தான் சேவையின் முழுபலனையும் சமூகம் பெற முடியும்.

இந்த வகையில் இன்று பலரும் அறியவும் உதவிகளை வழுங்கவும் அரும்பெரும் சமூக சமய செயற்பாடுகளை செய்து வரும் கோவில்களில் முன்நிற்பவை தீவகத்தில் நயினை ஸ்ரீ நாகபூசணி அம்மன் திருக்கோவில் யாழ்ப்பாண குடா நாட்டில் அருள் மிகு தெல்லிப்பளை ஸ்ரீ துா்கா தேவி அம்பாள் திருக்கோவில் வன்னி மாவட்டத்தில் வவுனியா அருள்மிகு அகிலாண்டேஸ்வரி சமேத அகிலாண்டேஸ்வரா் திருக்கோவில்.

நேரடி நிா்வாக நிலையில் சமூக சமய செயற்பாடுகளைச் செய்யமுடியாத சைவ ஆலயங்கள் தமது பங்களிப்பாக பின்வரும் அமைப்புக்களுக்கு உதவி செய்வதன் மூலம் தமது பங்களிப்பை செய்ய முடியும்.

1. சமய, சமூக அடிப்படையில் செயல்படும் அங்கீகாரம் பெற்ற அமைப்புக்கள் மூலம்.
2. ஆதரவற்றவா்களின் (முதியோா் இல்லங்கள், சிறுவா் பராமரிப்பு இல்லங்கள்) பராமரிப்பு நிலையங்கள் மூலம்.
3. சமய, சமூக ரீதியில் பிரதேச மட்டத்தில் பலமைப் பாீட்சைகளில் சித்திபெறும் மாணவா்கட்கு ஊக்குவிப்பு உதவி.
4. பிரதேச செயலா் மற்றும் கல்விக் கோட்டமட்டத்தில் ஊட்டசத்து வழங்கி முன்பள்ளி சிறுவா்கட்கு உதவுதல் போன்றவற்றை பொறுப்புவாய்ந்தவா்கள் மூலம் உதவி ஊக்க மூட்டல்.

இந்த வகையில் :

சமய சமூகப்பணியில் யாழ்மண்ணில் ஆலயம் ஒன்று சமயப் பணிவுடன் சமூகப் பணியும் ஆற்ற வேண்டும் என்பதற்கு எடுத்துக் காட்டாக திகழ்கின்ற ஆலயங்கள் நம் நாட்டில் மிகச்சிலவே இந்தவகையில் நிா்வாகக் கட்டமைப்பின் நேரடிக் கண்காணிப்பில் பணியாற்றும் ஆலயத்தில் முதன்மையானது. தெல்லிப்பளை அருள்மிகு துா்க்காதேவி ஆலயம் என்றால் மிகையாகாது. இவ்வாலயத்தின் அறக்கொடையால், முதன்முதலில் சிறுவா், முதியோா் நிறை வாழ்வுப்பணியுடன் ஆரம்பமாகி, இன்று பல்துறை சாா்ந்த சமய சமூகப் பணிகளில் தன்னை அா்ப்பணித்து செயல்பட்டு வருகின்றது. இந்த நிலையில் துா்க்காபுரம் எழுச்சிபெற அரும்பணியாற்றிய அந்த அருமைத்தாய் சிவத்தமிழ்செல்வி துா்க்கா துரந்தாி தங்கம்மா அப்பாக்குட்டி அவா்கள் நிறைந்த பெருவாழ்வு பெற்று அன்னையின் பாதம் சென்று அடைக்கலமானாா். அவா் தொட்டபணி தொடரும். இவா் விட்டுச் சென்றது “சமூகத்தோடு ஒன்றிய சமயப்பணி”

இன்று வன்னி மண்ணில் :

108 சிவாலயங்களைக் கொண்ட சிவபூமி என்று போற்றப்படும் ஈழமணித்திரு நாட்டில் கோவில்குளம் என்ற பற்றில் கோவில் கொண்டாா். அகிலாண்டேஸ்வரி சமேத அகிலாண்ட நாயகன் 18.08.1989ல் பாரும் விண்ணும் வியப்புற தோன்றி தன் அருள் பரப்பி சைவ உலகமே வியப்புறும் வகையில் அருள் பரப்பி வியாபித்து விளங்கும் எம்பெருமான் ஆலய அறங்காவலா், நாளொரு வண்ணமும்

பெழுதொரு மேனியுமாக திருப்பணிகளைச் செய்து 09.07.2008ல் இரண்டாவது மகாகும்பாபிஷேகத்தையும் செய்து சிறப்புக்கண்டு நிற்கும் இந்த வேளையில் எம் கடன்பணி செய்து கிடப்பதே என்றபடி சமயை வளர்ச்சியுடன் சமூக வளர்ச்சியிலும் கண்ணும் கருத்துமாக ஈடுபட்டு அந்தப் பணியிலும் நிறைவு கண்டு வருகின்றார்கள்.

இன்றைய நாட்டின் சூழ்நிலையால் அநாதரவான குழந்தைகளை அரச அதிபர் மற்றும் நீதிமன்ற அனுமதியுடன் கையளிக்கப்படும் இருபாலரையும் குறிப்பாக வைத்தியசாலையில் பிறந்து ஓர், இரு நாட்களேயான குழந்தைகள் உள்ளடங்களாக பல குழந்தைகட்கு தாயும் தந்தையும் அகிலாண்டேசுரர் அகிலாண்டேஸ்வரி என்ற பெயர் பதிவுடன் பெற்று, செவிலித்தாயார் மூலம் வளர்த்து வருகின்றார்கள். இவ்வாறு வளர்க்கப் பெற்ற குழந்தைகள் இன்று உயர்தர வகுப்புக்களில் பயின்று வருகின்றார்கள். வயது வந்த பெண் குழந்தைகள் திருமணமாகியும் தம்மை வளர்த்து ஆளாக்கி "அருளகத்து"டன் இன்னும் தாயன்புபாசத்துடன் தொடர்புகளைப் பேணி வருகின்றார்கள். பல குழந்தைகள் இன்றும் பல்துறையில் கல்வி கற்று வருகிறார்கள். வசதியான இருப்பிடம், வசதியான பாடசாலைகள், வசதியான வாழ்வியல் நிலை, இறைவன் கொடுத்த கொடை. இந்த வகையில் தமது செயற்கரிய சமூக சேவையில் இன்றும் ஓர் அம்சமாக முதியோர் பராமரிப்புக்கான காணி கட்டிட வேலைகளையும் தொடங்கி செயல்பட அறங்காவலர்கள் செயலாற்றி வருகின்றார்கள். புதிய புதிய குடியேற்றங்களில் அரச அதிபரின் ஆலோசனையைப் பெற்று வழிபாட்டுத் தலங்களை அமைத்துக் கொடுத்து சமய சமூக விழிப்புணர்வை ஏற்படுத்தி வருகின்றார்கள். இவையாவும் அறங்காவலர்களின் நேரடிக்கண்காணிப்பில் நடைபெறும் சேவைகள். இவர்களின் சேவைகண்டு உலகியல் நிலையில் நல்லாதரவுகள் கிடைத்து வருவதும் ஒரு பெரும் பேறாகும். "எம் கடன் பணி செய்து கிடப்பதே" என்றபடி இவர்கள் சேவை தொடரட்டும்.

"சேவை எங்கே தேவை" என்று செயல்படும் ஆலயங்களில், அமைவிடச் சூழலுக்கு அப்பால் சமய, சமூக சேவையில்" ஆம் பொருள் நமதே ஆளுல் அறம்பிறந்காவதுண்டோ" என்ற வாதவூரர் பூராணத்தில் வரிகளுக்கு வடிவம் கொடுத்து செயல்படும் ஆலயம் ஒன்று உள்ளது. சுமார் இருபதுக்கு மேற்பட்ட அமைப்புகட்கு வருடம் தோறும் சமய சமூக பணிகளுக்கு நிதி வழங்கியும் நேரடியாகவும் தொண்டாற்றும் ஆலயம் தான் 64 சக்தி பீடங்களில் ஒன்றான நயினை ஸ்ரீ நாகபூசணி அம்மன் கோவில்.

அ) கோவில் அறங்காவலர்களின் தீர்மானங்கட்கு அமைய, பரந்துபட்ட உலகமெலாம் வாழ்கின்ற பல்லாயிரக் கணக்கான அம்பிகை அடியார்கள் தினமும் அனுபவிக்கும் அறக்கொடை நிதியை, நிர்வாகம் பல்தலைப்புக்களில் ஒதுக்கீடு செய்து வைத்து, வருடம் தோறும் சமய, சமூக, கல்வி, கலை, கலாசாரம், வைத்தியம், பணிக்கொடை போன்ற வகையில் கோரிக்கையின் அடிப்படையில் வழங்கி வருகின்றது. மாவட்ட ரீதியாக, பிரதேச அலுவலர் ரீதியாக, தீவககல்வி வலய ரீதியாகவும் வழங்கப்படும்.

ஆ) நயினா தீவில் உள்ள மக்களின் நலன்கருதி முன்பள்ளி நிலையங்களில் கல்வி புகட்டும் ஆசிரியர்களுக்கு மாதம் தோறும் ஊதியம் வழங்கி வருகின்றது.

இ) தீவுப்பகுதியில் உள்ள பல வைத்தியசாலைகளில் நிரந்தரமான வைத்தியர்கள் இல்லை. ஆனால் நயினா தீவில் இந்த நிலை ஏற்படக் கூடாது என்பதற்காக இங்கு கடமை ஆற்றும் வைத்தியருக்கு அவருடைய மாதச்சம்பளம் தவிர ஊக்குவிப்பு ஊதியமாக மாதம் 5000/- வழங்கி வருகின்றார்கள்.

ஈ) விஷேட மருத்துவ முகாங்களை ஒழுங்கு செய்து வருகை தரும் வைத்தியர்களால் கொடுக்கப்படும் மருந்து வகைகளை நோயாளர் பெறுவதற்கு உதவுதல்.

உ) முன்பள்ளி சிறுவர்கட்கு சுகாதாரத்தைப் பேணும் விதிமுறைகளை மருத்துவர்களும் பொது சுகாதார அலுவலரும் இணைந்து வழங்கும் அறிவுரைகட்கு ஏற்ப பொருட்களை பெற்றுக் கொடுக்கிறார்கள்.

ஊ) நயினாதீவில் உள்ள சனச சமூகங்களால் நடாத்தப்படும் சமய, கலாச்சார நிகழ்ச்சிகட்டு பரிசில் பெறும் மாணவர்கான பரிசில் பொருட்களுக்கான வரையறுக்கப்பட்ட நிதியை வருடம் தோறும் வழங்கல்.

உயர் திருவிழாக்காலங்களில் அம்பாளைத் தரிசிக்க வரும் அடியார்களின் நலன்களை கவனிப்பதற்கு அரச அதிபரால் விழா ஆரம்பமாகும் முன் மூன்று ஒன்று கூடல் கலந்துரையாடல்கள் நடைபெறும். இந்த வகையில் நயினா தீவுக்கு வந்து போகும் அனைத்து அடியார் நலன்களையும் கவனிக்கும் அரச/ அரசசார்பற்ற அமைப்புக்களின் அனைத்து தேவைகளையும் அறங்காவலர் சபையே ஏற்று செயல்படுத்துகின்றது. மேலும் சமுதாய மட்டத்தில் மாதம் தோறும் சுமார் அறுபது குடும்பங்கள் நிரந்தர வருமானத்தைப் பெற்று வாழ்கின்றார்கள். சுமார் 100 குடும்பங்கள் கைப்பணித் தொழிலால் ஆலய வருமானத்தைப் பெற்று வாழ்கின்றார்கள். படகு உரிமையாளர்களும், பணியாளர்களும், தனியார் பேருந்து போக்குவரத்து உரிமையாளர்களும், பல துறையினரும் நிலைத்த ஒரு வாழ்வாதாரத்தை பெற்று இன்றைய சூழ்நிலையில் வாழ்கின்றார்கள் என்றால் ஆலய நிர்வாகம் சமய வகையாலும் சமூக வகையாலும் ஆற்றும் சேவையே மக்களை கூடிய ஈடுபாட்டுடன் செயல்படவைக்கின்றது என்றால் மிகையாகாது.

ஊ) 5ம் ஆண்டு புலமைப்பரிசில் பரீட்சையில் முதல் மூன்று இடங்களில் சித்தியெய்தும் மாணவர்கட்கு பிரதேச செயலாளர் மட்டத்தில் துவிச்சக்கர வண்டிகள் கொடுத்து வருகின்றார்கள்.

1. **விஷேடமாக :**

   கண்பார்வையற்ற மானிப்பாய் முதியோர் இல்லத்திற்கும்
   யாழ் திருநெல்வேலி சைவச்சிறார் இல்லத்திற்கும் திருகோணமலை அன்பு இல்லச்சிறார்கட்கும் வவுனியா அருளக இல்லமாணவர்கட்கும், கிளிநொச்சி முதியோர் ஆச்சிரத்திற்கும், யாழ்ப்பாணம் புற்று நோயாளர் சங்கத்திற்கும், யாழ்ப்பாணம் வைத்தியசாலை ஸ்ரீ வைரவர் ஆலய புனருத்தாபனப் பணிக்கும், மேலும் இப்படியான அமைப்புக்கட்கும் நிதி உதவி ஆடை உதவிகளை செய்து வந்தார்கள் செய்கின்றார்கள்.

2. முற்று முழுதாக யாழ்குடா நாட்டில் இருந்து மக்கள் வெளியேறிய பின், மிகவும் மோசமாக பாதிப்புற்றிருந்த யாழ் வைத்தியசாலையின் பிரசவத்தொகுதியை பூரணமாக புனரமைத்து வர்ணம் தீட்டி பாவனைக்கு கொடுத்தார்கள். இந்த கைங்கரியத்தை அனைவரும் பாராட்டி பத்திரிகையில் செய்திகளை வெளியிட்டார்கள்.

3. இவை அனைத்துக்கும் மேலாக தினமும் அம்பாளைத் தரிசிக்கவரும் அடியாற்கும், சுற்றுலா வரும் கல்விச் சாலை சமூகத்தவற்கும், தென்னிலங்கையில் இருந்து பிறமாவட்டங்களில் இருந்தும் வரும் அனைத்து மத வழிபாட்டாளர்களுக்கும் அவர்கள் எத்தனை பேராக இருந்தாலும் அத்தனை பேருக்கும் மதிய போசணத்தை வழங்கி நித்திய அன்னதானத்தைச் சிறப்புறச் செய்து உலக வரலாற்றில் நிலையான ஒரு பெருமையை இந்த ஆலய அறங்காவலர்கள் தமதாக்கி கொண்டார்கள் என்று வந்த வலம்புரி பத்திரிகை தனது ஆசிரியர் பந்தியில் குறிப்பிட்டுள்ளது. (இங்கு தரப்படுகின்றது)

அதாவது வெறுமனே கட்டிடங்களைக் கட்டுவதும் வர்ணம் தீட்டுவதுமாக பல ஆலயங்கள் காலத்தை செலவிடுகின்றன என்ற ஒரு செய்தியும் பத்திரிகைகளில் வருகின்றன. இதில் உண்மையும் உண்டு என்றாலும் சமயப் பணியோடு சமுதாயப் பணியிலும் ஓரளவாகிலும் தம்மை நெறிப்படுத்தாமல் ஆலயங்கள் இருந்தால் எதிர்காலத்தில் பாரிய ஒரு இடைவெளி சமூகத்திற்கும் ஆலயங்கட்கும் இடையில் ஏற்படும். இது தவிர்க்க முடியாத ஒன்றாகவும் ஆகிவிடும். ஆகவே காற்றுள்ள போதே தூற்றிக் கொள்” என்பதற்கமைய சமூகத்தையும் வளர்த்து தானும்வளர ஆலயங்கள் முன்வர வேண்டும். “கோயில் வளர குடி வளரும்” “குடி வளர கோயில் வளரும்” இதனால் தான் போலும் “கோயில் இல்லா ஊரில் குடியிருக்க வேண்டாம் என்றார் போலும்” அந்த அளவிற்கு குடியோம்பி கோவில்கள் செயல்பட்டன என்பது தெளிவாகின்றது.

வவுனியாவில் சைவத்திருமுறைகள்

இறைபணிச்செம்மல் திருவாசகச் செல்வர், சேவையரசு
வை.தே.தேவராசா அகில இலங்கை சமாதான நீதவான்
அறங்காவலர் சபை உபசெயலாளர், இந்துமாமன்ற தலைவர்
மணிவாசகர் சபை தலைவர்

இலங்கைத்தீவில் யாழ்ப்பாணத்திற்கு தெற்கே காடுகளும் ஆறுகளும் நெற்களனிகளும் கனிகளைத் தருகின்ற மா,பலா, வாழைகளும் நிறைந்து சைவமும் தமிழும் அதோடு மறுசமயங்களும் கலந்து வாழும் வவுனியா என்னும் சிவபூமியில் வவுனியாநகரை அண்டிய கோவில்குளம் கிராமத்தில் ஆறாவது ஈஸ்வரமாக விளங்கும் அகிலாண்டேஸ்வரி சமேத அகிலாண்டேஸ்வரர் திருக்கோவில் 1996ம் ஆண்டு முதல் கும்பாபிஷேகம் நடைபெற்று 2008இல் இரண்டாவது மகா கும்பாபிஷேகம் 33 குண்டங்கள், மிக சிறப்பான யாகசாலை அமைத்து ஆகமவிதிகள் வழுவாமல் இலங்கையில் வேறு எங்கும் நடைபெற்றிராதவகையில் சிறப்பாக நடந்தேறியது. அதனைத் தொடர்ந்து மண்டலாபிஷேகம் நடைபெற்று பத்தாயிரத்துஎட்டு சங்குகள் கொண்ட மகா சங்காபிஷேகம் நடைபெற்று நிறைவு நாளில் வெளியிடப்படும் சிவதத்துவ சிறப்புமலருக்கு எனது சிற்றறிவுக்கும், அனுபவத்திற்கும் ஏற்ப இந்த நிகழ்வுக் கட்டுரையை வழங்குகின்றேன்.

எனது முன்வினைப் பயனாக 1960ம் ஆண்டு வவுனியா நகருக்கு வந்து தொழில் தொடங்கி 2009ல் 50 வருடங்கள் பூர்த்தியாகின்றன. எனது வாழ்நாளில் எதைஎதை பழகிக் கொண்டேனோ அவ்வளவும் வன்னி மண்ணில்தான் எனக்குக் கிடைத்தது. குறிப்பாக அரசியல்,சமூக சேவை, ஆன்மீகம் என எல்லாம் சிறப்பான முறையில் தொண்டாற்றக் கிடைத்தது. குறிப்பாக நான் படிக்கும்போதே 1953ம் ஆண்டு மட்டில் சங்கீதம், திருமுறைகள் பாடுதல் போன்றவற்றில் முதன்மை பெற்றிருந்தது குறிப்பிடத்தக்கது. அதனால் வவுனியாவிலும் முதன்முதல் வவுனியா கந்தசாமிகோவிலில் தேவாரம் பாடியதுதான் எனது ஆரம்பமாகும். பின்னர் குடியிருப்பு ஸ்ரீ சித்திவிநாயகர் ஆலயம், சுத்தானந்த இந்து இளைஞர் சங்கம் என தொடர்ந்தது. அந்தக் காலத்தில் வவுனியாவில் கோவில்கள் என இரு ஆலயங்கள்தான் இருந்தன. ஒன்று வவுனியா கந்தசுவாமி கோவில் இரண்டாவது குடியிருப்பு ஸ்ரீ சித்திவிநாயகர் ஆலயம். அதன் பின்னர் சுத்தானந்த இந்து இளைஞர் சங்கம் ஆரம்பமானது. சுத்தானந்த இந்து இளைஞர் சங்கத்தில் திரு.த. நல்லதம்பி அவர்கள்(கோவில்குளம்) தலைவராக இருந்த காலத்தில்தான் திருமுறைகள் படிப்பதற்கு எமக்கு சந்தர்ப்பம் கிட்டியது.

1986 ம் ஆண்டு சுத்தானந்த இந்து இளைஞர் சங்கத்தில் எனது வேண்டுகோளுக்கிணங்க திருவாசகம் பாட முடிவெடுத்தோம். வவுனியா கந்தசுவாமி கோவில் குருக்கள் சிவஸ்ரீ. இ.பாலச்சந்திரக்குருக்கள், திரு.த. நல்லதம்பி ஐயா அவர்கள், திரு. நா.அகளங்கள் அவர்கள், திரு.நா.யோகராஜா அவர்கள் , திரு.நா. சேனாதிராஜா அவர்கள், நயினை நாகபூசணி அம்மன் கோவில் தர்மகர்த்தா திரு.ஆ. தியாகராசா அவர்கள், திரு.வை.செ.தேவராசா இன்னும் திரு. செ. சற்குருநாதன் அவர்கள், கொந்தகாரன்குளம் திரு. இராசையா அண்ணன் போன்றோர் திருவாசக முற்றோதல் செய்தோம். பின்னர் திரு அகளங்கன் அவர்களின் வேண்டுகோளிற்கிணங்க அன்றைய தலைவர் திரு. நா.பாலசுப்பிரமணியம் (அதிபர் - இலங்கை கத்தோலிக்க திருச்சபை தமிழ் கலவன் பாடசாலை). நான் கொந்தக்காரன்குளம் இராசையா அவர்கள் திரு நா.பற்குணம் ஆகியோர் கிராமங்களுக்குச் சென்று ஆலயங்களில் திருவாசக முற்றோதல்கள் செய்து வந்தோம். கொந்தக்காரன் குளம், சிவபுரம், புதுக்குளம், பம்பைமடு, வவுனியா கந்தசுவாமி கோவில், குடியிருப்பு பிள்ளையார் கோவில். கோவில்குளத்தில் அப்போது விநாயகர் ஆலயம்தான் இருந்தது அங்கும் திருவாசக முற்றோதல் செய்து வந்தோம். ஒருநாள் கோவில்குளம் இந்துக்கல்லூரியில் திருவாசக முற்றோதல் செய்தபோது எனது அழைப்பின்பேரில் திரு.நா.அகளங்கன் அவர்கள் அன்று நடைபெற்ற திருவாசக முற்றோதலை ஆரம்பித்து வைத்து உரையாற்றினார். அப்போது அகளங்கன் அவர்கள் என்னிடம் நீங்கள் இப்படி திருவாசகத்தை தொடர்ந்து முற்றோதல் செய்து வருவதால் திருவாசக முற்றோதல் எங்கெங்கு நடைபெறுகிறது என்பதை குறித்து வைத்துக் கொள்ளுங்கள். அது ஒரு காலத்தில் தேவைப்படலாம் என என்னிடம் கேட்டுக்கொண்டார்.

அன்று நடைபெற்ற திருவாசக முற்றோதல் 43வது திருவாசக முற்றோதல் என கணக்கிட்டுக் கொண்டோம். பின்னர் மார்கழி மாதத்திலும் மரணச்சடங்குகளிலும், விழாக்களிலும் எண்ணெய்க்காப்பு நடைபெறும் ஆலயங்களிலும் திருவாசகத்தை முற்றோதல் செய்து வந்தபோது திருவாசக முற்றோதல் ஞாபகார்த்தமாக திருவாசகப் புத்தகங்கள் அச்சிட்டு வெளியிட சிந்தித்தேன். அப்போது 1996ம் ஆண்டு கோவில்குளம் சிவாலய கும்பாபிஷேகத்தில் 75வது திருவாசக முற்றோதலை செய்து புத்தகத்தை அன்று வெளியிட விரும்பினேன்.

அன்று நான் கோவிலில் கருவறையில் 75வது திருவாசக முற்றோதலை மூன்று பேருடன் பாடி நிறைவுசெய்தேன். திருவாசக புத்தகத்தை யாழ்ப்பாணம் காந்தளகம் உரிமையாளர் அண்ணன் சச்சிதானந்தம் அவர்களின்(சென்னையில்) உதவியோடு அவரது ஆலோசனையோடு திருவாசகத்தை சென்னையில் சிறப்பாக அச்சிட்டு 01-06-1996ம் ஆண்டு கும்பாபிஷேகம் அன்று கோவில்குளம் அகிலாண்டேஸ்வரர் ஆலயத்தில் வெளியிட்டோம். அன்று அன்பளிப்பாக பலர் பணம் தந்தார்கள். அதன்பின்னர் சகல புத்தகங்களும் திருவாசகம் பாடும் தொண்டர்களுக்கும், ஆலயங்களுக்கும், சங்கங்கள், வெளிநாடுகளுக்கும், பாடசாலைகளுக்கும், நூலகங்களுக்கும் இனாமாகவே வழங்கினோம்.

இதனால் மார்கழி மாதம் 1996ம் ஆண்டில் இருந்து கோவில்குளம் அகிலாண்டேஸ்வரர் ஆலயத்தின் மூலம் வவுனியாவில் உள்ள ஆலயங்களுடன் தொடர்பு கொண்டு எல்லா ஆலயங்களிலும் திருவாசகத்தை முற்றோதல்செய்து வந்தோம். வயது முதிர்ந்தவர்கள், பாடசாலைப்பிள்ளைகள், ஆலய நிர்வாகிகள், வழிபாட்டாளர்கள் என இப்போது 200 பேர் வரை திருவாசகத்தை பிழையின்றிப்பாட பழகிக்கொண்டார்கள்.

இதில் பலர் சிறப்பாகப் பாடவும் கற்றுக் கொண்டார்கள் இதனால் இன்றுவரை 600 தடவைகள்வரை திருவாசக முற்றோதல் நிறைவடைந்துள்ளன. என்னைப் புகழுவதாக தயவுசெய்து கருதவேண்டாம். திருவாசகத்தை இப்படி 500 தடவைகளுக்கு மேல் முற்றோதல் செய்வதை ஓர் விழாவாக செய்யவேண்டும் என தம்பி அகளங்கனின் ஆலோசனையுடன் மணிவாசகர் சபையின் உபதலைவர் திரு.க.ஐயம்பிள்ளை ஐயாவும் அவரது பாரியார் திருமதி. பு.ஐயம்பிள்ளை அவர்களும் 500வது திருவாசக முற்றோதல் ஞாபகார்த்தமாக ஓர் "திருவாசகத்தேன்" எனும் புத்தகத்தை வெளியிட்டு கோவில்குளம் அருளக கட்டிடத்தில் மிக சிறப்பான விழாவைச் செய்தார்கள். அது திருவாசகத்திற்குச் செய்த விழாவாகவே நான் கருதுகின்றேன். இதுமட்டுமல்ல பன்னிருதிருமுறை முற்றோதலும் வவுனியாவில்தான் சிறப்பாக நடைபெறுகின்றது. முதன்முதலாக சுத்தானந்த இந்து இளைஞர் சங்கத்தால் திரு.த.நல்லதம்பி ஐயா அவர்களின் தலைமையில் நாம் பன்னிருதிருமுறை முற்றோதலைச் செய்து வந்தோம். அது கடுமையான சோதனையாக இருந்தது. ஏனெனில் பாடல்களுக்கு பண், இராகம் என்பன எமக்குத் தெரிந்திருக்கவில்லை. 18347 பாடல்கள் கொண்டது பன்னிரு திருமுறை.

எம்மால் நிறைவுசெய்யமுடியாமையால் திரு.த.நல்லதம்பி ஐயா அவர்கள் உசன் கந்தசுவாமி கோவிலில் உள்ள ஓதுவார் திரு. ஆறுமுகம் அவர்களை அழைத்து வந்து எமது சுத்தானந்த இந்து இளைஞர் சங்கத்தில் 3 மாதம் பாடி நிறைவுசெய்தோம் இது ஓர் சோதனையாகவும், பரீட்சையில் சித்தி பெற்றது போன்று அமைந்தது. அதன்பின்னர் நாம் திரு.ந.செல்லையா (தலைவர் - இந்து மன்றம்) அவர்களின் ஆலோசனையுடன் வவுனியா கந்தசுவாமி கோவில் சிவஸ்ரீ. இ. பாலச்சந்திரக்குருக்கள் அவர்களின் ஆதரவோடு கந்தசுவாமி கோவிலில் படிக்கத் தொடங்கினோம். முதல் பன்னிரு திருமுறைகள் முற்றோதல் திரு.த.நல்லதம்பி ஐயர் தலைமையில் பல பெரியோர்களின் உதவியோடும் மிக சிறப்பாக நடைபெற்றது.

திருக்கேதீஸ்வரம் மன்னாரில் இருந்து ஆலயத்தின் பழைய தேரை வாகனத்தில் ஏற்றி வந்து வவுனியா குடியிருப்பு விநாயகர் ஆலயத்தில் இருந்து தேரில் திருமுறைகளை ஏற்றி வவுனியா நகரின் ஊடாக சுத்தானந்த இந்து இளைஞர் சங்கத்தில் இந்து கலாச்சார அமைச்சின் ஆதரவோடு மிகச்சிறப்பாக விழா நடைபெற்றது. வவுனியாவில் முதல் தேர் ஓட்டம் திருமுறைத்தேராக அமைந்தது. இதன்பின்னர் 1996ம் ஆண்டு அகிலாண்டேஸ்வரர் ஆலயத்தில் பன்னிரு திருமுறைமுற்றோதலை ஆரம்பித்தோம். இப்போது வவுனியாவில் 18 வது தடவையாக பன்னிருதிருமுறை முற்றோதல் நிறைவு பெற்றுள்ளது என்பதில் பெருமகிழ்ச்சி கொள்கின்றேன். இந்த நிகழ்வுகள் 1வது சுத்தானந்த இந்து இளைஞர் சங்கம்(1986), 2வது 3வது 4வது யாவும் வவுனியா கந்தசுவாமி கோவில் நடைபெற்றன. 4வது விழா பூர்த்திக்கு முதன்முதலாக பிரதேசச் செயலாளர் வருகை தந்த அன்று திரு.அமிர்தலிங்கம் அவர்கள் கலந்து தலைமை தாங்கியது பாராட்டத் தக்கதாக இருந்தது. 5வது தடவை ஆதிவிநாயகர் ஆலயம், 6வது தடவை இந்து மாமன்ற மண்டபம் இதன் பின்னர் 12 தடவைகள் கோவில்குளம் அகிலாண்டேஸ்வரர் ஆலயம். இப்படி 18 தடவைகள் வவுனியாவில் பன்னிரு திருமுறைகள் முற்றோதல் நடைபெற்றுள்ளதை பெருமையோடு கூறுவதோடு இந்த நிகழ்வுகளும் வவுனியாவில் சைவசமயம் வளர ஒரு எடுத்துக்காட்டாகவும் திகழ்கிறது. இதனால் பலர் தேவார திருவாசகம் பாட பழகிக் கொண்டார்கள். சிவதத்துவ மலருக்கு எனது மனம் நிறைந்த ஆசிகளை வழங்குகின்றேன்.

சைவ சித்தார்ந்தமும் மனித மேம்பாடும்

பேராசிரியர் கலாநிதி நா. சுப்பிரமணியம்
தலைவர், தமிழ்த்துறை யாழ் பல்கலைக்கழகம்

1. தோற்றுவாய்

மனித மேம்பாடு என்பது இருவகைப்படும். உணவு, உடை, உறையுள் முதலான தேவைகளை நிறைவு செய்து கொள்ளும் நிலை முதல் வகை. அன்பு, அறம், ஒழுக்கம் முதலான பண்புகளை வளர்த்துக் கொள்வது இரண்டாவது வகை. முதல் வகை புறநிலையாகும். இரண்டாவது நிலை அகநிலையாகும். இந்த அகநிலையைப் பண்பு நிலை எனவும் வழங்குவர். சமயம் சார்ந்த சிந்தனை மரபுகள் இந்த இரண்டாவதான பண்பு நிலை வளர்ச்சியையே நோக்காகக் கொண்டவையாகும். அவ்வகையில் சைவ சித்தாந்த தத்துவமும் இந்தப் பண்பு நிலை வளர்ச்சி பற்றிப் பேசுவதேயாம். உலகியல் சார்ந்த துன்ப துயரங்களில் உழலும் உயிரானது அவற்றினின்றும் விடுபட்டு இறையனுபவத்தை நோக்கி முன்னேறுவதற்கான திசைக்காட்டிகளாக அமையும். சமய தத்துவங்களில் இத்தத்துவம் முக்கியமான ஒன்று என்பது வெளிப்படை. இவ்வகையில் இந்திய மண்ணிற் பிறந்த ஏனைய தத்துவங்களினின்று சைவசித்தாந்தம் எவ்வெக் கூறுகளில் வேறுபட்டுத் தனித்தன்மை கொண்டதாகத் திகழ்கின்றது என்பதைத் தத்துவ வரலாற்று நோக்கில் ஒப்பிடும் ஆராயும் ஒரு முயற்சியாக இவ்வாய்வுரை அமைகின்றது.

2. மனித மேம்பாட்டுக்கான தத்துவத்தின் அடிப்படைகள்.

மனித மேம்பாட்டைக் குறிக்கோளாகக் கொண்டு அமையும் தத்துவம் பின்வரும் மூன்று கூறுகள் தொடர்பாகத் தெளிவான கருத்து நிலைகளைக் கொண்டிருக்க வேண்டியது அவசியமாகும் அவை:

அ. உயிர், உலகு என்பவற்றின் இருப்பு.
ஆ. மாந்தரின் நடத்தை தொடர்பான வரையறைகள், வழிகாட்டல் நெறிகள்
இ. எதிர்காலம் தொடர்பான நம்பிக்கை.

உயிர், உலகு என்பன உள்பொருள்கள் எனக் கொள்ளும் தத்துவங்கள் மட்டுமே இந்த உலகியல் வாழ்க்கையைப் பற்றுறுதியுடன் வாழவும் மனித மேம்பாட்டுக்கான சிந்தனை, செயன்முறை என்பவற்றைத் திட்டப்பாங்குடன் மேற்கொள்ளும் துணை புரியவல்லன. இவ்வாறான வாழ்க்கை, செயன்முறைகள் என்பன அயலவரைப் பாதிக்காத வகையில் நேரியனவாக அமைவதற்கு நடத்தை பற்றிய வரையறைகள் அவசியமாவன. இவ்வரையறைகளின் வினைபொருளே ஒழுங்கியல். இவ்வாறு அமையும் வாழ்க்கையில் சோர்வு ஏற்படாதிருக்க ஒரு பற்றுக்கோடு தேவைப்படுகிறது. பெரும்பான்மையான சமயத்தத்துவங்களிலே இப்பற்றுக்கோடு இறை நம்பிக்கையாக அமையக் காணலாம்.

மேற்படி மூன்று கூறுகளையும் ஒன்றோடொன்று முரணாத வகையில் வகுத்தும் தொகுத்தும் விளக்கி நிற்கும் தத்துவங்களே திட்டப்பாங்கான முறையில் மனித மேம்பாட்டுக்கு வழிவகுக்க வல்லன. இவ்வகையில் சைவ சித்தாந்தத்தின் தகுதிப்பாடு எத்தகையது? இந்தியத் தத்துவப்பரப்பை முழுநிலையிற் கருத்திற் கொண்டு விடைகாண வேண்டிய வினா அது.

3. சைவசித்தாந்தத்தின் தகுதிப்பாடும் தனித்தன்மையும்.

இந்தியத் தத்துவப் பரப்பு முழுவதையும் கருத்திற் கொண்டு நோக்கும் போது மேலே காட்டிய மூன்று கூறுகளிலும் தனக்கெனத் தனித்தன்மை வாய்ந்த கருத்து நிலைகளைக் கொண்டுள்ள தத்துவம் என்ற கணிப்புக்கு உரியதாகச் சைவசித்தாந்தம் திகழ்கிறது. அது உயிரை உண்மைப் பொருளாக என்றும் உள்ள நிலையான பொருளாகப் பேசுவது. அவ்வுயிர் தன் வினைப்பயன்களைத் துய்ப்பதற்காக உருவாக்கப்பட்ட படைக்கப்பட்ட ஒரு உள்பொருளாக உலகைக் காண்பது. உயிரின் நடத்தை, அது பின்பற்ற வேண்டிய வாழ்வியல் நெறிமுறைகள் என்பன பற்றியும் விரித்துரைப்பது. அவ்வகையில் அது வாழ்வியல் ஒழுக்கவியல் என்பவற்றைத் திட்டப்பாங்குடன் வரையறுத்துக் கூறும் தத்துவமாக அமைவது. இவற்றுக்கு மேலாக 'பதி' என்ற பரம்பொருளின் மீதான நம்பிக்கையை வலியுறுத்தி நிற்பது. அவ்வகையில் இது ஒரு சமய தத்துவமும் ஆகிறது.

இம்மூன்று கூறுகளையும் பற்றிப் பேசும் போது முயற்சியில் இத்தத்துவம் தனக்கு முற்பட்ட இந்தியத் தத்துவப்பரப்பில் முன்வைக்கப்பட்டிருந்த பல்வேறு நிலைச் சிந்தனைகளையும் கவனத்திற் கொண்டு அவற்றை விவாதத்திற்குட்படுத்தி, தனது நிலைப்பாடுகளைத் தருக்கபூர்வமாக நிறுவும் அணுகுமுறையைக் கடைப்பிடித்துள்ளது. அருணந்தி சிவாச்சாரியாரின் சிவஞானசித்தியார் இவ்வகை அணுகுமுறைக்குத்தக்க சான்றாகும்.

இந்தியத் தத்துவப்பரப்பிலே உலகம், உயிர் என்பவற்றை உள்பொருளாகக் கொண்டமைந்த கால முதன்மையுடைய சிந்தனை சாங்கியம் ஆகும். இல்லது வாராது உள்ளது. போகாது என்ற கருத்து நிலையினை அடிநாதமாகக் கொண்ட இத்தத்துவம் முன்வைத்த 'பிரகிருதி' 'புருடன்' என்பன தொடர்பான சிந்தனைகளே உலகம், உயிர் என்பன தொடர்பான தொல்நிலை விளக்கங்களாகும். சாங்கியத்தின் இந்த அடிப்படைகளை மேலும் விரிவுபடுத்தி அமைந்ததே சைவசித்தாந்தத்தின் உலகு, உயிர் என்பன தொடர்பான சிந்தனை. சாங்கியம் 25 ஆகப் பேசிய மூலக்கூறுகளைச் சைவசித்தாந்தம் 36 ஆக விரிவுபடுத்தியது. சாங்கியம் தனது தொல்நிலையில் சிந்திக்காத பரம்பொருள் இயற்றுதற்கருத்தா பற்றிய கருத்து நிலை சைவசித்தாந்தத்தில் இடம்பெற்றுள்ளது என்பதும் அது 37 ஆவதாக அமைகின்றது என்பதும் தத்துவ உலகம் அறிந்த செய்திகளாகும். சாங்கியத்திலிருந்து சைவசித்தாந்தம் வேறுபடும் முக்கிய கூறுகள் இவை என்பது தெளிவு.

உயிர்களின் நடத்தை அவை எய்தும் "இன்ப - துன்ப அனுபவங்கள் என்பவற்றுக்கு விளக்கம் தரும் வகையில் இந்திய மண்ணின் பேசப்பட்டு வரும் முக்கிய கருத்து நிலை 'கர்மக்கோட்பாடு' (வினைப்பயன் பற்றிய கருத்து நிலை) ஆகும். உவ்வொரு உயிரும் தான் எய்தும் அனுபவங்களுக்கான காரணிகள் 'தனது முன்னைய வினைகளே' என உணரவேண்டும் என்பதே இக்கருத்து நிலையின் அடிப்படையாகும். இவ்வகையில் இது உயிர்களின் நன்னடக்கத்துக்கு வழிசமைக்கும் நோக்குடையது என்பதை உய்த்துணரலாம். இதன் 'வினைபொருள்' களாகவே அறம், ஒழுக்கம் என்பன தொடர்பான சிந்தனைகள் இந்திய மண்ணில் முளைவிட்டன. இந்தியத் தத்துவங்கள் பலவற்றில் மேற்படி 'கர்மர் கோட்பாடு' அறம் ஒழுக்கம் என்பன பேசப்பட்டாலும் இவற்றில் தனிக்கவனம் செலுத்தி நின்றவை சமணம், சைவசித்தாந்தம் ஆகிய மூன்றுமே எனலாம்.

சமயம், பௌத்தம் என்பன மேற்படி சிந்தனைகள் பற்றிப் பேசுவதற்கும் சைவ சித்தாந்தம் அவைப் பற்றிப் பேசுவதற்கும் அடிப்படையான வேறுபாடுகள் சில உள. வினைப்பயன் உயிரைத் தானே வந்தடைகிறது என்பது சமணம், பௌத்தம் என்பவற்றின் பொதுக்கருத்து ஆகும். உயிர்கள் தம்வினைப்பயனை அனுபவிப்பது தவிர்க்க முடியாத ஒன்று என்பது சமணத்தின் நிலைப்பாடு. சைவசித்தாந்தம் மேற்படி இக்கருத்துக்களையும் மறுக்கிறது. நினைப்பயனைச் சேர்த்து வைப்பவனாக அது 'பதி' என்ற பரமத்பொருளைச் சுட்டுகிறது. வினைப்பயனை அனுபவிப்பதிலும் புதிய வினைகளை ஈட்டுவதிலும் உயிரின் சுயாதீனத்துக்கும் ஓரளவு இடம் உள்ளது என அது உணர்த்துகிறது. பரம்பொருளின் அருளுக்குத் தன்னைத் தகுதிப்படுத்திக் கொள்வதன் மூலம் உயிரானது தனது தகுதிப்படுத்திக் கொள்வதன்

மூலம் உயிரானது தனது வினைப்பயனை வெல்வது சாத்தியம் என்பது சைவசித்தாந்தத்தின் தொனிப்பொருள் ஆகும். இவ்வகையில் 'யாவுமே வினைப்பயன்' எனப் பேசும் வரட்டு வாதத்தை அது மறுதலிக்கின்றது. சிந்தனை முனைப்பு, செயலாக்கம் என்பவற்றைத் தூண்டி நிற்கின்றது. இத்தூண்டுதலானது உயிரின் பண்பை மேம்படுத்துவது என்பது வெளிப்படை.

பரம்பொருள் தொடர்பாக இந்திய மண்ணில் முளைவிட்ட சிந்தனைகளை முக்கியமான இருவகைகளில் அடக்கலாம். "யாவுமே பரம்பொருள் தான்" உலகம் உயிர் என நாம் உயர்ந்து கூறும் அனைத்தும் பரம்பொருளின் வெவ்வேறு நிலைத்தோற்றங்கள் தான் எனக் கொள்வன ஒருவகை. உலகு உயிர் என்பவற்றுக்குப் புறம்பான ஒன்றாகப் பரம்பொருளை உயர்த்தும் நிலை இன்னொரு வகை. இவற்றுள் முதல் வகைக்குச் சான்றாக முன்நிற்பது சங்கரர் நிறுவிய 'அத்வைதம்' ஆகும். 'சர்வம் பிரம்மமயம் ஜத்' என்பது அத்தத்துவத்தின் அடிப்படை. 'அவித்தை' யின் காரணமாக அப்பிரம்மம் உலகு, உயிர் என்பனவாகக் காட்சி தருகிறது. 'இதுவே காட்சி உண்மை அல்ல; என்பது அத்வைத்தின் தெளிபொருள். இரண்டாவது வகைக்குச் சான்றாகத் திகழ்பவற்றுள் முதல் வரிசையிற் சுட்டதக்கது சைவசித்தாந்தம். அத்வைதத்தைப் போலவே 'எல்லாம் வல்லதும் குணங்குறிகளைக் கடந்ததுமான பரம்பொருட் பண்ணை இது பேசுகிறது. ஆனால் உலகு, உயிர் என்பனவற்றினின்று அதனை வேறுபடுத்தி உயர்நிலையில் வைக்கின்றது. படைத்தல் முதலிய ஐந்தொழில்களைப் புரியும் முழுமுதலாகிய சிவன் உயிர்கள்.

தத்தம் வினைப்பயனைத் துய்த்துக் கழிந்து ஈற்றில் தன்னடியில் அடையவைப்பவனைத் என்பது சைவ சித்தாந்தத்தின் நிலைப்பாடாகும்.

'முழுமையான பரம்பொருளானது குறைபாடுகளையுடைய உலகம், உயிர் என்பனவாகத் தோற்றமளிப்பது ஏன்?' எப்படி? என வாழும் வினாக்களுக்கு 'அத்வைதம்' தெளிவாக விடைபகரவில்லை. 'அநிர்வசனீயம்' (வார்த்தைகளால் உணரமுடியாத நிலை) என்பதே அத்வைதத்தின் முடிந்த முடிவு. சைவசித்தாந்தத்துக்கு இந்த இடர்பாடு இல்லை. பரம்பொருளையும் உலகு, உயிர் என்பவற்றையும் நிலையான தனித்தன்மை வாய்ந்தனவாகச் சுட்டுவதன் மூலம் சராசரி மனித அறிவில் ஒப்புக் கொள்ளக் கூடியவற்றையே அது பேசுகிறது. இவ்வகையில், உலகின் தோற்றம் உயிர்கள் எய்தும் அனுபவங்கள் என்பவற்றுக்கு அடிப்படையாக அது பேசும் மாயைக் கோட்பாடானது தனித்தன்மை வாய்ந்தது. உயிரானது தன்னைப் பண்புநிலையில் வளர்த்துக் கொள்வதற்கான ஒரு பயில்களமாகவே இவ்வுலகு மாயை என்ற மூலப்பொருளிலிருந்து படைத்தளிக்கப்பட்டது என குறிப்பிடும். அத்வைதம் பேசும் 'மாயை', 'அவித்தை' என்பன போல் கருத்து நிலையாக மட்டும் அமையாமல் உண்மைப் பொருளாக சைவசித்தாந்த மாயை திகழ்வது வெளிப்படை, பொதுவான சராசரி மனித அறிவுக்குப் புலப்படத்தக்க வகையில் சைவசித்தாந்தம் தருக்கரீதியாக இம் மாயைக் கோட்பாட்டைப் பேசியுள்ளது என்பதும் குறிப்பிடத்தக்கது.

'சரீர சம்பந்தம் பெற்ற ஆன்மாவின் புத்தியின் குணங்களிற்கேற்ப அவற்றின் சுகதுக்க அனுபவங்கள் வேறுபடும். புருடாத்தத்தின் வேறுபாடும் ஆன்மாக்களின் கர்மபலன்களை அனுசரித்து வேறுபடும். சுகதுக்க மோக அனுபவங்களைப் புருடாத்தமாகக் கூறுவதன் மூலம் சைவசித்தாந்தம் ஒரு வாழ்வியற் தத்துவமாக, வாழ்க்கைத் தத்துவமாகச் செயற்படுகிறது. மனித வாழ்க்கைப் பல படிநிலைகளைக் கொண்டது. இருப்பு வாதிகள் கூறுவது போல மனித வாழ்க்கையானது அழகியல் நாட்டத்தில் தொடங்கி, ஒழுக்க வாழ்க்கையூடாகச் சமய நிலைக்கும் செல்லுதல் இயல்பு. இவ்வியல்பினை ஒட்டியதாகவே சைவ சித்தாந்தம் காணப்படுகிறது. உலக வாழ்க்கையைப் பௌத்த சமண மதங்களைப் போல் வெறுத்தொதுக்காது, அவ்வாழ்க்கையில் கிடைக்கும் இன்ப அனுபவங்களை ஏற்று, அவற்றை அனுபவித்தல் என்ற பொருளிலேயே புருடாத்தத்தைச் சைவ சித்தாந்தம் விளக்குகிறது. சைவசித்தாந்தம் போகம் என்ற எண்ணக்கரு மூலம் "முழு நிறைவான வாழ்க்கை" என்ற இலட்சியத்தை அனைவருக்கும் போதிக்கிறது. புனரூபமான பொதுத் தத்துவங்கள் ஆன்மாவிற்குப் போகத்தானங்களாகும் என்று போக காரிகை குறிப்பிடுவது இங்கு அவதானிக்கத்தக்கது.

உலகியல் வாழ்வின் அனுபவங்களை உள்வாங்கிக் கொண்டு சமய ஆன்மிக நெறிக்கு வழிப்படுத்தும் ஒரு தத்துவமாகவே சைவசித்தாந்தம் திகழ்கின்றது என்பது மேற்படி விளக்கத்தின் தொனிப்பொருள் ஆகும்.

4. திறனாய்வு நோக்கிலே

நடைமுறையிலுள்ள சமயவாழ்க்கை தத்துவம் என்ற வகையிலே சைவசித்தாந்தம் இந்த உலகுடனும் சமூகத்துடனும் கொண்டுள்ள உறவு எத்தகையது? என்பது நமது கவனத்துக்குரியதாகிறது. இறை நம்பிக்கை என்ற தளத்தில் இயங்கும் இத்தத்துவம் வீடுபேறு என்ற இலக்கை நோக்கி உயிரை வழிப்படுத்துவது என்பது வெளிப்படை. அவ்வாறு வழிப்படுத்தும் முறைமைக் கூடாகவே இது உலகியல் வாழ்க்கையின் தேவைகளைக் குறிக்கோளாகக் கொண்டமைந்த தத்துவமல்ல என்பது ஒப்புக் கொள்ளப்பட வேண்டிய ஒன்றாகும். உலகியல் பற்றி பேசுகிறது என்பது தெளிவு. இவ்வகையில் இது உலகியல் வாழ்க்கையானது உயிரின் வளர்ச்சிக்கான மனித மேம்பாடுக்கான ஒர பயில்களம் என்ற அளிவிலேயே சைவசித்தாந்தத்தின் கவனத்திற்குரியதாகிறது. அந்த அளவில் இத்தத்துவம் தன்பணியைச் சிறப்பாகவே நிறைவு செய்கிறது எனலாம். இத்தத்துவம் உலகினர் அனைவரையும் நோக்கிப் போதிக்கப்பட்ட ஒன்றாகத் தெரியவில்லை. குறிப்பிட்ட ஒரு தகுதியினர்க்கே இது பேசப்படுள்ளது என்பதைப் பின்வரும் சிவஞானசித்தியார் செய்யுளடிகள் உணர்த்துவன.

போதமிருந்தோர் தொகுத்த பேதைமைக்கே
பொருந்தினோ ரிவர்க்கன்றிக் கதிப்பாற் செல்ல
ஏதுநெறியெனுமவர்கட் கறிய முன்னா
விறைவனரு ணந்திதனக் கியம்ப. (2)

"சாத்திரஞானத்தான் மிக்கவர்கள், தொகுத்துச் சொல்லப்பட்ட அறியாமைக்கே கூடினோர் இவ்விருவர்க்குமன்றி முத்தியின் வழிச் செல்ல யாது வழி என ஆராயும் சத்திநிபாதத்தோர்க்கு அறிய வேண்டி..................... (3)

என இதில் உரை விளக்கம் அமைகின்றது.

இவ்வாறு சக்திநிபாதத் தகுதியினரை நோக்கியே இத்தத்துவம் பேசப்பட்டதாகக் கொண்டாலும் இது புலப்படுத்தி நிற்கும் கூறுகள் சராசரி மானுட வாழ்வினர்க்கும் பண்பு வளர்ச்சிக்கும் பயன்பட்டு நிற்பது வெளிப்படை. இறை நம்பிக்கையை முன்வைத்து சிந்தனைத்தூய்மை, செயல்தூய்மை என்பவற்றை இது பேசுகின்றது. இவை சமூக மனிதனை நற்பண்பாளனாக மனித நேயமிக்கவனாக - உருவாக்கும் வலுவாய்ந்தவை. நல்வினை - தீவினை என்பன பற்றிய தெளிவுடன் நன்னெறிப்பட்ட வாழ்க்கையை அமைத்துக் கொள்ளத் துணை நிற்பவை.

உயிரானது, உடலுடன் இருக்கும் போதே எய்தும் பரிபக்குவ நிலையை 'சீவன் முக்தி' என இந்தியத் தத்துவ மரபு சுட்டும். சைவசித்தாந்தம் இச்சீவன் முத்திநிலை பற்றியும் பேசியுள்ளது. சீவன் முத்திநிலை எய்தியவர்கள். ஏனைய உயிர்கள் எய்தும் 'துன்ப - துயரங்' களை நோக்கி அவர்கள் பால்மிகுந்த கருணை கொண்டவர்களாகத் திகழ்வர் எனச் சைவசித்தாந்தம் குறிப்பிடும். இதனை.

கள்ளத் தலைவர் துயர்கருதித் தங்கருணை
வெள்ளத் தலைவர் மிக

என்ற திருவருட்பயன் இவ்வடிக்குறளால் தெரியலாம். மனித நேயத்தின் உச்சநிலை இது என்பதை விளக்க வேண்டியதில்லை.

இவ்வாறு மனித மேம்பாட்டுக்குத் துணை நிற்கும் இத்தத்துவம் கொண்டுள்ள சமூகநோக்கு எத்தகையது என்பது தொடர்பாக ஒரு குறிப்பை இங்கே சுட்டுவது அவசியமாகிறது. இந்தியச் சமய தத்துவ மரபில் குறிப்பிடத்தக்க தாக்கத்தை விளைவித்து வந்துள்ள "வர்ணச்சிரதர்ம"ப் பார்வையினின்று

சைவசித்தாந்தம் விலகி நிற்க முடியவில்லை என்பது இங்கு சுட்டிக் காட்டப்பட வேண்டிய ஒன்றாகும். வர்ணப்பாகுபாடு பற்றி இத்தத்துவம் முக்கியத்துவம் தந்து பேசவில்லை என்னும் இதில் அப்பாகுப்பாட்டுக்கான அடிப்படைகள் உள்ளுறைத்துள்ளமை என்பதற்காக சான்றுகள் உள. மேற்சுட்டிய சத்ய ஜோதி சிவாச்சாரியாரின் மோட்ச காரிகை 145 ஆம் நூற்பாவில் உள.

“அந்தியமங்களிற் கூறப்பட்டுள்ள வருணாசிரம தர்மத்தைச் சைவசாத்திரம் ஒப்புக் கொள்கிறது”. என்ற கருத்தும் அருணந்தி சிவாச்சாரியாரின் சிவஞானசித்தியாரின் 275 ஆம் செய்யுளில் அமைந்த, ஞான நிட்டையடைந்தவர் நாதன் தானே” என்ற குறிப்பும் இவ்வகையில் எடுத்துக் காட்டப்படத்தக்கன இவற்றுள் இரண்டாவது சான்றின்படி ‘பரமுத்தி’ எனப்படும் நிறைவான வீடுபேறுக்கு “நற்குலப்பிறப்பு” ஒரு அடிப்படைத் தகுதியாக உள்ளமை தெரிகிறது. இங்கே குலப்பிறப்பு என்பதற்கு வருணச்சார்பிலன்றி வேறு வகையில் விளக்கம் தரவும் வாய்ப்பு உளது. எனினும் முற்று முழுதாக வர்ணச் சார்விலிருந்து சைவசித்தாந்தத்தைப் பிரித்து நோக்கமுடியும் என நாம் கருத இடமில்லை. அத்தத்துவம் உருவான கால கட்டத்தின் சமூகக் கட்டமைப்பு நிலை. சமய தத்துவ இயங்குநிலை என்பவற்றில் ஆதிக்கம் பெற்றிருந்த சாதியினரின் குறிப்பான பிராமணர், வேளாளர் ஆகியோரின் குருவாகவே இத்தத்துவம் உருப்பெற்றது என்ற வரலாற்று உண்மையை நாம் இங்கு கவனத்திற் கொள்ள வேண்டியது அவசியமாகிறது. இத்தத்துவத்தைப் பேணி வளர்ந்தோரும் அவர்களே என்பதும் வெளிப்படை. குறிப்பாக வேளாள சமூகத்தினர் வளர்த்தெடுத்த தத்துவம் இது என்பதே வரலாறு.

எவ்வாறாயினும் இத்தத்துவத்தினுடைய இன்றைய பயன்பாடு யாது? மனித மேம்பாடு பற்றிய இன்றைய தேவைகளுக்கு இது எவ்வகையில் துணைபுரியக்கூடியது என்பது எம்முன் நிற்கும் முக்கியவினாவாகும். முன்னரே சுட்டியுள்ளவாறு நல்வினை - தீவினை என்பன பற்றிய தெளிவுடன் வாழ்க்கையை நன்கு அமைத்துக் கொள்ள இத்தத்துவம் துணைநிற்கின்றது. இவற்றுக்குப் பற்றுக் கோடாகப் பரம்பொருள் பற்றிய நம்பிக்கையை முன்வைத்துள்ளது. சூழவுள்ள சமூகத்தின் மீது உயிர்கள் மீது கருணை கொள்ளத் தூண்டி நிற்கிறது. இவை எக்காலத்துக்கும் எச்சமூகத்திற்கும் ஏற்புடையவை என்பதில் கருத்து வேறுபாட்டுக்கு இடமில்லை.

சைவசித்தாந்தம் இன்றைய காலகட்டச் சமூகச் சிந்தனையுடன் எவ்வகையில் இயைபுறவல்லது என்பதை உணர்த்தும் வகையில் மார்க்சியத்துடன் தொடர்புபடுத்தி, தவத்திரு குன்றக்குடி அடிகளார் அவர்கள் தந்துள்ள குறிப்பு ஒன்றை இங்கு நோக்கலாம்.

சைவசித்தாந்தம் கடவுளை நம்புகிறது. மார்க்சியம் கடவுளை நம்பவில்லை. இ்.து ஒரு முக்கியமான வேறுபாடு. மற்றப்படி உலகத்தின் தோற்றம், வேறுபாடு, மற்றப்படி உலகத்தின் தோற்றம். உயிர்களின் நிலை, இந்த உலக வாழ்க்கை உழைப்பின் சிறப்பு, உழைப்பாளர் தகுதி ஆகியவற்றில் சைவசித்தாந்தமும் மாக்கியமும் ஒன்றுபட்டு வருகின்றன. கார்ல் மார்க்சுக்கு சைவ சித்தாந்த தத்துவத்தை அறிந்து கொள்ளும் வாய்ப்புக் கிடைத்திருந்தால் அவருடைய அணுகுமறை அல்லது தத்துவ இயலின் போக்கு அப்படி இருந்திருக்கும் என்று இன்று உய்த்துணர்ந்து கொள்ள முடியும்”.

சைவசித்தாந்தத்தின் மனித மேம்பாட்டுக்கான அடிப்படைகளைக் கொண்டது என்பதும் இவ்வகையில் இந்திய மண்ணின் ஏனைய தத்துவங்களினின்றும் இத்தத்துவம் வேறுபட்டுத் தனித்தன்மை கொண்டதகக் திகழ்கின்றது என்பதும் இவ்வாய்விலே சுருக்கமாக நோக்கப்பட்டன. சமதுவத்தில் மனித மேம்பாடு பற்றிப் பேசும் முக்கியத்துவமான மாச்சியத்துடன் தொடர்புபடுத்திச் சிந்திக்கப்படக் கூடிய நிலையில் சைவசித்தாந்தம் உளது என்பதும் உணர்த்தப்பட்டுள்ளது. எதிர்காலத்தில் இக்கருத்து நிலைகள் மேலும் விரிவும் ஆழமும் எய்தவுள்ளன என்ற நம்பிக்கையை முன்வைத்த இந்த ஆய்வுரையை நிறைவு செய்கிறேன்.

மகாசக்தி மகத்துவமலர் (1998) தழுவியது

வாகீசர் வாக்கும் வாழ்வும் நம் வாழ்வுக்குணர்த்தும் பாடம்

கோ.தர்மபாலன் B.A Dip in Edu)

சமய குரவரில் ஒருவரும் நீண்டகாலம் உயிர்வாழ்ந்து சைவத்தையும் அதன் முதற்தெய்வம் சிவனையும் போற்றி அவன் சிறப்பை, அடியார்தமை ஆட்கொள்ளும் திறத்தை, அருள் பொழியும விதத்தை வினையறுத்து முத்திக்கு வழிகாட்டும் மாண்பினையெல்லாம் தன் அருட்பாடல்களிலே மொழிந்து, மானிடர் பெற்ற இப்பிறப்பிலிருந்து வினையகற்றி முத்திநெறின்று சிவானுபவத்தை தன் வாழ்நாள் அனுபவமூடாக எமக்கு அருளிய பெருமான் திருநாவுக்கரசு நாயனார் ஆவார். இவருக்கு வாகீசர் எனும் நாமமும் உண்டு. வாக்குக்கு ஈசர் என்பதால் இப்பெயர் அவருக்குப் பொருத்தமாயிற்று.

திருமுனைப்பாடி நாட்டின் திருவாமூரில் புகழனாருக்கும் மாதினியாருக்கும் மகனாக அவதரித்தவர் தான் மருணீக்கியார் என்ற இளமைப் பெயர் கொண்ட திருநாவுக்கரசு சுவாமிகள். இவருக்கு திலகவதியார் என்ற தமக்கையாரும் இருந்தார். இறையுணர்விலே சிறந்த குடும்பத்திலே பிறந்த மருணீக்கியார் கல்வி கேள்விகளில் சிறந்து விளங்கினார். இவர் பெற்றோரின் இழப்பு, தமக்கையாரின் கணவரின் மறைவு போன்றவற்றினாலும் ஏற்பட்ட பாதிப்பினால் சலிப்படைந்தவரானார். அக்காலத்தில் வேகமாக இருந்த மறுசமய போதனைகளால் கவரப்பட்டு சமணத்திலே சேர்ந்து அச்சமய நூல்களிலே வல்லவராகி தருமசேனர் எனும் பெயருடன் சமணப்பள்ளித் தலைவராக இருந்தார். தமக்கையாரின் இரங்கலுக்கும், வேண்டுதலுக்கும் சைவத்தின் சிறப்புக்கும் தமிழ் வளர்ச்சிக்கும் தேவைகருதிய எல்லாம் வல்ல இறைவன், சூலை நோய் கொடுத்து ஆட்கொண்டு தமிழ்மாலை தான் சூடிக்கொள்ள மீண்டும் சைவனாக மருணீக்கியாரை மாற்றினான். பாமாலைத்திறன் கண்டு நாவுக்கு அரசனாக மருணீக்கியாரை மாற்றிய இறைவன் அவரூடாக பற்பல அற்புதங்களை நிகழ்த்திக் காட்டியதோடு தானே தோன்றா துணையாக நின்று அருள் புரிந்தான். சமணர்கள் நாவுக்கரசரை நீற்றறையில் இட்டபோதும், நஞ்சுணவைக் கொடுத்த போதும், யானையை ஏவி கொலை செய்ய தூண்டிய போதும், கல்லோடு கட்டி கடலில் இட்டபோதும் அவற்றை எம்பெருமான் சிவனின் அருளால் தான் வென்றதனை சிறப்பித்து தன்பாமாலைகளில் கூறியுள்ளனர். இத்தகைய திருநாவுக்கரது வாழ்வில் அவர் அனுபவத்தையும் நமக்கு இக்காலத்தில் எவ்வாறு தேவையாக உள்ளது என்பதனையும் சுருங்க நோக்கலாம்.

இன்று உலகில் பல்வேறு சமயங்களைப் பின்பற்றி வாழும் மக்கள் உள்ளனர். ஒவ்வொரு சமயத்தவர்களும் தமது சமயதாபகரை முதன்மைப்படுத்தி இறைவனை அடைவதாக கூறுகின்றன. இருப்பினும் அம்மதத்தவர் மற்ற மதத்தினரை "தம்மதமே மெய் சமயம்" என்னும் கொள்கையால் மதிக்காது அவர்களை தமது சமயத்துக்கு மாற்றிவிடுகின்ற போக்கு இப்போதும் அதிகமாக உள்ளது. தத்தம் சமயமே உயர்வானது என்றெண்ணுவது நல்லது தான். அதற்காக மற்றவர் சமயத்திலுள்ள சிலகுறைபாடுகளை பெரிதாக்கியோ அல்லது சுட்டிக்காட்டியோ வறுமை, யுத்தம், இடப்பெயர்வுகள், சாதிவேறுபாடுகள் போன்ற காரணங்களுக்காகவும் தமது சமயத்துக்கு மாற்றிவிடுகின்றனர். தற்காலத்தில் இந்நடைமுறை தனிப்பட்ட போதனைகள் நிறுவன ரீதியாக மதமாற்றங்களாகவும் காணப்படுகின்றன. எந்தமதத்தையும் பின்பற்றி ஒழுகலாம் என்பது மனித உரிமை சாசனத்தில் அடங்கும் அம்சமாக இருக்கிறது. அதனால் எந்த மதத்தையும் பின்பற்றும் உரிமை மனிதனுக்கு உண்டு. ஏனெனில் சமயம் என்பது மனிதனை மனிதனாக வாழவைக்க உருவாக்கப்பட்டது. இது உலகிலுள்ள எல்லாச் சமயங்களுக்கும் பொருந்தும். திருநாவுக்கரசரும் சமணத்தில் சேர்ந்து சமணமடாதிபதியாக கூட இருந்தவர்தான். ஆனால் தான் என்ன நோக்கத்துக்காக மறுசமயம் சென்றாரோ அங்கே தனது ஆன்மவிடுதலை, மறுஆறுதல்

பெறுவதற்கான வழிதெரியாத போது சைவத்தின் உண்மை அவருக்குத் தெரிகின்றது. சைவத்தையும் அதன் முதற்தெய்வமான சிவனையும் உணரத்தலைப்பட்டு பிற்காலத்தில் அதற்காக கழிவிரக்கம் கொள்ளுகின்ற நிலையில் காணப்பட்டார். தான் பாடிய தேவாரப் பாடல்கள் பெரும்பாலானவற்றில் இக்கழிவிரக்க நிலையை கூறியுள்ளார்.

தான் சமணத்தில் சேர்ந்திருந்த காலத்தில் வீணாக காலத்தைக் கழித்து வீணாகிப் போனேன் என்பதைத் தன் பாடல்களில் ஆங்காங்கே விரிவாகவும் கூறிச்செல்கின்ற தன்மையினைக் காணமுடிகின்றது.

முன்பெலாம் மிளையகாலம் மூர்த்தியை நினையாதோடிக்
கண்கண விரும்பினாளுநங் கருத்தழிந் தருத்தமின்றிப்
பின்பு புகலுணங்க லட்டும் பேதைமார் போன்றேனுள்ளம்
அன்பனாய் வாழமாட்டே னதிகை வீரட்டனீரே

என்று இளமைக்காலத்தில் சிவனை நினையாது சமணத்தில் அல்லலுற்றுவிட்டேன் என கூறும் நாவுக்கரசர் மேலும் பல பாடல்களில் இவ்வாறு கழிவிரக்கம

கொள்ளுவதை காணமுடிகின்றது. தான் திசைமாறி வழிநடத்துவாரின்றி பாழேபோய் கயவரோடு இணங்கி இருந்தமை பற்றி

நலக்கமே செய்து வாழ்ந்து நக்கவாறொன்று மின்றி
விலக்குவாரில்லாமையாலே விளக்கதிற் கோழியானேன். என்றும்
பள்ளியினுமுக் கூடலானைப் பயிலாதே பாழே நான் உழன்றவாறே. என்றும்
பழியுடையாக்கை தன்னிற் பாழுக்கே நீரிறைத்து . என்றும்
தலையாடங்காடன் தன்னை சாராதே சாலநாள் போகக்கினேனே. என்றும்
மாயத்தை யறிய மாட்டேன் மையல் கொண் மனத்தனாகி
பேயொத்த கூகை யானேன் . என்றும்
பற்றிலா வாழ்க்கை வாழ்ந்து பாழுக்கே நீரிறைத்தேன்
உற்றலால் கயவர் தேறா ரென்றுங் கட்டுரை யொத்தேன். என்றும்

பெரும்பற்றப் புலியூரானைப் பேசாத நாளெல்லாம் பிறவாநாளே.....” என்றும்
கூறி கழிவிரக்கம் கொள்வார் அப்பரடிகள்.

மேலும் சமணத்தில் தான் சேர்ந்திருந்து சிவனை நினையாது சமணரின் சொற்கேட்டு சிவனின் அருளை மறந்திருந்த தன்மையினை பழமொழிகளூடாக தனது பாடலில் விளக்குகின்றார்.

மெய்யெல்லாம் வெண்ணீறு சண்ணித்த மேனியான் தாள் தொழாதே
உய்யலாம் என்றெண்ணி உறிதூக்கி உழிதந்தென்னுள்ளம்
கொய்யுலா மலர்ச்சோலைக் குயில்கூவ மயிலாலும் ஆரூரைக்
கையினால் தொழாதொழிந்து கனியிருக்கக் காய்கவர்த கள்வனேனே

திருமேனியெங்கும் திருநீற்றை பூசிய சிவபிரானின் திருத்தாள்களை தொழாமல் உய்யலாம் என்று சமணத்தில் சேர்ந்து அவர்கள் முறையில் உறிதூக்கி வாழ்நாளைக் கழித்தேனே திருவாரூரில் வீற்றிருக்கும் எம்பிரானை கையால் தொழாநிலை பழங்கள் நிறைந்திருக்க புளிக்காயைப் பறித்தவன் போன்றதாகி விட்டது என்று "கனியிருக்க காய்கவர்தல்" எனும் பழமொழியுடன் விளக்குவார்.

இதே போன்று "என்பிருத்தி நரம்பு தோல் புகப்பெய்திட்டு ...." எனத் தொடங்கி "ஆரூரா முன் பிறக்கும் விதியின்றி முயல்விட்டு காக்கைப் பின் போனவாறே" என்றும்,

"பெருகுவித்தென் பாவத்தை பண்டெலாங் குண்டர் தஞ்சொல் கேட்டு" எனத் தொடங்கி "ஆரூரா அருகிருக்கும் அறமிருக்கக் மறம் விலைக்கு கொண்டவாறே என்றும்,

"குண்டனாய்த் தலைபறித்துக் குவிமுலையார் நகை நாணாதுழிர் வேளை........" எனத் தொடங்கி ஆருரரை பண்டெலாம் அறியாதே பனிநீராற் பரவை செயப் பாவித்தேனே" என்றும்,

"துன்னாக்கத் தேனாகித் துச்சாவர் சொற்கேட்டு." எனத் தொடங்கி.........." ஏதன் போர்க் காதனாய் அகப்பட்டேனே' ' என்றும், "கதியொன்றும் அறியாதே." எனத் தொடங்கி "மதியிலியேன் விளக்கிருக்க மின் மினித்தீக்காய்ந்தவாறே" என்றும்,

"பூவையாய்த் தலை பறித்துப் பொறியற்ற சமண் நீசர் சொல்கேட்டுக்..." எனத் தொடங்கி ...."பாழுரிற் பயிர்க்கம்புக் கெய்தவாறே' ' என்றும்,

ஓட்டாதவாளவுணர் புரமூன்றும் ." எனத் தொடங்கி............ "தவமிருக்க அவஞ்செய்து தருக்கினேனே' ' என்றும்,

"மறுத்தானொர் வல்லரக்கன்..." எனத் தொடங்கி ...."கண்டம் கறுத்தானை கருதாதே கரும்பிருக்க இரும்பு இரும்புகடித்தெய்தவாறே".

என்றும் சிவபிரானின் அருட்திறங்களையெல்லாம் சுட்டிக்காட்டி பழமொழிகளுடாக தான் வீணாக்கிய காலத்தை சிவனை எண்ணாத நிலையினை விளக்குவார்.

மேலும் தாம் இறைவனை சமணத்தில் இருந்த காலத்தில் எவ்வாறெல்லாம் இழிவுபடுத்தியிருக்கிறேன். அவனது அருட்திறம் தெரியாது எவ்வாறு அவனையும் சைவத்தையும் பழித்திருக்கிறேன் என்று பல பாடல்களில் வெளிப்படுத்துவார் சிவனை இகழ்ந்த தன்மையினை

"குண்டாக்க னாயன்று கையுலுண்டு
குவிமலையார் தம்முன்னே நாணமின்றி
உண்டியுந்தமனே நின்றார் சொற்கேட்டு
உடனாகி யுழிதந்தே லுணர்வொன்றின்றி
வண்டுலவு கொன்றையங் கண்ணியானை
வானவர்க ளேத்தப் படுவான் தன்னை
எண்ணிசைக்கும் மூர்த்தியாய் நின்றான் தன்னை
யேழையேனான் பண்டிகழ்ந்தவாறே' ' என்றும்,

' 'உறிமுடித்த குண்டிகைதங் கையிற்றூக்கி
ஊத்தைவாய்ச் சமணர்க்கோர் குண்டாக்கனாய்க்
கறிவிரவு நெய்சோறு கையிலுண்டு
கண்டார்க்கு பொல்லாத காட்சியானேன்
மறிதிரைநீர்ப் பவ்வநஞ்சுண்டான் தன்னை
மறித்தொருகால் வல்வினையேன் நினைக்கமாட்டேன்
எறிகெடில நாடர்பெருமான் தன்னை
யேழையே னான் பண்டிகழ்ந்தவாறே என்றும்,

' '. எறிகெடிலத்தானை இறைவன் தன்னை யேழை னான் பண்டிகழ்ந்தவாறே' '
' '. எள்கவிடு பிச்சையேற்பான் தன்னை யேழை னான் பண்டிகழ்ந்தவாறே' '
' '. இந்திரனும் வானவரும் தொழச்செல்வானை யேழை னான் பண்டிகழ்ந்தவாறே' '
' '. இருபிறப்பும் வெறுவியராய் இருந்தார் சொற்கேட்டு யேழை னான் பண்டிகழ்ந்தவாறே' '
' '. ஏறேற்க வேறுமா வல்லான் தன்னை யேழை னான் பண்டிகழ்ந்தவாறே' '
' '. எண்டிசைக்கும் மூர்த்தியாய் இருந்தான் தன்னை யேழை னான் பண்டிகழ்ந்தவாறே' '
' '. இறையானை யெந்தை பெருமான் தன்னை யேழை னான் பண்டிகழ்ந்தவாறே' '
' '. எல்லைகாண் பரியானை யெம்மான் தன்னை யேழை னான் பண்டிகழ்ந்தவாறே' '
' '. இலைமறித்த கொன்றையந்தாரான் தன்னை யேழை னான் பண்டிகழ்ந்தவாறே' '

என்றெல்லாம் கூறி கழிவிரக்கம் கொள்கிறார்.

புறச்சமயம் சாராது நாம் மெய் சமயமாகிய சைவத்தில் நின்றொழுகவைப்பதுடன் புறச்சமயத்தவரை இழிவுபடுத்தா பண்புள்ளவராக வாழ வழிகாட்டுகின்றது. தென்னாட்டுடைய சிவனே எந்நாட்டவர்களுக்கும் இறைவன் என்கின்ற மனப்பக்குவம் ஏற்பட வாய்ப்பளிக்கின்றது.

இறைவனை முற்றுமுழுதாக சரணடைந்து விட்டால் எமக்கு எவ்வித துன்பமும் இல்லை. இறைவனிடம் சரணாகதியடைய வேண்டியது அவசியம். அதற்கு நாம் நம் எண்ணங்கள் நல்லதாக உருவாக்க வேண்டும். நல்ல சிந்தனைகளை, நல்ல வார்த்தைகளை, அன்பு கருணை இரக்க சுபாவங்களை உருவாக்கிவிடின் எமக்கு துன்பமில்லை. இதற்கு இடைஞ்சலானவை எமது ஐம்பொறிகளே. இவற்றை நிலையில்லா இவ்வுலகில் உடம்பை, உலகப்பொருட்களை மெய்யென்று எண்ணாது இறைவன் மெய்யென்று நினைத்தால் நீங்கள் உய்யலாம் என நமக்கு கூறுகிறார்.

தினைதனையோர் பொறையிலா வுயிர் போங்கூட்டை
        பொருளென்று மிகவுன்னி மதியாலிந்த
அனைத்துலகமே ஆளலா மென்று பேசும்
        ஆங்காரத் தவிர் நெஞ்சே யமர்க்காக
முளைத்துவரு மதில் மூன்றும் பொன்ற அன்று
        முருகிய வெஞ்சிலை வளைத்துச் செந்தீமூழக்
நினைத்த பெருங்கருணையன் நெய்தானமென்று
        நினையுமா நினைந்தக்கால் உய்யலாமே என்று கூறுவதை நோக்கலாம். மேலும்
தான் சிவனை நினைத்துய்த நிலையினை

குலங்கெடுத்துக் கோள் நீக்க வல்லான் தன்னைக்
        குலவரையின் மடப்பாவை இடபடபாலானை
மலங்கெடுத்து மாதீர்தம் ஆட்டிக் கொண்ட
        மறையவனைப் பிறைதவழ்செஞ் சடையினானைச்
சலங்கெடுத்துதயா மூல தன்மமென்னுந்
        தத்துவத்தின் வழிநின்று தாழ்ந்தோர்க்கெல்லாம்
நலங்கொடுக்கும் நம்பியை நள்ளாற்றானை
        நானடியேன் நினைக்கப் பெற்றுய்ந்தவாறே

என சுகங்களைத் தந்து துன்பங்களை நீக்குபவனும் உமாதேவியை இடப்பக்கமாக கொண்டவனம் அடியார் மலற்களைக் கெடுத்து அருள் செய்பவனும் வேதங்களை ஓதுவபவனும் இளம்பிறையை சடாமுடியில் வைத்தவனும் கங்கையினை சடையிலே உள்ளவனுமாகிய சிவபிரான் அவனையே கதியென்று சென்று தமது தலைகளை தாழ்த்தி வணங்கி வருபவர்களுக்கு சகல சௌபாக்கியத்தை கொடுக்கிறான். அவனை, நள்ளாற்றில் உறைபவனை நான் நினைந்து உய்தேன் என்கிறார். இப்படியே பல பதிகங்களை கற்பவர்கள் காணமுடியும் இது இக்காலத்திலும் இறைவனை வழிபட்டு அவன் புகழ் பாடி நாம் உய்வுபெற முடியுமென்பதை கூறுவதாக அமைவதை காணலாம்.

சகலமும் நீயே என சரணடைய பிறவித்துயர் கெடும் நாவுக்கரசர் தன்னை பெண்ணாக உருவகித்து இறைவனுக்கு ஆட்படும் வண்ணத்தை பின்வருமாறு விளக்குகிறார்.

முன்னம் அவனுடைய நாமங் கேட்டாள்
        மூர்த்தி அவனிருக்கும் வண்ணங் கேட்டான்
பின்னை யவனுடைய ஆரூர் கேட்டான்
        பெயர்த்தும் அவனுக்கே பிச்சியானாள்
அன்னையையும் அத்தனையும் அன்றே நீத்தான்
        அகன்றாள் அகலிடத்தாள் தன் ஆசாரத்தை
தன்னை மறந்தாள் தன்னாமங் கெட்டாள்
        தலைப்பட்டாள் நங்கை தலைவன்றாளே.

இறைவனது தாளை இரண்டறக்கலக்க உயிர்கள் தம் அத்தனை பற்றுக்களையும் அகற்றி மலங்களாக நிலையிலேயே இறைதாள அடைய முடியும் எடின்பது இப்பாடலின் விளக்கமாகும். ஐம்பொறிகளால் உயிர்கள் அலைக்கப்பட்டு வினைகளை பெருக்கி அல்லலுறுகின்றன என்பதை நன்கு விளக்கி கொண்ட நாவுக்கரசர் பல பாடல்களில் பொறிவழிப் போய் சீரழியாது புலன்களை அடக்கி வாழுங்கள் என்பதையும் புலனடக்கத்தில் இறையனுபவத்தை பெறுங்கள் என தன் கூற்றாக உலகத்தவருக்கு கூறுவார்.

பழியுடையாக்கை தன்னில் பாழுக்கே நீரிறைத்து
வழியிடை வாழ மாட்டேன் மாயமுற் தெளியகில்லேன்
அழிவுடைத்தாய வாழ்க்கை ஐவராலலைக்கப்பட்டு
கழியிடைத் தோணி போன்றோர் கடவூர் வீரட்டனீரே

தோணியியக்கும் கம்பின்றி தோணி எவ்வாறு நீரில் அலைந்து திரியுமோ அதே போல் எமது வாழ்க்கை பொறி வழிபட்டு அமைய நேரிடும். எனவே இறைவனை அடைய முடியாது போகுமென இப்பாடலில் சமணத்தில் அலைந்து கெட்டதைக் கூறி விளக்குவார். அத்துடன் இறைவனை சார்வதற்கு பொறிகள் தடையானதை

ஒரு முள குட்ட மென்பது துறையுடைத்தாய்
அரைமு ழம் அதனகலம் அதனில் வாழ் முதலையைற்று
பெருமுழை வாய்தல் பற்றி கிடந்து நான் பிதற்றுகின்றேன்
கரமுகில் தவழுமாடக் கச்சியேகம்பனீரே' ' என்பார்.

அத்துடன் இறைவழிபாடு பெறவழிப்போகாது புலனடக்கம் ஏற்பட பாவம் தீரும் என்று ''குணமிலா ஐவர் செய்யும் பாவமே தீர நின்றார் பழனத்தெம் பரமனாரே'ஷ என அடித்துக் கூறுவார்.

இறைவனைச் சரணாகதி அடைந்தவர்க்கு யாதுமொரு பயமும் இல்லை. அவர்களுக்கு பக்தி வைராக்கியம் வளர்ந்து விடும். சைவத்துக்கு மாறிய பின் சிவனே சிவன் சிந்தையானாக இருந்த நாவுக்கரசரை பல்லவ மன்னன் அழைத்த பொழுது.

நாமார்க்கு குடியல்லோம் யமனை யஞ்சோம்
    நகரத்திலடர்ப்போம் நடவை யில்லோம்
ஏமாப்போம் பிணியறியோம் பணிவே மல்லோம்
    இன்பமே எந்நாளுந் துன்பமில்லை
தாமார்க்குங் குடியல்லாத் தன்மையான
    சங்கரன் நற்சங்கவெண் குழையோர் காதிற்
கோமாற்கே நாம் என்றும் மீளா ஆளாய்க்
    கொய்ம்மலர்ச்சே வடியினையே குறுகினோமே' '

என நான் அரச ஆணைக்குட்பட்டவர் எனவே இறைவனுக்காட்டப்பட்ட நாம் யாவருக்கும் உரியவரல்ல என மறுத்து கூற வைத்தது அந்த பக்தி வைராக்கியம். மேலும் யானையை நாவுக்கரசர் மேல் சமணர் ஏவியபோது நாம் இறைவனுக்குரியவர் ஒன்றுக்கு பயப்படமாட்டோம் என கூறிய பாடல் வருமாறு.

சுண்ணவெண் சந்தனச் சாந்தும் சுடர்திங்கட் சூளாமணியும்
வண்ண உரிவை உடையும் வளரும் பவள நிறமும்
அண்ணல் அரண்முர ணேறும் அகலம் வளாய அரவும்
திண்ணம் கெடிலப் புனலும் உடையாரொருவர் தமர்நாம்
அஞ்சுவதியா தொன்றுமில்லை அஞ்ச வருவதுமில்லை என்பார்.

இவ்வாறான வைராக்கிய உணர்வு எமக்கேற்படின் யாம் கோளுக்கும் பகைக்கும் எதற்குமே பயப்பட தெவையில்லை. இறைவனே எமக்கு உறுதணையானவன் ஆகிவிடுகின்றான் என்பதை நாவுக்கரசர் வாக்கு மூலம் உணரமுடிகிறது.

இறைவனுக்கு ஆட்பட்டுவிட்டால் கிடைக்கின்ற இன்பத்துக்கு அளவேது அதை சொற்களால் விளக்க முடியாது. அனுபவத்தால் தான் உணர முடியும். இறைவன் மெய்யடியார்கள் தமது அனுபவங்களைச் செல்லியிருந்தாலும் கூட அந்த சிவானுபவத்தை நாவுக்கரசர் கூறுமாற்றை நோக்கின் இறைவன் மெய்யடியார்களை தனதாக்கி அனுபவத்தை கொடுக்கின்ற போது பெற்ற அனுபவ இன்பத்தை "நினைந்துருகும் அடியாரை நைவைத்தார்......." என்ற தாண்டக அடிகள் மூலம் வாகீசர் விளக்குவார்.

நினைந்துருகும் அடியாரை நையவைத்தார்
நில்லாமே தீவினைகள் நீங்க வைத்தார்
சினந்திருகு களிற்றுரிவைப் போர்வை வைத்தார்
செழுமதியின் தளிர்வைத்தார் சிறந்து வானோர்
இனந்துருவி மணிமகுடந் தேறத்துற்ற
இனமலர்கள் போதவிழ்ந்து மதுவாய்ப்பில்கி
நனைந்தனைய திருவடியென் தலைமேல் வைத்தார்
நல்லூரெம் பெருமானார் நல்லவாறே

என்று தமக்கு கிடைத்த சிவானுபவத்தை நாவுக்கரசர் வாகீசர் விளக்குவார். இப்படியான பல அனுபவங்களை அடுக்கடுக்காக அப்பர் கூறிச் சென்றுள்ளமை அனுபவிக்கும் தோறும் நமக்கு இன்பமளிப்பவையாகும்.

சிவானுபவத்தைப் பெற்ற நாவுக்கரசர் தனக்கே இவ்வனுபவமும் கிடைத்ததென்றால் மற்றவர்களுக்கும் அது இலகுவில் கிடைக்கும் என சொல்லாமல் சொல்கிறார். அப்படியானவர்களுக்கு என்ன நேரும் என்பதை "அல்லல் தீர்க்கும்............" என்றும், "நல்லனவாயின நம்மை அடையுமே" என்றும், "அட்டமூர்த்தி அண்ணாமலை மேவிய நட்டமாடியை நண்ண நன்காகுமே" என்றும், "ஒற்றியூர் தொழ நம்வினையோயுமே" என்றும், "நம்பொன் பள்ளியுள்க வினை நாசமே" என்றும், "பரமனைத் தொழுது செல்பவர் தம்வினை தூளியே" என்றும், "சடையில் கங்கை தரித்தசதுரரை அடைய வல்லவர்க்கு இல்லை அவலமே" என்றும், பல்வேறாக கூறுவார்கள்.

மேற்சொன்னவற்றின் மூலம் தலங்கள் தோறும் சென்று தல யாத்திரை செய்வதையும் அதன் மூலம் இறை அருளையும், மன ஆறுதலையும் தெய்வ நம்பிக்கையினை வளர்க்கவும் முடியும் என்பது புலனாகின்றது. அத்தோடு இறைவனையும் காணலாம் என்கிறார். அதற்காக நாவுக்கரசர் திருச்சேத்திர கோவையை எமக்கு தந்துள்ளார். அதிலிரந்து ஒரு பாடல்.

தில்லைச் சிற்றம்பலமுஞ் செம்பொன் பள்ளி
தேவன் குடி சீராப் பள்ளி தெங்கூர்
கொல்லிக் குளிரறைப் பள்ளி கோவல்
வீரட்டங் கோகரணங் கோடிக்காவும்
முல்லைப் புறவம் முருகன் பூண்டி
முழையூர் பழையாறை சத்தி முற்றங்
கல்லில் திகழ்ச் ரார் காளத்தியுங்
கயிலாய நாதனைக் காணலாமே

திருநாவுக்கரசர் தலங்கள் தோறும் ஆண்டவனைத் தரிசனம் செய்கின்ற நோக்கத்தோடு செல்லும் போதெல்லாம் அத்தலங்களில் அவர் தேவாரப் பதிகம் பாடி சரியைத் தொண்டினை மேற்கொண்டார்.

ஆலய வீதிகளைத் தன் உழவாரத்தினாலேயே புல்பூண்டுகளைச் செருக்கி சுத்தம் செய்தார். அவர் ஆண்டவனிடமே சொல்வார். "தன்கடன் அடியேனையும் தாங்குதல், என்கடன் பணி செய்து கிடப்பதே" என்று கூறுவார். இதனைச் சேக்கிழார்

மார்பாரப் பொழிகண்ணீர் மழைவாருந்
திருவடிவும் மதுரவாக்கில்
சேர்வாகும் திருவாயில் தீந்தமிழின்
மாலைகளும் செம்பொற்றாளே
சார்வான திருமனமும் உழவாரத்
தனிப்படையும் தாமும் ஆகிப்
பார்வாழத் திருவீதிப் பணிசெய்து

பணிந்தேக்கிப் பரவிச் செல்வார்" என்பதன் மூலம் நாவுக்கரசரின் சிறப்பை விதந்துரைக்கின்றார். இவற்றின் மூலம் நமக்கு கூறப்பட்ட செய்தி ஆலயங்கள் தோறும் யாத்திரை செய்வதுடன் சுற்றாடல் ஆலயச் சுற்றாடலைத் தூய்மையானதாக வைத்திருக்க வேண்டும். தூய்மையான சூழலை உருவாக்க வேண்டும் என்பதாகும். நாவுக்கரசர் உழவாரத் தொண்டினை செய்வதோடு திருவீழிமிழலையில் பஞ்சம் வந்தபோது இறையருளால் படிக்காசு பெற்று பஞ்சம் நீக்கியமை மூலம் மனிதர்களாகிய நாமும் பஞ்சம் வறுமை நாட்டில் ஏற்படும் போது இத்தகைய அறங்களை செய்ய வழிகாட்டி நிற்கின்றார்.

நாவுக்கரசர் திலகவதியாரின் கண்காணிப்பில் வளர்ந்த போது நிலையில்லாத இந்த உலகில் நிலையற்ற செல்வங்களை பேணுவதால் எவ்வித பயனுமில்லை. எனவே இல்லாதவர்க்கு ஈந்து, அனாதைகளுக்கு உணவு, உடை கொடுத்து தண்ணீர் பந்தலமைத்தும் நிலையான செல்வந்தேட முயன்றிருக்கிறார். அதுமட்டுமின்றி சோலைகளை உருவாக்கி குளம் தோண்டியும் தம்மை அண்டிவந்தோர் உபசரித்து வேண்டுவோர்க்கு வேண்டுவன கொடுத்து நல்லறங்களைச் செய்தார். இதனைச் சேக்கிழார் பின்வருமாறு விதந்துரைப்பார்.

மாசின் மனத்துயரொழிய மருனீக்கியார் நிரம்பித்
தேசநெறி நிலியாமை கண்டறங்கள் செய்வாராய்க்
காசினிமேற் புகழ் விளங்க நிதியளித்துக் கருணையினரால்
ஆசில் அறச்சாலைகளும் தண்ணீர்ப் பந்தரும் அமைப்பார என்றும்

காவளர்தும் குளம் தொட்டு கடப்பாடு வழுவாமல்
மேவினர்கு வேண்டுவன மகிழ்தளித்தும் விருந்தளித்தும்
நாவலர்க்கு வளம் பெருக நல்கியும் நானிலத்துள்ளோர்
யாவர்க்கும் தவிராத ஈகவினைத் துறை நின்றார்' '

என்றும் கூறி எக்காலமும் மானிடராகிய நாமநல்லறங்களை செய்ய வேண்டியவர்கள் அவ்வாறு செய்வதனூடாக நாம் நிலையான செல்வமான முத்தியைப் பெறலாம் என்பதனையும் மக்கள் சேவை மகேசன் சேவை என்பது போல் எமது மனம் விரிவடைந்து இன்பநிலை பெறுவதற்கு வழிசமைக்கும் என்பதனை உணர்ந்து கொள்ள முடிகிறது.

மேலும் மண்ணாசை, பொன்னாசை, பெண்ணாசை என்கின்ற மூவாசையாலை நாம் கெட்டழிந்து போகிறோம். அத்தனை ஆசைகளையும் ஒறுத்து வெறுத்து இறைமேல் ஆசைவைத்தால் இந்த உயிர்களுக்கு எவ்வித துன்பமும் இல்லை. இதற்கு வாகீசர் வாழ்வில் அவரது தூய தன்மையினை எடுத்துக்காட்ட இறைவனே சோதனை நடத்தி அவரது உலகப்பற்றற்ற தன்மையினை எடுத்துக்காட்டினான். பூம்புகாரில்

உழவாரத்தொண்டு செய்து வரும் நாளில் பொன்னையும், மணியையும் கற்களுடன் தோன்றச் செய்ய, அதனையெல்லாம் அள்ளிக்குளத்திலேயே வீசி எறிகிறார் அப்பர். அத்துடன் விண்ணுலக மங்கையரை அவர் முன் நடமாடச் செய்து மனச்சஞ்சலம் ஏற்பட முயற்சித்த போது "பொய்மாயப் பெருங்கடலிற் புலம்பா நின்ற..............." எனும் பதிகம் பாடி சலனப்படாதிருந்தார். இவை மூவாசையறுத்து நாமும் இறைபற்றோடு விளங்கி நற்பேறு அடைய வேண்டுமென்பதை விளக்குவதாக அமைகின்றது.

இறைவன் அடியார்க்கு அடியவன் சங்கமத்தாரைப் பணிந்தால் நாமும் இறைநிலைக்கு உயர்த்தப்படுவோம் என்பது வாகீசர் வாழ்வினூடாக நாம் கற்கும் பாடம். ஞானக்குழந்தையான சம்பந்தரை திருப்பூந்துருத்தியில் சிவிகையில் தாங்கி வந்து "அப்பா எங்குற்றார்" என சம்பந்தர் கேட்ட போது "உம்மடிகன் தாங்கிவரும் சிவிகை இறக்குவித்து சம்பந்தர் வணங்க செல்ல தாம் முன்போய் சம்பந்தரை வணங்கினார். அன்றிலிருந்தே நாவுக்கரசர் அப்பரும் ஆனார். இந்நிகழ்வு பூவுலகில் வாழும் அனைவருக்குமென பணிவு, அடக்கம், பெருமையிலாத எளிமையாம் தன்மை வளர்க்கும் செய்தியாகும்.

மேலும் "சங்கநிதி பதுமநிதி........." எனும் தாண்டகத்தினூடாக நாவுக்கரசர் உலகினையும் இந்திரப்பதவியையும் அளக்க முடியாத நிதிகளையும் செல்வங்களையும் தந்தாலும் அவற்றை ஏற்கமாட்டோம். அவை அழிந்து போகக் கூடியவை. ஆனால் உடம்பெல்லாம் தொழுநோய் பிடித்தும் பசுவதைச் செய்து உண்ணும் இழிகுலத்தில் பிறந்தவராக இருந்தாலும் அவர் எம்பெருமானாகிய கங்கையை தலையிற் சூடிய சிவனின் அடியானாக இருந்தால் அவனையே சிவனாக, கடவுளாக வணங்குவோம் என்று சங்கமத்தார் வழிபாட்டின் சிறப்பினை எமக்கு கூறுகிறார்.

சைவசமயத்தவன் என்றால் என்ன அடையாளம் இருக்கும்? அவ்வடையாளங்களை கொண்டு இவன் சைவன் சிவனின் பக்தன் என்று கூற வைக்கின்றவை எவை என்றாதல் திருநீறு, உருத்திராட்சம், பஞ்சாட்சரசெபம் இவை இன்றைய நாட்களில் விரும்பி யாராவது அணிகிறார்களா? மாற்றம் இல்லை. நாகரிக மோகம், பழக்கவழக்க மாற்றம் உணவுப்பழக்க காரணமாக இவற்றை விட்டுவிடுகின்றனர் அல்லது இடையிடையே தேவைகளுக்கேற்றால் போல் பயன்படுத்துகின்றனர் இவை முற்றிலும் தவறான செயற்பாடுகளே.

நாவுக்கரசர் தன்னுடம்பில் நிலையாகவே சைவ குறிகளான இடபம், சூல இலச்சினைகளை பொறித்தருள வேண்டுமென பிரார்த்தித்து இறையருளால் "பொன்னார் திருவடிக்கு ஒன்றுண்டு விண்ணப்பம்" எனும் பதிகம் பாடி தம் மேனியிற் இவை பொறிக்கப்பெற்றவர். அவ்வாறே நாம் செயற்பட அதாவது சிவசின்னங்களை அணிவது கட்டாயம் என வலியுறுத்துவார். ஊர் என்றால் எப்படி இருக்க வேண்டும் என அப்பர் கூறுவதை நோக்கின் கோயில்கள் இருக்க வேண்டும். அங்குள்ள மக்கள் திருநீற்றை அணிந்திருக்க வேண்டும். பக்தியோடு இறைவனைப் பாடிப்பரவ வேண்டும். கோவில்கள் கோபுரங்களை உடையவாக அமைதல் வேண்டும். சிவனின் இடபக் கொடிகள் கோவில் கோபுரங்களில் பறக்கும் ஊர்களாக இருக்க வேண்டும் விருப்பத்துடன் பூசைகளின் போது வெண்சங்குகள் முழங்க வேண்டும். உண்பதற்கு முன் மலர் பறித்து இறைவனை வணங்கி மற்றவர்க்கு உணவு வழங்கி உண்ணுகின்ற மக்கள் நிறைவாக இருக்க வேண்டும். இப்படியான பல அம்சங்கள் நிறைந்தவையே ஊர்கள். இவையில்லாதவை எல்லாம் அடர்ந்த, கொடிய மிருகங்களையுடைய காடு என வாகீசர் புகலுவார்

திருக்கோயில் இல்லாத திருவிலூரும்
திருவெண்ணீறணியாத திருவிலூரும்
பருக் கோடிப் பத்திமையால் பாடலூரும்
பாங்கினோடு பலதளிகள் இல்லாவூரும்
விருப்போடு வெண்சங்கம் ஊதாவூரும்
விதானமும் வெண்கொடியுமில்லாவூரும்
அருப்போடு மலர் பறித்திட்டு ண்ணாவூரும்

அவையெல்லாம் ஊரல்ல அடவி காடே

என்று நாமும் நாம் வாழும் ஊரும் இருக்க வேண்டிய விதம் குறித்து அப்பரடிகள் கூறுவது எக்காலமும் எமக்குப் பொருத்தமானவையே. மேலும் இவ்வாறு நன்மக்களாக சிவசின்னங்களைப் போற்றாதவராக அணியாதவராக வாழ்ந்தால், வாழத்தலைப்பட்டால் என்னாவோம் என்பதனை கூறவந்த வாகீசர் பெருநோய்கள் மலியப்பெற்று பெயர்ந்தும் செத்தும் பிறக்கின்ற தொழிலுடையோராக வினைகளை வேரறுக்காது சேர்த்து துன்பப்படுவோராக இருப்போம் என

திருநாமம் அஞ்செழுத்தும் செப்பாராகில்
தீவண்ணர் திறமொருக்கால் பேசாராகில்
ஓருகாலுந் திருக்கோயில் சூழாராகில்
உண்பதன் முன் மலர் பறித் திட்டுண்ணாராகில்
அருநோய்கள் கெட வெண்ணீறணியாராகில்
அளியற்றார் பிறந்தவாறேதோ என்னில்
பெருநோய்கள் மிகநலியப் பெயர்த்துஞ் செத்தும்
பிறப்பதற்கே தொழிலாகி இறக்கின்றாரே விளக்கி

படைக்கலமாக உன் நாமத்தை என் நாவிற் கொண்டேன்.
இடைக்கலம் அல்லேன் எழுபிறப்பும் உனக்காட் செய்கின்றேன்
துடைக்கினும் போகேன் தொழுது வணங்கி தூற்றணிந்துன என்றும் கூறுவார்.

மேலும் எமது உடலால் இறைவனை எப்போதும் வணங்க வேண்டும். அவற்றை அதற்குப் பழக்கப்படுத்த வேண்டும். பொறிகளை இறைவணக்கத்திற்கு பழக்கவேண்டும். அப்படியே பழக்கிவிட்டால் நாம் பெருமையுடன் இறைவனை எம்முள்ளே இருக்கச் செய்துவிடுவோம். அந்தப் பாக்கியம் யார் பெறுவார். புலன்களை அடக்கி இறைவனை நினைக்க வழிப்படுத்தியோரே கட்டளையிடுவது போல நாவுக்கரசர் தன் உடல் உறுப்புக்களுக்கு கட்டளையிடுவது போல எம் உடல் உறுப்புக்களையும் வழிப்படுத்த கூறுகிறார்.

"தலையே! நீ தலையாலே பலி தேரும் தலைவனை வணங்கு, கண்களே! தன் எட்டுத் தோள்களையும் வீசியாடும் பிரானைக் காணுங்கள். செவிகளே! எரிபோல் சிவந்த மேனியுடைய சிவனின் திறத்தை எப்போதும் கேளுங்கள். மூக்கே! நீ முக்கண்ணாகி வாக்கே நோக்கிய மங்கைமணாளனை முரலுவாயே! நீ பேய் வாழ் காட்டகத்தில் ஆடும் பிரான்தன்னை வாழ்த்துவாய் நெஞ்சே! நீ முகில்களாடும் மலையான இமாலய அரசியான உமை மணவாளனை நினை, கைகளே! நீங்கள் கொடிய விசமுடைய பாம்புகளை அணிந்த பரமனை தொழுங்கள் என்று கூறிவிட்டு கால்களின் பயன் கோவில்களை வலம் வருதல், உடம்பின்பயன் இறைவனின் கோயிலை வலம் வந்து கைகளால் தட்டி போற்றி போற்றி என்று போற்றுவது ஆகும். எமக்கு உற்றதுணையாக எம்முயிர் போகும் போது யாருள்ளார். குற்றாலத்து இறைவரே எனவே நான் சிவனடிக்கீழ் சென்றால் அவனின் கணங்களில் ஒருவனாக பெருமையுடன் இறுமாந்திருப்பேன். அவ்வாறே நீங்களும் உங்கள் பொறிகளை அடக்கி அதுமட்டுமல்ல திருமாலும் நான்முகனும் .அடிமுடி தேடியறிய முடியாத தேவாதி தேவனை என்னுள்ளே கண்டு கொண்டதைப் போல நீங்களும் கண்டு கொள்வீர்கள் என வாகீசர் எமக்கு வழிகாட்டி கூறுகிறார். பஞ்சாத்திரத்தின் சிறப்பினையும் அது எமக்கு எவ்வாறான சிறப்புக்களை தரும் என்பதனையும் அதனை ஓதியோர் பெற்ற நன்மைகளையும் இறைவனை அடைய அது ஒரு வழியாக அமைவதனையும் துன்பங்களை நீக்கியருள் அளிக்கவல்ல தன்மையினையும் "சொற்றுணை வேதியன்........" எனத் தொடங்கும் நமச்சிவாயப் பதிகத்தினூடாக வாகீசர் தெளிவுபடுத்தி இருப்பதனை நம்வாழ்வில் கடைப்பிடிக்க வைக்கும் பேறாக அமையும்.

மனத்துள்ளே சிவனைக் காணும் பாக்கியம் கிடைத்துவிட்டால் அவன் திருவுரு எந்நேரமும் நம்சிந்தனையுள் இருக்கும். நாவுக்கரசர் இறைவனது திருக்கோலங்கள் பலவற்றை கண்டவாறு கூறியுள்ளார்.

இறைவன் உள்ளத்திருந்த போதும் திருக்கோலங் காட்டிய போதும் சித்தம் சிவாயநம எனும் பஞ்சாரத்தை ஓதும் நிலையில் இருந்ததாக வேண்டும். இல்லையெனில் இறைவன் அருள் பெறமுடியாது என்று கூறியுள்ளார்.

வைத்தபொருள் நமக்காமென்று சொல்லி மனத்தடைத்துச்
சித்தமொருக்கிச் சிவாயநமவென் றிருக்கினல்லால்
மொய்த்த கதிர்மதி போல் வாராவர் பாதிரிப்புலியூர்
அத்தனருள் பெறலாமோ அறிவிலாப் பேதை நெஞ்சே' '

நமக்கு விளக்கக் கூறுவார்.

இனி பெறற்கரிய முத்தி பெறுவதற்கு நாம் முயலவேண்டும் இறைபாதம் இறங்கி விண்ணப்பிக்க வேண்டும்.

திருக்கா அமணர்தந் தீநெறிப்பட்டு திகைத்து முத்தி
தருந்தாளிணைக்கே சரண் புகுந்தேன்.

எனக் கூறும் அப்பரடிகள் தன்னை இறைவன் இனி கைவிடமாட்டான். ஏனென்றால் நான் அவனைச் சரணடைந்துவிட்டேன். அதுமட்டுமின்றி என் பிறப்பினையும் கட்டுறுத்து விட்டான். இப்போது சிவலோகத்தில் என்னை இருத்திவிடும் என்று உறுதிபட கூறுவார்.

தன்னைச் சரணென்று தாளடைந்தேன் அடியடையப்
புன்னைப் பொழில் புகலூரண்ணல் செய்வன கேண் மின்களோ
என்னைப் பிறப்பறுத்தென் வினை கட்டறுத்தேழ் நரகத்
தென்னைக் கிடக்கவொட்டான் சிவலோகத்திருந்திடுமே' '

என்று விரிவு படக்கூறும் அப்பரடிகள் இனிமேல் எனக்கு பிறப்பிருக்குமானால் உன்னடி மறவாத பேறைத்தரவேண்டும் என வேண்டுகின்றார்.

புழுவாய்ப் பிறக்கினும் புண்ணியா என்மனத்தே
வழுவாதிருக்க வரம் தரவேண்டும் .
கருவாய் கிடந்துன்கழலே ......

தருவாய் சிவகதி நீபாதிரிப்புலியூர் அரனே எனவும் வேண்டுவோர்

அவ்வாறு நாமும் இறைவனை வேண்டி முத்தியடையும் பேற்றை தவறவிட்டால் தீநெறிப்பட்டலைந்து பிறப்பெனும் சக்தியுள் மூழ்கி விடுவோம் என்பது எமக்கு இட்ட கட்டளை போலும்.

ஈரேழு பதின்னான்கு உலகங்களையும் படைத்தும் காத்தும் அழித்தும் அதன் உள்ளும் உயிர்களுள்ளும் கலந்து நிற்கின்ற பரம்பொருளை கன்னாரக் கண்ட அடிகளார் இறைவனது வியாபகத்தை.........

இருநிலனாய் தீயாகி நீருமாகி இயமான னாயெறியும் காற்றுமாகி
அருநிலைய திங்களாய் ஞாயிறாகி ஆகாச மாயட்ட மூர்த்தியாகிப்
பெருநலமுங் குற்றமும் பெண்ணும் ஆணும் பிறருருவுந் தம்முருவுந்தாமே
நெடுநலையாய் இன்றாகி நாளையாகி நிமிர் புன்சடையடிகள் நின்றவாறே' '

எனக் கூறி அத்தகையவனை தொழுதேத்தும் போது வினைகளை அறுத்து இன்பந்தழைக்க இருக்கலாம் என்பதனை எமக்கு

நன்று நாள் தொறும் நம்வினை போயறும்
என்றும் இன்பந் தழைக்க இருக்கலாம் :'

எனவே இறைவனை தொழுது ஏத்துங்கள் எனக் கூறுவார்கள்.

மேலும் அவர் இப்பிறவியாகிய மானிடப்பிறவி நமக்கு கிடைத்தற்கரியது. இந்த பிறவியிலேயே நாம் பல நல்ல காரியங்களை செய்து உய்தி பெறவேண்டும். எனவே பிறப்பறுக்கும் எம்பெருமானை காணுவதாக இருந்தால் மறுபிறவியிலும் மானிடாராக அவதரிக்க வேண்டும் என்று வேண்டுவார். இது நமக்கு கூறும் செய்தி விலங்குகளாலோ பறவைகளாலோ பகுத்து நன்மை தீமைகளை அறிய முடிகின்றது. மனிதனுக்கு இது இயலும். எனவே நன்மைகளை அறங்களை செய்யும் கருவியாக மனிதபிறவி எமக்கு உதவும் அத்துடன் செய்யும் கருவியாக மனிதப்பிறவியை தரவேண்டும் அவனது திருக்கோல அழகை காண்பதற்கே என்பதனை

குனித்த புருவமுங் கொவ்வைச் செவ்வாயிற் குமின்சிரிப்பும்

பனித்த சடையும் பவளம் போல் மேனியிற் பால்வெண்ணீறும்

இனித்தமுடைய எடுத்த பொற்பாதமும் காணப்பெற்றால்

மனித பிறவியும் வேண்டுவதே இந்த மாநிலத்தே என விளக்குவார்.

இனி மனிதபிறவி வாய்த்துவிட்டதால் அவனுக்கே ஆட்பட்டு இருப்பதை விட வேறு வேறு நமக்கில்லை என்பதனை பின்வருமாறு விளக்குவார்.

வாய்ந்தது நந்தமக்கீதோர் பிறவி மதித்திடுமின்

பார்ப்பதற்குப் பாசுபதமருள் செய்தவன் பத்தருள்ளீர்

கோத்தன்று முப்புரந் தீவினைத் தான் தில்லை அம்பலத்துக்

கூத்தனுக் கட்டுப்பட்டு இருப்பதன் றோநந்தங் கூடைமையே

என்று இப்பிறவி வாய்த்ததை பெருமையாக எண்ணி இறைவனுக்கு ஆட்பட்டுள்ளேன் எனக் கூறுவதன் மூலம் மானிடர்கள் ஒவ்வொருவருக்கும் இது இயன்றதே என்பதை கூறிநிற்கின்றார்.

வாகீசப் பெருமான் மானுடராகிய எமக்கு நாம் எவ்வாறு இறைவனை அடையலாம் அதற்கான வழிகள் நாம் இலகுவாக செய்ய கூடிய இறை தொண்டுகள் அறங்கள் என்பவற்றை தன்வாழ்நாள் அனுபவங்களுடாக எமக்கு தந்து எம்மை நன்நெறிக்குட்படுத்துகின்றார். அவர் நாம் நிலையான இன்பத்தைப் பெற சரியை தொண்டை செய்து உய்யுங்கள்.

நிலைபெறுமாறு எண்ணுதியேல் நெஞ்சே நீவா

நித்தலுமெம் பிரானுடைய கோவில்புக்கு

புலர்வதன் முன் அலகிட்டு மெழுக்கு மிட்டுப்

பூமாலை புணர்ச்தேத்திப் புகழ்ந்துபாடி

தலையாரக் கும்பிட்டுக் கூத்துமாடி

சங்கரா சய சய போற்றி போற்றியென்று

அலைபுனல் சேர் செஞ்சடையெம் ஆதியென்றும்

ஆரூரா என்றென்றே அலறா நில்லே" என எமக்கு கூறி நிற்கின்ற தன்மைக்கமைய நாமும் இறைவனைச் சைவ முழுமுதலான சிவனை என்றும் தொழுது வினையகற்றி நல்வாழ்வு வாழலாம் என்பது உறுதியானதாகும்.

கூடிகூடிஇன்பமே சூழ்க எல்லோரும் வாழ்க

என் கடன் பணி செய்து கிடப்பதே

திரு. ஏரம்பமூர்த்தி செல்வகுமாரன் (B.Ed)

"என்ன புண்ணியம் செய்தனை நெஞ்சமே" எனும் அப்பர் வாக்கிற்கிணங்க சிவனாலயங்களிலே ஆறாவது ஈஸ்வரம் என எல்லோராலும் போற்றத்தக்கதாக அமைந்த ஆலயம் தான் வவுனியா கோயில்குளம பகுதியில் எழுந்தருளி இருக்கும் அகிலாண்டேஸ்வரி சமேத அகிலாண்டேசுவரர் திருக்கோயில் ஆகும். இவ்வாலயத்தின் வரலாறுகளையும் அதன் மகிமைகளையும் இம்மலரில் பல அறிஞர்கள் எடுத்துரைத்திருக்கின்றனர்.

1996ம் ஆண்டு குடமுழுக்குச் செய்யப்பட்டு வெளியிடப்பட்ட சிவதத்துவமலர் இவ்வாலயம் என்றும் காணாதவாறு மகா மகா கும்பாபிஷேக விழாவை சிறப்பாக நடாத்தி பத்தாயிரத்தி எட்டு (10008) சங்காபிஷேக நிகழ்வுடன் மண்டலாபிகே பூர்த்தி விழாவில் இரண்டாவது சிவதத்துவ மலரை வெளியிட திருவருள் கூடியுள்ள வேளையில் எனது உள்ளத்திலிருந்து எழும் சில கருத்துக்களை சமர்ப்பிக்கின்றேன். இக்கோயில் திருப்பணிகளை நினைவு கூறுவதிலும் அடியேனும் கோயில் திருப்பணிகளை செய்வதற்கு வழிநின்ற கோயில் அறங்காவலர் சபையினருக்கும் முதற்கண் எனது உள்ளம் கனிந்த நன்றிகள்.

இவ்வாலயத்தின் மகிமையின் சிறப்பு என்னவெனில் சமயப்பணியோடு கூடிய சமூப் பணிகளை செய்து வருவதே ஆகும். ஆண்கள், பெண்கள் என இருபாலருக்கும் தனித்தனியே இரு காப்பரண்களை அமைத்து அதற்கு பொருத்தமாக "அருளகம்" என பெயரிட்டு தாய், தந்தையரை அல்லது தாயை மட்டும், தந்தையை மட்டும் இழந்து தமது எதிர்காலத்தை திட்டமிட முடியாத நிலையில் தவித்து நிற்கும் குழந்தைகளை சிறுவர் பாதுகாப்பு நிறுவனங்களின் ஊடாக எடுத்து வளர்த்து வருவதோடு மட்டும் இன்றி அவர்களிற்கு தேவையான அடிப்படை தேவைகளை பூர்த்தி செய்து வருகின்றனர்.

இச்சிறார்கள் வளர்க்கப்பட்டு 16 அல்லது 18 வயதை பூர்த்தி செய்தபின் அவர்களின் உறவினர்களை தேடி அவர்களிடம் மீண்டும் ஒப்படைக்க வேண்டிய கடமை பாடும் ஒன்று உண்டு இதுவே சிறுவர் பாதுகாப்புச் சட்டமும் எடுத்துரைக்கின்றது. எனவே இவ்வாலயத்தை நாடி தமது எதிர்காலத் தேவைகளை பூர்த்தி செய்ய முடியாத ஆண் பெண் இருபாலரையும் அரவணைத்து அவர்களுக்கு வேண்டிய உணவு, கல்வி, மருத்துவவசதி, பாதுகாப்பு என்பனவற்றை பல சிரமங்களின் மத்தியில் அறங்காவலர்கள் செய்து வருவதை யாரும் மறுக்கமுடியாது. அதுமட்டுமின்றி இங்கு வாழும் பெண் குழந்தைகளில் திருமண வயதை அடைந்த பெண்களுக்கும் திருமண நிகழ்வுகளையும் நிறைவேற்றி வருகின்றனர். அந்த வகையில் எமது ஆலயத்தில் மிகவும் சிறப்பாக நீதிபதியின் தலைமையில் திருமண நிகழ்வு நடைபெற்றது குறிப்பிடத்தக்க விடயமாகும்.

எதிர்காலத்தில் முதியோர் காப்பகம் அமைத்து தமது பிள்ளைகளால் கைவிடப்பட்ட முதியோர்களின் தேவைகளையும் பிள்ளைகள் இல்லாத முதியோர்களின் தேவைகளையும் நிறைவு செய்வதற்காக முதியோர் காப்பகம் அமைக்கப்பட உள்ளது. இச்சமூகப்பணியும் சிறப்பாக நடைபெற இறைவனின் ஆசினை வேண்டி நிற்பதோடு மட்டுமின்றி இச்சமூகப்பணியை சிறப்பாக செய்து முடிக்க சகலரின் பூரண ஒத்துழைப்பையும் எதிர்பார்த்து காத்திருக்கும் அறங் காவலருக்கு தம்மால் முடிந்த உதவிகளை செய்தருளுவதோடு மட்டுமின்றி அவர்களிற்கு நல்ல உள்ளத்தையும் உடலாரோக்கியத்தை வழங்க வேண்டும் என இறைவனை வேண்டுகிறேன். இப்பணிகளை செய்து வருவதென்பது மிகவும் இலகுவான காரியமல்ல.

சமயப் பணியை எடுத்து கூறினால் இவ்வாலயமானது குறுகிய காலத்தில் சகல பரிவாரங்களுடன் அமைந்த கோயில்களை அமைத்து மூன்று காலம் பூசையை சிறப்பாக நடாத்தி சிவனுக்குரிய சிறப்பான தினங்களையும் அம்பாளுக்குரிய சிறப்பான தினங்களையும் உதாரணமாக தைப்பூசம், மகா சிவராத்திரி, பங்குனி உத்திரத்தில் தீர்த்த திருவிழாவுடன் கூடிய திருவிழாவையும், பிரதோஷம், சோமவாரம், நடேசர் அபிஷேகம், ஆடிப்பூர தீர்த்தத் திருவிழாவுடன் கூடிய அம்பாளுக்குரிய திருவிழாவையும் எடுத்து வருகின்ற வேளையில் அமிர்தவாஷினி எனும் புதிய தீர்த்தத் தடாகத்துடன் கூடிய இனிவரும் காலங்களில் அதன் திருவிழாவையும் கொண்டாடவிருக்கும் இவ்வாலயம் ஆறுகாலப் பூசையை சிறப்பாக செய்வதற்கு அந்தண சிவாச்சாரியார்களின் உதவியுடன் செய்வதற்கு திருவருள் கூடியுள்ளது. இப்பணியை செய்து முடித்த சகல சிவனடியார்களை இந்த இடத்தில் நினைவு கூறவேண்டிய கடமைப்பாடு ஒன்றும் உண்டு. தமது இறைபணியில் இறைவனோடு இரண்டறக் கலந்து இறைபதம் அடைந்த அடியவர்களையும் அவர்கள் செய்த அறப்பணி சமூகப்பணிகளை யாரும் மறைக்க மாட்டார்கள். அதுமட்டுமின்றி அமுதசுரபி அன்னதான மடத்தில் மகேஸ்வர பூசை என கூறப்படும் அன்னதான நிகழ்வும் குறைவின்றி திறம்பட நடாத்தி வருகின்ற வேளையில் சித்திராபருவம் மறுநாள் இறைபதம் அடைந்த அறங்காவலர் சபை உறுப்பினர் அமரர்.காளிமுத்து கணேஷ் அவர்களின் இழப்பு பெரும் கவலைக்குரியதாகும் இருந்தாலும் இப்பணி சிறப்பாக நடந்தேறி வருகின்றது.

இலங்கையில் 33 குண்ட மகா கும்பாபிஷேகம் 4ஆவது தடவையாக ஆகம விதிகளுக்கமைய அதன் யாக சாலைகளை அமைத்து இறைவனால் வகுக்கப்பட்ட நான்கு வேதங்களையும் ஓதக்கூடிய வல்லமை படைத்த அந்தண பெருமக்களை இந்தியாவிலிருந்து அழைத்து அத்தோடு ஈழத்திலுள்ள பல சிவாச்சாரியார்களின் உதவியுடன் நடந்தேறிய கும்பாபிஷேக பெருவிழா சிறப்பாக நடைபெற பேருதவிகளையும் பண உதவிகளையும் சரீர உதவிகளையும் வழங்கிய அனைத்து அடியார்களையும் கும்பாபிஷேக குழுவினர் என்ற சார்பிலும் இந்நூலை தொகுத்து வெளியிடுவதில் உதவி புரிபவன் என்ற சார்பிலும் நன்றி கூறுவதில் கடமைப்பாடு உடையவனாக உள்ளேன்.

மிகவும் குறுகிய காலத்தில் 2008 ஆம் ஆண்டு பங்குனி உத்தரத்துடன் சிவன் திருவிழாவை தொடர்ந்து அடுத்த ஆனி உத்தரத்தில் அதன் அடுத்த பன்னிரண்டு வருட பூர்த்தி கும்பாபிஷேக விழாவை செய்ய வேண்டும் என திடசங்கர்ப்பம் பூண்டு மிகவும் குறுகிய காலத்தில் பாலஸ்தாபனத்தை செய்து ஆலய திருத்த வேலைகளை செய்தது மட்டுமின்றி சபை, பள்ளியறை பஞ்சலிங்கம், பஞ்சமுகலிங்கம், நால்வர், சூரிய, சந்திரர், பாலமுருகன் எனப் புதிய பரிவார மூர்த்திகளுக்கான ஆலயங்களை மிக குறுகிய காலத்தில் அமைத்துத்தந்த சிற்பாச்சாரியார்களையும் இவ்வாலயம் புத்தப்பொலிவுடன் விளங்கக்கூடிய வகையில் வர்ணந்தீட்டிய ஓவிய கலைஞர்களுக்கும், மின் அலங்காரங்களை செய்து தந்த தொழிநுட்ப வல்லுனர்களையும் பாராட்டி மகிழ்கின்றேன்.

அருள் மொழிகள்

- *பலவீனம் துயரத்தை கொடுக்கும்.*
- *தீய எண்ணம் உடலை வருத்தும் நோய்க்கிருமி.*
- *மேலான சிந்தனைகளின் சாரத்தையே நாம் கடவுள் என்கின்றோம்.*
- *அன்பு எதையும் சிறுமைப்படுத்துவதில்லை.*
- *பிறந்தவை அனைத்திலும் சமயமே உயர்ந்த குழந்தை.*
- *துறவியின் காவி உடை சுதந்திரத்தின் அடையாளம்.*

தெய்வ சங்கற்பம்

திரு. இரா. லோகநாதன

கௌரவ நிர்வாக உத்தியோகத்தர்

அருள்மிகு அகிலாண்டேஸ்வரி சமேத அகிலாண்டேசுரர் திருக்கோவிலில் நான் கடமையேற்கவேண்டிய நிகழ்வை ஒரு தெய்வ சங்கற்பமாகவே நான் கருதுகிறேன். இந்நிகழ்வுக்கு முன்னோடியாக, கொழும்பு மாநகரத்திற்கு வவுனியா கோவில்குளத்திலிருந்து ஒரு வைபவத்தில் கலந்து கொள்வதற்காக ஒரு குழுவினர் புறப்பட்ட வாகனத்தில் நானும் சேர்ந்து கொண்டேன். சந்தர்ப்பவசமாக, முன் ஆசனத்தில் எனக்கு பக்கத்தில் மேற்படி திருக்கோவிலின் அறங்காவலரும், கௌரவ செயலாளருமான சிவபூஜா துரந்தரர் கௌரவ ஆ.நவரத்தினராசா அவர்கள் உடன் இருந்தார். அவருடன் இத்திருக்கோவிலின் முதலாவது கும்பாபிஷேகம் நடைபெற்ற காலத்தில் இருந்தே நான் அறிமுகமாகி இருந்தபோதிலும், அவருடன் கருத்துக்கள் பரிமாறிக்கொள்ளும் அளவிற்கு பரிச்சயம் இருந்ததில்லை. எமது பிரயாணம் ஆரம்பமாகிய சிலநிமிட நேரத்தில் ஆரம்பமான எமது உரையாடல், உலகியல், அரசியல் ஆகிய கட்டங்களைத்தாண்டி ஆத்மீகம், திருக்கோவில்களின் சமயப்பணிகள், திருக்கோவில்களின் ஆகம விதிகள் பேணப்படும் முறைகள் நிர்வாகநடைமுறைகள் பற்றிய உரையாடலாக விரிவடைந்து எட்டுமணித்தியாலப் பிரயாணம் மிகவும் சுவாரஸ்யமாகவும், பயனுள்ளதாகவும் அமைந்தது. அதேபோலவே வவுனியா திரும்பிய எட்டு மணிநேரப்பிரயாணத்தின்போதும் தொடர்கதையாகவே எமது அனுபவங்களை பரஸ்பரம் பகிர்ந்துகொள்ளும் உன்னத வாய்ப்பாகவே அப்பிரயாணம் அமைந்தது.

சில நாடகளில் திருக்கோவிலின் தலைவரும் அறங்காவலர் சபைத்தலைவருமான அமரர் இ.சண்முகம் அவர்கள் என்னை சந்திக்கவிரும்புவதாக எனக்கு அழைப்பு விடுக்கப்பட்டபோது, கோவில்வளாகத்தில் அவரையும் செயலாளரையும் சந்தித்தேன். கோவில் நிர்வாகத்திற்கு உதவியாகவும், ஆலோசனைகள் வழங்கவும் என்னைக்கேட்டுக்கொண்டார்கள். நானும் மனமுவந்து அப்பணியை ஏற்றுக்கொள்ள சம்மதித்தேன்.

அவ்வேளை தலைவர் அமரர் சண்முகம் அவர்களே திருக்கோவிலின் நிதி நிர்வாகத்திற்குப் பொறுப்பாளராக இருந்தார். நான் அவரது உதவியாளராகக் கடமையேற்றேன். கடமைகளை ஆற்றுவதில் அவர் ஒரு கர்மயோகி திருக்கோவிலுக்கு ஒரு சதம்தானும் விரயம் ஏற்படாதவாறு நடந்துகொள்வதில் அவர் மிகவும் கண்டிப்பானவர். திருக்கோவிலின் முன்னேற்றத்திற்காக, நீண்ட கால பயனுள்ள திட்டங்களை மனதிலே சுமந்துகொண்டு, அவற்றை படிப்படியாக நிறைவேற்ற தானே முன்னின்று உழைத்த ஒரு கனவான். அவருக்கு உறுதுணையாக திருக்கோவில் அறங்காவலர்களும், நிர்வாகிகளும் அவரது திட்டங்களை அடிபிசகாமல் பின்பற்றிவரும் காரணத்தினால்தான் கடந்த 12 வருடங்களில், திருமண மண்டபம், சிறுவர்களுக்கான அருளக இல்லம், பிரமாண்டபமான திருக்குளம், இரண்டாவது திருமண மண்டபம், சிறுமியர் குழுந்தைகளுக்கான இல்லம் என பலகோடிக்கணக்கான ரூபாய் செலவில் கட்டுமானங்கள் நிமிர்ந்து நிற்கின்றன. மிகவும் குறுகிய காலத்தில் சமய, சமூகப்பணிகளில் அசுர சாதனை படைத்து முத்திரை பதித்த ஒரு திருக்கோவிலை இலங்கைத்தீவில் எங்கும் காணமுடியாது. அதற்கான கௌரவம் முன்னின்று உழைத்துவரும் நிர்வாகிகளை சார்ந்ததாயினும், அதற்கு மேலாக தோன்றாத்துணையாக சகலரையும் வழிநடத்தி திருக்கோவிலின் தேவைகளை நிறைவு செய்துகொள்ளும் இறைவனையும், இறைவியையும் மானசீகமாக வாழ்த்தி வணங்குவோம்.

தலைவர் அமரர் இ.சண்முகம் அவர்களுக்கு உதவியாக கடமைபுரிய ஒரு வாய்ப்பு எனக்கு ஏற்பட்டது ஒரு தெய்வ சங்கல்பம். அவரது திடீர் மறைவிற்குப்பின் அவரது பணிகளை ஏற்று கொண்டு நடத்தவேண்டிய கட்டாயம் எனக்கு ஏற்பட்டதும் ஒரு தெய்வ சங்கல்பம். தற்போதைய தலைவர், செயலாளர், பொருளாளர், நிர்வாகிகளுடன் கடமையாற்றக்கிடைத்த வாய்ப்பும் ஒரு தெய்வசங்கல்ப்பம். குறிப்பாக அமரர் கா.கணேசன் அவர்கள் திருக்கோவிலின் அன்றாடதேவைகளை பூர்த்தி செய்வதில் ஒரு கடமைவீரன். விரல்நுனிகளில்

விபரங்களை வைத்துக்கொண்டு, எதிர்வு கூறும் ஆற்றல் அவருக்கே உரித்தான ஒரு பாணி. வெட்டி ஒட்டினால்போல், பிசுறுகள் இல்லாமல் கணக்குகளை சமர்ப்பித்து எனது வேலைப்பழுவைக் குறைக்க உதவிய உற்ற நண்பன். நிறைந்த ஒரு நாளில் இறைவன் அவரை தன்னிடம் அழைத்துக்கொண்டு ஒரு வெற்றிடத்தை உருவாக்கியதும் ஒரு தெய்வசங்கல்பம்.

நாயன்மார்கள் இருந்தார்கள். இறைவனால் எத்தனையோ சோதனைக்கும், வேதனைக்கும் உட்படுத்தப்பட்டார்கள். அவர்கள் இறைவனைக்கண்குளிரக்கண்டார்கள். உரையாடினார்கள், ஆட்கொள்ளப்பட்டார்கள். இறுதியல் மீண்டும் பிறவாத முக்திநிலை அடைந்தார்கள். அந்தநிலையை அவர்கள் அடைவதற்கான மனப்பக்குவத்தை இறைவனே அவர்களுக்கு வழங்கினார். ஆனால் இக்கலிகாலத்தில் பலவிதமான ஆசாபாசங்களால் கண்டுண்டு கிடக்கும் எமக்கு மனப்பக்குவத்தை இறைவன் கொடுக்காதபடியால் நாம் இறைவனை காணமுடியவில்லை, அவருடன் உரையாட முடியவில்லை. "நான் இறைவனுக்கு சற்றும் குறைந்தவனல்ல'' என்ற எண்ணம் கொண்டவர்களும் நம்மிடையே வாழத்தான் செய்கின்றார்கள்.

வீட்டுக்கூரையினூடாக வரும் சூரியஒளிக்கதிரை நாம் உற்றுப்பார்த்தால் அதில் கோடிக்கணக்கான தூசித்துகள்கள் அசைவது தெரியும். அதில் ஒரு தூசித்துகள்தான் ஒரு மனிதனின் பிரமாணம். ஆகவே இறைவனின் பிரமாணத்தை கற்பனை பண்ணுவதே அப்பட்டமான அறிவீனம்.

ஆகவேதான் திருக்கோவிலுனுள் வந்தவுடன் நாம் இறைவனிடம் சரணாகதி அடைவதாக பாவனை செய்து இரண்டு கைகளையும் தலைமேல் உயர்த்துகின்றோம். மனம் இறைவனிடம் சரணாகதி அடையாமல் கைகளை மட்டும் உயர்த்துவது வெறும் சம்பிரதாயமே.

இறைவனை நாம் காணமுடியாவிட்டாலும் அவரோடு நாம் கதைக்கமுடியாவிட்டாலும், அவர் தனக்கு பிடித்தமானவற்றையும், ஒவ்வாதவற்றையும் வெளிப்படுத்தும் நிகழ்வுகளை நிகழ்த்திக்கொண்டே இருக்கின்றார். அவற்றை நாம்தான் புரிந்து செயற்பட வேண்டும். புரியாமலிருப்பதும். அவற்றிற்காக வியாக்கியானங்கள் கொடுத்து தப்பிக்கமுயல்வதும் இறை நிந்தனையாகும். எனது அன்றாட கடமையின் பல ஆர்வபூர்வமான அனுபவங்களை நான் சந்தித்திருக்கின்றேன்.

இத்திருக்கோவில் நிர்வாகம் மேற்கொண்ட பல கட்டுமானப்பணிகளில், பணக்கொடுக்கல்வாங்கல்களில் நேரடியான பொறுப்பில் நான் இருந்தேன். "கூலியாட்களின் வியர்வை காயுமுன்னே அவர்களின் கூலியை கொடுத்துவிடு'' என்ற அடிப்படையில் தினமும் அவர்களது கூலியை கணக்குப்பார்த்துக் கொடுத்துவிடுவது எனதுவழமையானபணி அக்கட்டுமானப்பணிமுடியும்வரை எதுவிததளம்பமும் இல்லாமல் பணப்புளக்கம் என்னிடம் இருந்துவந்தது. குறித்த கட்டுமானப்பணி முடிந்தவுடன் என்னிடம் பணப்புளக்கம் திடீரென குறைந்துவிடும் இந்த புரியாதபுதிர் என்னை வியப்பில் ஆழ்த்தியதுண்டு. இறைவனின் திருப்பணிகளை இறைவனே தொடக்கிவைத்து அதற்குத்தேவையான நிதிவளத்திற்கு அவரே வழிவகுத்து, திருப்பணி முடிவுற்றதும். உடனடியாகவே நிதிவழங்கலை நிறுத்திவிடும் அற்புதத்தை இத்திருக்கோவிலில் நான் அனுபவித்ததுண்டு. ஒருமுறையல்ல, ஒவ்வொரு கட்டுமானப்பணி தொடங்கிமுடியும்வரை இதேஅனுபவத்தை நான் பெற்றதை, வியப்புடன் அறங்காவலர்களிடம் தெரிவித்து மகிழ்ந்துள்ளேன்.

இறைவன் அடியார்களுக்கு சோதனை வைத்து மகிழ்வதிலும் கைதேர்ந்தவர். திருக்கோவில் தென்பகுதியில், பிரமாண்டமான புஸ்கரணி (திருக்குளம்) அமைந்துள்ளது. பெரும் எடுப்பில் பாரிய இயந்திரங்கள் மூலம் மண் அகழ்வுப்பணிகள் ஆரம்பமாகி கருங்கல் பூமி தென்பட்டவுடன், பாரிய கருங்கற்கள் இயந்திரங்கள் மூலம் தோண்டி எடுக்கப்பட்டன. தண்ணீர் வருவதற்கான சுவடுகளே தென்படவில்லை தொடர்ந்து வெடிவைத்து கருங்கல் பாறைகள் தகர்க்கப்பட்டன. அப்படி இருந்தும் தண்ணீர் தென்படவில்லை, சற்று மனம் சோர்வுற்றிருந்த செயலாளர் திரு.ஆ.நவரத்தினராசா அவர்களிடம் இதுபற்றி சிலர் வினவியபோது? "இறைவனின் தேவைக்காகவே இத்திருப்பணியைத் தொடங்கினோம் இன்னும் இரண்டு அடியில் தண்ணீர் காணாவிட்டால் குப்பை போட்டு மூடுவதைதவிர வேறுவழியில்லை. இறைவனின் சித்தம் எப்படியோ?'' என்று மனவேதனையுடன் கூறினார். என்ன அற்புதம்! இரண்டு அடி தோண்டியவுடன் தண்ணீர் தென்பட்டது. இப்பொழுது, கோடைகாலத்திலும் 18 அடி ஆழத்தண்ணீர் புஸ்கரணியில் உள்ளது.

இறைவன் தினமும் அற்புதங்களை நிகழ்த்திக்கொண்டே இருக்கின்றார். அவற்றை எம்மால்தான் புரிந்து கொள்ளமுடிவதில்லை.

சுபம்

பக்தி

திருமதி. தை. செல்வரட்ணம்
முன்னால் ஆசிரியை

நம் காரியங்கள் அனைத்திற்கும் பலன் தருகின்ற அகிலாண்டேஸ்டவரரை பக்தி பண்ணப் பண்ண அதற்குப் பலனாக மேலும் அவரை நெருங்கும் அருகதையை நமக்கு அருள்பாலித்து விடுவான்.

நாம் அவனை ஆராய்நது பார்க்க வேண்டாம் அவனே நமது பக்திக்கு இரங்கி தனது இயல்பைப் புலப்படுத்துவான்.

இறைவனை நாடுவதற்கு ஏழ்மை தடையாக இருக்க முடியாது ஏழைகளான பல பக்தர்கள் உன்னதமான வாழ்க்கையை வாழ்ந்து காட்டியிருக்கிறார்கள். ஏழ்மையில் தான் பக்தியுணர்வு அதிகமாகும். பக்திக்குப் பணம் தேவையில்லை.

சில சமயங்களில் அது தடையாகக்கூட இருக்கிறது. பணத்தினால் ஏற்படக்கூடிய வசதிகள் மனதைக் கெடுக்கும். ஏழைகள் மனதை கட்டுப்படுத்துவது எளிது. பூஜை புனஸ்காரம் என்று ஆடம்பரம் எதுவும் வேண்டாம். காலையில் எழுந்ததும் ஒரு நிமிடம் படுக்கப் போகுமுன் ஒரு நிமிடம் இறைவனை இதயபூர்வமாக பக்தியோடு வணங்கினாலே போதுமானது. அவர்களுக்கு நிச்சயமாக அருள் தருவான். அகிலாண்டேஸ்வரன்.

சங்கீதம் மனதை அமைதிப்படுத்துகிறது. அதனாலேயே பக்தி மார்க்கத்திற்கு சங்கீதம் மிகவும் உயர்ந்ததாக இருக்கிறது. மதவேறுபாடுகள் மொழி வேற்றுமை இனபேதங்கள் எதுவுமே அதற்குக் கிடையாது இசைக்கு உருகாதார் எவருமேயில்லை. எல்லோருக்கும் பக்தி வழியாக அமையக் கூடியது இசையேயாகும். தேவாரம் பாடிய நால்வரும் திருப்புகழ் பாடிய அருணகிரிநாதரும் இசைமூலமே இறைவனைக் கண்டவர்கள். பக்தியுடன் இறைவனை நாட மனஅமைதி தேவை. ஆலயம் மனஅமைதிக்கும் பக்தி செய்வதற்கும் மேலான இடம்.

உயிர் பிரியும் நேரத்தில் ஆண்டவன் திருநாமத்தை பக்தியோடு சொன்னால் நற்பேறு கிடைக்கும். நமது உடலில் எலும்பே இல்லாத தசை நாக்கு ஒன்று தான். ஒவ்வொரு நாளும் ஈஸ்வரன் திருநாமத்தை பக்தியோடு சொல்ல நாக்கைப் பழக்கப்படுத்திவிட்டால் இறுதி நேரத்தில் உயிர் பிரியும் போது அது தானாகவே சொல்லும்.

உடல் உறுப்புக்கள் எதுவுமே அசையாத நிலை ஏற்பட்டாலும் நாவு அசையும் இறைவன் நாமத்தை அது பக்தியோடு சொல்லும்.

இதைத்தான் முன்னோர்கள் “தானாடாவிட்டாலும் தன் தசை ஆடும்” என்றார்கள்.

இறைவனுக்கு சேவை செய்ய விரும்புகிறவன் அவனால் படைக்கப்பட்ட உயிரினங்களுககு சேவை செய்வதும் பக்தி செய்வதின் அடிப்படைத் தர்மமாகும்.

காஞ்சி பரமாச்சாரியாரின் பத்து கட்டளைகள்

1. விழித்து எழுந்தவுடன் இரண்டு நிமிடமாவது இறைவனை எண்ணிப் பிரார்த்தனை செய்யுங்கள்.
2. இன்று நல்ல நாளாக இருக்க வேண்டுமென்று வேண்டிக் கொள்ளுங்கள்.
3. நதிகள் பசுக்கள் சிரஞ்சீவிகளைப் பற்றி ஒரு நிமிடம் நினையுங்கள்
4. வாரத்திற்கு ஒரு நாளாவது ஆலயத்திற்கும் சென்று வழிபடுங்கள்.
5. அண்டை அயலவரை நேசியுங்கள்.
6. உண்ணுமுன் பறவைகளுக்கு சிறிது அளித்து விட்டுச் சாப்பிடுங்கள்.
7. இயன்ற அளவு தர்மம் செய்யுங்கள்.
8. நெற்றியில் திருநீறு பூசவும்.
9. உறங்குமுன் அன்று செய்த நல்ல தீய செயல்களை எண்ணிப் பார்க்கவும்.
10. ஆண்டவன் நாமத்தை 108 முறை உச்சரித்து விட்டு உறங்கவும்.

சிரார்த்தம் ஏன்.

தர்மபலனை பொறுத்து சிலர் உடனேயே மறுபிறவியெடுத்து விடுகிறார்கள். சிலர் கொஞ்சங் காலம் பித்துருலோகத்தில் இருந்து பின்னரே மறுபிறவி எடுக்கிறார்கள். அதனால் தான் பித்துரு லோகத்தில் இருப்பவர்களுக்காக நாம் சிரார்த்தம் செய்கிறோம்.



இதழ் – 9

என்றும் நன்றிக்குரியவர்கள்

என்றும் நன்றிக்குரியவர்கள்

திரு. ஆ. நவரத்தினராசா
அறங்காவலர் செயலாளர்

எமது திருக்கோவிலில் புனாரவர்த்தன த்ரியத்திறிம்சத் (33) குண்ட சகித மஹா கும்பாபிஷேகம் வெகு சிறப்பாக நிகழ்ந்தேறுவதற்கு உறுதுணை புரிந்த எல்லாம் வல்ல மூத்த விநாயகப்பெருமானினதும், அருள்மிகு அகிலாண்டேஸ்வரி சமேத அகிலாண்டேசுரர் கருணையினையும் திருவருளையும் எண்ணி எண்ணி வியந்து மகிழ்கின்றேன். எல்லாம் வல்ல திருவருளுக்கு நன்றி.

திருக்கோவில் கட்டிடங்களையும் விக்கிரகங்களையும், தூபிகளையும் அமைத்தும் புனர்நிர்மாணம் செய்தும் முடித்த கட்டிட, சிற்ப, சித்திர, ஓவிய விக்கிரவிய கலை நிபுணர்களுக்கு எனது நன்றிகள்.

திருக்குட முழுக்கினை 09.07.2008 திகதி வெகு சிறப்பாக நடத்தி வைத்த பிரதம குரு சிவாகம சிரோண்மணி, சிவாகம கிரியா திலகம் சிவஸ்ரீ ஸ்ரீனிவாச நாகேந்திரக்குருக்கள், அவர்களுக்கும், சிவாகம சிரோன்மணி சதாயோகீஸ்வரக்குருக்கள், அவர்களுக்கும், சர்வசாதகம் நிகழ்த்திய இணுவில் வேதாகம ஞானபாஸ்கரன் சிவஸ்ரீ தானு மகாதேவக்குருக்கள் (அதிபர் தர்மசாஸ்தா குருகுலம்) அவர்களுக்கும், ஆலய நித்திய நிரந்தர ஸ்தானிக போதகர் சிவஸ்ரீ ஸ்ரீநிவாச இரகுநாத குருக்கள் அவர்களுக்கும். வேதகம சக்கரவர்த்தி வேதாகம உதயசூரியன் சிவஸ்ரீ சௌந்தரராஜகுருக்கள் அவர்களுக்கும், வேதபாராயணம் மைலாப்பூர் சிவஸ்ரீ ஸ்ரீநிவாச சாஸ்திரிகளின் மாணாக்கர்களுக்கும், இணைந்து பங்குபற்றிய ஏனைய குருமணிகளுக்கும் எமது திருக்கோவிலின் சார்பாக நன்றியறிதலையும், வணக்கத்தையும் தெரிவித்துக்கொள்கின்றேன்.

மஹா கும்பாபிஷேகம் எல்லா வகையாலும் மிக விமரிசையாக நிறைவு பெறவும் அதனைத்தொடர்ந்து 48 நாட்களும் மிகுந்த பக்தி பூர்வமாக மண்டப அபிஷேகங்கள், மஹா சங்காபிஷேக நிகழ்வும், இரவு பகல் என்று பாராது ஓயாது பணியாற்றி ஒத்துழைப்பும், உதவியும் நல்கிய கும்பாபிஷேகக்குழு தலைவர் க.செல்வராசா அவர்களுக்கும், ஏனைய உறுப்பினர்களுக்கும். எனது விஷேட பாராட்டுதலுக்கும், பெருமைக்கும் நன்றிக்கும் உரியவர்கள்.

வவுனியா அரசாங்க அதிபராகவும், மாவட்டச்செயலாளராகவும் மஹா கும்பாபிஷேக குழுவின் தலைவராகவும் இருந்து பெரும் பணி புரிந்து பாராட்டுதலை பெறுபவர் திரு.சி.சண்முகம் அவர்கள் தன்னடக்கமும், அமைதியும் மதிப்பும் வாய்ந்த அரசாங்க அதிபர் அவர்கட்கு எனது மனப்பூர்வமான நன்றிகள்.

அடுத்து எமது ஆலயவளர்ச்சியில் பெருதும் உறுதுணைபுரிந்து வருவதுடன், ஆலயத்தில் எந்த நிகழ்வாக இருந்தாலும் முன்னின்று செயல்படுபவர் பிரதேச செயலாளர் செல்வி தவஈஸ்வரி துரைச்சாமி அவர்கள். அவர்களுக்கும் எனது மனமார்ந்த நன்றிகள்.

மஹா கும்பாபிஷேக குழுவின் இணைபொருளாளர்களுள் ஒருவராக இருந்து பங்குப்பணிகளை ஆற்றியவர் வவுனியா இந்து மாமன்றத்தின் செயலாளர் சிவநெறிக்காவலர் திரு.சி.ஏ.இராமசாமி அவர்களின் பேராதரவுக்கு எனது மனப்பூர்வமான நன்றிகள்.

நிர்வாக சபையின் தலைவராக இருந்தும் இவ்வாலய மஹா கும்பாபிஷேகத்தின் பரிபூரண நிறைவுக்கும் மண்டலாபிஷேகம், சங்காபிஷேகம் ஆகியவற்றின் நிறைவுக்கும் அல்லும் பகலும் அயராது பாடுபட்டு உழைத்தவர் நீம் அரிசி ஆலை அதிபர், சைவப்பெரியார் திரு.மு.சபாநாதன் அவர்கள். இவரது உள்ளமும் உணர்வும் இச்சிவாலயத்தின் உயர்ச்சியிலும், வளர்ச்சியிலுமே சங்கமித்துள்ளது. இவரின் உள்ளத்து உயர்வும், அறப்பணி ஈடுபாடும் என்றென்றும் என் நன்றிக்குரியன.

நிர்வாக சபையின் மற்றுமொரு துடிப்பான உறுப்பினர் சிவதொண்டர் இறைபணிச்செம்மல் திருவாசக செம்மல் திரு.வை.செ.தேவராசா அவர்கள் சிவனடியே சிந்திக்கும் தவப்பயன் வாய்க்கப்பெற்றவர். இந்துமாமன்றத்தின் தலைவராக சிவப்பணிபுரியும் இவருக்கு எனது அன்பான நன்றியறிதலை தெரிவித்து

மகிழ்கின்றேன். இன்னும் மஹா கும்பாபிஷேக குழுவில் அங்கம் வகித்த அனைத்து தொண்டர் பெருமக்களுக்கும் எனது நன்றி உரித்தாகுக.

திருக்கோவிலின் மஹா கும்பாபிஷேகம் பற்றிய செய்திகளை பத்திரிகைகளில் பிரசுரித்த தேசிய நாளிதல் ஆசிரியர்களுக்கும், வவுனியா நிருபர்களுக்கும், எழுத்தாளர் பெருமக்களுக்கும், கட்டுரைகளை நல்கிய அன்பர்களுக்கும் எனது நன்றிகள்.

நாதஸ்வர இசை மழை பொழிந்த கலைஞர்கள், வித்துவான்கள் இந்தியாவில் இருந்து வருகைதந்து சிறப்பித்த கலைஞர்களுக்கும் எனது நன்றி உரித்தாகுக.

மஹா கும்பாபிஷேகத்தின் போதும் மண்டலாபிஷேக வசந்த மண்டப பூசைகள், வேதபாரயணம், திருமுறை பாராயணம், சிறந்த முறையில் ஒலி ஒளி அமைப்புக்களை திறம்பட செய்தவர்களுக்கு எனது நன்றிகள்.

சிறப்பான முறையில் மஹா கும்பாபிஷேகம் தொடக்கம் மண்டலாபிஷேக பூர்த்திவரை தினமும் அன்னதானத்தை சிறப்புற நடத்திய அகிலாண்டேஸ்வரி அமுதசுரபி அன்னதான சபையினருக்கும் அதன் பொறுப்பு நிர்வாகியாக இருந்து அன்புடன் உபசரித்து பெருமையுடன் அமுதழித்து பாராட்டை பெறுபவர் நிர்வாக உறுப்பினர் ந.தனபாலசிங்கம் அவருக்கும் எனது நன்றி.

சிவாலய அன்னதானத்தை சிறப்புற கடந்த 12 ஆண்டுகளாக நெறிப்படுத்தி செயலாற்றி வந்த சிவதொண்டன் செயல்வீரன் அமரர் காளிமுத்து கணேசன் அவர்களின் சேவையை நான் மட்டுமல்ல அவரோடு இணைந்து செயற்பட்ட அனைவரும் அவரது சேவையை மறுக்கவோ, மறைக்கவோ முடியாத காரியம். அவரது மறைவு எமது நிர்வாக கட்டமைப்புக்கு ஈடுசெய்யமுடியாத பேரிழப்பு. அவர் செய்த சேவையை நான் நன்றியுடன் நினைவு கூறுகின்றேன்.

அன்னதானப்பணி சிறப்புற நிகழ்த்த தாமாகவே மனம் உவந்து முன்வந்து வாரி வழங்கிய கொடை மனம் படைத்த சிவபுண்ணிய செல்வர்கள் அனைவருக்கும் எனது பாராட்டுக்களும், நன்றிகளும் உரித்தாகுக. அதேபோல் தாகசாந்தி நிலையம் அமைத்து குடிநீர் வழங்கிய வழங்கித்தொண்டுபுரிந்த அனைவருக்கும் நன்றிகள்.

எமது வேண்டுதலை ஏற்று சிறப்பு மலருக்கு ஆசி உரைகள், வாழ்த்துரைகள், கட்டுரைகளையும், வழங்கியுதவிய சமயப்பெரியோர்கள், பேராசிரியர்கள், விரிவுரையாளர்கள், பண்டிதர்கள், அறிஞர்கள், கல்விமான்கள், கவிஞர்கள், மாணவர்கள், பிறதுறையினர் அனைவருக்கும் எனது நன்றிகள்.

பாதுகாப்பு சேவையை நல்கிய உயர் அதிகாரிகள், உத்தியோகத்தர்களுக்கும் எமது நன்றிகள். என்றென்றும் பேராதரவு தரும் அனைத்து துறை அரச உயர் அதிகாரிகளுக்கும், பணியாளர்களுக்கும் மனமார்ந்த நன்றிகள்.

வவுனியா நகரசபை செயலாளர் மற்றும் சக உத்தியோகத்தர்கள், பணியாளர்கள் என்றென்றும் அகிலாண்டேஸ்சுரரின் திருவருளுக்கு பாத்திரமானவர்கள். இவர்கள் பணி மகத்தானது.

எமது திருக்கோவிலின் இதர பணிகளை செய்ய இருக்கின்ற சிவபுண்ணிய செல்வர்கள் அனைவருக்கும் அருள்மிகு அகிலாண்டேஸ்வரி சமேத அகிலாண்டேசுரரின் திருவருள் நீண்ட ஆயுளையும் சௌபாக்கித்தையும், நல்க வேண்டுமென எம்பெருமானின் திருவருளை இறைஞ்சுகின்றேன்.

வவுனியாவில் உள்ள தொழிலதிபர்கள், அரிசி ஆலை அதிபர்கள் இதர இடங்களிலும் உள்ள கொடைவள்ளல்கள் அனைவரும் சிவனின் திருப்பணிக்கு நிதியை வாரிவழங்கியுள்ளார்கள். இன்னும் திருப்பணிகள் நடைபெற வேண்டி இருப்பதால் இவர்கள் மூலமான சேவைகள் அகிலாண்டேசுரர் துணையோடு நிறைவேற்ற இருக்கும் தொண்டுள்ளம் படைத்த அனைத்து சிவபுண்ணிய சீலர்களுக்கும், அருள்மிகு அகிலாண்டேஸ்வரி சமேத அகிலாண்டேசுரப்பெருமானினது. பரிபூரணமான திருவருள் என்றென்றும் கிடைக்க வேண்டுமென இறைஞ்சுகின்றேன். இவ்வாலயத்தில் பணியாற்றும் நித்திய நிரந்தர ஊழியர்களுக்கு எனது மனமார்ந்த நன்றிகள்.

யாராவது தவறுதலாக மறக்கப்பட்டிருப்பின் அவர்களுக்கும் எனது இதயம் கனிந்த நன்றியை தெரிவித்துக்கொள்வதோடு, மூத்த விநாயகரதும், அகிலாண்டேசுரரினதும் திருவருள் அனைவருக்கும் கிடைக்க வேண்டும் என்று திருவடிகளை தொழுது வாழ்த்தி அமைக்கின்றேன்.

09.07.2008ல் நிகழ்ந்தேறிய மஹா கும்பாபிஷேக தினத்தையொட்டி வெளியிடப்படும் "சிவதத்துவமலர் 2008" வெளியிட்ட மலர்குழுவினருக்கு எமது நன்றியும் பாராட்டுதல்களும் உரித்தாகுக.

"சிவதத்துவமலர் 2008" அச்சிலே சிறப்புற வெளிவர உதவியவர்கள் வவுனியா வாணி கணனி பதிப்பக அதிபர், அச்சகமுகாமையாளர், மலரை சிறப்புற அழகுற அமைத்த அச்சக ஊழியர்கள் கணனி பொறிநிபுணர்கள் அனைவருக்கும் நன்றிகள்.



இதழ் - 10

நிழற் படங்கள்

கணபதி ஓமம்



கணபதி ஓமம்

தீர்தம் சேகரித்தல்

சிவாச்சாரியர் வரவேற்பு

யாகசாலைக்கு மண் எடுத்தல்

பிரதான சிவன் யாகசாலை கும்பப்பிரவேஷம்



தீபபூசை

குருமார் சந்தியாவந்தனம்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

வவுனியா அரசாங்க அதிபா திரு.சண்முகம் அவர்கள்
மூலலிங்கத்துக்கு எண்ணெய் சாத்துதல்



ஆலய ஆதீன கர்த்தா சிவமணி நவரத்தினராசா அவர்கள்
மூலலிங்கத்துக்கு எண்ணெய் சாத்துதல்



மூலலிங்கத்துக்கான கும்பப் பிரதட்சனம்

பிரதான தூபி அபிஷேக காட்சி



யாககும்பகள் பிரதட்சனத்திற்கு ஆயத்தமாகுதல்

ஆலய உள் பிரகாரததின் முன் பக்கத் தோற்றம்



ஆலய உள் பிரகார தோற்றம்

மூத்த விநாயகரின் ஆலயத்தோற்றம்

நால்வர்



பாலமுருகன் ஆலயம்

பஞ்சலிங்கம்

பஞ்சமுகலிங்கம்

தம்ப விநாயகர்

நடேசர் சபை



அம்பாளின் வெள்ளிக் கவசம் சாத்திய தோற்றம்



பிரதான யாகசாலை (33 குண்டம்)

மூல லிங்கம்



சபா மண்டபம்

ஆலயத்தின் வடக்கு வீதியில் வடமாகான கல்வி பண்பாட்டு அலுவல்கள்
விளையாட்டுத்துறையின் செயலாளர்

இந்தியாவில் இருந்து வருகை தந்துள்ள சதுர் மறை விற்பன்னர்களும்,
பிரதேச செயலாவரும்.

சிவப்பணியே தொண்டாகக் கொண்டு இறைபதம் எய்திய அறங்காவலர் சபை உறுப்பினர்கள்.

சிவமணி நாகமுத்து இராமநாதன்

சிவமணி இராசு சண்முகம்

சிவமணி காளிமுத்து கணேசன்

T/800/955

NEW UTHAYAN PUBLICATIONS (PVT) LTD.
361, KASTHURIYAR ROAD.
JAFFNA
25/03/09
SRI LANKA

ARUL MIGU
AGILANDESWARI
SAMETHA
AGILANDESSORAR
THIRUKOVIL

Printed by: Vaani Computer Printing Centre,
No: 61-B, 1st Cross Street, Vavuniya. T.P: 024 2223658
E-mail: vaaniprinters@yahoo.com